விலை ரூபா 20.00



சிரியாவில் கடும் போர்
பக்கம் 09


3000 பொலிஸார்
பக்கம் 11


நம்ம தலைவர்மார்
பக்கம் 15


அச்சுறுத்தலே காரணம்
பக்கம் 17


www.onlineuthayan.com

பக்கங்கள்: 34

# உதயன்


சுடர் 27
கதிர் 116

வள்ளுவர் ஆண்டு 2043 பங்குனி 08 புதன்கிழமை (21/03/2012) UTHAYAN - A Lively National Tamil Daily


# சோதனை நாளை

- ஜெனிவாவில் இருந்து குகா -

## ஜெனிவாவில் ஹிலாரி தலைமையில் இறுதிநேரப் பரப்புரைகள் தீவிரம்



ஜெனிவா, மார்ச் 21

ஜெனிவாவில் இலங்கை மீதான தீர்மானம் குறித்த இறுதிநேரப் பரபரப்புகள் தீவிரமடைந்துள்ளன. அமெரிக்க வெளிவிவகாரச் செயலாளர் ஹிலாரி கிளிங்ரன் ஜெனிவாவுக்கு நேரடியாக வந்து களத்தில் குதித்துள்ளார். அவர் தலைமையிலான அமெரிக்க அதிகாரிகள் குழு தீர்மானத்தை ஆதரிக்குமாறு கோரி ஏனைய நாட்டுப் பிரதிநிதிகளுடன் தீவிர பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளது.

தீர்மான வரைவின் மீதான வாக்கெடுப்பு நாளை மாலை அல்லது நாளைமறுதினம் காலை இடம்பெறும் என்று உள்ளகத் தகவல்கள் கூறுகின்றன.

### வந்திறங்கினார் ஹிலாரி

தீர்மானத்தை ஆதரிக்கப்போவதாக இந்தியப் பிரதமர் அறிவித்ததன் பின்னர், வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளிங்ரன் நேற்றுமுன்தினம் ஜெனிவாவிற்கு வந்து சேர்ந்தார். "அதுமுதல் இலங்கை விவகாரத்தில் மேலும் சூடுபறக்கிறது" என்று ஜெனிவாவில் உள்ள ராஜதந்திரிகள் கூறுகின்றனர்.

தீர்மானத்துக்கு முடிந்த வரையில் அதிகபடியநாடுகளின் ஆதரவைப் பெறுவதில் அமெரிக்கா தற்போது முனைப்புக் காட்டி வருகின்றது. நேற்று மாலை வரை ஹிலாரியுடன் 04

## எதிர்த்துப் போராடுவோம்

### இலங்கை சூளுரைப்பு; 70 பேர் குழுவை அனுப்புகிறது

கொழும்பு, மார்ச் 21

ஜெனிவாவில் இலங்கை மீது அமெரிக்கா கொண்டு வரும் தீர்மானத்தை எதிர்த்து போராட ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் இணைந்து போராடவுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஜெனிவாவில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டத்தில் பங்குபற்ற 70 பேர் கொண்ட ராஜதந்திரிகள் குழுவை இலங்கை அரசு ஜெனிவாவுக்கு அனுப்பவுள்ளது.

அமெரிக்காவால் கொண்டுவரப்படும் 04

## இந்தியாவின் முடிவை மதிக்கிறது இலங்கை

கொழும்பு, மார்ச் 21

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபை அமர்வில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் குறித்து இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டாலும் அதனைத் தாம் மதிப்பதாக இலங்கை அரசு தெரிவித்துள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சினால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் தீர்மானத்தை இலங்கை மதிப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தியா வின் இந்த முடி வைத் தாம் மதிப்பதாக இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாரட்ன அமுனுகம தெரிவித்திருக்கிறார்.

இந்தியா ஒரு பலம் வாய்ந்த நாடு. 04

## போர்க்குற்ற விசாரணையை முடுக்க ஐ.நா. அங்கீகாரம்

### தீர்மானம் பற்றி அமெரிக்கா விளக்கம்



ஜெனிவா, மார்ச் 21

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிராக இலங்கையில் 26 வருட காலமாக நடைபெற்று வந்த சிவில் போரின்போது, அரசால் கட்டவிழ்க்கப்பட்ட அட்டூழியங்கள் குறித்து சுயாதீன விசாரணை ஒன்றை மேற் கொள்ளுமாறு இலங்கையை முடுக்குவதற்கான ஐ.நாவின் ஆதரவை அமெரிக்கா பெற்றுவிட்டது என அந்தநாடு தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக 04

## 13+ தீர்வுத் திட்டத்தை எப்படி செயற்படுத்துவீர்?

### விளக்கம் கேட்கிறது இந்தியா

கொழும்பு,மார்ச் 21

இலங்கையின் இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வு தொடர்பில் 13ஆவது திருத்தச் சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வுத் திட்டம் ஒன்றை எவ்வாறு நடைமுறைப்படுத்துவது என்பது குறித்து விளக்கம் அளிக்குமாறு இந்தியா இலங்கை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளது.

இது குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணா இலங்கை வெளிவிவகார அமைச்சுக்கு இரகசியக் கடிதம் ஒன்றை 04

## இந்திய முடிவு தெளிவானது

புதுடில்லி, மார்ச் 21

இலங்கைக்கு எதிராக ஐ.நாவில் கொண்டுவரப்பட்டுள்ள பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதே இந்திய அரசின் விருப்பமாக உள்ளது - என்று பிரதமர் மன்மோகன் சிங் மீண்டும் நேற்று அறிவித்துள்ளார்.

மாநிலங்களவையில் குடியரசுத் தலைவரின் 04

## நாடாளுமன்றுக்கு திடீரென வந்தார் ஜனாதிபதி மஹிந்த

கொழும்பு, மார்ச் 21

கையில் கட்டுடன் நாடாளுமன்றுக்கு திடீரென வந்தார் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ. நேற்று நாடாளுமன்றில் கடற்றொழில் நீரியல்வள அமைச்சுத் தொடர்பான விவாதம் நடந்து கொண்டிருந்தது.

விவாதத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ரங்கே பண்டார பேசிக் கொண்டிருந்தவேளை சரியாக 2.35 மணிக்கு ஜனாதிபதி சபைக்குள் பிரவேசித்தார்.

ஆளும்கட்சி உறுப்பினர்கள் எழுந்து நின்று மேசைகளைத் தட்டி வரவேற்றனர். அப்போது சபையில் 04

## ஆதரவளித்த நாடுகளும் இப்போது கைவிடுகின்றன

### இலங்கைக்குப் பெரும் ஏமாற்றம்

ஜெனிவா,மார்ச் 21

அமெரிக்காவின் அழுத்தங்களை அடுத்து, ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு ஆதரவு வெளியிட்ட பல நாடுகள் தற்போது அந்த முடிவில் இருந்து பின்வாங்கத் தொடங்கியுள்ளதாக ஜெனிவாவில் உள்ள இராஜதந்திர வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இலங்கைக்கு எதிரான அமெரிக்காவின் தீர்மானம் ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் கூட்டத்தொடரில் நாளை சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தத் தீர்மானத்தைத் தோற்கடிக்க இலங்கை, பல 04

### மொஹமட் நசீட்டின் வருகை இரத்து

மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட்டின் இலங்கைப் பயணம் இரத்து செய்யப்பட்டுள்ளதாக மாலைதீவின் ஜனநாயகக் கட்சி தெரிவித்துள்ளது. மொஹமட் நஷீட்டின் இலங்கைப் பயணம் குறித்த புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என அந்தக் கட்சி குறிப்பிட்டுள்ளது. மாலைதீவு முன்னாள் ஜனாதிபதியின் இலங்கைப் பயணம் பிற்போடப்பட்டமைக்கான காரணம் இதுவரை வெளியிடப்படவில்லை. கடந்த மாதம் 7ஆம் திகதி மாலைதீவு ஜனாதிபதி பதவியில் இருந்து மொஹமட் நஷீட் விலகியது தொடக்கம் இதுவரை எவ்வித வெளிநாட்டுப் பயணங்களையும் மேற்கொள்ளவில்லையென்பது குறிப்பிடத்தக்கது.

### இலங்கை வர நவிப்பிள்ளை தயார்

இலங்கைக்குப் பயணம் செய்யத் தயார் என ஐ.நா. மனித உரிமைகள் சபை ஆணையாளர் நவிப்பிள்ளை தெரிவித்துள்ளார். எனினும், இலங்கைக்கு எப்போது விஜயம் செய்வது என்பது பற்றிய திகதிகள் இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அமர்வுகளில் கலந்து கொண்ட தமிழ் மனித உரிமைசெயற்பாட்டாளர் எஸ்.வி. கிருபாகரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார். இலங்கைக்குப் பயணம் மேற்கொள்வதற்கு முன்னதாக தமது அலுவலகப் பிரதிநிதிகளை அனுப்பி வைக்கத் திட்டமிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

### ஊடக மத்திய நிலையத்துக்கு புதிய கட்டடம்

தகவல் ஊடகத்துறைக்கு நவீன வசதிகள் வழங்கும் முகமாக அரசாங்க தகவல் திணைக்களத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஊடக அபிவிருத்தி மத்திய நிலையம் இம்மாதம் 30 ஆம் திகதி திறந்துவைக்கப்படும். தகவல் ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மற்றும் பதில் தகவல் ஊடகத் துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன ஆகியோரின் அழைப்பின் பேரில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இப்புதிய கட்டடத்தைத் திறந்துவைப்பார்.

### துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் சாவு

கட்டுநாயக்க - ஆடிஅம்பலம் மகா வித்தியாலயத்திற்கு முன்பாகவுள்ள மயானத்திற்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் நேற்றுமுன்தினம் இரவு 9.30 அளவில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர். மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாதோர் இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளதாகவும் பொலிஸார் கூறினர். மறைவெ - தலத்தாகம விஹாரை சந்தியில் வசிக்கும் 32 வயதான நபர் ஒருவரே இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்துள்ளார். துப்பாக்கிப் பிரயோகத்தில் உயிரிழந்த நபரின் சடலம் நீர் கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

# இந்தியாவின் அதிரடி முடிவால் பேரினவாதிகள் கடும் அதிர்ச்சி

**ஜெனிவா தீர்மானம் தொடர்பில் புதுடில்லி எடுத்துள்ள முடிவால் வரலாறு காணாத துரோகத்தை இழைத்தி ருக்கிறது என்கிறார் அமைச்சர் சம்பிக்க.**



கொழும்பு, மார்ச் 21

இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் இந்தியா எடுத்துள்ள முடிவானது இலங்கையின் சிங்கள, பௌத்த பேரினவாதிகளைக் கடும் அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

இந்தத் தீர்மானத்தை இந்தியா ஆதரிக்காது தமக்கு ஆதரவு வழங்கும் என எண்ணியிருந்த இலங்கையின் பேரினவாதிகளுக்கு இந்தியாவின் இந்த அறிவிப்புப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தியாவின் முடிவால் அமைச்சர்களான சம்பிக்க ரணவக்க, விமல் வீரவன்ச மற்றும்

தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் குணதாச அமரசேகர போன்றோரே இவ்வாறு பெரும் அதிர்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

ஜெனிவா தீர்மானம் தொடர்பில் புதுடில்லி எடுத்துள்ள முடிவால் இந்தியா வரலாறு காணாத துரோகத்தை இலங்கைக்கு இழைத்திருப்பதாக ஜாதிக ஹெல உறுமயவின் பொதுச் செயலாளரும், அமைச்சருமான சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன், இந்தியாவின் இந்த முடிவை இலங்கை ஒருபோதும் மன்னிக்காது எனவும், இதற்கான

விளைவுகளை இந்தியா மிக விரைவில் சந்திக்கும் எனவும் அவர் எச்சரித்துள்ளார். நல்ல நண்பனை இழந்த இந்தியாவுடன் ஏனைய நாடுகளும் நட்பை வைத்துக் கொள்ள விரும்பாது.

இதுவரை காலம் இந்தியாவுடன் காணப்பட்ட அரசியல், இராஜதந்திரம், பொருளாதாரம் மற்றும் கலாசாரம் உட்பட சகல துறைகளிலுமான அந்நியோன்ய உறவு முறைகள் இடை நிறுத்தப்படும் எனவும் அவர் கூறியுள்ளார்.

அதேவேளை, இந்தியாவின் இந்த முடிவானது அதன் முட்டாள்தனத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு எனத் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்துள்ளார்.

இனி ஒரு நிமிடமேனும் பொறுக்காது இந்தியாவை இலங்கையிலிருந்து அடியோடு தூசுதட்ட வேண்டும் எனவும் அவர் கொதிப்படைந்துள்ளார். இந்தியாவை நம்ப வேண்டாம் என அழுது புலம்பினோம். எமது அரசு கேட்கவில்லை. நாங்கள் கூறியவை செவிடன் காதில் ஊதிய சங்கு போலவே காணப்பட்டது. ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் அரசு நாம் கூறியதை கவனத்தில் எடுக்கவில்லை என குணதாச அமரசேகர மேலும் கூறியுள்ளார். (த)

# இந்தியா எதிர்த்தாலும் நாங்கள் முறியடிப்போம்

### அமைச்சர் தினேஷ் வீராவேசம்

**அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவளிப்பதன் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.**



கொழும்பு, மார்ச் 21

இலங்கைக்கு எதிராக இந்தியா வாக்களித்தாலும், பிரேரணையை வெற்றிகரமாக முறியடிக்க முடியும் என அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

சர்வதேச சமூகம் ஒத்துழைப்பு வழங்கும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இதேவேளை, பல நட்பு நாடுகள் ஆதரவளிப்பதாக ஏற்கனவே உறுதியளித்துள்ளன.

எனவே, பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டு வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் சாதகமான பலன் கிடைக்கும் என தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

அமெரிக்க பிரேரணைக்கு ஆதரவளிப்பதன் மூலம் நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது. இலங்கை அரசாங்கம் தனது கொள்கைகளிலிருந்து மாறுபட்டுச் செயற்படாது எனவும் அமைச்சர் தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேலும், நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் அரசாங்கத்தின் முயற்சிகள் கைவிடப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5)

# புலம்பெயர் தமிழர் தேவைகளுக்கு ரணில் குரல் கொடுத்து வருகிறார்

### சொந்தக் கட்சி உறுப்பினரே குற்றச்சாட்டு



கொழும்பு, மார்ச் 21

புலம்பெயர் தமிழர்களின் தேவைகளுக்காக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க குரல் கொடுத்து வருவதாகவும் புலிகளின் கருத்தையே அவர் வெளியிடுவதாகவும் கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரட்ன குற்றம்சாட்டியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்:

ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு முன்னர் வலுவான ஓர் எதிர்க்கட்சியை உருவாக்க வேண்டியுள்ளது. ரணில் விக்ரமசிங்க ஜனாதிபதியின் மடியில் இருக்கின்றார்.

புலம்பெயர் தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு தேவையான கருத்துக்களையே ரணில் வெளியிடுகின்றார். இவ்வாறான நடவடிக்கைகளினால் ஐக்கிய தேசியக் கட்சியின் வாக்காளர் பலம் மேலும் பலவீனமடையும்.

மே தினக் கூட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடத்தத் திட்டமிட்டுள்ளது புலம்பெயர் தமிழர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய எடுக்கும் முயற்சி. இதனால் சிங்கள வாக்காளர்களை விட்டு விலகிச் செல்ல நேரிடும்.

ரணில் விக்ரமசிங்க ஓர் காலாவதியான பண்டமாகவே நோக்கப்பட வேண்டும். அவரை மக்களிடம் விற்பனை செய்ய முடியாது.

போர் பற்றிய ரணில் விக்ரமசிங்கவின் கருத்துக்களே, கட்சியிலிருந்து மக்கள் விலகக் காரணமாக அமைந்தது- என்றார். (த)

# ஐ.தே.கவுடன் மே தினம்: கூட்டமைப்பு முடிவில்லை

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ்.**

யாழ்ப்பாணம், மார்ச் 21

இந்த வருடம் மே தினத்தை ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நடத்துவது தொடர்பில் இன்னும் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை. அத்துடன் மக்களைப் பாதிக்கும் விடயங்களில் அதற்கு எதிராக எதிர்க் கட்சிகளுடன் இணைந்து போராடத் தயாராக இருப்பதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

இந்த வருடம் மே தினத்தை யாழ்ப்பாணத்தில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நடத்த உள்ளதாகச் செய்திகள் வெளியாகியமை தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:

நாங்கள் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து மே தினம் நடத்தவுள்ளது தொடர்பில் உறுதியான எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அந்த விடயங்கள் தொடர்பில் பேச்சுகள் இடம்பெற்று வருகின்றன.

மேலும் நாங்கள் பொது மக்களை பாதிக்கின்ற வாழ்க்கைச் செலவு, மனித உரிமைகள் போன்ற விடயங்கள் தொடர்பில் அரசுக்கு எதிரான போராட்டங்களை முன்னெடுப்பதற்கு எதிர்க்கட்சிகளுடன் இணைந்து செயற்படத் தயாராக இருக்கின்றோம்.

எதிர்க்கட்சிகள் என்பது தனியே ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரம் இணைந்து செயற்படுதல் என்று நாங்கள் கருதவில்லை. மனோ கணேசன், சிறிதுங்க ஜெயசூரிய, விக்கிரமபாகு கருணாரட்ண ஆகியோருடன் இணைந்து எதிர்ப்புப் போராட்டங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இணைந்து செயற்படவுள்ளது- என்றார். (த-5)

# இலங்கைப் பிரச்சினைக்கு உரிய தீர்வு விரைவில்

### கருணாநிதிக்கு சோனியா கடிதம்



புதுடில்லி, மார்ச் 21

இலங்கைப் பிரச்சினை தொடர்பில் அனைத்துக் கட்சிகளுடனும் கலந்துரையாடித் தீர்வொன்றை பெற்றுக் கொள்ளவுள்ளதாக இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவர் சோனியா காந்தி தெரிவித்துள்ளார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.கருணாநிதிக்கு நேற்றுமுன்தினம் அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையை இந்திய மத்திய அரசு அறிந்துள்ளமையினால், அனைத்துக் கட்சிகளுடனும் கலந்தாலோசித்து விரைவில் உரிய தீர்வு காணப்படும் என சோனியா தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணைக்கு ஆதரவளிக்கக்கூடிய வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளமை குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தகவல் வெளியிடுவார் எனவும் சோனியா காந்தி தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரச்சினைகளின் முக்கியத்துவத்தை அறிந்துள்ளமையால் அவற்றுக்கு உரிய தீர்வு காண மத்திய அரசு அனைத்து கட்சிகளுடனும் கலந்தாலோசிக்க வேண்டியுள்ளதெனவும் அத்துடன் இலங்கைப் பிரச்சினைக்கு விரைவில் உரிய தீர்வு காணப்படும் என தான் நம்புவதாகவும் சோனியா காந்தி தெரிவித்துள்ளார். (த)

# முடிவை மீளாய்வு செய்க!

### கெஞ்சினார் பீரிஸ்; மறுத்தார் கிருஷ்ணா

கொழும்பு, மார்ச் 21

ஐ.நா. மனிதஉரிமைகள் சபையில் இலங்கைக்கு எதிராக அமெரிக்கா கொண்டு வரும் பிரேரணையை ஆதரிக்கும் இந்தியாவின் முடிவை மீளாய்வு செய்யுமாறு, இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஷ்ணாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக, இந்திய வெளிவிவகார அமைச்சர், எஸ்.எம். கிருஷ்ணாவுடன் நேற்று தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசிய இலங்கை வெளிவிவகார அமைச்சர் பீரிஸ், போர்க்குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுகள் குறித்து இலங்கை நீதியான விசாரணை நடத்தும் என்றும் உறுதியளித்துள்ளார்.

ஆனால்,இலங்கையின் கோரிக்கையை ஏற்க முடியாது என்று இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம். கிருஷ்ணா, பீரிஸிடம் நேரடியாகவே கூறிவிட்டதாக புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தமிழ் மக்களின் உணர்வுகளை இந்திய அரசால் புறக்கணிக்க முடியாது என்றும் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியுள்ளதாகவும் இந்திய அரச வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

இதனால் கடைசி நேரத்திலாவது இந்தியா மனம் மாறி இலங்கைக்கு ஆதரவாக நடக்கும் என்ற அரசின் கனவில் மண் விழுந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங-10)

# ஜெனிவாவில் மோதல்களைத் தவிர்த்து மனித உரிமைகளை உறுதிப்படுத்துங்கள்

### முன்னாள் நீதியரசர் அரசுக்கு ஆலோசனை

கொழும்பு, மார்ச் 21

ஜெனிவாவிலுள்ள ஐ.நா. மனித உரிமைகள் சபையில் மோதல்களைத் தவிர்த்து பதிலாக முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா உட்பட மக்களின் மனித உரிமைகளைப் பாதுகாக்குமாறு ஓய்வு பெற்ற பிரதம நீதியரசர் சரத் என் சில்வா அரசிடம் வலியுறுத்தியுள்ளார்.

சரத் பொன்சேகாவை விடுதலை செய்வதற்கான இயக்கத்தின் கருத்தரங்கொன்றில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நாட்டில் மனித உரிமைகளோ சட்டங்களோ முறையாகப் பின்பற்றப்படவில்லை. அனைத்து சட்டங்களுக்கும் முரணாக முன்னாள் இராணுவத் தளபதியைத் தடுத்து வைத்திருப்பது சிவில் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனங்களுக்கு முரணானது. இவற்றில் இலங்கையும் கையெழுத்திட்டுள்ளது.

சரத் பொன்சேகாவின் கைதானது முறைப்படி மேற்கொள்ளப்படாததால் அது சட்டவிரோதமானது. சரத் பொன்சேகாவை கைது செய்வதற்கு சிரேஷ்ட இராணுவ அதிகாரியொருவர் உத்தரவிட்டதால் அது சட்டவிரோதமானது. இராணுவ சட்டத்தின்படி கனிஷ்ட அதிகாரியொருவரை சிரேஷ்ட அதிகாரியொருவர் கைது செய்யலாம். சிரேஷ்ட அதிகாரி ஒழுங்கீனமாக செயற்பட்டால் கனிஷ்ட அதிகாரியும் அவரைக் கைது செய்யலாம். ஆனால் சரத் பொன்சேகா விடயத்தில் இது பொருந்தாது. ஏனெனில் கைது செய்யப்படும்போது அவர் இராணுவத்திலிருந்து விலகியிருந்தார்,

ஜனாதிபதி கையெழுத்திட்ட இராணுவ நீதிமன்ற உத்தரவு சட்டப்படி செல்லுபடியாகாது என்றார் சரத் என் சில்வா.

(த)

# இந்திய இழுவைப் படகுகளால் வேதனை கொஞ்சநஞ்சமல்ல

## வருமானம் இன்றித் தவிக்கும் வடமராட்சி மீனவர்

*வடமராட்சி, மார்ச் 21*

*வடமராட்சி வடக்கு, வடமராட்சிக் கிழக்குப் பிரதேசங்களில் இந்திய மீனவர்களின் ஊடுருவல்களால் இந்தப் பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் தினமும் பெரும் இழப்புக்களைச் சந்தித்து வருவதாக மீனவ சங்கப் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.*

இந்திய மீனவர்களின் நூற்றுக்கணக்கான இழுவைப் படகுகள் தினமும் இந்தப் பிரதேசங்களின் கரைகளை ஒரு கிலோமீற்றர் தொடக்கம் 5 கிலோ மீற்றர் தூரம் வரையான பகுதிகளை அண்டி வந்து அனைத்து மீன் வகைகளையும் அள்ளிச் செல்கின்றன.

இந்தப் பிரதேச மீனவர்கள் கடலில் மீன் பிடிப்பதற்காக வலைகளை வீசிக் காத்திருக்க, அணி அணியாக வரும் இந்திய மீனவர்களின் இழுவைப்படகுகளின் மடிகள் வலைகள் யாவற்றையும் சுக்குநூறாக அறுத்துவிடுகின்றன.

இந்தச் சம்பவங்களினால் மீனவர்கள் தொழில்களை இழப்பதுடன் இலட்சக்கணக்கான ரூபா பெறுமதியான வலைகளை நாளாந்தம் இழந்து வருகின்றனர்.

வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத் தலைவர் க.அருள்தாஸ் கருத்துத் தெரிவிக்கையில்,

இந்திய மீனவர்கள் இலட்சக்கணக்கான ரூபா பெறுமதி மிக்க மீன்பிடி வலைகளை நாளாந்தம் இழந்து வருவதுடன் தொழில்களையும் இழக்கின்றனர். எமது மீனவர்களுக்கு ஏற்படும் இழப்புகளுடன் காலம் காலமாக நாம் தொழில்களை மேற்கொண்டு வரும் கடல் வளத்தையும் இழந்து வருகின்றோம்.

எமது நிலை குறித்து அனைவரிடமும் சொல்லி அழுதுவிட்டோம். ஆனால் எமது பிரச்சினைகளுக்குத் தீர்வு தான் இல்லை என்றார்.

மயிலிட்டியிலிருந்து இடம் பெயர்ந்து வடமராட்சி வியாபாரி மூலை எரிஞ்ச அம்மன் கோயிலடியிலிருந்து கடற்றொழிலை மேற்கொண்டு வரும் மயிலிட்டித்துறை கடற்றொழிலாளர் சங்கத் தலைவர் யோகராஜா கருத்துத் தெரிவிக்கையில்,

காரைநகர், தொண்டமானாறு தொடக்கம் வடமராட்சி கிழக்கின் எல்லைக் கிராமமான சுண்டிக்குளம் வரையில் உள்ள கடற்பிரதேசத்தில் இந்திய மீனவர்களின் ஊடுருவலால் நாம் அனைவரும் தொழில்களையும், சொத்துக்களையும் இழந்து வருவதனால் பலர் தொழிலுக்குச் செல்லாது கரைகளில் படகுகளைக் கட்டிவிட்டுள்ளார்கள். சொத்துக்களையும் தொழிலையும் இழப்பதிலும் பார்க்க தொழிலுக்குச் செல்லாதிருக்கலாம் என்றே எமது மீனவர்கள் தொழிலுக்குச் செல்லவில்லை.

இந்தப் பிரச்சினைக்கு தீர்வு கண்டு நாம் சுதந்திரமாகத் தொழில் புரிய எவரும் உதவவில்லையே என அவர் கவலை தெரிவித்தார். (த-8)

# 13 வயதுச் சிறுமி மீது இளைஞர் வன்புணர்வு

யாழ்ப்பாணம், மார்ச் 21

பாடசாலை மாணவியான பச்சிளம் சிறுமியை 22 வயது இளைஞர் ஒருவர் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் தெல்லிப்பளையில் இடம்பெற்றுள்ளது.

உறவினர்களின் வீட்டுக்கு தனது சிறிய சகோதரியுடன் வந்த 13 வயதுச் சிறுமியே இவ்வாறு வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டவராவார்.

இது குறித்து மேலும் தெரியவருவதாவது-

குறித்த சிறுமியை 22 வயதுடைய இளைஞர் ஒருவர் சைக்கிளில் ஏற்றிக்கொண்டு சங்கானை நோக்கி நண்பர்களுடன் சென்று கொண்டு இருந்தார். அப்போது அளவெட்டி நோக்கிச் செல்லும் வீதியால் வந்த சிறுமியின் உறவினர் ஒருவர் இதனைக் கண்ணுற்று இளைஞரை மறித்த போது அங்கு தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து அங்கு கூடிய குறித்த பிரதேச மக்கள் இளைஞனையும் சிறுமியையும் பிடித்து இராணுவத்தினரிடம் கையளித்துள்ளனர்.

அவர்களை இராணுவத்தினர் தெல்லிப்பழை பொலிஸாரிடம் கையளித்தனர். இதன்பின்னர் குறிப்பிட்ட சிறுமியும் இளைஞனும் மருத்துவ பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்கள்.

குறிப்பிட்ட சிறுமி குப்பிளானைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இது குறித்து பொலிஸாரும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ஙு-68)

# காணிகளைப் பதிவு செய்ய பணம் கொடுத்து ஏமாறாதீர்

## தேசிய மாவட்டப் பதிவாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். மாவட்ட செலயகக் காணிப்பதிவகத்தின் ஆளணி வளங்கள் அதிகரிக்கப்பட்டு சேவைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. எனவே பொதுமக்கள் இடைத்தரகர்களுக்கு அதிகளவான பணத்தைக் கொடுத்து வீணாக அலைந்து திரிய வேண்டாம் என யாழ். மாவட்ட மேலதிக மாவட்டப் பதிவாளர் க.பிரபாகர் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யாழ். மாவட்ட செயலக காணிப் பதிவகத்தின் செயற்பாடுகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன. பதிவாளர் நாயகத்தினால் எமது அலுவலகத்துக்குத் தேவையான சகல ஆளணி வளங்கள் மற்றும் பொருள்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன. இதனால் எமது சேவைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

காணி உறுதி பதிவதற்கு முன்னர் ஒரு மாத காலம் வரையில் தேவைப்பட்டது. இப்போது ஒரு நாளிலேயே எம்மால் மக்களுக்குக் காணி உறுதி பதிவு செய்யப்பட்டு வழங்கப்படும். அத்துடன் காணி உறுதியின் பிரதிக்கு விண்ணப்பித்து 3 நாள்களில் அவற்றைப் பெற்றுக்கொள்ளலாம். அந்தளவுக்கு தற்போது எமது சேவைகள் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

மேலும் மக்கள் எமது அலுவலகத்தில் நியமிக்கப்பட்டுள்ள விசாரணை அதிகாரி மூலம் தமது விண்ணப்பப்படிவங்களை எவ்வாறு நிரப்புவது என்பது பற்றித் தெரிந்து கொள்ளலாம்.

எனவே பொது மக்கள் இவ்வாறான வேலைகள் மேற்கொள்வதற்கு இடைத்தரகர்களை நாட வேண்டாம். அவர்களிடம் வீணாக அதிகளவான பணத்தைக் கொடுத்து அலைக்கழிய வேண்டாம்- என்றார். (த-05)

# பெண்கள் சிறுவர்கள் மீதான வன்முறையை 3 மாதத்துக்குள் கட்டுப்படுத்த முயற்சி

## சட்ட வைத்திய அதிகாரி தகவல்

''வடமாகாணத்தில் அடுத்த மூன்று மாதங்களுக்குள் பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகளைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர கூட்டு நடவடிக்கையில் இறங்கியுள்ளோம். அந்த நடவடிக்கை வெற்றிபெறும் பட்சத்தில் இத்தகைய வன்முறைகளால் பாதிக்கப்படுவோர்களின் எண்ணிக்கையைக் குறைக்கலாம்'' இவ்வாறு யாழ். போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி சி. சிவரூபன் தெரிவித்துள்ளார்.

யாழ். மாவட்டத்தில் அண்மைக் காலமாக பெண்கள் சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்து வருவது தொடர்பாகவும், இது குறித்து சட்டத்துறையையும், சமூகமும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை என்ன என்பது பற்றியும் அவசர கலந்துரையாடல் ஒன்று மாலை மனித உரிமைகள் இல்லத்தில் அதன் இயக்குநர் ஷெரின் சேவியர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போதே சட்ட வைத்திய அதிகாரி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்:-

பெண்கள் அமைப்புகள், சிறுவர் அமைப்புக்கள் ஒரு வலைப்பின்னலான செயற்பாட்டோடு எப்போதும் இயங்கிக் கொண்டிருக்க வேண்டும். பாதிக்கப்பட்ட பெண்களுக்கான தொழிற் பயிற்சிகள், உளவள ஆலோசனைகள் வழங்கப்பட்டு, அவர்கள் தங்குவதற்கான பாதுகாப்பான இடங்களை உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.

பாலியல் சார்ந்த பிரச்சினைகளில் அநேகமானவை வெளியில் வருவதில்லை. தற்போது வெளியிடப்படும் இவ்வாறான வன்முறைகள் குறித்த புள்ளி விவரங்களுக்கு அப்பால் நிறையப் பிரச்சினைகள் பெற்றோரால் வெளிப்படுத்தப்படாது மறைக்கப்படுகின்றன.

இதில் அதிர்ச்சியான விடயம் என்னவென்றால் பொறுப்பு மிக்க மேலதிகாரிகள் சிலரும் இத்தகைய பிரச்சினைகளுக்குக் காரணமாக இருப்பதோடு, அவற்றை சட்டத்தின் முன் மறைக்கவும் முயல்கின்றனர். இந்த நிலை மாற்றப்பட வேண்டும்.

பெண்கள் சம்பந்தமான அமைப்புகள் ஒருங்கிணைந்து ஒரு தொடர்பைப் பேணி இவ்வாறான பிரச்சினைகளுக்குத் தீர்வினை ஏற்படுத்த வேண்டும். பொலிஸ் துறையினர், சட்டத்துறையினர், சமூகப் பொது அமைப்புகள், மக்கள் பிரதிநிதிகள், சுகாதாரத் துறையினர் எனச் சகல தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்த முடியும். அடுத்த மூன்று மாதங்களுக்குள் இதனைச் சாத்தியமாக்குவதற்கான முயற்சியில் இறங்கியுள்ளோம்- என்றார் அவர்.

கொழும்பு மனித உரிமைகள் இல்லத்தின் வெளிக்கள இணைப்பாளர் மேகலா சண்முகம் சட்டத்தரணி குகனேஸ்வரன், உதயனி உட்பட பல பெண்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பிரமுகர்கள் இந்தக் கலந்துரையாடலில் பங்குகொண்டனர். (ஙு-16-13)

### நிகழ்வுகள் இன்று

**கண்காட்சி**

சாவகச்சேரி மகளிர் கல்லூரியின் கற்பித்தற் சாதனக் கண்காட்சி மு.ப. 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும். அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெறும் கண்காட்சியில் தென்மராட்சி கல்வி வலய கல்வி முகாமைத்துவப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.முத்துலிங்கம் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்வார்.(த-9)

**கூட்டம்**

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் பொதுக் கூட்டம் பி.ப. 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறுமென அதிபர் க.அருந்தவபாலன் அறிவித்துள்ளார்.(த-9)

**கௌரவிப்பு**

'சிறந்த நிர்வாகப் பெண்மணி' விருது பெற்ற யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரை பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கும் விழா பிற்பகல் 3 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரியின் கலையரங்கில் பீடாதிபதி எஸ்.கே.யோகநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

(5)

# பெற்றோரை இழந்த சிறுவர்களின் பாதுகாப்பு கேள்விக் குறியாகியுள்ளது

## நீதிவான் கணேசராஜா தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

நாட்டில் வன்புணர்வுச் சம்பவங்கள் போருக்கு பின்னர் மிக அதிகளவில் அதிகரித்துள்ளன. குறிப்பாக சிறு பிள்ளைகள், பெற்றோரை இழந்து அநாதரவாக உள்ளபோது அவர்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகியுள்ளது. பல அநாதரவாக பிள்ளைகள் நிர்க்கதியான நிலையில் சிறுவர் இல்லங்களிலும் பெற்றோர் அருகில் இல்லாத ஏனைய இடங்களிலும் தங்கி இருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவ்வாறு தெரிவித்தார் யாழ். நீதிமன்ற நீதிவான் மா.கணேசராஜா. இது குறித்து அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு-

பாலியல் வன்முறைகளில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதற்கென உருவாக்கப்பட்ட பாதிக்கப்பட்ட பெண்கள் பாதுகாப்பு அமைப்புகள், மற்றும் சட்ட உதவி ஆணைக்குழு ஆகியவை இவ்விடத்தில் கூடுதல் கவனத்துடன் செயல்படுதல் அவசியம். குறிப்பாக பெண்கள் மீதான பாலியல் வன்முறைகளை தடுப்பது தொடர்பான சேவைகள் பெறப்படுவது மிக அவசியம்.

இன்றைய நிலையில் பாலியல் வன்முறைகள் ஆரம்பிக்க முன்னரே அவற்றைத் தடுத்து நிறுத்த வேண்டும். பாலியல் கல்வி, பாடசாலை ஆலோசனைக் கூட்டங்கள், பாடசாலை சுகாதார சேவைகள் ஆகியவை இவ்வாறான வன்முறைச் செயல்களில் ஈடுபடுவது தவறானது என்று புகட்ட வேண்டும். எமது சமூகத்தை பொறுத்தவரையில் பாலியல் வன்முறைகளுக்கு எதிராக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு தயக்கம் காட்டும் நிலை காணப்படுகிறது. எமது சமூக கலாசார நடைமுறைகள் காரணமாக இத்தகைய நிலை ஏற்பட்டுள்ளது. எனவே பாலியல் வன்முறைகளை வெளிக்கொணர்வதற்கு ஊடகங்களின் பங்களிப்பு மிக முக்கியமானது. சட்டரீதியான உரிமைகள் பற்றி பொது மக்களுக்கு அறிவூட்ட ஊடகங்கள் வழி சமைக்கவேண்டும்.

சிறுவர் மீதான பாலியல் வன்முறைகளுக்கு 10 முதல் 20 வருடங்களுக்கு சிறைத் தண்டனை வழங்க சட்டத்தில் இடமுண்டு. அதேவேளை இத்தகைய குற்றங்களுக்கு ஆயுள்தண்டனை வழங்கும் சட்டங்களை உருவாக்கவும் அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. அத்துடன் பாதிக்கப்பட்டோர் மற்றும் சாட்சிகளைப் பாதுகாப்பதற்கான சட்டங்கள் இயற்றப்படவேண்டும் என்று ஐ.நா. சிறுவர் நிதியம் வலியுறுத்தி வருகிறது.


தற்போது யாழ்ப்பாணத்தில் இலங்கையின் இரண்டாவது சிறுவர் நீதிமன்றம் உருவாக்கப்பட்டிருப்பதன் மூலம் சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான பொறிமுறை ஏற்பட்டுள்ளது. குறிப்பாக பாதிக்கப்பட்டோர் வசதி குறைந்தோராகவும், குற்றம் புரிந்தோர் வசதி படைத்தவர்களாக இருப்பதையும் அவதானிக்கமுடிகிறது. இந்த நிலையில் இத்தகைய குற்றச் செயல்களை வெளிப்படுத்தி பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ ஊடகங்களும், பெண்கள் தொடர்பான அமைப்புளும் பங்களிக்க வேண்டும்.

எமது சமுதாயத்தில் பெண்கள் பாலியல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு ஆளாதல், மண நீக்கம், குடும்ப பொருளாதார அந்தஸ்துநிலை, மேம்பாடு குறைதல், குடும்ப வன்முறை போன்றன காரணமாக பாதிக்கப்படுவதை கவனத்தில் கொண்டு தடுக்கவேண்டும். அதே போன்று சிறுவர்களைப் பயமுறுத்துதல், சாட்சிகளை விலைக்கு வாங்குதல் என்பனவும் தடுக்கப்படவேண்டும்.

பாலியல் வன்முறைகளால் பாதிக்கப்பட்டோரை இனங்கண்டு உதவ, சுகாதார சேவையில் ஈடுபடுவோருக்கு அது குறித்த பயிற்சிகளை வழங்குதல் முக்கியமானதாகும். தனியே பெண்ணியல் மருத்துவர்கள் மாத்திரமல்லாமல் பொது மற்றும் தனியார் சுகாதார அலுவலர்கள், குடும்ப நல மருத்துவர்கள், வளாகப் பயிற்சியாளர்கள், குழந்தை மருத்துவர்கள், மன நோய் மருத்துவர்கள் குடும்ப நல நிதியங்களின் தாதியர், ஊழியர் போன்ற சுகாதாரத் துறை சார்ந்த அனைவரும் இதற்குப் பயிற்றப்பட்டிருத்தல் அவசியம் ஆகும். -என்றுள்ளது.

(ஙு-4)

கொழும்பு சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டம்




# மருத்துவ உதவியாளர்களின் புறக்கணிப்பு முடிந்தது

கொழும்பு, மார்ச் 21
நாடளாவிய ரீதியில் மருத்துவ உதவியாளர்கள் முன்னெடுத்து வந்த பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை இடை நிறுத்த கொழும்பு மாவட்ட நீதிமன்று உத்தரவிட்டிருந்த நிலையில் இன்றுமுதல் தாம் கடமைக்குத் திரும்பவுள்ளதாக மருத் துவ உதவியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

பணிப் புறக்கணிப்பை முடிவுக்கு கொண்டுவந்தமை குறித்த அறிவிப்பை தாய்ச் சங்கம் அறிவித் துள்ளது. அதன்படி யாழ். மாவட்ட வைத்தியசாலைகளிலும் இன்றுமுதல் மருத்துவ உதவியாளர்கள் கடமைக்குத் திரும்புவர் என யாழ். மாவட்ட நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுநர்கள் ஒன்றியத் தலைவர் என். ஜெயபாஸ்கர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

இதேவேளை- கொழும்பு சுகாதார அமைச்சுக்கு முன்பாக நேற்று பெருமெடுப்பில் ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. தொடர்ந்து கொழும்பு விகாரமாதேவி பூங்காவில் மருத்துவ உதவியாளர்களுடனான கூட்டம் ஒன்றில் பகிஷ்கரிப்பைத் தொடரும்படி கூறப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (த-4-148)

## எதிர்த்துப் போராடுவோம்

01↘ இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை ஏற்றுக் கொள்ள முடியாது. அது தவறான கருத்துக்களின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட ஒன்று எனவும் மஹிந்தராஜபக்ஷ தெரிவித்துள்ளார். (உ-10)

# அவசரமாக வருகின்றனர் கனேடிய எம்.பிக்கள்

கொழும்பு, மார்ச் 21
ஜெனிவாவில் இலங்கை விவகாரம் சூடுபிடித்துள்ள நிலையில், தமிழர்களுடன் இணக்கப்பாட்டிற்கு செல்ல வேண்டியதன் அவசியத்தை இலங்கை அரசுக்கு வலியுறுத்துவதற்காக மூன்று முக்கிய உறுப்பினர்களை கனடா கொழும்புக்கு அனுப்புகிறது.

வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட்டின் பணிப்பின் பேரில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கிரிஸ் அலெக்ஸ்சாண்டர், ரிக் டகஸ்ரா மற்றும் செனட்டர் வேன் வைட் ஆகியோரே கொழும்புக்கு வருகின்றனர்.

இன்று அதிகாலை இவர்கள் கொழும்பை வந்தடைவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. மூன்று நாள்கள் தங்கியிருக்கும் இந்தக் குழுவினர் பலதரப்பட்டவர்களையும் சந்திக்கவுள்ளனர். இவர்களது பயண ஒழுங்கு விவரத்தை கனேடிய வெளிவிவகாரத்துறை வெளியிடவில்லை.எனினும், இவர்கள் யாழ்ப்பாணத்துக்கும் பயணம் செய்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இலங்கை விடயத்தில் முக்கிய கண்டன நாடாகக் கனடா மாறியுள்ள நிலையில், இந்தக் குழுவின் வருகை பலராலும் உன்னிப்பாகக் கவனிக்கப்படுகின்றது.

இலங்கைக்கு எதிரான பிரேரணையை ஜெனிவாவில் அமெரிக்காவுடன் இணைந்து கனடாவும் செயற்படும் நிலையில், அதற்கான ஆதரவு திரட்டும் பணியையும் கனடா முன்னின்று செய்து வருகிறது. இது இலங்கை அரச மட்டத்தில் மேலும் விசனத்தை அதிகரித்துள்ள நிலையிலேயே இந்தக் குழுவினரின் பயணம் அமைகிறது.

கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பெயட், கனேடியத் தமிழர்களை பலமுறை சந்தித்துள்ள நிலையில், நிலைமையை கண்டறியும் நோக்கிலும் இப்பயணம் அமைவதாகக் கனேடிய தேசிய ஊடகமான 'குளோப் அன்ட் மெயில்' செய்தி வெளியிட்டுள்ளது. (த)

# சோதனை நாளை

01↘ நடத்தப்பட்ட இராஜதந்திரச் சந்திப்புக்களை அடுத்து, இலங்கைக்கு ஆதரவு தெரிவிப்பதாகக் கூறிய நாடுகளில் சிலகூட தீர்மானத்தை ஆதரிப்பதாக அமெரிக்காவுக்கு வாக்குக் கொடுத்துள்ளன என்று அறியவருகிறது.

### இன்று பக்க நிகழ்வு

இதற்கிடையே, இலங்கை மீதான தீர்மானம் குறித்து இன்று ஐ.நா. மனித உரிமைகள் சபையில் பக்க நிகழ்வு ஒன்று இடம்பெறவுள்ளது. வோஷிங்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் இதனை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் பல நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொள்ளவுள்ளனர். இலங்கை மீதான தீர்மானத்தை ஆதரிப்பதன் அவசியம் என்ன என்பதை இந்த நிகழ்வு வலியுறுத்தும்.

இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்படுவது மட்டுமன்றி, இலங்கையில் நிகழ்ந்த போர்க் குற்றங்கள் குறித்து சர்வதேச விசாரணை ஒன்று நடத்தப்படுவதன் அவசியமும் இந்த நிகழ்வில் எடுத்துரைக்கப்படும்.

### குறைகிறது ஆதரவு

ஆனால், தீர்மானம் நிறைவேறாமல் தடுப்பதற்கான பகீரத முயற்சிகளில் இலங்கை அரசும் அதன் அதிகாரிகளும் தொடர்ந்தும் ஈடுபட்டு வருகிறார்கள். அமெரிக்க எதிர்ப்பு நிலை வாதத்தை முன்வைத்து இலங்கை எடுத்து வரும் முயற்சிகளுக்கு தற்போது ஆதரவு குறைந்தே வருகின்றது என்கின்றனர் அ ங்கிருக்கும் ராஜ தந்திரிகள். (உ-01)

## இந்திய முடிவு தெளிவானது

01↘ உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்துக்குப் பிரதமர் நேற்றுப் பதிலளித்த போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளை, இலங்கை மீதான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிக்கும் மனப்பாங்கில் இந்திய அரசு உள்ளது என்று பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றில் நேற்று முன்தினம் விடுத்த அறிவிப்பு ''மழுப்பலான, பயனில்லாத பதில்'' என முதல்வர் ஜெயலலிதா உட்பட பலர் விமர்சித்திருந்தனர்.

இந்தநிலையில், பிரதமர் மன் மோகன் மீண்டும் அதே பதிலையே நேற்றும் அறிவித்திருக்கிறார்.

''இலங்கை விவகாரத்தைப் பொறுத்தவரை ஐ.நா. சபையில் கொண்டுவரப்படும் பிரேரணையின் இறுதி அறிக்கை நமக்குக் கிடைக்கவில்லை. எனினும் அந்த பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிப்பதே இந்திய அரசின் விருப்பமாக உள்ளது'' - என்றார் மன்மோகன். (த-சி)

## 13+ தீர்வுத் திட்டத்தை எப்படி செயற்படுத்துவீர்?

01↘ அனுப்பியுள்ளதா கத் தகவல்கள் கசிந்துள் ளன. இலங்கை இனப்பிரச்சி னைக்கான தீர்வு விடயம் தொடர்பில் இந்திய நாடா ளுமன்றத்தில் எழுப்பப் பட்ட கேள்வி ஒன்றை அடுத்தே இந்தியா இலங்கை அரசிடம் இந்த விளக்கத் தைக் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்திய வெளிவிவகார அமைச்சர் கிருஷ்ணாவிடம் இனப்பிரச்சினைக்கு 13ஆவது திருத்தச் சட்டமூலத்துக்கு அப்பால் சென்று அரசியல் தீர்வைக் காண் பதில் உறுதியாக இருப்பதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதி யளித்திருந்தார்.

இதனை அடுத்தே இப்போது இந்திய அரசினால் இந்த விளக்கம் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (த)

## இந்தியாவின் முடிவை மதிக்கிறது இலங்கை

01↘ அது இலங்கை விவகாரம் தொடர்பில் நன்கு ஆராய்ந்தே முடிவுகளை எடுக்கும் என்பது எமக்குத் தெரியும். இந்தியா தீர்மானத்தை ஆதரிப்பதாக முடிவு செய்துள்ளதை நாம் வரவேற்கின் றோம். இந்திய மத்திய அரசு எவ்வாறான தீர்மானத்தை எடுத் தாலும் அதற்கு நாம் மதிப்பளிப்போம் - என்றார் கருணா ரட்ன அமுனுகம. (த)

## நாடாளுமன்றுக்கு திடீரென வந்தார் ஜனாதிபதி மஹிந்த

01↘ இருந்த ஐ.தே.க. மற்றும் ஜே.வி.பி. உறுப்பினர்கள் கண்டும் காணாதது போல் இருந்தனர். ஜனாதிபதி இடது கையில் 'பன்டேஜ்' போட்ட நிலையிலேயே காணப்பட்டார்.முன்னாள் கடற்றொழில் அமைச்சராக இருந்த ஜனாதிபதி சபையில் இருக்கும் போது கடற்றொழில் தொடர் பாக விவாதிப்பது சிறப்பாக இருக்கி றது என்று குறிப்பிட்டார் ரங்கே பண்டார.

சிறிது நேரத்தின் பின் 2.45 மணிக்கு ஜனாதிபதி சபையில் இருந்து வெளியேறினார். அப்போது பேசிக்கொண்டிருந்த ரங்கே பண்டார கடற்றொழில் சம்பந்தமாகப் பேசுவதைக் கேட்டுச் சகிக்க முடியாமல் ஜனாதிபதி கூட எழுந்து போகிறார் என்றார். அப்போது திரும்பிப் பார்த்த ஜனாதிபதி, இல்லை இல்லை அப்படி ஒன்றும் இல்லை. சில முக்கிய விடயங்கள் காரணமாகப் போகின்றேன் என்று சிரித்தபடி கூறிவிட்டு வெளியேறினார். (த-2)

# போர்க்குற்ற விசாரணையை முடுக்க ஐ.நா. அங்கீகாரம்

01↘ அமெரிக்கா சமர்ப்பித்துள்ள பிரேரணையை ஜெனிவாவில் நிகழும் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தில் ஐ.நா. ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது என ஐ.நா. மனித உரிமைகள் சபைக்கான அமெரிக்கத் தூதுவர் எய்லீன் டொனாஹே தெரிவித்துள்ளார்.

''இதை நாம் ஓர் அடையாள வாக்குக்கான விவகாரமாக நினைக்கவில்லை. நம்பத்தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை அரசை ஊக்குவிப்பதற்கான ஒரு காத்திரமான முயற்சியாக இது அமையும். அதேவேளை, நம்பகத்தன்மை கொண்ட நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் இலங்கை அரசு தோல்வி கண்டுவிடுமோ என்றும் நாம் அஞ்சுகின்றோம்'' - என்றும் அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

நல்லிணக்க ஆணைக் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கான காலவரையறையை வகுக்குமாறு இலங்கையை அமெரிக்கப் பிரேரணை கேட்டுக்கொள்ளும். இதையடுத்து, போர்க் குற்றங்கள் மீது சுயாதீன விசாரணையை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்குமாறு இலங்கையை அது கோரும்'' - என்றும் அவர்மேலும் குறிப்பிட்டார்.

அமெரிக்காவின் பிரேரணைக்கு இந்தியா ஆதரவு அளிக்குமென இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் விடுத்த அறிவிப்பால் இந்த முயற்சியில் இலங்கை மேலும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது.

இறுதிக்கட்டப் போரின் போது இடம்பெற்ற அத்துமீறல்களை மூடிமறைக்க வேண்டாமென இலங்கைக்கு அமெரிக்கப் பிரேரணை எச்சரிக்கை விடுக்கின்றது. இப்போரில் 40 ஆயிரம் சிவிலியன்கள் கொல்லப்பட்டுள்ளனர் என ஐ.நா. தெரிவித்துள்ளது.

அமெரிக்காவின் 'வோல் ஸ்ட்ரீட் ஜோர்னல்' இத்தகவல்களை வெளியிட்டுள்ளது.

# ஆதரவளித்த நாடுகளும் இப்போது கைவிடுகின்றன

01↘ மாதங்களாகப் பரப்புரைகளை மேற்கொண்டு பல நாடுகளின் ஆதரவைத் திரட்டியிருந்தது.

ஆனால் அமெரிக்கா இறுதி நேரத்தில் நூற்றுக்கும் அதிகமான இராஜதந்திரிகளை ஒரே நேரத்தில் களமிறக்கி மேற்கொண்டுள்ள தீவிர பரப்புரையும், அழுத் தங்களும் இலங்கையை நிலைகுலைய வைத்துள்ளது.

அமெரிக்காவின் அழுத்தங்களினால், ஏற்கனவே இலங்கைக்கு ஆதரவளிப்பதாக வாக்குறுதி அளித்திருந்த பல நாடுகள் அந்த முடிவில் இருந்து பின்வாங்கத் தொடங்கியுள்ளன. குறிப்பாக ஆபிரிக்க நாடுகளில் பெரும்பாலானவை இலங்கையைக் காப்பாற்றும் நிலையில் இல்லை என்பதும் தெரியவந்துள்ளது.

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் அறிவித்துள்ளதால், ஜெனி வாவில் இலங்கையின் இரா ஜதந்திர முயற்சிகள் நெருக் கடிக்குள் தள்ளப்பட்டுள்ளன.

இந்தியாவின் அணுகுமுறையை அவதானித்து, வாக்கெடுப்பின் போது முடிவைத் தீர்மானிக்கத் திட்டமிட்டிருந்த பல நாடுகளின் ஆதரவை இப்போது இலங்கை இழக்கும் நிலை உருவாகியுள்ளதாக ஜெனிவாத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது தீர்மானத்தை தோற்கடிக்கத் தேவையான வாக்குகளைப் பெறும் இலங்கையின் இறுதி நேர முயற்சிகளுக்குப்பெரும்பின்னடைவை ஏற்படுத்தியுள்ளதாகவும், இதனால் இலங்கைத் தரப்பு பெரிதும் கவலையுற் றிருப்பதாகவும் ஜெனிவாவில் உள்ள இலங்கை இரா ஜதந்திரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இனவாதப் போக்குக்கு இந்நாட்டில் முடிவுதான் எப்போது .....?

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்படுவதை எதிர்ப்பவர்கள் அரசாங்கத்திலிருந்து வெளியேறிவிட வேண்டும்.

அரசாங்கமே நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது. ஆகையால் அதன் பரிந்துரைகளை அரசு நிறைவேற்ற வேண்டியது கட்டாயமாகும். பரிந்துரைகளுக்கு உட்பட்டு எவராவது தவறு செய்திருந்தால் அவர்களைத் தண்டித்தாக வேண்டும்.

அதன்பொருட்டு, சம்பந்தப்பட்டோர் மீது விசாரணை நடத்த வேண்டும். அதனை நாம் ஏற்றுக்கொள்கிறோம். ஆனால் அத்தகைய விசாரணைகளைக் கண்காணிப்பதற்கு வெளிநாட்டு அனுசரணை தேவையில்லை. உள்நாட்டுச் சட்டங்களுக்கு அமைய விசாரணை நடத்தப்பட்டு தீர்வு காண்பது சிறந்ததாகும்.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார், தேசிய மொழிகள் மற்றும் இனங்களுக்கு இடையே நல்லுறவுக்கான அமைச்சரும், மூத்த இடதுசாரித் தலைவர்களில் ஒருவருமான வாசுதேவ நாணயக்கார. இவர் அரசாங்கத்தின் பல பங்காளிக் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவருமாவார்.

நல்லிணக்க ஆணைக்குழுவை நியமித்தது ஆட்சியிலுள்ள அரசாங்கமே; நாட்டின் நிறைவேற்று அதிகாரமும் அதன் வழியான சர்வ அதிகாரங்களும் கொண்டவர் ஜனாதிபதியே. அவற்றில் தெரிவிக்கப்பட்டுள்ள பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு வழி துறையான செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டிய முக்கிய பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும்.

அவ்வாறிருக்க, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான அதே அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கூட்டுக் கட்சிகளான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் அமைச்சர் விமல் வீரவன்ஸவும் ஜாதிக ஹெல உறுமயவின் அமைச்சர் சம்பிக்க ரணவக்கவும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முக்கியமான பரிந்துரைகளை நடைமுறைப்படுத்தக் கூடாது என்று கர்ச்சிக்கிறார்கள்.

அவர்கள் இருவரும் தமிழ் மக்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டுகிறார்கள். ஜெனிவா மாநாட்டில் இலங்கைக்கு எதிரான பிரேரணை நிறைவேற்றப்பட்டால், 1983 ஆம் ஆண்டில் நாட்டில் தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்டது போன்று, பெரும் இனக்கலவரம் வெடிக்கும் என்று எச்சரிக்கிறார் அமைச்சர் சம்பிக்க ரணவக்க. அவர் அனேகமாக 50 களில் இனவாத நெருப்பைக் கக்கிய கே.எம்.பி.ராஜரத்னாவை ஒத்திருக்கிறார்.

அரசாங்கம், தனது சொந்தத்தில், சுய உணர்வுடன் நியமித்த நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதில் தயக்கமும் தாமதமும் காட்டி வருவதாலேயே, சர்வதேசம் இலங்கை மீதான பிரேரணையை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் தாக்கல் செய்துள்ளது.

போர்க்குற்றச்சாட்டுக்கள் தனது கழுத்தை இறுக்கலாம் என்ற அச்சத்துடனும், அதனைத் தடுத்து நிறுத்தும் உள்ளார்ந்த நோக்கத்துடனும் இலங்கை அரசினால் முந்திக்கொண்டு நியமிக்கப்பட்டதே நல்லிணக்க ஆணைக்குழு. எனினும் நாட்டில் அமைதியையும் இன நல்லிணக்கத்தையும் தோற்றுவிப்பதற்கான பரிந்துரைகளைத் தெரிவிக்கவும் வகை செய்யப்பட்டது. அதனூடு ஒற்றை வழி திறக்கப்பட்டது.

எனினும், பரிந்துரைகளைச் செயற்படுத்துவதில் போதிய வேகமும் உரிய ஆர்வமும் முழு அளவில் காட்டப்பட்டதாக இல்லை. ஜெனிவா மனித உரிமைகள் மாநாட்டில் இலங்கை தொடர்பான பிரேரணை கொண்டு வரப்பட்டிருப்பதற்கு, அதற்கான முன்னறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பதற்கு, மேற்கூறப்பட்டவையும் காரணங்கள் என்பதனை அரச தரப்பு நன்கறியும்.

இவற்றைக் கணக்கில் எடுக்காமல், கருத்தில் கொள்ளாமல், இலங்கை அரசின் அமைச்சர்கள் நாட்டின் கழுத்தில் சுருக்குப் போடுவதற்கு அமெரிக்கா தலைமையில் சர்வதேசம் கங்கணம் கட்டி நிற்பதாக உள்நாட்டில் பரப்புரை செய்கிறார்கள்.

இத்தனைக்கும் நல்லிணக்க ஆணைக்குழு, இறுதிக் கட்டப் போர் குறித்து மட்டுமல்லாது, 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நாட்டில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களையும் ஆராய்ந்தே அறிக்கை சமர்ப்பித்துள்ளது.

அதனையும் கருத்தில் கொள்ளாமல், நாட்டம் காட்டாமல் தமிழ் மக்கள் மீது 1983 ஆம் ஆண்டில் ஏவிவிடப்பட்டது போன்ற இனக்கலவரம் கட்டவிழும் என்று எச்சரிப்பதும் -

ஜெனிவா மாநாடு முடிந்த கையோடு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரைக் கைது செய்து, நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டுமென்று அரசுக்கு வெளியில் நின்று இனவாதம் பேசும் அதன் ஊதுகுழல் அமைப்புக்கள், கோரிக்கை என்ற வடிவத்தில், எச்சரிக்கும் பாங்கில் கருத்துப் பரம்பல் செய்வதும் மேலும் நிலைமையை மோசமாக்குமே அன்றி இன நல்லுறவையும் சகோதரத்துவத்தையும் ஒருபோதும் உருவாக்காது.

ஜெனிவாப் பிரேரணை குறித்து வெறுவாய் சப்பி, தமிழ் மக்களைக் குறி வைப்பதில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தும் அரச பங்காளிகளின் இப்போதைய போக்கு - இன அடக்கு முறைக்கு, இன ஒடுக்குமுறைக்கு - அத்திபாரமாக அமையலாம்.

அத்தகைய ஒரு சூழமைவை உருவாக்கத் திட்டமிடப்படுகிறது என்றே தமிழ் மக்கள் உணர்கிறார்கள். அதுமட்டுமன்றி, ஜெனிவாப் பிரேரணைக்குப் பழிவாங்கும் திட்டம் என்றே பொதுவாக அஞ்சப்படுகிறது.

இத்தகைய அடக்குமுறைசார் உத்தி சர்வதேச நாடுகளின் கண்களையும் குத்தும் என்பதனை இலங்கை அரசு மறக்கலாமோ....? இப்போதைய அனுபவத்தை தொடர்ந்தும் தக்கவைத்துக் கொள்வதுதான் அரசின் விருப்பம் என்றால், நாட்டின் தலைவிதி அதுவாகவே தொடரும்.

# இரும்புக் கூட்டுக்குள் இணையும் கரங்கள்!

## அரசியல் கைதியின் அவலம்

கொழும்பு, மார்ச் 21

30 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதியொருவருக்கு எதிர்வரும் 5ஆம் திகதி சிறைச்சாலைக்குள்ளேயே பதிவுத் திருமணம் நடைபெறவுள்ளது.

புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெறும் இவ்வைபவத்தில் முக்கிய அமைச்சர்கள், வெளிநாட்டுத் தூதுவர்கள், மதகுருமார்கள் உட்பட பல பிரமுகர்கள் கலந்துகொள்வர் எனத் தெரியவருகின்றது.

சக்திவேல் இலங்கேஸ்வரன் (வயது - 34) என்பவருக்கே மகஸின் சிறைச்சாலைக்குள் இந்தப் பதிவுத் திருமணம் நடத்தி வைக்கப்படவுள்ளது. இவர் வவுனியாவைச் சேர்ந்தவர். 2000ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 7ஆம் திகதி கைதுசெய்யப்பட்டவர் என்பது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவைச் சேர்ந்த சுதர்ஷினி என்ற யுவதியையே சக்திவேல் இலங்கேஸ்வரன் கரம் பிடிக்கவுள்ளார். இது காதல் திருமணமாகும்.

அதேவேளை, இதற்கு முன்னரும் ரவி என்ற தமிழ் அரசியல் கைதியொருவருக்கு அரசு திருமணம் செய்துவைத்தது. ஆனால், அவர் இன்னும் விடுதலை செய்யப்படவில்லை. அவரது மனைவி தனியாகவே பல்வேறு இன்னல்களுக்கு மத்தியில் வாழ்க்கை நடத்திவருகின்றார். எனவே, அந்தத் தம்பதிகளுக்கு நேர்ந்த கதி இவர்களுக்கும் இடம்பெறக்கூடாது என்பதே தமிழ் உறவுகளின் எதிர்பார்ப்பாகும்.

5ஆம் திகதி நடைபெறவுள்ள பதிவுத் திருமணம் தொடர்பில் 'உதயனி'டம் கருத்து வெளியிட்ட சுதர்ஷினி கூறியவை வருமாறு:-

"இலங்கேஸ்வரனான எனது வருங்காலக் கணவரை விடுதலை செய்வதற்கு நாம் இதுவரை அயராது பாடுபட்டோம். ஆனால், பயன் எதுவும் கிட்டவில்லை.

திருமணம் முடிவடைந்த பின்னர், மனைவி என்ற அடிப்படையில் அவரின் விடுதலைக்காகப் போராடுவேன். கருணை உள்ளம் படைத்தவர்களாக இருப்பின் அவருக்குப் பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்யலாம்" - என்றார். (த-சி)

# கொழும்பில் நடைபெறும் பேரணிக்கு 'பணயக் கைதி'களாக வடக்கு மீனவர்

## அச்சுறுத்தி அழைத்துச் செல்ல முயற்சி

யாழ்ப்பாணம், மார்ச் 21

எதிர்வரும் 23ஆம் திகதி ஜெனிவாவில் இலங்கை அரசுக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாளை வியாழக்கிழமை கொழும்பில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை அரசு ஏற்பாடு செய்துள்ளது.

இந்தப் பேரணியில் வட பகுதி மீனவர்களையும் கலந்துகொள்ள வைப்பதற்கான தீவிர முயற்சியில் கடற்றொழில் அமைச்சு ஈடுபட்டுள்ளது.

வட பகுதிக் கடற்படையினர் மீனவர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து பேரணியில் கலந்து கொள்ள வேண்டும் என வற்புறுத்தி வருகின்றனர்.

கடற்றொழில் நீரியல் வளத் துறை அமைச்சர் ராஜித சேனரட்ணவினால் உருவாக்கப்பட்ட தேசிய கடற்றொழிலாளர் மகா சம்மேளனத்தின் ஏற்பாட்டிலேயே வடபகுதி மீனவர்கள் அழைத்துச் செல்லப்படவுள்ளனர் எனத் தெரிய வருகிறது.

**வட பகுதி மீனவர்களைப் பேரணியில் பங்கு பெறச் செய்யுமாறு வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் இருக்கும் மாவட்டக் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.**

வட பகுதி மீனவர்களைப் பேரணியில் பங்கு பெறச் செய்யுமாறு வடக்கிலுள்ள ஐந்து மாவட்டங்களிலும் இருக்கும் மாவட்டக் கடற்றொழில் திணைக்கள உதவிப் பணிப்பாளர்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

கொழும்புப் பேரணியில் கலந்து கொள்வதற்கு புறப்படத் தயாராக இருக்குமாறு மீனவர் சங்கங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கடற்றொழில் மகா சம்மேளனம் மாவட்டக் கடற்றொழில் திணைக்களம் ஊடாகவும், கடற்றொழில் அமைச்சு, கடற்படை ஊடாகவும் மீனவர் சங்கப் பிரதிநிதிகளுக்கு பேரணியில் கலந்து கொள்ளுமாறு அறிவித்து வருகிறது எனத்தெரிய வருகிறது.

இதேவேளை -

வட பகுதிக் கடற்படைக் கட்டளைத் தளபதி ரவீந்திர விஜய குணவர்த்தன வடமராட்சி வடக்கு மீனவர் சங்கப் பிரதிநிதிகளை அழைத்து பேரணியில் கட்டாயம் கலந்து கொள்ளுமாறு வற்புறுத்தியதாகத் தெரியவருகிறது. (த-3)

# பாதிக்கப்பட்ட பல்கலை மாணவருக்கு இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கான வடமாகாண சபையின் இரண்டாம் கட்டக் கொடுப்பனவுகள் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை வழங்கப்படவுள்ளதாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

பாதிக்கப்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு வடமாகாண சபையினால் மாதாந்தம் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டு வருகின்றன. முதற்கட்டக் கொடுப்பனவு 189 மாணவர்களுக்கு கடந்த மாதம் 22 ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதனடிப்படையில் இவ்வாறு உதவித் தொகைபெற்று வெளியேறிய மாணவர்கள் தவிர்ந்த ஏனையோருக்கான உதவித் தொகை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆளுநரின் அலுவலகத்தில் வைத்து 180 மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ளது. இதன்போது 7 மாதங்களுக்கான கொடுப்பனவுகள் வழங்கப்படும் - என்றார். (த-5)

# தவறில்லை என்கின்றது ஐ.தே.க.

கொழும்பு, மார்ச் 21

இலங்கையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான அமெரிக்காவின் கோரிக்கையில் தவறில்லை என ஐ.தே.கட்சி தெரிவித்துள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை உரிய முறையில் நடைமுறைப்படுத்துமாறே அமெரிக்கா கோருகின்றது என அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன தெரிவித்துள்ளார். அரசால் நியமிக்கப்பட்ட ஆணைக் குழு ஒன்றின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துமாறு அமெரிக்காவோ அல்லது ஐக்கிய நாடுகள் அமைப்போ கோரிக்கை விடுப்பதில் தவறில்லை. எனவே, குறித்த பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அதிபர் தடை தாண்டல் பரீட்சை பிற்போடுமாறு கோரிக்கை

அச்சுவேலி, மார்ச் 21

நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுபவர்களும் தோற்றுவதற்கு வசதியாக அதிபர் பதவியில் உள்ளோருக்கான வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான விண்ணப்பத்தினைப் பின்தள்ளிப் போடுமாறு இலங்கை தரம்பெற்ற அதிபர்கள் சேவை சங்கம் கல்வி அமைச்சின் செயலாளரிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

அதிபர் பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது பதவிக் காலத்தில் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்றிச் சித்தியடைந்திருக்க வேண்டும். எனவே எதிர்வரும் ஏப்ரல் 16ஆம் திகதியை இறுதித்தினமாகக் கொண்டு விண்ணப்பம் கோரப்பட்டுள்ள வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்கான இறுதித்தினத்தை பின்தள்ளிப் போடுவதன் மூலம் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பின் மூலம் இலங்கை அதிபர் சேவை தரம் -3, இலங்கை அதிபர் சேவை தரம் 2:II பதவிகளுக்கு நியமிக்கப்படவுள்ளவர்களும் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.

எனவே இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இலங்கை தரம்பெற்ற அதிபர்கள் சேவை சங்கத்தின் செயலாளர் எஸ்.யூ.காரியவாசம் கல்வி அமைச்சின் செயலாளருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

(த-11)

# கசிப்புக் குற்றவாளிகள் செலுத்தினர் ரூ 4 லட்சம்

கிளிநொச்சியின் பல்வேறு பகுதிகளிலும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றினால் சுமார் நான்கு இலட்சம் ரூபா தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

**சட்ட விரோதமான கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதுடன் பலர் கைதுசெய்யப்பட்டுத் தண்டம் அறவிடப் படுகின்றமை குறிப்பிடத்தக்கது.**

கிளிநொச்சிப் பகுதியில் சுமார் ஒன்பது போத்தல் கோடாவினைத் தன்னுடன் வைத்திருந்த ஒருவர் கடந்த 17 ஆம் திகதி கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு அடுத்த நாள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிறுத்தப்பட்டார். இந்த நபருக்கு 50 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

ஏற்கனவே இரண்டு தடவைகள் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனைகளில் இவர் ஈடுபட்டுத் தண்டனை வழங்கப்பட்ட போதும் மீளவும் மேற்படி குற்றத்தைச் செய்தமையால் ஆறு மாத சிறைத்தண்டனையும் இவருக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதே வேளை 14 போத்தல் கோடாவினைத் தம்வசம் வைத்திருந்த ஒருவருக்கு 60 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

சுமார் 196 போத்தல் கோடாவினை வைத்திருந்த வேறொரு நபருக்கு 1 லட்சத்து 25 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

மேலும் கிளிநொச்சி கல்மடு நகர்ப்பகுதியில் 173 போத்தல் கோடாவினை வைத்திருந்த ஒருவருக்கு 1 லட்சத்து 3 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

அதே பகுதியில் ஒரு போத்தல் கசிப்பினை வைத்திருந்த ஒருவருக்கு 35 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டது.

இவ்வாறு சட்ட விரோதமான கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வருவோரின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதுடன் பலர் கைதுசெய்யப்பட்டுத் தண்டம் அறவிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

(க-6)

## மல்லாவி பொது நூலகம் சிறந்த முறையில் அபிவிருத்தி

### பிரதேச சபைத் தலைவர், செயலாளர் உறுதி

துணுக்காய், மார்ச் 21

மல்லாவி பொது நூலகத்தை சிறந்த முறையில் அபிவிருத்தி செய்ய இருப்பதாகத் துணுக்காய்ப் பிரதேச சபைத் தலைவரும், செயலாளரும் உறுதி வழங்கியுள்ளனர். கடந்த 14ஆம் திகதி பிற்பகல் 2.30 மணியளவில் மல்லாவியில் இடம்பெற்ற வாசகர்களுடனான ஆலோசனைக் கூட்டத்திலேயே இந்த உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

இந்த ஆலோசனைக் கூட்டம் நூலகர் வே.லவேந்திரா தலைமையில் இடம் பெற்றது.

இந்த நூலகத்துக்குத் தேவையான மலசலகூட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், கணினி வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுமெனப் பிரதேச சபையின் செயலாளர் மு.கிருஸ்ண நவரத்தினராஜா தெரிவித்தார்.

**மலசலகூட வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், கணினி வசதிகள் ஏற்படுத்தித் தரப்படுமெனப் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.**

இந்த நூலகத்தை நவீனப் படுத்தவுள்ளதாகவும், கல்வியுடன் தொடர்புடைய நூல்களை அதிகளவில் பெற்றுத்தரவுள்ளதாகவும் பிரதேச சபைத் தலைவர் வீ.இராசரத்தினம் தெரிவித்தார்.

இங்கு கருத்துரைகளை மல்லாவி மத்திய கல்வி அதிபர் து.யேசுதானந்தர், வவுனிக் குளம் பாடசாலை அதிபர் இ.நிக்ஷன், யோகபுரம் ம.வி. அதிபர் த.யோகானந்தராசா, பிரதேச சபையின் உபதவி சாளர் க.செல்வரத்தினம் ஆகியோர் வழங்கினர்.சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட பாடசாலை மாணவர்கள் இதில் கலந்துகொண்டனர்.

(க-415)

## கல்வாரி தேவாலய வருடாந்த திருவிழா

வவுனியா, மார்ச் 21


வவுனியா கோமரசன் குளம் கல்வாரி தேவாலயத்தின் வருடாந்தத் திருவிழாவுக்கான ஏற்பாடுகள் ஆரம்பமாகியுள்ளன.

இந்த ஆலயத்தில் வருடம் தோறும் சிறப்பான முறையில் திருவிழா இடம்பெறுவது வழக்கமாகும்.

இதற்கென வடமாகாணத்தின் பல பாகங்களிலுமிருந்தும் அடியார்கள் வந்து கலந்து கொள்ளுகின்றமை வழக்கமாகும்.

இந்த மாத இறுதிப் பகுதியில் இடம்பெறும் திருவிழாவுக்கான சகல ஏற்பாடுகளும், தற்போது முழு வீச்சில் இடம்பெறுவதைக் காணமுடிகின்றது.

(க-421)



முல்லைத்தீவு கருநாட்டுக்கேணிக்கும் கொக்குளாய்க்குமிடையில் மாடு மேய்க்கச் சென்றபோது கடற்படையினரிடம் அடி வாங்கிய ஒருவரை நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் சந்தித்து ஆறுதல் கூறுகிறார். (12)

## புதிய நீர்த்தாங்கி

முல்லைத்தீவு, மார்ச் 21

ஒட்டுசுட்டான் நெடுங்கேணி வீதியில் புதிய நீர்த்தாங்கி யொன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

சுமார் 7 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் இந்த நீர்த்தாங்கி மூலம் சமளங்குளம், ஒட்டு சுட்டான், சிறுநகர், புதுக்குளம் கிராம மக்களின் குடிதண்ணீர் தட்டுப்பாடு நீங்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தப் பகுதியிலுள்ள நிலம் மேடாகக் காணப்படுவதால் கோடை காலத்தில் நீர் வரண்டு கடுமையான தண்ணீர்த் தட்டுப்பாடு நிலவி வருகின்றது.

இதனால் இங்குள்ள மக்கள் குடிதண்ணீருக்கு வேறு இடங்களைத் தேடி அலைந்து திரிய வேண்டிய அவல நிலையில் உள்ளனர்.

அத்துடன் இவர்களது வேறு தேவைகளுக்கும் தண்ணீரைப் பெறுவதில் இவர்கள் பெரும் சிரமங்களுக்கு ஆளாகி வருகின்றனர்.

இந்த நிலையில் நீர்த்தாங்கி அமைக்கப்படுவது பெரும் பயனுள்ளதாக இருக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

(க-500)

## விதை நெல்

முல்லைத்தீவு, மார்ச் 21

விதை நெல்லை விதை உற்பத்தியாளர்களிடமிருந்து பெறுவதற்கு ஆவன செய்யக்கூடுமென விவசாயப் போதனாசிரியர் எஸ்.சிவகுமார் தெரிவித்துள்ளார்.

கற்சிலைமடுவில் இடம்பெற்ற சிறுபோக நெற்செய்கைக் கூட்டத்தின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மூன்று தொடக்கம் மூன்றரை மாத நெல்லினங்களான ஏ.ரி.308, பி.ஜி.250, 362, மூன்றரைமாத வெள்ளைச் சம்பா மற்றும் ஏனைய சில நல்ல நெல் இனங்களையும் அவர் அறிமுகம் செய்து வைத்தார்.

தற்போதைய நிலையில் இந்த மாவட்டத்தில் பி.ஜி. 351, ஏ.ரி.362 என்பன நல்ல விளைச்சலைத் தருவதாகவும் விவசாயப் போதனாசிரியர் மேலும் தெரிவித்தார்.

சிறுபோகச் செய்கைக்கான விதை நெல்லை விவசாயப் பகுதியினர் தர முடியாத நிலையில் இதனை விதை உற்பத்தியாளர்களிடமிருந்து பெற்றுத் தரப்படுமென்ற இந்த அறிவிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

(க-500)

## பெரியகுளவெளியில் சிறுபோக விவசாயம்

முல்லைத்தீவு, மார்ச் 21

கற்சிலைமடு பெரியகுளவெளியின் கீழான சிறுபோக விவசாயக் கூட்டம் கடந்த 13ஆம் திகதி இடம்பெற்றது.

இங்கு 80 ஏக்கர் காணியில் விவசாயத்தை மேற்கொள்ள முடியும்.

இந்தக் கூட்டம் ஒட்டுசுட்டான் கமநலச்சேவை நிலையப் பெரும்பாக உத்தியோகத்தரின் பிரதிநிதியான வே.சுகுமார் என்பவரால் நடத்தப்பட்டது.

இதில் விவசாயப் போதனாசிரியர் சிவகுமார், கமக்கார அமைப்பினர், பங்காளர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

அங்கு பின்வரும் தீர்மானங்கள் எடுக் கப்பட்டன.

நெல் விதைப்புக் கான கால எல்லை இந்த மாதம் 15ஆம் திகதி ஆரம்பித்து அடுத்த மாதம் 15ஆம் திகதி நிறைவுபெறும். வாய்க் கால் துப்புரவுக்கான கடைசித் திகதி இந்தமாதம் 25ஆம் திகதியாகும். வேலிகள் யாவும் அடுத்த மாதம் 15ஆம் திகதிக்குள் அடைக்கப்பட்டி ருத்தல் வேண்டும்.

கால்நடைகளை ஒழுங்காகக் கட்டுப்படுத்த வேண்டும். இந்த மாதம் 25 ஆம் திகதி நீர் திறந்து விடப்படும்.

(க-500)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய இருவருக்கு தலா 5, 000 தண்டம்

கிளிநொச்சி, மார்ச் 21

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றியவர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி கல்மடுநகர், அரசர்கேணி ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவர்கள் கைது செய்யப்பட்டு மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் தலா 5ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

**கிளிநொச்சி கல்மடுநகர், அரசர்கேணி ஆகிய பகுதிகளில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றியவர்கள் கைதுசெய்யப்பட்டு மணல் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது**

கிளிநொச்சி நாவல் நகர்ப் பகுதியில் கடந்த ஞாயிற்றுக் கிழமை அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிச்சென்ற ஒருவரைக் கைதுசெய்த கிளிநொச்சிப் பொலிஸார் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் மாவட்ட நீதிவான் பெ.சிவகுமார் முன்பாக முன்னிலைப்படுத்தினர்.

இவருக்கு 5ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் மணலும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

அரசர்கேணி பளைப்பகுதியில் அனுமதிப்பத்திரமின்றி மணல் ஏற்றிய மற்றுமொருவர் கைதுசெய்யப்பட்டு மணல் பறிமுதல் செய்யப் பட்டுள்ளதுடன், 5 ஆயிரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது.

இவ்வாறு அனுமதிப்பத்திரமின்றி வீட்டுத் தேவைக்கென ஏற்றிய மணல் பறிமுதல் செய்யப்பட்டதுடன் ஏற்றிச் சென்றவர் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டார்.

(க-6)

## கண்டாவளைப் பகுதியில் நெற்பயிர்கள் அழிவு

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கையில் சுமார் முன்னூறு ஏக்கர் பயிர்கள் மழையின்றி அழிவடைந்துள்ளன.

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேசத்தில் மானாவாரியாக மேற்கொள்ளப்பட்ட பயிர்ச்செய்கை உரிய காலத்தில் மழையின்மையால் எதிர்பார்த்த விளைச்சலைக் கொடுக்கவில்லை. அதேவேளை கண்டாவளை பலகைத் துறை, மடுக்கரை போன்ற பகுதிகளில் சுமார் முன்னூறு ஏக்கர் நிலப்பரப்பில் மேற்கொள்ளப்பட்ட காலபோக நெற்செய்கை மழையின்றி அழிவடைந்துள்ளது. இதனால் அதிகளவான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த காலங்களில் மானாவாரியாக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்டபோதும் கல்மடுக்குளத்தின் கீழ் நீர் பாய்ச்சக் கூடிய வசதியிருந்தது. இம்முறை குளத்தின் புனரமைப்புப் பணிகள் காரணமாக நீர்ப்பாசனம் மேற்கொள்ளப்படவில்லை. எதிர்காலத்தில் இவ்வாறான அழிவுகள் ஏற்பட வாய்ப்பில்லையென அப்பகுதி விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

(க-6)

## சர்வமதக் கலந்துரையாடல்

மன்னார் நகரில் எதிர்வரும்24ஆம் திகதி சனிக்கிழமை சர்வமதக் கூட்டம் இடம்பெறவுள்ளது.மன்னார் சர்வோதயம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வு அன்றையதினம் காலை 8.30 மணிமுதல் மன்னார் தாழ்வு பாடு வீதியில் அமைந்துள்ள ஞானோதய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

போருக்குப் பின்னரான நிலையில் இனங்களுக்கிடையேயான முரண்பாடுகளைத் தீர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை வெளிக்கொண்டு வரும் விதத்தில் இந்த நிகழ்வு அமையவுள்ளது. மன்னார் சர்வோதய அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் எஸ்.யுகேந்திரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெறும்.

(க-12)

# பன்றித்தலைச்சி அம்மன் ஆலயம் வரை பஸ் சேவை

யாழ்ப்பாணம், மார்ச் 21

மட்டுவில் பன்றித் தலைச்சிக் கண்ணகை அம்பாள் ஆலயத்தில் இடம்பெற்று வரும் பங்குனித் திங்கள் உற்சவத்தை முன்னிட்டு ஆலயம் வரை பஸ் போக்குவரத்துச் சேவை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் இடம்பெறும் வருடாந்த பங்குனித் திங்கள் உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியுள்ளது. தொடர்ந்து எதிர்வரும் 26, ஏப்ரல் 2 ஆம் திகதி, ஏப்ரல் 9 ஆம் திகதி ஆகிய திங்கட்கிழமைகளில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெறவுள்ளன.

இதனை முன்னிட்டு இலங்கைப் போக்குவரத்துச் சேவை மற்றும் தனியார் பஸ் சேவைகள் ஆலயம் வரை சேவையில் ஈடுபடும்.

ஆலயச் சூழலில் பொது மக்களின் சுகாதாரத் தேவைகள் மற்றும் குடிதண்ணீர் வசதி, மலசலகூட வசதி என்பன பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளன.

சாவகச்சேரி பிரதேச சபை, தென்மராட்சி பிரதேச செயலகம், மட்டுவில் இந்து இளைஞர் மன்றம், ஆலய நிர்வாகம் ஆகியன இணைந்து இந்த ஒழுங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

வருடந்தோறும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்து கொள்ளும் இந்த உற்சவ நிகழ்வில் கலந்து கொள்ளும் பொது மக்கள் தங்க நகைகள் அணிவதைத் தவிர்ப்பதுடன், ஏனைய உடைமைகளையும் பாதுகாத்து இடம் பெறும் திருட்டுச் சம்பவங்களைத் தவிர்க்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயச் சூழலில் சாவகச்சேரி பொலிஸார் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதுடன் அயல் பாடசாலை மாணவர்களும் தொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-14-9)

கணவன்மாரை அடிக்கத் தொடங்கி விட்டனர் பெண்கள் - அதனால்

# ஆண் விடுதலை தொடர்பிலும் இனி குரல் கொடுக்கும் நிலை வந்துள்ளது

யாழ்ப்பாணம், மார்ச் 21

பெண் விடுதலை பற்றி பெரிதாகப் பேசப்படும் இக்காலத்தில் யாழ். குடாநாட்டில் சில பெண்கள் தமது கணவன்மார்களை அடித்து துன்புறுத்துகிறார்கள். அதைப் பற்றி யாரும் கவலைப்படவில்லை.

இவ்வாறு பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பில் - ஆண் விடுதலைக்காக - குரல் கொடுக்கவேண்டிய தேவையும் எழுந்துள்ளது.

யாழ். நீதிமன்றில் நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட குடும்ப வன்முறை வழக்கு ஒன்றில் சம்பந்தப்பட்ட பெண்ணின் கணவன் சார்பில் ஆஜரான சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தனது கணவன் தன்னை அடித்துத் துன்புறுத்தியதாக இவ்வழக்கின் மனுதாரரான குடும்பப் பெண் மன்றில் தெரிவித்தார்.

இந்த வழக்கு நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

கணவனின் தொல்லையால் தனது கட்சிக்காரர் அவரைவிட்டுப் பிரிந்து வாழ்ந்ததாகவும் பின்னர் கணவன் சமரசத்தை விரும்பியதை அடுத்து அவர் மீண்டும் தனது கணவனுடன் இணைந்து கொண்டதாகவும் பிரஸ்தாப பெண்ணின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி வி. விஜயரட்ணம் வாதிட்டார்.

கணவனின் அடாவடித்தனத்தினால் அவரது மனைவி கொலை அச்சுறுத்தலுக்கு ஆளாகியிருப்பதாக நீதிமன்றில் தெரிவித்த சட்டத்தரணி மனைவியை எதிராளியான கணவர் அநாவசியமாகச் சந்தேகிக்கிறார் என்றும் கூறினார்.

அதேசமயம் இளமையும் ஓரளவு அழகும் கொண்ட மனைவியை தலை மொட்டையாகிக் கொண்டிருக்கும் அவரது கணவர் சந்தேகித்தால் அதில் குறை காணக் கூடாது. அன்பினாலும் அதிக உரிமை உணர்வினாலுமே இந்த நிலைமை ஏற்படுகின்றது என சட்டத்தரணி ஸ்ரீகாந்தா மன்றில் கணவன் சார்பில் வாதிடுகையில் கூறினார்.

மேலும் தனது கட்சிக்காரர் ஒரு வாகனச் சாரதி என்றும் திருமணமாகி சாதாரண வாழ்க்கை நடத்திய போது பிரச்சினை எதுவும் இருந்திருக்கவில்லை. மனைவியின் சகோதரர்கள் 7 பேரும் தாயாரும் இங்கிலாந்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் தான் பிரச்சினைகள் கிளம்பியுள்ளன. கணவனை மனைவி மதிக்காததோடு கணவர் சில வேளைகளில் கையைத் தூக்கினால் அவரது மனைவி சில வேளைகளில் பதில் தாக்குதலில் இறங்கி விடுகிறார் எனத் தெரிவித்தார்.

மனித உறவுகளில் மிகவும் நெருக்கமானது கணவன் மனைவி உறவுதான். ஆனால் வெளிநாட்டிலிருந்து வரும் பணத்தின் தாக்கத்தினால் யாழ். குடாநாட்டில் இந்த உறவு முறைகள் சீரழியத் தொடங்கியுள்ளன எனவும் கூறினார்.

எதிராளி தரப்பு குற்றச்சாட்டுகளை மனுதாரர் சட்டத்தரணி மறுத்துரைத்தார்.

பின்னர் கணவரையும் மனைவியையும் குடும்ப ஆலோசகரைச் சந்திக்குமாறு உத்தரவிட்ட நீதிவான் இவ்வழக்கை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஒ-4)

## ஆடு, மாடுகள் பிடிபட்டால் 1,500 ரூபா தண்டம்

நவாலி, மார்ச் 21

நவாலிப் பகுதியில் கட்டாக்காலியாகத் திரியும் ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டால் ஆயிரத்து 500 ரூபா தண்டப் பணமாக அறவிடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் தற்பொழுது சிறுதானியப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இதனால் எதிர்வரும் ஜூன் மாதம் அவற்றை அறுவடை செய்யும் வரை கட்டிவைத்து வளர்க்குமாறு அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவித்தலை மீறி கட்டாக் காலியாக விடப்படும் ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டால் அவை விவசாய சம்மேளனத்தில் கட்டி வைக்கப்படும்.

கட்டிவைக்கப்படும் இந்தக் கால்நடைகளுக்கு நாளொன்றுக்கு 200 ரூபா பெறுமதியான உணவு வழங்கப்படும். ஏழு நாள்களுக்குள் உரியவர்கள் இதனை மீட்டுக் கொள்ளாது விடின், எட்டாவது நாள் அவை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படுமென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-100)

வலி.தென்மேற்குப் பகுதியில்

# 7 உணவகங்கள் 'டி' தர நிலையில்

## அவை மூடப்பட வேண்டியவை

வலி. தென்மேற்கு, மார்ச் 21

வலி.தென்மேற்கு பிரதேச உணவு கையாளும் நிலையங்களுக்கான தரச் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களினால் மானிப்பாய் கிறீன் வைத்திய சாலையில் இயங்கும் சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வைத்து வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் உள்ள 62 உணவு கையாளும் நிலையங்களில் 55 உணவு கையாளும் நிலையங்களுக்கு மட்டும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. ஏனைய 7 நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

1980 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரகாரம் சுகாதார அமைச்சினால் விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ள புதிய எச். 800 பரிசோதனைப் படிவத்துக்கு அமைய சகல உணவு கையாளும் நிலையங்களுக்கும் தரச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சண்டிலிப்பாய் பிரதேசத்திலுள்ள 62 உணவு கையாளும் நிலையங்களின் 55 உணவு நிலையங்களுக்கு ஏ,பி,சி என்ற தர அடிப்படையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. டி.தரத்திலுள்ள 7 நிலையங்களுக்கும் சான்றிதழ் வழங்கப்படாமையினால் மூட வேண்டிய நிலைக்குள்ளாயின.

சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ள இந்த தரச்சான்றிதழ்கள் மக்களின் பார்வைக்கு வைக்கக் கூடியவாறு தயாரிக்கப்பட்டுள்ளன. சுகாதாரப் பரிசோதகர்களின் அறிக்கைக்கமைய மாதாமாதம் சான்றிதழ்கள் மாற்றி அமைக்கப்படும் 'ஏ' தரத்தில் 6 நிலையங்களுக்கும், 'பி' தரத்தில் 39 நிலையங்களுக்கும் 'சி' தரத்தில் 10 நிலையங்களுக்கும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டுள்ளன. (த-115)

# பொலிகண்டி ஆலயத்துக்கு ரணில் நிதி உதவி

பொலிகண்டி கந்தவனம் கல்யாண வேலவர் சுவாமி கோயில் திருப்பணிகளுக்கென ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் ஒரு லட்சம் ரூபா காசோலையை எதிர்க்கட்சித் தலைவரும் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க ஆதீனகர்த்தா திருமதி சிவயோகநாயகி இராமநாதனிடம் கையளித்தார்.

கடந்த சனிக்கிழமை அங்கு வழிபாடுகளை மேற்கொண்ட ரணில் விக்கிரமசிங்காவும் குழுவினரும் கோயிலைச் சுற்றிப் பார்வையிட்டதுடன் அதன் புராதன வரலாற்றைக் கேட்டுத் தெரிந்து கொண்டனர்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட இந்தக் கோயிலில் புதிதாக இராஜகோபுரம் ஒன்று அமைப்பதுடன் பல்வேறு திருபபணிகளை விரைவில் மேற்கொள்ளவிருப்பதால் அவற்றுக்கு வேண்டிய உதவிகளை வழங்குமாறு ஆதீனகர்த்தா ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினிடம் கோரிக்கை விடுத்தார். (த-8)

## பாடசாலைகளுக்கு போக்குவரத்து விதி உபகரணங்கள்

அச்சுவேலி, மார்ச் 21

வலி.கிழக்கு செஞ்சிலுவைச்சங்கம் பாடசாலைகளுக்கு போக்குவரத்து ஒழுங்கு விதிகளுக்கான உபகரணத் தொகுதியை வழங்கி வருகின்றது.

முதற்கட்டமாக 50 ஆயிரம் ரூபா பெறுமதியான போக்குவரத்து ஒழுங்கு விதிகளுக்கான உபகரணத் தொகுதியை கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரிக்கு வழங்கியுள்ளதாகவும், அடுத்த கட்டமாக வலி.கிழக்கில் வீதியோரங்களில் உள்ள ஏனைய பாடசாலைகளுக்கும் வழங்கப்படும் எனவும் கோப்பாய் செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் இ.மயில்வாகனம் தெரிவித்தார். (த-11)

# சிறு குற்றச் செய்திகள்

யாழ்ப்பாணம், மார்ச் 21

சந்தேக நபர் ஒருவரைக் கைது செய்யச் சென்ற பொலிஸாரைத் தடுத்து நிறுத்தினார் ஒருவர். அதனால் அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டு, நேற்று முன்தினம் அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத் தண்டனையும் விதிக்கப்பட்டு வெளியே வந்தார்.

இந்தச் சம்பவம் அரியாலை சந்தனமாதா கோயிலை அண்மித்து, கடந்த 11 ஆம் திகதி நடந்தது. அதே இடத்தைச் சேர்ந்த ஒருவரை சந்தேகத்தின் பேரில் கைது செய்யச் சென்ற போதே பிரஸ்தாப நபர் பொலிஸாரைத் தடுத்து இடையூறு விளைவித்துள்ளார். அதனால் அவர் கைது செய்யப்பட்டார்.

மறுநாள் யாழ். நீதிமன்றில் நீதிவான் மா.கணேசராஜா முன்னிலையில் இடையூறு விளைவித்து தடுத்தார் என்று கூறப்பட்ட சந்தேக நபரை பொலிஸார் முன்னிலைப்படுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்க மன்று உத்தரவிட்டது. கடந்த வெள்ளிக்கிழமை பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த அவர் நேற்று முன்தினம் மன்றில் வழக்குக்காக முன்னிலையானார்.

அதன்போதே அவர் செய்த குற்றத்துக்காக ஆயிரம் ரூபா அபராதமும் 5 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட 6 மாத சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது. (த-4)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 21

அனுமதிப் பத்திரமின்றி சாராயம் விற்றவருக்கும், உடைமையில் வைத்திருந்தவருக்கும் யாழ். நீதிமன்றம் 9 ஆயிரம் ரூபா அபராதம் விதித்துள்ளது.

குருநகர் கடற்கரை வீதியில் அனுமதிப்பத்திரமின்றி அதனை விற்பனை செய்த அதே இடத்தைச் சேர்ந்தவருக்கு 3 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அதேவேளை யாழ்.நகரை அண்மித்து அனுமதிப் பத்திரமின்றி சாராயத்தை உடைமையில் வைத்திருந்த முல்லைத்தீவைச் சேர்ந்த ஒருவருக்கு 6 ஆயிரம் ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. இருவரும் அபராதம் செலுத்திச் சென்றனர். (த-4)

* * *

யாழ்ப்பாணம், மார்ச் 21

கடையில் வேலை செய்து கொண்டிருந்தவரை தடியாலும், கையாலும் தாக்கினார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டவரை யாழ்.நீதிமன்றம் விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளது.

யாழ்.நகரிலுள்ள கடை ஒன்றினுள் தண்ணீர் கேட்டுச் சென்றவர், பின்னர் அங்கிருந்து வேலை செய்து கொண்டிருந்தவரைத் தாக்கினார் என்ற முறைப்பாட்டின் அடிப்படையிலேயே மண்டைதீவைச் சேர்ந்த ஒருவரைப் பொலிஸார் நேற்று முன்தினம் மன்றில் முற்படுத்தினர். அவரை எதிர்வரும் 21 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் மா.கணேசராஜா உத்தரவிட்டார். (த-4)

# சேமலாப நிதி ஆவணங்களை பெறுவதற்கு விசேட ஏற்பாடு

## தொலைத்தவர்கள் சிரமம் இன்றிப் பெறலாம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ்.குடாநாட்டில் உரிய ஆவணங்கள் இல்லாமையால் ஊழியர் சேமலாப நிதியைப் பெறமுடியாமல் உள்ளவர்கள், அந்த நிதியைப் பெற விண்ணப்பிப்பதற்கு, ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படும் என்று வடமாகாண பிரதித் தொழில் ஆணையாளர் கே.கனகேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஊழியர் சேமலாப நிதிக்கு விண்ணப்பிப்பதற்கு சிலர் உரிய ஆவணங்கள் இல்லாமல் சிரமப்படுகின்றனர்.

இந்த நிதியைப் பெறுவதற்கு அதற்கான இலக்கம் மற்றும் விண்ணப்பதாரியின் அடையாள ஆவணங்கள் முக்கியமானவை. எனினும் இவை இல்லாமையால் பலர் சிரமப்படுவது குறித்து எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

ஊழியர் சேமலாப நிதிக்கான இலக்கத்தை தவறவிட்டவர்கள் அந்த இலக்கத்தைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இந்த நிதியைப் பெறுவதற்கு அதற்கான இலக்கம் மற்றும் விண்ணப்பதாரியின் அடையாள ஆவணங்கள் முக்கியமானவை.

அதற்கான நடவடிக்கைகள் தற்போது எமது திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கடந்த கால வன்செயல்கள் மற்றும் இடப்பெயர்வுகளினால் பலர் இந்த ஊழியர் சேமலாப நிதிக்கான இலக்கம், அதற்கான சான்றிதழ்களைத் தவறவிட்டுள்ளனர். இதனால் அவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகிறார்கள். இதனையடுத்து அவர்கள் அதற்கு விண்ணப்பிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன- என்றார். (த-17)

# தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் வகையில் பிரதேசவாதம் கிளப்புகிறார் பிள்ளையான்

### நாடாளுமன்ற உறுப்பினர் சரவணபவன் விசனம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை ஏற்றுப் பலமான சக்தியாகத் திரண்டுள்ள தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் வகையில் மீண்டும் பிரதேசவாதத்தைக் கிளப்புகிறார் கிழக்கு முதலமைச்சர் பிள்ளையான்.

இவ்வாறு விசனம் வெளியிட்டுள்ளார் கூட்டமைப்பு யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

மட்டக்களப்பு கல்லடி சிவானந்த வித்தியாலயத் திடலில் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தேசிய மாநாட்டின்போது அதன் தலைவர் பிள்ளையான் என அழைக்கப்படும் சந்திரகாந்தனால் விடுக்கப்பட்ட பிரகடனத்தில் வடக்கும் கிழக்கும் தனித்தனி மாகாணங்களாக இயங்கவேண்டுமெனவும் 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இவர் ஏற்கனவே கருணா அம்மான் என அழைக்கப்படும் விநாயகமூர்த்தி முரளிதரனுடன் இணைந்து பிரதேசவாதம் பேசி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைப் பலவீனப்படுத்திப் பின்பு கருணா லண்டனில் சிறைவாசம் அனுபவித்த போது தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பைப் பிளவுபடுத்தி அதன் தலைமையைக் கைப்பற்றித் தமிழ் மக்களின் அமைப்புக்களைச் சிதைப்பதில் அனுபவம் பெற்றவர். இன்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையை ஏற்று ஐக்கியப்பட்டுப் பலமான சக்தியாகத் திரண்டிருக்கும் தமிழ் மக்களைப் பிளவுபடுத்தும் வகையில் மீண்டும் பிரதேசவாதத்தைக் கிளப்பி பலவீனப்படுத்த முயல்கிறார்.

கடந்த பொதுத் தேர்தலிலும் நடைபெற்று முடிந்த பிரதேச சபைத் தேர்தலிலும் இவரையும் இவரது தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பையும் தமிழ் மக்கள் முற்றாகவே நிராகரித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பையே தமது தலைமைச் சக்தியாகப் பிரகடனம் செய்துள்ளனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மாகாண சபைத் தேர்தலைப் பகிஷ்கரித்திருந்தபோது தற்செயலாகக் கிடைத்த கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவியைப் பாவித்து தமிழ் மக்கள் விரோத நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்.

தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகள் அமைப்பின் தேசிய மாநாட்டின் பிரகடனம் தன்னகத்தே ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்துக்களைக் கொண்டிருப்பதை நாம் சுட்டிக்காட்டாமல் இருக்க முடியாது. 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்பட வேண்டும் என அதில் கோரப்பட்டுள்ளது. 13 ஆவது திருத்தச் சட்டம் ஒரு பொதுசன வாக்கெடுப்பின் மூலம் வடக்கு-கிழக்கு ஒரே மாகாணமாக ஏற்கப்படுவதைச் சட்டபூர்வமாக அங்கீகரிக்கிறது. அதாவது 13 ஆவது திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படுவதானால் வடக்கு-கிழக்கு ஒரே மாகாணமாக ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதை முழுமையாக அமுல்படுத்த வேண்டும் எனக் கோரும் இப்பிரகடனம் அதற்கு மாறாக வடக்கு-கிழக்குப் பிரிக்கப்பட வேண்டும் எனவும் கோருகிறது.

அடிப்படையில் வடக்கு-கிழக்கு என்பது தமிழ்மக்களின் பாரம்பரிய தாயகபூமி. ஒரு தேசிய இனத்துக்குரிய நிரந்தரமான வாழ்நிலப் பகுதி. எனவே வடக்கு-கிழக்கைப் பிரிப்பது என்பது தமிழ் இனம் ஒரு தேசிய இனம் என்ற உண்மையை மறுதலிக்கும் ஒரு துரோகமாகும்.

பெரும்பான்மையான முஸ்லிம் மக்கள் கூட வடக்கு-கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக இருக்க வேண்டுமெனவும் அதில் முஸ்லிம் மக்களுக்குத் தனியான ஒரு அலகு அமைக்கப்பட வேண்டும் எனவும் கோரிவரும் அதே வேளையில் ஒரு தமிழ் அமைப்பு வடக்கு-கிழக்கைப் பிரிக்க வேண்டும் எனக் கோருவது எவ்வளவு வெட்கக்கேடான செயல் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

பேரினவாதிகளின் இன அழிப்பு நடவடிக்கையில் தானும் ஒரு பங்காளியாகி இப்பிரகடனம் மூலம் கிழக்கின் முதலமைச்சர் தனது துரோகத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.

போரின் இறுதி நாள்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக இலங்கை அரசுக்கு எதிராக சர்வதேசம் போர்க்கொடி தூக்கியுள்ள இவ்வேளையில் இலங்கையில் கிழக்கு வாழ் தமிழ் மக்கள் இலங்கை அரசுக்கு ஆதரவளிக்கின்றனர் என்ற பொய்மைத் தோற்றத்தை ஏற்படுத்தவே இந்தத் தமிழீழ மக்கள் விடுதலைப் புலிகளின் தேசிய மாநாடு பெரும் விளம்பரங்களுடன் கூட்டப்பட்டது.

கிழக்கு மக்கள் அதைப் பொருட்படுத்தாதன் காரணமாக அந்த நோக்கத்திலும் வெற்றிபெறமுடியவில்லை அது மட்டுமன்றி இம்மாநாட்டுப் பிரகடனம் மூலம் தமது தமிழ் மக்களுக்கு விரோதமான போக்கை அவர்களையறியாமலே ஏற்படுத்தப்பட்டு விட்டது.

எப்படியிருந்த போதிலும் வடக்கு-கிழக்கைப் பிரிப்பது என்பது தமிழ்மக்களைப் பிளவுபடுத்திப் பலத்தைச் சிதைத்து இனத்தையே அழிக்கும் ஒரு நயவஞ்சக முயற்சியாகும். ஆனால் தமிழ் மக்களால் ஏற்கனவே நிராகரிக்கப்பட்ட இவர்கள் பிரதேசவாதம் போன்ற எதிர்மறையான கோஷங்களுடன் மீண்டும் முன்வரும்போது எமது மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டியது அவசியமாகும் - என்றார்.

(த)



**பேரினவாதிகளின் இன அழிப்பு நடவடிக்கையில் தானும் ஒரு பங்காளியாகி இப்பிரகடனம் மூலம் கிழக்கின் முதலமைச்சர் தனது துரோகத்தனத்தை வெளிப்படுத்தியுள்ளார்.**


## ஓராண்டு நினைவஞ்சலி



**மயில்வாகனம் சிவபாக்கியம்**

திதி: 21.03.2012

ஆண்டு ஒன்று மறைந்ததுவோ
உங்கள் மறைவு மறப்பதற்குரியதுவோ
நாம் வாழும் காலம்வரை
உங்கள் நினைவு வாழும்

அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இன்று (21.03.2012) புதன்கிழமை ந.ப. 12 மணிக்கு அவரின் இல் லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன விருந்துபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

80/2, நெடுங்குளம் வீதி,
கொழும்புத்துறை.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்



**சி. மார்க்கண்டு**

( B.Sc Dip. in Business Management- Marketing Consultant)

காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், '' கமல வாசம்'' கரவெட்டியை புகுந்த இடமாகவும், தெகிவளையை வதிவிடமாகவும் கொண்ட சி.மார்க்கண்டு 18.03.2012 ஞாயிற்றுக்கிழமை அகால மரணமானார்.

அன்னார் (BATA SHOE COMPANY LTD District Sales Manager, Asia Limited, Materials manager, Acexandira Industries Ceylon Ltd, (Senior manager) ஆகியவற்றின் முன்னாள் உத்தியோகத்தரும் CEYNORG TRADERS இன் உரிமையாளரும் ஆவார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னவன் (இராசன்) வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற செல்லத்துரை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - பொன்னம்மாவின் (ஆசிரியை) பெறாமகனும், கமலாம்பிகையின் பாசமிகு கணவரும், புனிதசபாபதி, கமலநாயகியின் அன்புமைத்துனரும் காலஞ்சென்ற வேலாயுதம் மற்றும் குருநாதபிள்ளை, ஞானம், அருமைநாயகி, இலட்சுமி, சின்னம்மா, றஞ்சி ஆகியோரின் பாசமிகு சகோதரனும் காலஞ்சென்ற குமுதினி (பபி) மற்றும் சித்தார்த்தன் (இராஜன் - நோர்வே), கௌதமி (குட்டி - கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிகலா, வசீகரன் ஆகியோரின் அன்பு மாமனும் மித்ரா, நேத்ரா, ஸ்டேபான், அஸ்வின், ஆகாஷ், ஷெரோன், பிரியங்கா, அம்ரித்தா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (21.03.2012) புதன்கிழமை காலை 9.30 மணிக்கு அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (22.03.2012) வியாழக்கிழமை பி.ப. 3.30 மணிக்கு தெகிவளை, கல்கிசை மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

50, பிறேசர் அவனியூ,
தெகிவளை

(C/9199)(6-14-8)

தகவல்:
குடும்பத்தினர்

## வாடகைக்கு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதியில் O.P.D.க்கு முன்பாக தேசிய சேமிப்பு வங்கிக்கு அருகில் 86 அடி நீளம் 14 அடி அகலம் கொண்ட சகல வசதிகளுடன் கூடிய புதிய மாடிக்கட்டடம் உடனடியாக வாடகைக்கு உள்ளது.

தொடர்பு:
0752430287

Annai Nagaa Food City

**அன்னை நாகா பூட்சிற்றியில் 19.03.2012 அன்று 10 ஆவது அகவையை முன்னிட்டு நடைபெற்ற பரிசுக் குலுக்கலில் வெற்றி பெற்ற வாடிக்கையாளர் விவரம் வருமாறு**

1. T.PARAMANATHARASA-ELECTRIC KETTLE (1000/=-3000/=)
ADDRESS - NAGAR KOVIL EAST, NAGAR KOVIL
N.I.C. No - 860560240 V
2. A.VICKNESWARY - FAN (3000/= - 5000/=)
ADDRESS - V.T.S. LANE, URUMPIRAI EAST, URUMPIRAI.
N.I.C. No - 878221648 V
3. S.ROSEMERAY - DVD PLAYER (5000/= மேற்பட்டது )
ADDRESS - KOTAIKADU ROAD, KONDAVIL.
N.I.C. No - 517682349 V

வெற்றி பெற்ற வாடிக்கையாளர்களுக்கு வாழ்த்துத் தெரிவிப்பதோடு, தேசிய அடையாள அட்டையுடன் வந்து ஆள் அடையாளத்தை உறுதிப்படுத்தி பரிசுப்பொருள்களை எமது நிறுவனத்தில் இன்றிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதை பெரும் மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

Annai Nagaa Food City,
175, K.K.S. Road, Jaffna.

நிர்வாகி.

**கணினி ஆர்வலர்களுக்கும் மாணவர்களுக்குமான ஓர் அரிய சந்தர்ப்பம் Diploma in Computer Courses**

**2012ம் ஆண்டு மாபெரும் கட்டணக்கழிவு**

Duration
3months,4months

BatchI 21-03-2012
BatchII 23-03-2012
BatchIII 24-03-2012
BatchIV 25-03-2012
(Time:-9am or 3pm)

Ms Office 2007, DTP, Hardware, Graphic Designing, Wep page Designing, Multi Media, Computer Science, Video Editing, Computerized Accounting, AutoCAD, Net Working, Inter Net & e - mail .

புதன், வெள்ளி மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன. இன்றே எம்முடன் இணைந்துகொள்ளுங்கள்.

**அனைத்து பாடநெறிக்குமான கட்டணம் 1000/= மட்டுமே**

**Computer Express**
No 15, Sirambiyadi lane (off stanly Road)
Jaffna. T.P - 021 222 8250, 077 490 7444

Diploma in Accounting Package
Acc Pac,Quick Book,MYOB,Tally
(Sat+Sun 11.00am)
Lecturer:Ashok

# சிரியாவில் உக்கிர மோதல்

## அனானின் அமைதிக் குழு நேற்றுமுன்தினம் அங்கு பயணம்





டமாஸ்கஸ்,மார்ச் 21

சிரியாவில் இதுவரை இல்லாத அளவிற்கு, நேற்று முன்தினமும் நாட்டின் பல பகுதிகளில் கடும் சண்டை நடந்தது. இதில் எத்தனை பேர் உயிரிழந்துள்ளனர் எனத் தெரியவில்லை. இந்த நிலையில், ஐ.நா., - அரபு லீக்கின் சிறப்புப் பிரதிநிதி கொபி அனான் அனுப்பிய அமைதிக்குழு நேற்றுமுன் தினம் சிரியா சென்றடைந்தது.


சிரியாவில், அதிபர் பஷர் அல் அசாத்துக்கு எதிரான மக்கள் போராட்டம் ஓராண்டைக் கடந்து, சில நாள்களாகி விட்ட நிலையில், நேற்றுமுன்தினமும் தலை நகர் டமாஸ்கஸின் அருகில், சிறை, விமான நிலையம், மற்றும் அதிபர் மாளிகை அமைந்துள்ள அல் மெஸ்ஸா பகுதியில், ராணு வத்திற்கும், சிரிய புரட்சிப் படையினருக்கும் இடையே கடும் மோதல் நிகழ்ந்தது.

இதில், கிரேனேட்கள், ரொக்கெட்டுகள் ஏவப்பட்டன. இந்த மோதலில், மூன்று பயங்கரவாதிகளும், ஒரு பாதுகாப்பு வீரரும் கொல்லப்பட்டனர் என சிரிய அரசு அறிவித்தது. அதேபோல் ஹமா மாகாணத்திலும் கடும் மோதல் நடைபெற்றது.

இதற்கிடையில், ஐ.நா.,- அரபு லீக்கின் சிறப்புப் பிரதிநிதி கொபி அனான் அனுப்பி வைத்த, ஐந்து பேர் அடங்கிய அமைதிக்குழு நேற்றுமுன்தினம் டமாஸ்கஸ் சென்றடைந்தது. சிரியாவில் உடனடியாகச் சண்டையை நிறுத்தி, மனிதாபிமான உதவிகள் வழங்குவதற்கான சூழலை பேச்சு மூலம், இந்தக் குழு ஏற்படுத்தும் என கொபி அனானின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

இதே வேளையில், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் தலைவர் ஜேக்கப் கெலன்பெர்கர், ரஷ்யத் தலைநகர் மொஸ்கோவுக்குச் சென்றுள்ளார். அங்கு ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்கெய் லாவ்ரோவைச் சந்தித்து, மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக உடனடி சண்டை நிறுத்தத்தை வலியுறுத்தும்படி கோரியுள்ளார். (ந)

# ஆயுத இறக்குமதி இந்தியா முதலிடம்



உலகில் அதிக ஆயுதங்கள் இறக்குமதி செய்யும் நாடுகளின் பட்டியலில் இந்தியா முதலிடத்தைப் பெற்றுள்ளது.

2007 முதல் 2011 வரையிலான ஐந்து வருட காலத்தில் இந்தியாவின் மிகப்பெரிய ஆயுத இறக்குமதி 38 சதவீதத்தால் அதிகரித்துள்ளது என சுவீடனைச் சேர்ந்த ஸ்ரொக்ஹோம் சர்வதேச சமாதான ஆராய்ச்சி நிறுவகம் தெரிவித்துள்ளது.

உலகின் ஏனைய பிராந்தியங்களைவிட ஆசியா இந்தப் பட்டியலில் முன்னிலையில் உள்ளதாகவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக ஆயுத இறக்குமதியில் 10 சத வீதத்தை இந்தியா பெறுகிறது. 6 சதவீதம் பெற்று தென் கொரியா இரண்டாமிடத்தில் உள்ளது. சீனா, பாகிஸ்தான் தலா 5 சதவீதமும் சிங்கப்பூர் 4 சதவீதமும் பெற்று அடுத்த இடங்களில் உள்ளன என மேற்படி அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது உலகின் மிகப்பெரிய ஆயுத ஏற்றுமதி நாடுகளின் பட்டியலில் சீனா 6 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது. சீனாவின் ஆயுத ஏற்றுமதி அதிகரிப்புக்கு அந்நாட்டிலிருந்து பாகிஸ்தான் அதிக ஆயுதங்களை இறக்குமதி செய்தமையே காரணம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தியா எதிர்வரும் 15 வருட காலத்தில் ஆயுத கொள்வனவுக்கு 100 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு அதிக மான பணத்தை செலவிடும் என மேற்படி அமைப்பு மதிப்பிட்டுள்ளது.

# மாலைதீவில் மீண்டும் பதற்றம்



மாலே, மார்ச் 21

மாலைதீவு நாடாளுமன்றமான மக்கள் மஜ்லிஸ் திறக்கப்படுவதைத் தடுக்க முயன்ற முன்னாள் அதிபர் முகமது நஷீட்டின் ஆதரவாளர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

மாலைதீவின் முன்னாள் அதிபர் முகமது நஷீட்டின் மாலைதீவு ஜனநாயக் கட்சியினர் நூற்றுக்கணக்கானோர் தலைநகர் மாலேயில் உள்ள நாடாளுமன்றத்தில் கூடி அரசுக்கு எதிராகக் கோஷங்கள் எழுப்பி நாடாளுமன்றத்தை திறக்க விடாமல் கலகம் செய்தனர். இதனைத் தடுக்க முயன்ற பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் ஏற்பட்டது.

இதில் 4 பொலிஸார் மற்றும் 18 போராட்டக்காரர்கள் காயமடைந்தனர். (ந)

# கொட்டாவி விடுபவர் தீவிரவாதியாம்

அடிக்கடி கொட்டாவி விடுபவர் தீவிரவாதியாக இருக்கலாம் என அமெரிக்கா புதிய தகவலை வெளியிட்டுள்ளது.

'தீவிரவாத விழிப்புணர்வும் தடுப்பும்' என்ற தலைப்பில் அமெரிக்க உள்துறை அமைச்சகம் ஓர் அறிக்கை தயாரித்துள்ளது. அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

மற்றவர்களிடம் ஒருவர் பேசும்போது அடிக்கடி கொட்டாவி விடுவது, படபட வென இருப்பது, அடிக்கடி நேரம் பார்ப்பது, பதற்றமாகப் பேசுவது, பரபரப்பாக நடப்பது போன்ற அறி குறிகள் இருந்தால் மற்றும் கண்களை அகல திறந்து அடிக்கடி சுற்றுமுற்றும் பார்த்தல் ஆகிய செயற்பாடுகளை உடையவர் தீவிரவாதியாக இருக்க வாய்ப்பு உள்ளது என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ந)



சிரியாவில் அதிபருக்கும், எதிர்த் தரப்பினருக்கும் இடையிலான சண்டை உக்கிரமான நிலையில், அந்நாட்டில் இருந்து அண்டை நாடான துருக்கியில் இதுவரை 16 ஆயிரம் பேர் அகதிகளாக தஞ்சம் புகுந்துள்ளனர். சிரிய எல்லை அருகில், ரெய்ஹான்லி என்ற இடத்தில் உள்ள சிரிய அகதிகள் முகாம் இது.

### ஏமன் போராட்டத்தில் இதுவரை 2,000 பேர் சாவு

ஏமனில் கடந்த ஓராண்டாக நடைபெற்ற மக்கள் போராட்டத்தின் போது எத்தனை பேர் கொல்லப்பட்டனர் என்ற அதிகார பூர்வத் தகவலை அந்நாடு அரசு வெளியிட்டுள்ளது.

எகிப்தில் ஏற்பட்ட புரட்சியைத் தொடர்ந்து ஏமனில் ஜனாதிபதி அலி அப்துல்லா சலேவுக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். கடந்தாண்டு பெப்ரவரி மாதம் தொடங்கிய இந்தப் போராட்டம், இந்தாண்டு பெப்ரவரி மாதம் முடிவுக்கு வந்தது.

இந்நிலையில் ஏமன் போராட்டத்தின் முதலாம் ஆண்டு நிறைவு தினம் கடந்த 18ஆம் திகதி ஜேர்மன் தலைநகர் பெர்லினில் அனுசரிக்கப்பட்டது. இதனையொட்டி ஏமன் மனித உரிமைகள் அமைச்சகம், போராட்டத்தில் உயிரிழந்தவர் களின் எண்ணிக்கையை அதிகார பூர்வமாக வெளியிட்டது.

# விரைவில் இணையத்தில் ஐன்ஸ்டீனின் கைப்பிரதிகள்



ஜெருசலேம்,மார்ச்21

நோபல் பரிசு பெற்ற இயற்பியல் விஞ்ஞானி அல்பேர்ட் ஐன்ஸ்டீனின் கையெழுத்துப் பிரதிகள் மற்றும் அவரது அரிய படைப்புகள் அனைத்தும் விரைவில் இணையத்தளத்தில் வெளியிடப்படவுள்ளன.

20ஆம் நூற்றாண்டின் இணையற்ற இயற்பியல் விஞ்ஞானி எனப் போற்றப்படுபவர் அல்பேர்ட் ஐன்ஸ்டீன் (1879-1955). இவரது கண்டுபிடிப்புகள் உலகப் புகழ்பெற்றவை. நோபல் பரிசு பெற்ற இவர் தனது கைப்பட எழுதிய கடிதங்கள் மற்றும் பல்வேறு பிரதிகள் அடங்கிய ஆவணங்களை இஸ்ரேலின் ஹீப்ரு பல்கலைக் கழகம் பராமரித்து வருகிறது.

80 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஆவணங்களில், ஐன்ஸ்டீன் தானே கைப்பட எழுதிய கடிதங்களில், காதலிக்கு எழுதிய கடிதங்கள், நோய்வாய்ப்பட்டிருந்த ஐன்ஸ்டீனின் தாயாருக்கு எழுதிய கடிதங்கள் என அனைத்தும் இணையத்தில் வெளியிடப்படவுள்ளன என ஹீப்ரு பல்கலைக்கழகம் தெரிவித் துள்ளது.

இதன்மூலம் உலகம் முழுவதும் உள்ள அறிஞர்கள், கல்வியாளர்கள் ஆகியோருக்கு இவை பெரும் பயனுள்ளதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தீர்வு முயற்சியில் மீண்டும் அமெரிக்கா

## இஸ்ரேல் - பலஸ்தீனம் இடையில்



இஸ்ரேல்- பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண மீண்டும் அமெரிக்கா தீவிர முயற்சியில் இறங்கி உள்ளது.

இதன் ஒரு பகுதியாக பலஸ்தீன அதிகார பூர்வ ஜனாதிபதி முகமது அப்பாஸை தொடர்பு கொண்டு, அமெரிக்கா வருமாறு ஜனாதிபதி பராக் ஒபாமா அழைப்பு விடுத்துள்ளார்.


மத்திய கிழக்கு நாடான இஸ்ரேல்- பலஸ்தீனப் பிரச்சினை கடந்த 1967ஆம் ஆண்டு தொடங்கி, 45 ஆண்டுகளாக நிலவி வருகிறது.

பலஸ்தீனில் தனிநாடு கோரி போராட்டங்கள் நடந்து வருகின்றன. இந்தநிலையில் இரு தரப்பிலும் அமைதிப் பேச்சு நடத்த ஜனாதிபதி ஒபாமா முடிவு செய்துள்ளார்.

கடந்தாண்டு செப்ரெம்பர் மாதம் இஸ்ரேல்- பலஸ்தீன பிரச்சினை குறித்து ஒபாமா, முகமது அப்பாஸை சந்தித்துப் பேசினார். இதில் ஜோர்தான் மன்னர் அப்துல்லா நடுவராக இருந்தார். அதன்பின் 6 மாத இடைவெளிக்குப் பின் மீண்டும் பேச்சு தொடங்க உள்ளது. இதன்மூலம் மத்திய கிழக்கு நாடுகளில் அமைதி நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# தொடரும் தீக்குளிப்புக்கள்

## திபெத் சென்று விசாரிப்பதற்கு சீனாவிடம் அனுமதி கோருகிறது ஆஸி



**வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையே இதுவரை திபெத்துக்குள் அனு மதிக்காத சீனா வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுவை எவ்வாறு அனுமதிக்கும் என சந்தேகம் எழுந்துள்ளது.**

மெல்போர்ன், மார்ச் 21

திபெத்தில் தொடர்ந்து நடைபெற்று வரும் தீக்குளிப்புகள் குறித்து விசாரிக்க, உயர் அதிகாரி மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அங்கு அனுப்பி வைக்க அனுமதி அளிக்கும்படி, சீனாவிடம் ஆஸ்திரேலியா கேட்டுள்ளது.

திபெத் மீதான சீன ஆக்கிரமிப்பை எதிர்த்து கடந்த ஓராண்டில், 30 புத்தமதத் துறவிகள் தீக்குளித்துள்ளனர். இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து ஆஸ்திரேலிய வெளியுறவு அமைச்சர் பொப்கார் நேற்றுமுன்தினம் கூறியதாவது:-

திபெத்தில் நடைபெற்ற தீக் குளிப்பு விவகாரங்கள் குறித்து விசாரிக்க, சீனாவுக்கான ஆஸ்திரேலியத் தூதர் பிரான் சஸ் ஆடம்சன் சீன அரசிடம் அனுமதி கோரியுள்ளார். அவ்வாறே ஆஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு ஒன்று, திபெத்துக்கு வந்து பார்வையிடவும் அவர் அனுமதி அளிக்கும்படி கேட்டுள்ளார். சிச்சுவான் மாகாணத்தில் உள்ள திபெத் மடாலயங்களைப் பார்வையிட, துணைத் தூதரும் அனுமதிக் கேட்டுள்ளார். இவ்வாறு, பொப்கார் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவின் இந்த நடவடிக்கை, சீனாவை கோபத்துக்குள்ளாக்கும் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன. வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையே இது வரை திபெத்துக்குள் அனுமதிக்காத சீனா வெளிநாட்டுப் பிரதிநிதிகள் குழுவை எவ்வாறு அனுமதிக்கும் என சந்தேகம் எழுந்துள்ளது. (ந)

# டொங்காவின் மன்னர் திடீர் மரணம்



பசுபிக் தீவு நாடான டொங்காவின் மன்னர் ஐந்தாம் ஜோர்ஜ் டுப்போவ் ஹொங் கொங் வைத்தியசாலையயில் காலமாகினார்.

63 வயதான மன்னர் ஐந் தாம் ஜோர்ஜ் டுப்போவ், 2006 ஆம் ஆண்டு அவரின் தந்தையான நான்காம் டௌபா அஹாவு டுப்போவ், காலமானதையடுத்து டொங்கா நாட்டின் மன்னராகப் பதவியேற்றவர்.

ஹொங்கொங்கிற்கு சென்றிருந்த ஜோர்ஜ் டுப்போவ் அங்குள்ள வைத்தியசாலையொன்றில் கடந்த ஞாயிற்றுக் கிழமை உயிரிழந்தார் என டொங்கா பிரதமர் சியாலே அட்டோங்காடி யூ இவாகனோவ் அறிவித்துள்ளார்.

பசுபிக் தீவுக்கூட்ட நாடான டொங்காவில் சுமார் 115,000 மக்கள் வசிக்கின்றனர். ஜனநாயக சீர்திருத்தத்துக்கான கிளர்ச்சிகள் காரணமாக, ஐந்தாம் ஜோர்ஜ் டுப்போவ் மன்னராக முடிசூட்டும் வைபவம் 2008 வரை தாமதமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆறு மாதங்களுக்கு முன்னர் இவரின் சிறுநீரகமொன்று சத்திரசிகிச்சை மூலம் அகற்றப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ந)

# பிரான்ஸில் கொலை வெறி

## ஆசிரியர், 3 மாணவர் காவு

பரிஸ், மார்ச் 21

பிரான்ஸின் டௌலொஸ் நகரில் யூத இன மாணவர்ககள் கல்வி கற்கும் பாடசாலையொன்றில் இனந்தெரியாத நபர் ஒருவர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஆசிரியரும் மாணவர்கள் மூவரும் உயிரிழந்துள்ளனர்.

பாடசாலையின் ஆரம்ப வகுப்புகள் இருந்த பகுதியை நோக்கி அந்த நபர் துப்பாக்கிச் சூடு நடத்தினர். இந்தச் சம்பவத்தில் ஆசிரியர் ஒருவர், 3, 6 வயதான இரு மாணவர்கள், 8 வயதான மாணவர் ஒருவர் ஆகியோரே உயிரிழந்துள்ளனர். அத்துடன் மாணவர் ஒருவர் (வயது-17) படுகாயமடைந்துள்ளார். இந்தச் சம்பவத்தை நேரில் சென்று பார்வையிட்ட பிரான்ஸ் ஜனாதிபதி நிக்கொலஸ் சார்கோஸி, இத்தாக்குதல் ஒரு தேசிய பேரிடர் எனக் கூறியுள்ளார். மேலும் இறந்தவர்களுக்காக நேற்று ஒரு நிமிட மௌன அஞ்சலி செலுத்துமாறும் பிரான்ஸிலுள்ள அனைத்து பாடசாலைகளையும் கோரியுள்ள அவர், தாக்குதல் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்தி குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துமாறு அதிகாரிகளை வலியுறுத்தியுள்ளார். (ந)


## அகமகிழ்ந்து வாழ்த்துகின்றோம்



சர்வதேச மகளிர் தினத்தன்று அலரிமாளிகையில் நடைபெற்ற "இலங்கைத் தீவின் பெண்களுக்கான தேசிய மரியாதை" என்னும் விழாவில் அதி மேதகு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அவர்களாலும், முதற் பெண்மணி கௌரவ ஷிராந்தி ராஜபக்ஷ அவர்களாலும் கௌரவிக்கப்பட்ட ஒரே யொரு தமிழ்ப் பெண்மணியும், யாழ். மாவட்ட அரசாங்க அதிபரும், மாவட்டச் செயலாளருமான சௌபாக்கியவதி

**திருமதி. இமெல்டா சுகுமார்**

அவர்களை உளங்கனிந்து வாழ்த்துகின்றோம்.

எண்சீர்க் கழில்நெடில் விருத்தம்

மாந்தருள் உத்தமியாய் வந்துதித்த முத்தே!
மங்கையருள் மாணிக்கமாய் வந்துதித்த சொத்தே!
காந்தமென கவர்ந்திழுக்கும் காவிய நாயகியே!
காலமெல்லாம் நிலைபெற்ற கண்ணிறைந்த திருவே!
சாந்தமென வடிவங்கொண்ட சரித்திர நாயகியே!
சாருகின்ற மக்கள்தம் துயர்துடைத்த உத்தமியே!
தீந்தமிழால் உந்தனுக்கே உளங்கனிந்த வாழ்த்து
தேன் தமிழாய் நிலைபெற்று நீர்வாழி என்றும்

மாங்காப் புகழைப் புறத்திற் கொண்டே
மண்ணில் சிறந்த மகளீர் ஆகி
பொங்கும் கருணை அகத்திற் கொண்டே
யாழின் பெண்மைக்கு அணியு மாகி
எங்கும் எமக்குப் பெருமை சேர்க்கும்
ஏகப் புதல்வி கலைசேர் களஞ்சியம்
தாங்கும் அன்பால் ஈர்த்திடும் தாயே!
தரணியில் நீடுழி என்றும் வாழிநீர்

சீர்நிறை தமிழில் தணியாத் தாகம்
சீரிய கவிதைச் சுவையில் நாட்டம்
பேர்நிறை யாழாய் வாழும் விருப்பம்
பெரியதாய் பண்பாடு வளர்க்கும் ஏக்கம்
காரிருள் கழைய பெண்ணியம் தாங்கி
கணங்கணம் மக்களுக்(கு) உழைக்கும் பண்பு
சீர்நிறை பண்புகள் இத்தனை கொண்ட
செல்வமே! மேலும் சிறப்புற்று வாழிநீர்

தென்மராட்சிப் பிரதேச செயலக சமூகம்.

(2960) (2.7.3)


### 10 மனித தலைகள் மீட்பு

மெக்சிகோவின் தலைநகர் டெல்லோபனில் உள்ள இறைச்சி வெட்டும் கொல்களத்துக்கு அருகில் 10 பேரின் துண்டிக்கப்பட்ட தலைகள் மீட்கப்பட்டுள்ளன.

இதில் 7 ஆண்கள், 3 பெண்களின் தலைகளே மீட்கப்பட்டுள்ளன.

இவர்களுக்கு சுமார் 20 முதல் 35 வயது இருக்கும் எனக் கருதப்படுகிறது. இந்தத் தலைகளுக்கான உடல்கள் குறித்து தெரியவரவில்லை. (ந)

# போர்க்குற்ற தீர்ப்பாயத்தின் மற்றொரு நீதிபதியும் விலகல்

கம்போடிய போர்க்குற்ற தீர்ப்பாயத்தில் இருந்து சர்வதேச நீதிபதி ஒருவர் பதவி விலகியுள்ளார்.

கம்போடியாவில் நடந்த இனப் படுகொலையை விசாரிக்கும் கமெர் ரூஜ் இனப் படுகொலைத் தீர்ப்பாயத்தில் இருக்கும் கம்போடிய நீதிபதி ஒருவர் இந்த விவகாரத்தில் புதிய சந்தேகநபர்களை விசாரிக்கத் தடையாக இருக்கிறார் எனக் குற்றஞ்சாட்டி, அந்தத் தீர்ப் பாயத்தில் இருக்கும் சர்வதேச நீதிபதி ஒருவரே பதவி விலகியிருக்கிறார்.

பதவி விலகும் இந்த சுவிற்சர்லாந்து நீதிபதி லொரோன் கஸ்பர் ஆன்சர்மெட், தன்னால் சரியாகச் செயற்பட முடியவில்லை என்று காரணம் கூறியிருக்கிறார்.

1970களின் இறுதிக் கட்டத்தில், சுமார் 20 லட்சம் பேர் கொல்லப்பட்ட சம்பவங்கள் தொடர்பான வழக்குகளை விசாரிக்க இந்த நீதிமன்றம், ஐ.நா சபையால், கம்போடிய அரசாலும் கூட்டாக உருவாக்கப்பட்டிருந்தது. கடந்த ஆறு மாதங்களில் பதவி விலகும் இரண்டாவது சர்வதேச நீதிபதி கஸ்பர் ஆன்சர்மெட் ஆவார்.


**இறைச்சிக் கோழி விற்பனை**

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

நல்லூர் பாம் சென்ரர்,
இல. 19, முருகேசர் லேன், நல்லூர்.

**காணி விற்பனைக்கு**

மீசாலை புத்தூர் சந்தியில் (சியாமளா மில் முன்பாக) ஏ- 9 வீதியில், 4 பரப்புக் காணி நன்னீர்க் கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

தொடர்பு:
குமரன் சில்க், சாவகச்சேரி.

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தரமான பிறிமா No.1 புறொயிலர் குஞ்சுகள் பேட்டுக் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவு செய்யவும்.

தொடர்பு:

| | | |
|---|---|---|
| நல்லூர் பாம் சென்ரர், | நல்லூர் பாம் சென்ரர், | கூட்டி பாம் சென்ரர், |
| 19, முருகேசர் ஒழுங்கை, | கனகபுரம் வீதி, கிளிநொச்சி. | வட்டுக்கோட்டை |
| நல்லூர். 0212226944 | 0776225944 | 0778996085 |

**70ஆவது பிறந்தநாள் வாழ்த்துக்கள்**



திருமதி செல்வநாயகம் அன்னலட்சுமி

21.03.2012

இன்று தனது 70 ஆவது பிறந்த நாளை தனது இல்லத்தில் வெகு விமர்சையாகக் கொண்டாடும் திருமதி செல்வநாயகம் அன்னலட்சுமி பல்லாண்டு காலம் நீடுழி வாழ்க என வாழ்த்துகின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

இல.54/2, திருவையாறு, கிளிநொச்சி.

# 3,000 பொலிஸாருடன் கூடங்குளத்தில் பணி

சென்னை, மார்ச்.21

7 மாதங்களுக்குப் பின்னர் கூடங்குளம் அணு மின் நிலையத்தில் பணிகள் நேற்று ஆரம்பமாகியுள்ளன.

அணுமின்நிலையத்தைச் சுற்றிலும் சுமார் 3 ஆயிரம் பொலிஸார் பாதுகாப்புக்காக நிறுத்தப்பட்டுள்ளனர்.

அணுமின் நிலையம் சுமுகமாக இயங்க வேண்டும் என்பதே எங்களது குறிக்கோள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சுமார் 300 இற்கும் மேற்பட்ட ஊழியர்கள் அணுமின் நிலையத்துக்குள் சென்று பணிகளை ஆரம்பித்தனர். அணுமின் நிலையத்துக்கு எதிராகப் போராட்டத்தில் ஈடுபட்டதாக போராட்டக் குழுவின் 15 முக்கிய நிர்வாகிகள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் மீது பாதுகாக்கப்பட்ட பகுதியில் பிரச்சினையை ஏற்படுத்தியதாக முறைப்பாடு தெரிவிக்கப்பட்டது.

மேலும் அந்தப்பகுதியில் 144 தடை உத்தரவும் பிறப்பிக்கப்பட்டுள்ளது.



கூடங்குளம் அணுமின் நிலைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப் படும் என்று தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

**தமிழக அரசு தீர்மானம்**


இதேவேளை கூடங்குளம் அணுமின் நிலைய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் என்று தமிழக அரசு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இது தொடர்பில் தமிழக அரசின் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

மாநில அரசால் அமைக்கப்பட்ட வல்லுநர் குழு அளித்த அறிக்கை; மற்றும் அணுமின் திட்டத்திற்கு எதிரானவர்களின் மனு விரிவாக ஆராயப்பட்டு, நில நடுக்கம் மற்றும் சுனாமி ஆகியவை ஏற்படக்கூடிய வாய்ப்பு இல்லை என்பதும், எவ்வாறான நிலையிலும் இந்த அணுமின் நிலையம் பாதுகாப்பானது தான் என்பதும், இந்த அணுமின் நிலையம் சிறப்பு பாதுகாப்பு அம்சங்களைக் கொண்டுள்ளது என்பதும் தெரியவந்துள்ளது.

இவற்றின் அடிப்படையில், அப்பகுதி மக்களிடையே நிலவும் ஐயப்பாடுகளுக்கு மத்திய அரசால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு பதில் அளித்துள்ளதை கருத்தில் கொண்டும்; அணுமின் நிலையம் மிகவும் பாதுகாப்பானது தான் என்பது தெரியவந்ததன் அடிப்படையிலும்; கூடங்குளம் அணுமின் நிலையத்தை உடனடியாக செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் - என்று அந்தத் தீர்மானத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# வான் - ரயில் விபத்து 15 பேர் சாவு



ஹத்ராஸ், மார்ச்.21

உத்தரப் பிரதேச மாநிலத்தின் ஹத்ராஸ் பகுதியில் வான் -பயணிகள் ரயில் மோதி விபத்துக்குள்ளானதில் வானில் பயணம் செய்த 15 பேர் உயிரிழந்தனர்.

உத்தரப் பிரதேச மாநிலத்தின் ஹத்ராஸ் பகுதி நோக்கிப் புறப்பட்ட வானில் 15 - 19 பேர் வரை பயணம் செய்தனர். அந்த வான் நேற்றுக்காலை ஆளில்லா ரயில் கடவையைக் கடக்க முயன்றது. அப்போது அந்த வழியாக வந்த மதுரா - காஸ் கஞ்ச் பயணிகள் ரயிலை வான் சாரதி கவனிக்கவில்லை. இதையடுத்து வேகமாக வந்த ரயில், தண்ட வாளத்தை கடக்க முயன்ற வான் மீது பயங்கரமாக மோதியது.

இந்த விபத்தில் வானில் பயணம் செய்த 15 பேர் சம்பவ இடத்திலேயே பரிதாபமாக உயிரிழந்தனர். (வ)

# தயாநிதி மாறனின் நிதி ஆவணங்கள் தாக்கல்

டில்லி, மார்ச்21



ஸ்பெக்ரம் அலைவரிசை ஒதுக்கீட்டில் 550 கோடி ரூபா ஊழல் முறைப்பாட்டில் முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதிமாறனின் நிதி ஆவணங்கள் மத் திய நடைமுறைப் பிரிவில் தாக்கல் செய்யப்பட்டன.

2ஜி ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஊழல் முறைப்பாடு குறித்து உச்ச நீதிமன்றத்தின் மேற்பார்வையில் சி.பி.ஐ. மற்றும் மத்திய நடைமுறைப் பிரிவு அதிகாரிகள் புலன் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஸ்பெக்ட்ரம் அலைவரிசை ஒதுக்கீடு தொடர்பான மேக்சிஸ் - ஏர்செல் ஒப்பந்தத்தில் ரூ.555 கோடி ஊழல் நடந்ததாக, தொலைத் தொடர்புத் துறை முன்னாள் மத்திய அமைச்சர் தயாநிதி மாறன் மற்றும் அவருடைய சகோதரரும், சன் தொலைக்காட்சி நிர்வாக இயக்குநருமான கலாநிதி மாறன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த வழக்கில், சட்ட விரோத பணப் பரிவர்த்தனை தடுப்புச் சட்டத்தின் கீழ் அவர்கள் இருவருக்கும் மத்திய நடைமுறைப் பிரிவு அழைப்பாணை அனுப்பி இருந்தது. அதன்பேரில், தயாநிதிமாறன் தொடர்புடைய பணப் பரிமாற்றம், முதலீடுகள் மற்றும் இதர வர்த்தகம் தொடர்புடைய நிதி ஆவணங்கள் நேற்று முன்தினம் டில்லியில் உள்ள மத்திய நடைமுறைப் பிரிவு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

இதேபோல், கலாநிதி மாறன் சார்பிலும் நிதி ஆவணங்கள் விரைவில் தாக்கல் செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தயாநிதிமாறன்தொலைத்தொடர்புத் துறை அமைச்சராகப் பணி புரிந்தபோது ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டில், மலேசியாவின் மேக்சிஸ் நிறுவனத்துக்கு ஆதரவாக செயற்பட்டதாக முறைப்பாடு எழுந்தது. (வ)

## தெய்வத்திருமகன் படத்துக்கு மேலும் இரு விருதுகள்



யுடிவி மற்றும் ராஜகாளியம்மன் என்டர்பிரைசஸ் தயாரித்த தெய்வத்திரு மகன் திரைப் படம் ஜப்பான் ஒசாகா திரைப்பட விழாவில் சிறந்த திரைப்படமாகத் தெரிவு செய்யப்பட்டது.

அந்தப்படத்துக்கு கிராண்ட் பிரிக்ஸ் விருதும், சிறந்தபொழுதுபோக்கு படத்துக்கான விருதும் வழங்கப்பட்டது.

ஏ எல்.விஜய் இயக்கத்தில் உருவான இந்தத் திரைப்படத்தின் கதை மன வளர்ச்சி குன்றிய தந்தை தனது மகளை மீட்க நடத்தும் போராட்டம்தான். இதில் விக்ரமுடன் அனுஷ்கா, அமலபால், சந்தானம், பபி சாரா ஆகியோரும் நடித்துள்ளனர். இந்த படத்துக்கு ஏற்கனவே நடைபெற்ற சில திரைப் பட விழாக்களிலும் விருதுகள் கிடைத்தமை குறிப்பிடத்தக்கது. (வ)

# புதுடில்லியின் நிலைப்பாட்டில் திருமாவுக்குத் திருப்தியில்லை

டில்லி, மார்ச்.21

ஐ.நா. மனித உரிமை சபையில் நடைபெறவிருக்கும் வாக்கெடுப்பில் இந்தியா என்ன நிலை எடுக்கப் போகிறது என்பது இன்னும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. எனவே இந்திய அரசின் அணுகுமுறை குறித்துத் தமிழர்கள் விழிப்போடு இருக்கவேண்டிய நேரம் இது என்பதை மட்டும் எச்சரிக்கையோடு கூற விரும்புகிறோம் என்று அமெரிக்க பிரேரணை பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் கருத்து தெரிவிக்க முன்னர் விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக திருமாவளவன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்ததாவது:

இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் இந்திய ஜனாதிபதியின் உரை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசும் போது இலங்கை அரசைப் பற்றியும், தமிழர்களுக்கான அரசியல்



உரிமைகள்வழங்கப்பட வேண்டியதன்தேவை பற்றியும் கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

அதில் இலங்கை அரசு சர்வதேச சட்டங்களை மீறியிருக்கிறது என்று கூறப்பட்டிருக்கிறதே தவிர வேறு நம்பிக்கை தரும் அம்சங்கள் அதில் இல்லை. ஐ.நா. பொதுச்செயலாளர் பான் கி மூன் அமைத்த குழு இலங்கை அரசு போர்க் குற்றங்களை இழைத்திருக்கிறது எனத் தனது அறிக்கையில் உறுதிப்படுத்திய பின்னரும் கூட அமெரிக்கா முன்மொழிந்திருக்கும் தீர்மானத்தில் 'போர்க் குற்றம்' என்ற சொல்லே இல்லாதது ஏமாற்றம்தான்.

எனினும் இப்போதுதான் சர்வதேசச் சமூகம் தமிழர் பிரச்சினை குறித்து அக்கறை காட்ட ஆரம்பித் திருக்கிறது. சர்வதேசச் சட்டங்கள் மீறப்பட்டிருக்கிறது என்ற ஒரு வாக்கியமாவது தீர்மானத்தில் இருக்கிறதே என்ற வகையில்தான் இந்தத் தீர்மானத்தை ஆதரிக்க வேண்டும் என்று நாம் வலியுறுத் தினோம்.

பிரதமர் மன்மோகன் சிங் தற்போது தெரிவித்திருக்கும் பதிலுரையில் இலங்கைப் பிரச்சினை குறித்து நான்கு பத்திகள் இருக்கின்றன. அதில் முதல் மூன்று பத்திகளில் இலங்கை அரசு எடுத்துவரும் நடவடிக்கைகளைப் பட்டியலிட்டு அந்த அரசின் மீது நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஒரு சிறு குற்றச்சாட்டு கூட இலங்கை அரசு மீது சாட்டப்படவில்லை. இந்திய அரசு தமிழ் மக்களின் போராட்டங்களை திசை திருப்புவதற்காக இப்படி நாடகம் ஆடுகிறதோ என்ற ஐயமே எமக்கு எழுகிறது- என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# ரயில்வே அமைச்சராக முகுல்ராய்



டில்லி, மார்ச்.21

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த முகுல் ராய் ரயில்வே அமைச்சராக நேற்று பதவியேற்றுக் கொண்டார்.

ரயில்வே பட்ஜெட்டில் பயணிகள் கட்டணத்தை உயர்த்தியதற்காக திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் தினேஷ் திரிவேதி ராஜினாமா செய்ததைத் தொடர்ந்து முகுல்ராய் புதிய அமைச்சராகப் பதவியேற்றுள்ளார்.

ஜனாதிபதி மாளிகையில் நடை பெற்ற பதவியேற்பு விழாவில் அவருக்கு இந்திய ஜனாதிபதி பிரதீபா பாட்டீல் ரகசியக் காப்பு பிரமாணம் செய்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில் பிரதமர் மன்மோகன் சிங், மேற்கு வங்க முதல்வரும் திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மமதா பானர்ஜி மற்றும் மத்திய அமைச்சர்கள் கலந்து கொண்டனர்.

திரிணாமுல் காங்கிரஸ் கட்சியின் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தநிகழ்வில் பங்கேற்றனர். தற்போது ரயில்வே அமைச்சராகப் பொறுப்பேற்றுள்ள முகுல் ராய் மத்திய கப்பல் போக்கு வரத்து இணை அமைச்சராக பதவி வகித்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

# பிரேத அறையில் மாணவனின் சடலம் உயிருடன் இருக்கிறான் என போராட்டம்

தமிழக மாநிலம், உடுமலை அரசு மருத்துவமனையிலுள்ள பிரேத அறையில், பிரேத பரிசோதனைக்காக வைக்கப்பட்டிருந்த மாணவன், உயிருடன் இருப்பதாகக் கூறி, உறவினர்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். இந்த சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டது.

திருப்பூர் மாவட்டம், உடுமலை அருகே, பெதப்பம்பட்டி கே.டி.எல்., மில் கேட் பகுதியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் மகன் அருண்குமார், வயது16, பெதப்பம்பட்டி அரசு மேல்நிலைப் பள்ளியில், பிளஸ்1 வகுப்பில் கல்வி கற்று வருகிறார். கடந்த திங்கட்கிழமை, அந்தப் பகுதியிலுள்ள கிணற்றில் குளிக்க நண்பர்களுடன் சென்றார்.

அப்போது, அருண்குமார் நீரில் மூழ்கி உயிரிழந்தார். கிணற்றிலிருந்து உடலை மீட்டு, பிரேத பரிசோதனைக்காக உடுமலை அரசு மருத்துவமனைக்குக் கொண்டு சென்றனர். நேற்று முன் தினம்காலை பிரேத அறையில் இருந்த அருண்குமாரின் உடலைப் பார்த்த உறவினர்கள், அவனது மூக்கிலிருந்து ரத்தம் வருவதைக் கண்டு, அசைவு ஏற்படுவதாகவும், உயிருடன் இருப்பவரை பிரேத அறையில் வைத்திருப்பதாகவும் கொந்தளித்தனர்.

மருத்துவமனை முன்பாகக் கூடியிருந்த உறவினர்கள் அனைவரும், பிரேத அறை முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர். உயிருடன் அருண்குமார் இருப்பதாகவும், சிகிச்சையளிக்க வேண்டும் என்றும் கோரி, போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தலைமை மருத்துவர் தமிழ்மணி, பிரேத அறைக்குச் சென்று, மாணவரின் உடலை உறவினர் முன்னிலையில், பரிசோதித்தார்; அப்போது மாணவன் இறந்தது உறுதி செய்யப்பட்டதால், உறவினர்கள் கலைந்து சென்றனர். இந்தச்சம்பவத்தால், உடுமலை அரசு மருத்துவமனையில், பரபரப்பு ஏற்பட்டது.

தலைமை மருத்துவ அலுவலர் தமிழ்மணி தெரிவித்ததாவது:

அருண்குமாரின் மூக்கிலிருந்து ரத்தம் வருவதை கண்ட உறவினர்கள், உயிருடன் இருப்பதாகத் தெரிவித்தனர். அது தவறு என்று கூறியும் நம்பாததால், அவரின் உடல் பரிசோதனைக் குட்படுத்தப்பட்டது - என்றார்.

# அராலி அபிவிருத்திக்கு 600 மில்லியன் தேவை

## வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர்

வீடமைப்பு, சுகாதாரம், குடிதண்ணீர், வீதி மற்றும் மருத்துவ செலவு என்பவற்றை முன்னெடுக்க அராலிக்கு மட்டும் 600 மில்லியன் ரூபா உடன் தேவையாக உள்ளது

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வலி.மேற்கில் உள்ள 25 கிராமங்களில் அராலியும் ஒன்று. அராலியை அபிவிருத்தி செய்ய 600 மில்லியன் ரூபா தேவை.

50 ஆண்டு காலம் அராலிப்பகுதி பின்தங்கிய நிலையில் காணப்படுகிறது. எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கு அனைவரும் ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இவ்வாறு வலி.மேற்கு பிரதேச சபை உறுப்பினர் தர்மலிங்கம் நடனேந்திரன் தெரிவித்தார்.

அராலி கிழக்கு சிக்கன கடன் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் தலைவர் சி.சதீஷ்குமார் தலைமையில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போது நடனேந்திரன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

நெல்சிப் அபிவிருத்தித் திட்ட முன்மொழிவில் அராலி மக்கள் ஒன்று கூடி 100 திட்டங்களை முன்னுரிமை பிரகாரம் முன்மொழிந்தனர்.

அதில் ஒரு வீதி மட்டுமே திருத்தப்பட்டு அதுவும் அரைகுறையில் உள்ளது.

இன்றைய அபிவிருத்தி மக்களை முழுமையாகச் சென்றடையவில்லை.

வீடமைப்பு, சுகாதாரம், குடிதண்ணீர், வீதி மற்றும் மருத்துவ செலவு என்பவற்றை முன்னெடுக்க அராலிக்கு மட்டும் 600 மில்லியன் ரூபா உடன் தேவையாக உள்ளது- என்றார். (எ)




மகிழ்ச்சியான வாழ்வு நூல் வெளியீட்டு விழா யாழ்.வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற போது யாழ். மறை மாவட்ட ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம், வடமாகாண ஆளுநரின் செயலாளர் ந.இளங்கோவன் மற்றும் சமயக் குருமார்கள் கலந்து கொண்டனர். (எ-14)

## கிராம அலுவலரால் தாக்கப்பட்டவர் கிளிநொச்சி மருத்துவமனையில்

கிளிநொச்சி, மார்ச் 21

கிராம அலுவலரும், அவரது உதவியாளரும் சேர்ந்து தாக்கினர் என்று கூறப்படும் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தொண்டமான் நகர்ப்பகுதியில் அப்பகுதிக் கிராம அலுவலர் மற்றும் அவரது உதவியாளர் ஆகியோரால் தாக்கப் பட்டதாகக் கூறப்படும் நபரொருபர் கிளிநொச்சி பொது மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் .

கிளிநொச்சி தொண்டமான் நகர் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் தனது காணியில் கட்டடம் ஒன்றினை அமைப்பதற்கான அனுமதியைப்பெற்றுக் கொள்வதற்கு, கிராம அலுவலரிடம் சென்றுள்ளார். ஆனால் கிராம அலுவலர் அனுமதி வழங்க மறுத்துள்ளார். அப்போது இவர்கள் இருவருக்கு இடையில் வாய்த்தர்க்கம் ஏற்பட்டது. இந்த வேளையில் கிராம அலுவலரும் அவரது உதவி யாளரும் இந்தக் கிராம வாசி யைக் கடுமையாகத் தாக்கினர் என்று பொலிஸ் முறைப் பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தாக்கப்பட்டவர் கிளிநொச்சி மருத்துவமனை யில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில் தொண்டமான் நகர் கிளிநொச்சியைச் சேர்ந்த 55 வயதான செல்லையா சபாரட்ணம் என்பவர் பாதிக்கப்பட்ட நிலை யில் கிளிநொச்சி மருத்து வமனையில் நான்காவது இலக்க விடுதியில் தங்கிச் சிகிச்சை பெற்றுவருகின்றார். கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணை நடத்தி வரு கின்றனர். ( க-6)

## நூலக அபிவிருத்திக் குழுவின் கலந்துரையாடல் இன்று

யாழ்ப்பாணம்,மார்ச் 21

யாழ். மாவட்ட நூலக அபிவிருத்திக் குழுவின் கலந்துரையாடல் இன்று பி.ப.2 மணிக்கு யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் இடம்பெறும் என உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் அறிவித்துள்ளார்.

இதில் மாவட்ட நூலக அபிவிருத்திக் குழு உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறும் கேட்கப்பட்டுள்ளது.

இதில் உலக புத்தக தினம், கையெழுத்து சஞ்சிகைப் போட்டி முன்னேற்ற மீளாய்வு, வாசகர் வட்டம், 54 நூலகங்களின் அபிவிருத்தி தொடர்பாக ஆராயப்படவுள்ளன.

இதேவேளை கையெழுத்து சஞ்சிகை போட்டி தொடர்பாக உள்ளூராட்சி மட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி தொடர்பான விவரங்களைக் கொண்டு வருமாறு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலக சிரேஷ்ட சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் செ.தவநாயகம் கேட்டுள்ளார். (எ)

## வீதி அகலிப்பால் மக்கள் சிரமம்

குருநகர்,மார்ச் 21

குருநகர் தண்ணீர் தாங்கி வீதியின் கிழக்குப் பக்கம் வீதி அகலிப்பு பணிக்காக மணவெட்டப்பட்டு பள்ளமாக்கப்பட்டுள்ளதால் அப்பகுதியிலுள்ள குடியிருப்பாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

இந்த வீதி அகலிப்பு குருநகர் புதிய கடற்கரை வீதி வரை முன்னெடுக்கப்பட்டு வருகிறது. எனினும் வீதி அருகில் வெட்டப்பட்ட பள்ளம் மூடப்பட்டு புனரமைப்பு வேலைக்ள் பூர்த்தி செய்யப்படாது இருப்பதால், அப்பகுதி மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட தரப்பினர் இந்த விடயத்தில் அக்கறை எடுத்து விரைவாக வீதிப் புனரமைப்பை மேற்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (எ-51)

## சைவச் சிறார் இல்லத்தின் அபிவிருத்தி தொடர்பான கூட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

மகாதேவா சைவ சிறார் இல்லத்துக்கான அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் எதிர்வரும் 24 ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் இல்லத்தின் உறுப்பினர்களாக இணையவிரும்பும், தொண்டு உள்ளம் கொண்ட சேவையாளர்கள் இணைந்து கொள்ள முடியும்.

மேற்படி இல்லத்தின் உறுப்பினர்களாக இணைந்து கொள்ள விரும்புபவர்கள் விண்ணப்பப்படிவத்துடன் வருகை தருமாறு மகாதேவா சைவ சிறார் இல்லத்துக்கான தலைவர் இ.இராசநாயகம் கேட்டுள்ளார். (எ)

## குருநகர் கழிவு நீர் வாய்க்கால் சுத்திகரிப்பு

குருநகர்,மார்ச் 21

குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியில் அமைந்துள்ள கழிவு நீர் செல்லும் வாய்க்கால் மாநகர சபையினால் சுத்திகரிக்கப்பட்டுள்ளது.

இந்த கழிவு நீர் வாய்க்கால் கழிவு மண் நிரம்பி கழிவு நீர் போகாதபடி அடைபட்டு இருந்தது

இதனால் அப்பகுதியில் நுளம்பு, இலையான்,கொசுவின் பெருக்கம் அதிகரித்துக் காணப்பட்டதோடு துர்நாற்றமும் வீசியது.

இதனை அடுத்து மாநகர சபையின் சுத்திகரிப்புத் தொழிலாளர்களால் கழிவு நீர் வாய்க்கால் சுத்திகரிக்கப்பட்டு கழிவு நீர் செல்வதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது

இந்தக் கழிவு நீர் வாய்க்காலினால் நோய்கள் பரவக்கூடிய சாத்தியக்கூறு இருந்ததாகவும், அது சுத்திகரிக்கப்பட்டதால் அந்த ஆபத்து விலகியுள்ளதாகவும் அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (எ-51)

### அகோர வெப்பம்; பழுதாகும் முட்டைகள்

குருநகர்,மார்ச் 21

யாழ்ப்பாணத்தில் வெப்பம் அதிகரித்து வருவதனால் கோழி முட்டைகள் பழுதடைவதாக கோழி வளர்ப்போர் தெரிவிக்கின்றனர்.

இதனால் முட்டைகளின் விலை அதிகரித்துள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

குருநகர் பகுதியில் உள்ள வியாபார நிலையங்களில் 8 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வந்த முட்டை 11 ரூபாவாக விலையேற்றம் கண்டுள்ளது.

முட்டையைக் கொள்வனவு செய்யும் வியாபாரிகள் நட்டத்தை எதிர்நோக்குகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது. (எ-51)

## கலைமன்றங்கள் அமைப்பதற்கு ஏற்பாடு

கலை கலாசார பெருவிழாவில் பிரதேசத்தின் அனைத்து கிராமங்களிலிருந்தும் கலைமன்றங்கள் மூலம் அங்குள்ள கலைஞர்களை உருவாக்கி அறிமுகப்படுத்தவுள்ளனர்

தென்மராட்சி,மார்ச் 21

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளிலும் கலை மன்றங்கள் அமைப்பதற்கான ஏற்பாடுகள் பிரதேச கலாசாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அத்துடன் பிரதேசத்தில் பதிவு செய்யப்பட்ட கலை மன்றங்களையும் பதிவு செய்யப்படாமல் இயங்கி வரும் கலைமன்றங்களை ஊக்குவிக்கும் செயற்பாடுகளையும் மேற்கொண்டுள்ளனர்.

கலை, கலாசாரங்கள் அழிந்துவிடாமல் பாதுகாப்பதற்கும் முதுபெரும் கலைஞர்களின் திறமைகளை இளம் தலைமுறையினர் மூலம் வெளிக்கொணரவும் கிராம மட்டத்தில் உள்ள கலை கலாசார விழுமியங்களுக்குப் புத்துயிர் வழங்கவுமென கலாசாரப் பிரிவினர் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளனர்.

விரைவில் பிரதேச மட்டத்தில் நடத்தப்படவுள்ள கலை கலாசார பெருவிழாவில் பிரதேசத்தின் அனைத்து கிராமங்களிலிருந்தும் கலைமன்றங்கள் மூலம் அங்குள்ள கலைஞர்களை உருவாக்கி அறிமுகப்படுத்தவுள்ளதாக பிரதேச கலாசார அலுவலர் சி.முகுந்தன் தெரிவித்தார்.

மேலும் கலை மன்றங்களை உருவாக்கி அவை திறம்பட செயற்பட ஊக்குவிப்பாக இசைக்கருவிகளும் நிதி உதவிகளும் வழங்கவும் முடிவு செய்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் இயங்கும் கலை மன்றங்களையும் இயங்கவுள்ள கலை மன்றங்களையும் தொடர்பு கொள்ளுமாறும் அறிவித்துள்ளார். (எ-9)

# பெண்கள் தாக்கப்படும் சம்பவங்கள் அதிகரிப்பு

சராசரியாக 50 தொடக்கம் 60 வரையிலான குடும்பப் பெண்கள் கணவன்மார்களினால் இரவு வேளைகளில் தாக்கப்பட்டு, காயமடைந்து வைத்தியசாலைகளின் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர்.

யாழ்ப்பாணம்,மார்ச் 21

குடும்பப் பெண்கள் கணவர்களால் தாக்கப்பட்டு காயமடைந்து வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

பிரதி மாதங்களில் சராசரியாக 50 தொடக்கம் 60 வரையிலான குடும்பப் பெண்கள் கணவன்மார்களினால் இரவு வேளைகளில் தாக்கப்பட்டு, காயமடைந்து வைத்தியசாலைகளின் விடுதிகளில் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர். பலர் தினமும் வெளிநோயாளர் பிரிவுகளில் சிகிச்சைபெற்றுவருகின்றனர்.

வைத்தியசாலை விடுதிகளில் தங்கி சிகிச்சை பெறும் பெண்களின் கணவர்கள் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு எச்சரிக்கை செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டு வருகின்றனர். தினமும் மது போதையில் வரும் கணவர்களாலும் பிற பெண்களுடன் தொடர்பு வைத்துள்ள கணவர்களாலும் தாக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

விடுதியில் சிகிச்சை பெற்று வரும் குடும்பப் பெண்களைக் கேட்டபோது இரவு வேளையில் கசிப்பு போன்ற மது வகைகளை அருந்தி விட்டு வந்து பிள்ளைகளைப் படிக்க விடாமல் தடுப்பதைச் சுட்டிக்காட்டிப் பேசியதால், கையில் கிடைத்தவற்றால் தாக்கப்பட்டதாக சில பெண்களும், நள்ளிரவு வேளையில் வீட்டுக்கு வரும் கணவனை உரிமையுடன் கண்டித்தபோது, மோசமாகத் தாக்கப்பட்டதாக ஒரு பெண்ணும் தெரிவித்தனர்.

பொலிஸார் நீதிமன்றம் போன்றவற்றின் மூலம் இனி வரும் காலங்களில் இவ்வாறு நடக்கக்கூடாது என தமது ஒவ்வொரு கணவன் மாரையும் எச்சரிக்கை செய்து அனுப்ப வேண்டுமென அனைத்துப் பெண்களும் கேட்டுக் கொண்டனர். (எ-9)

# உங்கள் மீது உங்கள் எண்ணம்!

(நேற்றைய தொடர்ச்சி)

நீயும் என்னை மாதிரி வானில் பறக்க வேண்டியவன். அது தெரியாமல் தரையிலேயே திரிந்து கொண்டு இருக்கிறாயே!'' - என்று கேட்டது. பெரிய கழுகு சொன்னதைக் கேட்ட சிறிய கழுகால் நம்பவே முடியவில்லை. இருந்தாலும், அது ''அப்படியானால் என்னாலும் வானில் உயரமாகப் பறக்க முடியுமா?''என்று ஆச்சரியத்தோடு கேட்டது.

''நிச்சயமாகப் பறக்க முடியும்! இதோ பறந்து பார்!'' என்று கழுகு, சிறிய கழுகை நழுவ விட்டது. சிறிய கழுகும் சிறகை அடிக்க, அதனால் நன்றாகப் பறக்க முடிந்தது. அப்போது தான் அதற்கு, தான் கோழி அல்ல, கழுகு என்ற உண்மை விளங்கியது. இந்தக் கதையில் வரும் கழுகுக் குஞ்சைப் போலவே, பலரும் காணப்படுகிறார்கள்.

ஒருவர் தன்னைப் பற்றி எப்படியான பிம்பத்தை உருவாக்கி வைத்திருக்கிறாரோ, அதற்குத் தக்கபடியே அவரது சுயமரியாதை இருக்கிறது. அந்தப் பிம்பம் அவரது சிறுவயதில் அவரது பெற்றோர், ஆசிரியர், உறவினர் ஆகியோரால் உருவாக்கப்பட்டு விடுகிறது. மேற்கூறிய கதையில் சிறிய கழுகின் பிம்பம், கோழியாலும் கோழிக் குஞ்சுகளாலும் உருவாக்கப் பட்டதைப் போல, உங்களின் பிம்பமும் இதுவரை எதிர்மறையானதாக உருவாக்கப்பட்டிருக்கலாம். உங்கள் பெற்றோர் இதுநாள் வரை உங்களை 'சராசரி' என்றோ அல்லது அதற்கும் கீழே என்றோ நினைத்து வளர்த்திருக்கலாம். முதல் ராங்க் எடுக்கும் மாணவன் முதன்மையானவன் என்றும், இரண்டாம் ராங்க் எடுக்கும் மாணவன் இரண்டாம் தரமானவன் என்றும் நினைக்கிற சமுதாயத்தில், உங்கள் பெற்றோர் அவ்வாறு நினைத்திருக்கக்கூடும். உங்கள் ஆசிரியர் கூட அவ்வாறு உங்களை நினைக்க வைத்திருக்கலாம்.

ஒரு பள்ளியில் சில மனோவியலாளர்கள் சேர்ந்து ஒரு சோதனை நடத்தினார்கள். அதன்படி ஒரு வகுப்பறையிலுள்ள மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்தனர். அதில் ஒரு குழுவிடம், ''நீங்கள் பொதுஅறிவு குறைந்தவர்கள்'' என்று தொடர்ந்து சொல்லி வந்தார்கள். மற்றொரு குழுவிடம், ''நீங்கள் பொது அறிவு மிக்கவர்கள்'' என்று தொடர்ந்து சொல்லி வந்தார்கள். பத்து நாள்களுக்குப் பிறகு இரு குழுக்களுக்கும் பொது அறிவுத் தேர்வு நடத்தினார்கள். 'நீங்கள் பொது அறிவு குறைந்தவர்கள்' என்று அறிவுறுத்தப்பட்ட மாணவர்கள் குறைந்த மதிப்பெண் பெற்றிருந்தார்கள். 'நீங்கள் பொது அறிவு மிக்கவர்கள்' என்று அறிவுறுத்தப்பட்டிருந்த மாணவர்கள் அதிக மதிப்பெண் பெற்றிருந்தார்கள். உங்கள் மீது தொடர்ந்து கூறப்படும் கருத்தானது உங்கள் பிம்பத்தை மாற்றியமைத்து விடுகிறது என்ற உண்மை இந்த நிகழ்ச்சியின் மூலம் தெரியவருகிறது.

ஆனால், உங்களைப் பற்றிய மற்றவர்களின் கருத்தைப் பிடித்துக் கொண்டே இருந்தால், இறுதிவரை நீங்கள் சுயமரியாதையை வளர்த்துக் கொள்ளவே முடியாது. இதுவரை, உங்களைப் பற்றி பிறர் சொன்ன கருத்துக்களை மூட்டை கட்டி வைத்துவிட்டு நீங்களாகவே உங்களைக் கொஞ்சம் பரிசோதனை செய்து பாருங்கள். அதன்பிறகே, உங்களைப் பற்றிய உண்மையான பிம்பத்தை நீங்கள் அறிந்து கொள்ள முடியும். சுயமரியாதை கொண்டவர்களின் குணநலன்கள் எப்படியிருக்கும்? என்பதை முதலில் நீங்கள் தெரிந்து கொள்ளுங்கள்.

சுயமரியாதை கொண்டவர்கள் தன்னை நம்புகிறார்கள்; பிறரையும் நம்புகிறார்கள். எனவே பிறரிடம் நம்பிக்கை பெறுகிறார்கள். சுயமரியாதை கொண்டவர்கள் எந்தச் சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் மனநிலை கொண்டவர்களாக விளங்குகிறார்கள். வாழ்வின் தடைகளை உடைத்து எறிகிறார்கள். சூழ்நிலைக்குத் தக்கபடி தங்களை மாற்றிக் கொள்கிறார்கள். பிறருக்கு எந்தத் தயக்கமுமின்றி உதவி செய்கிறார்கள். மனதை எப்போதும் அமைதியாக வைத்துக் கொள்கிறார்கள் பிறரிடம் இருக்கும் திறமையை அங்கீகரிக்கிறார்கள்; பாராட்டுகிறார்கள். சுயமரியாதை கொண்டவர்களின் குணநலன்கள் எப்படியிருக்கும்? என்பதைத் தெரிந்து கொண்டீர்கள். இனி நீங்களும் சுயமரியாதை கொண்டவர்களாக மாறுங்கள்.

இந்தக் கணம் முதல், மகிழ்ச்சியையும், வெற்றியையும் பெறக்கூடிய தகுதி உங்களுக்கு இருப்பதாக நம்பத் தொடங்குங்கள். சுயமாகச் சிந்திக்கவும், செய்து முடிக்கவும், பிரச்சினைக்குத் தீர்வு காணவும் தேவையான ஆற்றல் உங்களுக்கு இருப்பதாக நம்பத் தொடங்குங்கள். 'நாம் மற்றவர்களால் ஏற்கப்படுவோம், மதிக்கப்படுவோம்' என்று நம்புங்கள்.

'நம்மால் எதையும் செய்ய முடியும்' என்ற எண்ணம் உங்களுக்கு இருந்தால்,நீங்கள் சுயமரியாதை உடையவர்தாம். உங்களைப் பற்றி உயர்வாக எண்ண முடிகிறபோது இந்த வாழ்க்கை இருக்கிறபடியே இருந்துவிடாது. நிச்சயமாக, நீங்கள் விரும்பத்தக்கதாய் மாற்றங்கள் நிகழ்ந்தே தீரும்.

நீங்கள் சுயமரியாதை காட்டத் தொடங்கிவிட்டால், இதுவரை உங்களிடம் இருந்த அச்சமும், தயக்கமும் உங்களைவிட்டு நீங்கிவிடும். உங்கள் திறமைகளில், ஆற்றல்களில் நம்பிக்கை உடையவராயிருங்கள். வெளியே மட்டுமல்ல, உள் மனதிலும் சந்தேகமற்றவராய், கலக்கமற்றவராய் காட்சியளியுங்கள். நீங்கள் இதுவரை நினைத்திருந்ததைவிட 'செயலாற்றல் அதிகம் உள்ளவர்தான் நீங்கள்' என்று நம்பத் தொடங்குங்கள், 'நான் நம்பிக்கை விதையை ஊன்றுவேன், எனது மனத்தில் மட்டுமல்ல, அடுத்தவர் மனங்களிலும்' என்று உறுதி செய்து கொள்ளுங்கள்.

சுயமரியாதையை உருவாக்கிக் கொள்ள தினமும், கீழ்க்கண்ட பட்டியலை மந்திரம் போலச் சொல்லிப் பழகுங்கள். நான் அழகானவன். கண்ணாடியில் என் உருவத்தையோ, என் புகைப் படத்தையோ பார்த்து நானே வெறுக்க மாட்டேன். நான் அதிர்ஷ்டம் நிறைந்தவன்.என் உடல் ஆரோக்கியத்தைக் காப்பாற்றுவேன். என் அனுபவங்களிலிருந்து பாடம் கற்றுக் கொள்வேன்; தவறாக நம்பியவற்றில் இருந்து விடுபடுவேன். என்னை யாரேனும் பாராட்டும்போது, அப்பாராட்டை ஏற்றுக் கொண்டு அவருக்கு நன்றி தெரிவிப்பேன். ஒரு போதும் என்னைக் குறைத்து மதிப்பிட மாட்டேன். (முற்றும்)

-ஷிவேந்த்ரா

# மக்களின் தேவைகளை நிறைவேற்றும் நிறுவனங்களின் சேவை மகத்தானது

## வலி.கிழக்குப் பிரதேச செயலர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

மக்களின் வாழ்கைத்தரத்தை முன்னெடுக்கவும், உயர்த்தவும் சேவை புரியும் நிறுவனங்களை மக்கள் ஒருபோதும் மறந்து விடக் கூடாது என வலி கிழக்கு பிரதேச செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

அச்செழு தேவிபுரம் ஒளிநிலா சனசமூக நிலையத்தினூடான சமூகமுன்னெடுத்தல் குழுவின் முதலாம் ஆண்டு நிறைவு விழா குழுவின் தலைவர் செல்வி யெ. தர்சிகா தலைமையில் நடை பெற்றது. இதில் பிரதம விருந்தினராக நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே பிரதீபன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்: வறுமைக்கோட்டுக்குள் வசிக்கும் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதற்காக இப்படியான கிராமங்களை கெயர் நிறுவனம் தெரிவு செய்திருப்பது மிகவும் வரவேற்கத்தக்கது.

**வறுமைக்கோட்டுக்[...] வசிக்கும் மக்களின் வாழ்வ[...] உயர்த்துவதற்கா[...] இப்படியான கிராமங்களை [...] கயர் நிறுவனம் தெரிவு செய்திருப்ப[...]ும் வரவேற்கத்தக்கது.**

எதிர்கால சமூக முன்னேற்றத்துக்கு லிப்ற் திட்டம் 2 இனை இங்கு நடைமுறைப்படுத்துவது சரியான தெரிவே ஆகும்.

இந்தக் குழுவினால் முன்வைக்கப்பட்டுள்ள மிக நீண்டகாலப் பிரச்சினையான சட்டபூர்வமான காணி அனுமதிப் பத்திரத்தை பெறுவதற்கான நடவடிக்கையை மிக விரைவில் எடுப்பேன் என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தினராக ''கெயர்'' நிறுவனத்தின் பிரதித் திட்டப் பணிப்பாளர் திருமதி ஜோய்றோஸ் ஞானேஸ்வரன், கௌரவ விருந்தினர்களாக அந்தப் பிரதேச கிராம சேவையாளர், சமுர்த்தி அலுவலர் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் மற்றும் விளையாட்டுப் போட்டிகள், கலை நிகழ்வுகள் ஆகியவற்றில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்களும் வழங்கப்பட்டன.

(எ-288)

## நிர்வாக சபைத் தெரிவு

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்.ஈச்சமோட்டை கலட்டிப் புலம் அருள்மிகு ஸ்ரீ ஞானவைரவர் தேவஸ்தான பரிபாலன சபையின் 52 ஆவது வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாக உறுப்பினர் தெரிவும் இடம்பெற்றது.

நிர்வாக உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தலைவர் சி.சிவராஜேஸ்வரன், உபதலைவர் த.சோமசுந்தரம், செயலாளர் து. தனபாலசிங்கம், உபசெயலாளர் திருமதி இ.சூரியகுமார், பொருளாளர் கு.சுந்தரலிங்கம், நிர்வாக சபை உறுப்பினர்களான திருமதி த.இராசமணி, சி.சிவநாதன், தி.சத்தியகுமார், க.லோகேந்திரா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் போஷகர்களாக இ.பரராஜசிங்கம், து.சையோகநாதன், கணக்காய்வாளர்களாக ச.லோகசிவம், சு.சிவலோகநாதன். (எ)



*அச்செழு தேவிபுரம் ஒளிநிலா சனசமூக நிலையத்தினூடான சமூகமுன்னெடுத்தல் குழுவின் முதாலாம் ஆண்டு நிறைவு விழாவில்* (எ-288)

# திறமைமிக்க யுவதிகளால் சமூகம் உயர வேண்டும்

## நல்லூர் பிரதேச உதவித் திட்டப் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மார்ச் 21

செயற்றிறமை மிக்கவர்களாக உருவாகும் யுவதிகளால் யாழ்ப்பாண சமூகம் உயர வேண்டும் என நல்லூர் பிரதேச உதவித் திட்டப் பணிப்பாளர் இ. சுவேந்திரநாதன் தெரிவித்தார்.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவு மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் அரியாலை தெற்கு மகளிர் அபிவிருத்தி சங்கத்தின் மனைப் பொருள் கண்காட்சி கடந்த வெள்ளிக்கிழமை அரியாலை மத்தி, தெற்கு மகளிர் அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பா. மாலினி தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சுரேந்திரநாதன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தெரிவிக்கையில்:

தரமான சிறந்த பொருள்களை உற்பத்தி செய்வதன் மூலம் யாழ் மாவட்டம் பொருளாதார வளர்ச்சியில் முன்னேறமுடியும். தென் பகுதி சந்தையுடன் போட்டிபோட முடியுமா என்று ஒரு கேள்வி எழுகின்றது. எமது பிரதேசத்தின் மூலப் பொருள்களில் இருந்து தென் பகுதி மற்றும் வெளிநாடுகளைச் சேர்ந்தவர்கள் முண்டியடித்து வாங்கக் கூடியதான பொருள்களை உற்பத்தி செய்யும் போது தான் அது சாத்தியப்படும்.

**மாதர் அமைப்புக்கள் பெண்களுக்கு சிறந்த சிறுதொழில் பயிற்சிகளை வழங்கி வருகின்றது. உங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சிறந்ததாகவும் தரமானதாகவும் இருக்க வேண்டும்.**

இந்தக் கண்காட்சியில் சிறிய அளவு பொருள்களே காட்சிப்படுத்தப்பட்டுள்ளபோதும் அவற்றின் தரம் மிகவும் உயர்ந்து காணப்படுகின்றது. எல்லோருமே வேலை பெறுவதென்பது கடினமான விடயம். எமது வளங்களைப் பயன்படுத்தி இது போன்ற தரமான உற்பத்திகளை மேற்கொள்வதன் மூலம் சுயதொழில் முயற்சிகளில் நிறைந்த வருமானத்தைப் பெறக் கூடியதாக இருக்கும் .

அரியாலைப் பிரதேசத்தின் வளர்ச்சிக்காகப் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்தப் பகுதியின் மாதர் அமைப்புக்கள் பெண்களுக்கு சிறந்த சிறுதொழில் பயிற்சிகளை வழங்கிவருகின்றன. உங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள் சிறந்ததாகவும் தரமானதாகவும் உள்ளதால் மக்கள் அதனை விரும்பி வாங்குவார்கள். விரும்பிய தொழில்களை செய்யக் கூடியதான குடும்ப பொருளாதார அலகுகள் உருவாக்கப்பட்டுள்ளன. தொழில் ஆற்றல், அறிவு, ஆர்வம் என்பன இருந்தால் சமூகத்தில் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து முன்னேற முடியும்.

தற்போது காணப்படும் சமூகச் சிக்கல்களுக்கு இடம் இருக்காது. பெண்கள் கூடிஉழைக்கும் வகையில் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்- என்றார். (எ-7)

உதயன் தொடர்புகளுக்கு

தலைமையகம்:
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி:021-222 9933,
222 9944, 5679933, 5679944
விளம்பரம்:021-5671111
விநியோகம்: 021-5677222
தொலைநகல்
செய்தி: 021-5678844,
விளம்பரம்: 021-2229731

மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

வன்னிப் பணிமனை:
ஏ-9 வீதி, கரடிப்போக்கு,
கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
நெல்லியடிக் கிளை:
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி : 021-2262789,
021 226 2395
சாவகச்சேரிக் கிளை:
நவீன சந்தை மேல்மாடி,
சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விளம்பர முகவர்கள்: 'சுதா பொன்ஸ்' -மாலு சந்தி, அல்வாய் : 021226 3206, 'நெல்லியடி மொடேன் ஸ்ரோர்ஸ்' – பஸ் நிலையம், நெல்லியடி : 021 490 1519, 'மீசாலை கஜானன்' – கண்டி வீதி, மீசாலை தெற்கு : 021 227 0399, 'மன்னார் சிவசாந்தி' – தாழ்வுபாடு வீதி, மன்னார் : 0752824478, 'கொடிகாமம் அருள்நாயகி' – பஸ் நிலையம், கொடிகாமம் : 0774937585, 'மல்லாவி புவனேஸ்வரி புத்தகசாலை' – மத்திய சந்தையடி, மல்லாவி : 0778175116, 'கோபி எலைக்சிற்றி' – முல்லைத்தீவு நகர் : 0779598917, 'அன்பரசன்' – சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான் : 0775035571, 'சுஹா ரவல்ஸ்' – 98, பிரதான வீதி, மன்னார் : 023 222 3311

## ஆதரவில் உள்ள ஆபத்து

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 19ஆவது கூட்டத்தொடரில், இலங்கை மீது கொண்டுவரப்பட்டுள்ள தீர்மானத்தை ஆதரிக்கும் தமது நிலைப்பாட்டை இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் அறிவித்துள்ளார். புதுடில்லியின் இந்த நிலைப்பாட்டுக்கு தமிழர்களிடம் இருந்து பெரும் வரவேற்பும் ஆரவாரமும் கிடைத்துள்ளன.

மிக நீண்ட காலமாக இந்தியா ஈழத் தமிழர்களுக்குத் துரோகமும் தமிழகத் தமிழர்கள் பால் புறக்கணிப்பும் கொண்டே இந்திய அரசு செயற்படுகிறது என்ற மனத்தாங்கல் இருந்து வந்த நிலையில் இந்த அறிவிப்பு தமிழர்களுக்குத் தேவாமிர்தமானதில் ஆச்சரியம் ஏதுமில்லை.

ஈழத் தமிழர் பிரச்சினையில் இந்திரா காந்தி நேரடியாகத் தலையிட்டு, வடமராட்சியில் வானில் இருந்து உணவுபோட்டது முதல், ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்தில் இந்தியாவுக்கும் தமிழருக்கும் இடையில் ஏற்பட்ட பாசப் பிணைப்பு இன்னும் முடிந்ததாக இல்லை.

தர்க்க ரீதியில், இந்தியா தன் நலன் சார்ந்து மட்டுமே செயற்படும் என்ற உண்மை தெரிந்தபோதும் டில்லி தம்மை ஆதரிக்கிறது என்பதான மாயையே தமக்கான மிகப்பெரிய மனோபலம் என ஈழத் தமிழர்கள் கருதுகிறார்கள். அதன் வெளிப்பாடே புதுடில்லியின் நிலைப்பாடு குறித்த அதன் அகமகிழ்வு. ஆனால் புதுடில்லியின் நிலைப்பாடு ஈழத் தமிழர்களுக்குச் சார்பானதோ, தமிழகத் தமிழர்களின் உணர்வுகளைப் புரிந்து கொண்டதோ அல்ல.

தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா நேற்றுமுன்தினம் விடுத்த அறிக்கை இந்தியாவின் உண்மை முகத்தை வெளிப்படுத்தும். ''இலங்கையில் நடந்த மனித உரிமை மீறல்கள் பற்றி எதுவுமே குறிப்பிடப்படவில்லை. அவற்றுக்காக இலங்கை அரசை இந்தியா கண்டிக்கவும் இல்லை'' என்று தனது அறிக்கையில் முதல்வர் சுட்டிக்காட்டி உள்ளார்.

இந்தியாவின் நிலைப்பாட்டைத் தீர்மானிக்கும் உயர் அதிகாரிகளின் எண்ணப்பாங்கு தெளிவானது. அது ஈழத் தமிழர்களுக்கு ஆதரவானதல்ல. இலங்கையில் சீனாவின் செல்வாக்கைக் குறைத்தல், இந்தியாவின் வர்த்தக மற்றும் பிராந்திய நலன்களைக் கவனித்தல் ஆகிய தேவைகளே கொழும்பு குறித்த இந்தியக் கொள்கையின் அடிநாதங்கள்.

இந்தக் கொள்கையின் அடிப்படையில் இந்தியா ஒருபோதும் இலங்கை அரசை எதிர்க்கவோ தண்டிக்கவோ முயலாது. தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் அறிக்கை அதனைத்தான் மறைமுகமாகத் தெரிவிக்கிறது. ஜெனிவாவில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தீர்மான வரைவு ஏற்கனவே ''நீர்த்துப்போன ஒன்று'' என்று விமர்சனங்கள் கிளம்பியுள்ள நிலையில், தீர்மானத்தின் கடைசி வரைவு கையில் கிடைத்த பின்னரே இந்தியாவின் இறுதி முடிவு தெரிய வரும் என்று வேறு மன்மோகன் தெரிவித்திருக்கிறார்.

ஐ.நாவின் முன்னுள்ள ''நீர்த்துப்போன'' தீர்மானமும்கூட இந்தியாவின் மேலதிக அழுத்தங்களால் மேலும் வலுவலத்துப் போவதற்கான சாத்தியங்களைப் புறந்தள்ள முடியாது என்பதை மன்மோகனின் கூற்று உணர்த்துகிறது. அமெரிக்கா தயாரித்த உண்மையான வரைவிலிருந்து சமர்ப்பிக்கப்பட்ட வரைவு நீர்த்துப்போனதற்கு இந்தியாவே காரணம். இப்போது தானும் ஆதரிக்க வேண்டிய நிலையில் இருக்கும் வரைவிலும் ஒன்றுமே இல்லாமல் செய்வதற்கும் இந்தியா தயங்காது.

இலங்கையில் தனக்கிருக்கும் வர்த்தக, பிராந்திய, படை நலன்களை இழக்க இந்தியா ஒருபோதும் விரும்பாது என்பதே அதற்குக் காரணம்.

# இத்தால் சகல தேவர்களும் அறிய...

■ செந்தூரி

எந்தவொரு மதக்கலவரமும் நாத்திகனால் உருவாக்கப்படுவதில்லை''- பல அவதாரங்களுக்குரிய உலக சினிமாக்காரரான *கமல்ஹாசன்* அன்பே சிவம் படத்தில் எழுதி, இயக்கி, பேசி, நடித்த வசனம் இது.

கடந்த வாரம் திருப்பதி வெங்கடாஜலபதி கோயிலுக்குச் சென்று தனது அடுத்த படத்தின் விஸ்வரூப வெற்றிக்காக வேண்டுதல் செலுத்தி வந்திருக்கிறார் *ஸ்ருதிஹாசன்.*

தீவிர பகுத்தறிவாளரான ''நடிகர்''- அவர் மகளுக்கிடையிலான தேவைகளை மையப்படுத்திய நம்பிக்கைகளின் வெளிப்பாடுகளாக மட்டுமே மேற்படி இரு சம்பவங்களையும் நாம் பார்க்க முடியும். உண்மையா? பொய்யா? இருக்கின்றதா? இல்லையா? கற்சிலையா? கருணையா? என்கின்ற வாதங்களின் புறவெளியில் நின்று பார்ப்போமாயின், ''கடவுள்'' என்பது கண்டுபிடிக்கும் ''தேவையோடு சேர்ந்த பயம்'' என்றே விளங்க முடியும்.

பெயர் மறந்துபோன, தென்னிந்தியக் கவிஞனொருவனின் சொல்லோவியம் ஒன்றை வார இதழ் ஒன்றின் 'சொல்வனம்' பகுதியில் சில மாதங்களுக்கு முன் பார்க்க நேர்ந்ததன் திரிவு!

*வட்டமொன்றை வரைந்து கொடுத்து,*
*அருகே வேறுருவங்களால் இணைத்து*
*ஆக்கஞ் செய்வது போட்டி!*

*நீளக் கோடொன்றால் தொடுத்து*
*''அம்மாவின் அகப்பை'' என்றாள் பார்கவி*

*மேலே இலை இரண்டாய் இணைத்து*
*''எங்கள் தோட்டத்துத் தோடை'' என்றாள் ஸ்ரீ வித்யா*

*ஒற்றைக் கம்பை மேலிருந்து கீழ் துளைத்து,*
*''திருவிழாவில் வாங்கிய பம்பரம்'' செய்தாள் பவித்ரா*

*நடுவிலேயே இன்னொரு குட்டிவட்டமிட்டு*
*''கார்ட்டூன் பார்க்கும் இறுவட்டு'' இதென்றாள் நிரூஷா!*

*அப்படியே வைத்திருந்து, பாடவேளை முடிகையில்*
*நேற்றைய எம்வீட்டு ''நிலா'' எனச் சிரித்தாள் எமில்டா*

பல மக்களின் பல்வேறு விதமான நம்பிக்கைகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள வடிவங்கள் தான் மதங்களும், தெய்வங்களும் எனும் மகாதத்துவத்தை, எளிய வார்த்தைகளால் போட்டுடைத்துள்ளன இந்தக் குழந்தை எண்ணங்கள்.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், கடவுள் இல்லை என்கின்ற கோஷங்களோடு வீதியில் இறங்கிய போது அவரது நம்பிக்கையின் நேர்மை, செருப்படி தாங்கும் அளவுக்கு இறுகியிருந்தது. ''ஒற்றைச் செருப்பை எறிகிறானே! இரண்டையும் எறிந்தால், வேகக் கொதிக்கும் வெயிலில் வீதிகளில் உதவியிருக்குமே!'' என்று கிண்டலடித்து நகைக்கும் அளவுக்கு அவரது கொள்கைப் பற்றுறுதி. இன்றைக்கு ஈரோடு ராமசாமியின் வாரிசுகளாக தங்களை வரித்துக்கொண்டவர்களின் பகுத்தறிவு - தஞ்சைப் பெருவுடையார் கோயிலுக்குள் பின்வாசலால் உள்நுழையும் அளவுக்கு சுருங்கியிருக்கின்றது.

பெரும்பதவி தாங்கியிருக்கும் எவராயினும் தஞ்சைக்கோயிலின் முன்வாசலால் வந்து புகுந்தால், பதவியிறக்கம் நிச்சயம் என்கின்ற நம்பிக்கை, கடந்த கால சம்பவத் திரட்டுக்களால் எழுதாத விதி! ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழாவுக்கு போனவர், ''இன்றைக்கு தமிழகத்தின் எதிர்க்கட்சித் தலைவராகக்கூட இல்லை'' என்கின்றது ஆன்மிகம்!!

அரச மரத்தின் கீழ் அமரும் வரை சைவனாக, வாழ்ந்த கௌதம புத்தரின் சமகால பின்பற்றுநர்களின், தற்காலப் பிறமதங்களின் மீதான நம்பிக்கையும், அதீத ஆர்வமும்கூட குரூர உள்நோக்கத்தின் இழி செயலாகவே பார்க்கப்படுகின்றது. ''புலாலுண்ணவும்'', ''மதுவருந்திக் களிக்கவும்'', ''ஒன்றுக்கு மேல் பெண் கொள்ளவும்'' தெய்வ மறுப்பை சாட்டாகக் கொண்டுழல்வோர் என்று அவர்களை இவர்களும், ''பணம் புரட்டவும்'', ''பக்தியின் பெயரில் பாழும் உடலிச்சை கூட்டவும்'', ''அறிவிலிகளின் பயபீதியை ஆண்டவன் என மிரட்டவும்'' மகாசக்தியை சுண்ணாம்பறைகளுக்குள் முடக்குவோர் என்று இவர்களை அவர்களும் தூற்றித் துதிக்கும் வரலாறு நீண்ட நெடும் பின்னணிக்குரியது.

நேற்று வரை இதே தெய்வங்களின் இருப்பிடங்களில தஞ்சம் கோரி தவித்திருந்த அப்பாவிகளை, அடி மாடுகளுக்கு நிகராய் நிறுத்திக் கொன்ற அதே கரங்கள், பழம், பாக்கு, பூவோடு, பட்டாடையுடுத்தி பாவ விமோசனம் கேட்டு கைகூப்புவதை ''அருசை''யை தவிர்ந்த வேறெந்த உணர்வோடும் அணுகவோ, பார்க்கவோ முடியவில்லை!

''நாத்திக'', ''ஆத்திக'' வகுப்புக்களுக்குள் இலகுவில் அடக்கி விடமுடியாத இவ்வகையிலான ''சந்தர்ப்பவாத நம்பிக்கையாளர்களின்'' பார்வை, ஆண்டவனுக்கும் அடித்தட்டு மக்களுக்கும் இணைப்பைக் கொடுக்கின்ற- ''அர்ச்சக சமூகத்திடம்'' திரும்பியிருப்பது, அவ்வளவு ஆரோக்கியமான குறிகாட்டியல்லவே!

போர்க் காலங்களில், அரச மிருகங்கள் ஆயுதங்களோடு எம்மினத்தின் மானிட வயல்களில் சகட்டு மேனிக்கு மேய்ந்து திரிந்த காலங்களில், ''உடல் மொழிகளால்'' வித்தியாசப்படக் கூடிய அதே சமூகத்தினர்களையும், கொடுமைகளுக்குள் சமவாய்ப்புடன் தள்ளிவிட்டு வேடிக்கை பார்த்த ஆட்சியாளர்கள்தான், இன்றைக்கு தமக்கான மன்னிப்பை தமிழனின் தெய்வங்களிடம் பிச்சை வாங்கித் தரும்படி கேட்டு ஆலயப்படிகளில் சிபாரிசுக்காக அலைகின்றனர்.

வருணாச்சிரமத்தின் படியான நால்வகைப் பிரிவுகளில், ஆண்டவனுக்கு நிகரான அடுத்த தகுதியுடன், குடிகளின் குறைகளையும், வேண்டுகோள்களையும் ''தம்மையும் மீறிய சக்தியிடம்'' சமர்ப்பிக்கும் பணிக்குரிய மேன்மையில் அடையாளப்படுத்தப்படுபவர்கள் அவர்கள்.

*கோணேஸ்வரி* வல்லுறவின் பின் கொல்லப்பட்ட கொடூர விதமும், இன்னும் பிணைகூடக் கிடைக்காமல் தம்பதியினராக சிறையில் வாடும் பூசகர்களும் மட்டுமல்லாது பலபல உதாரணங்கள் ''ஆறுகடக்க மட்டுமே அண்ணன் தம்பி'' என்கின்ற சொல்லடையையே நினைவுறுத்துகின்றன.

மென்மையான குணமும், அடையாளப்படுத்தக்கூடிய உடல் மொழிகளும், தன்மையான தோற்றப் பொலிவுகளும் பொதுப் பண்புகளாக கொண்டவர்களாக வகைப்படுத்துபவர்கள், சுலபத்தில் சோலி சுரட்டுகளுக்கு போகாதவர்கள் என்பதோடு எப்போதும் தர்மத்துக்கு அஞ்சுபவர்கள் என்றும் கோடிட்டுக் காட்டப்படுவதுண்டு. ஆனால் மேல்வகையாகக் கூறிய சுபாவங்கள் மூலம் அநீதிக்கு துணை போவதை நியாயப்படுத்த முடியும் என்பது எவராலும் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது.

திரையுலகில் நடிகர் *சோ,* இயக்குநர் *ஷங்கர்,* எழுத்தாளர் *சுஜாதா* போன்றவர்களால் உருவாக்கப்பட்ட கதாபாத்திரங்களைப்போல வெளியே ''பயந்து நடுங்கும் அம்மான்சிகளாகவும்'', உள்ளே ''அக்கிரமங்களை கண்டாலே பொறுக்க முடியாமல் பொங்கிவிடும் தர்மக் காவலர்களாகவும்'' இவர்கள் இருக்க வேண்டுமென எதிர்ப்பார்ப்பதும் சற்று மிகையே!

''கைல வாசகரிடமும், கந்தப்பிள்ளையுடனும் கதைக்கும் பாக்கியம் பெற்றவர்களையும்'', ''பரமபிதாவுடனும் பத்திநாதருடனும் தொடர்பிலிருக்கும் சந்தர்ப்பம் கொண்டவர்களையும்'', ''எல்லாம்வல்ல அல்லாவையும் சுபைர் ரஹ்மானையும் இணைப்புச் செய்பவர்களையும்'' கூப்பிட்ட குரல்களுக்கு போய் மேடைகளில் அமர்ந்துவிட்டு எழும்பி வரும் சூழ்நிலைக் கைதிகளாகவே, யாமறிவோம்!

தங்களது குடும்பங்களையும், இனத்தின் அங்கங்களாகக் கருதி அழித்த பொது எதிரி, வெற்றுக் கைகளோடு வேதம் பேசி வருகையில், மன்னித்து ஆண்டவன் சந்நிதிகளில் அருள்பெற்றுக் கொடுக்கும் அனுஷ்டானங்களை இவர்கள் முன்னெடுப்பதை ஆள்வோரின் அடக்குமுறைக்கு அஞ்சிய வெற்றுச் சடங்குகளாக மட்டுமே எம்மக்கள் கணிப்பர் என்றில்லை.

உண்மையையும், நேர்மையையும் இரும்புக் கதவுகளால் மூச்சிறுக்கிக் கொன்றுவிட்டு, சந்தனத் திலகத்தோடு சாஷ்டாங்கமாக விழுந்து, எழுந்தவுடன் சகலதும் மறக்கப்படும் என மந்திராலோசனை செய்யும் குருத்துவத்தையும், பாவிகளிடமும் பட்டமேற்கும் இரட்டை வேடத்தையும் இலகுவாக கருத்தில் எடுத்து, ''போகட்டும் விடு'' என்று புறந்தள்ள எம்மினம் ஒரு பொழுதும் தயாராக இல்லை. முகம் தெரியாமல், விசுவாச மூடையில் பசியாற எண்ணுகின்ற யாரோ ஓரிரு தற்குறிகளின் செயலால், மாண்புக்குரிய முழுச்சமூகமும் அவப்பெயர் சுமக்கும் அவலம், கொடிதினும் கொடிது!

''வீணானதோ'' என எண்ணி எண்ணி மருகுகின்ற லட்சோபலட்சம் சக உயிர்களுக்காய் ஒரு வாரகாலமாய் மணியொலிக்க தடைபோட்டு, ஆலய வீதிகளில் காவலுக்கிருந்தவனுக்காய், மேடைபோட்டு சத்தியாக்கிரகிக்கும் அளவுக்கு அத்துணை பெரிதோ தங்களின் பசி?

''இங்கே தமிழில் அர்ச்சனை செய்யப்படும்'', ''சகல சமூகத்தவர்களும் அர்ச்சகர் ஆகலாம்'', ''இந்த ஆலயத்தில் சமவழித் தரிசனம் மட்டுமே நடைமுறையில் உள்ளது'' போன்ற தமிழ்நாட்டு அறநிலையத்துறை அமைச்சகத்தின் அறிவிப்புப் பலகைகளுக்கான தேவையை ஏற்படுத்தும் சமூக ஆன்மிகப் புரட்சியொன்று வடகீழ் இலங்கையிலும் ஏற்படாமலிருப்பது இனி உங்களின் கைகளிலேயே!

# கிழக்கில் முஸ்லிம் முதல்வர் பதவி சாத்தியமா?

ஊர்க்குருவி

கிழக்கு மாகாண முதலமைச்சராக முஸ்லிம் ஒருவர் வரவேண்டும் என்ற நோக்கத்துடனான செயற்பாடுகள் அண்மைக் காலமாக வலுத்து வருகின்றன. முஸ்லிம் அரசியல் கட்சிகளுக்குள் இது தொடர்பான வாதங்களும் இராஜதந்திர நடவடிக்கைகளும் வேகம் பெற்றுள்ளன.

கிழக்கு முதல்வராக வருபவருக்கு சுவர்க்கம் என்று முஸ்லிம் அரசியல்வாதிகள் நினைத்துக் கொண்டிருக்கிறார்களோ என்னவோ அவ்வளவு ஓட்டம் ஓடுகிறார்கள் அப்பதவிக்கு.

சமூகத்தை அடமானம் வைத்தாவது அப்பதவியை அடைந்தே தீரவேண்டும் என்ற நிலைக்கு இப்போது நிலைமை வந்துவிட்டதுதான் மிகப் பரிதாபகரமானது.

இந்த நிலை குறித்து, உலகின் முக்கிய நாடொன்றின் இராஜதந்திர மட்ட உயர் அதிகாரி ஒருவர் சில தகவல்களை எமக்கு கூறினார். அந்தத் தகவல்கள் எம்மை மெய் சிலிர்க்க வைத்தன. முஸ்லிம் முதலமைச்சர் பதவிக்கு எதைச் செய்யவும் முஸ்லிம் அரசியல்வாதிகள் துணிந்து விட்ட நிலையை அவர் வழங்கிய தகவல்கள் மூலம் அறிந்து கொள்ள முடிந்தது.

மிகவும் இரகசியமாக நடத்தப்பட்ட அப்பேச்சின் தகவல்களை பரகசியமாக்கி, அது குறித்து அலசுவதே இந்தக் கட்டுரையின் ஒரே மூச்சு. முஸ்லிம் முதலமைச்சர் பதவிக்காக வெளிநாட்டு இராஜதந்திர மட்டம் வரை ஒருவர் சென்று இரகசிய பேச்சு நடத்தியிருக்கிறார்.

கிழக்கு முதலமைச்சராக முஸ்லிம் ஒருவர் பதவிக்கு வந்தாலும் இப்போது முதலமைச்சராக இருப்பவர் எப்படி அதிகாரம் கேட்டு அரசுடன் முரண்டு பிடிக்கிறாரோ அதைத்தான் அவரும் செய்ய வேண்டும்.

முஸ்லிம் ஒருவர் முதலமைச்சராக வந்தால் முஸ்லிம் சமூகத்துக்கு நிறையவே செய்யலாம் என்று முஸ்லிம்கள் நினைத்தால் அது வெறும் பகற்கனவு. முஸ்லிம் முதலமைச்சருக்கு ஓர் அதிகாரம்; தமிழ் முதலமைச்சருக்கு வேறொரு அதிகாரம் என்றில்லை. அரசுக்கும், ஜனாதிபதிக்கும் இவ்விருவரும் ஒன்றுதான்.

முஸ்லிம் முதலமைச்சர் எமது கட்சிக்குத்தான் என்று போர்க்கொடி தூக்கியுள்ள மு.காவின் உயர் மட்ட உறுப்பினர் ஒருவர்தான் வெளிநாட்டு ராஜதந்திரிகள் வரை சென்று முதலமைச்சர் பதவிக்கு ஆதரவு கேட்டிருப்பவர்.

கொழும்பு, காலி வீதியிலமைந்துள்ள அந்த இராஜதந்திரியின் அலுவலகத்தில் சந்திப்பு நடைபெற்றுள்ளது. அப்போது குறித்த இராஜதந்திரியின் நாட்டிலிருந்து வருகை தந்திருந்த அதியுயர் பிரமுகர் ஒருவரும் உடனிருந்திருக்கிறார். இவரின் அழைப்பின் பேரிலேயே சந்திப்பு நடத்திருக்கிறது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் - மு.காவும் கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் ஒன்றிணைந்து போட்டியிடுவது குறித்து ஆராய்ந்து வந்த தன் அடிப்படையிலேயே இச்சந்திப்புக்கான அழைப்பு மு.கா. உறுப்பினருக்கு விடுக்கப்பட்டிருக்கிறது. இதன்போது இவர் இரு பிரதான நிபந்தனைகளை முன்வைத்திருக்கின்றார்.

**நிபந்தனை 1** - கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு போட்டியிடக்கூடாது. தனித்து போட்டியிடும் மு.காவை அக்கட்சி ஆதரிக்க வேண்டும்.

**நிபந்தனை 2** - வடமாகாண சபைத் தேர்தலில் மு.கா. போட்டியிடமாட்டாது. ஆனால், வடக்கு முஸ்லிம்களின் வாக்குகளை கூட்டமைப்புக்கு முழுமையாக பெற்றுக் கொடுக்கும்.

முதலாவது நிபந்தனையின்படி மு.கா. கிழக்கில் தனித்து போட்டியிடும்போது, அதன் மரச் சின்னத்தில் கூட்டமைப்பு தனது ஓரிரு வேட்பாளர்களை நிறுத்துவதுடன் ஒட்டுமொத்த தமிழ் வாக்குகளையும் மரச் சின்னத்துக்கு பெற்றுக் கொடுக்க வேண்டும். கிழக்கின் முதலமைச்சர் வேட்பாளராக குறித்த அந்த உறுப்பினரே இருப்பார்.

இதற்குக் கைமாறாக இரண்டாவது நிபந்தனைப்படி மு.கா. வடக்கில் போட்டியிடாது. மட்டுமன்றி முஸ்லிம் வேட்பாளர்களையும் நிறுத்தாது. தேவைப்படின் வன்னியிலும், யாழ். மாவட்டத்திலும் தலா ஒருவரை வேட்பாளராக நிறுத்துதல்.

இந்த யோசனை வடக்கு, கிழக்கு முஸ்லிம்களைப் பிரிக்கும் இத்தகைய செயல்களால் பின்னால் ஏற்படப்போகும் விளைவுகள் என்ன என்பதை இந்த உறுப்பினர் அறியாமலுமில்லை. இருந்தாலும் முதலமைச்சர் கனவு அவரை இப்படி எல்லாம் இயங்க வைக்கிறது.

வடக்கில் மு.காவுக்கு செல்வாக்கில்லை; அ.இ.மு.கா. தலைவர் அமைச்சர் றிஷாட் பதியுதீனுக்குத்தான் அங்கு செல்வாக்குள்ளது என்பதற்காக ஒரே சமூகத்தை அந்நியர்களுக்கு காட்டிக் கொடுக்க இவர் முயற்சிக்கிறார் என்பது வடக்கு முஸ்லிம்களின் குற்றச்சாட்டு. எனினும் இந்த கொடூர நிபந்தனையை அந்த உயர் இராஜதந்திரியின் அரசு ஏற்றுக் கொண்டதாகக் கூறப்படுகிறது.

கூட்டமைப்பின் ஆதரவுடன் கிழக்கில் மு.கா. தனித்து போட்டியிட்டாலும்கூட அங்கு செல்வாக்குடன் திகழும் அ.இ.ம.கா, தே.கா. கட்சிகளும் சு.க. சார்பான அலிஸாஹிர் மௌலானா, நௌஷாத் ஆகியோரும் அதனை இலகுவில் வெற்றி பெற விட்டுவிடுவார்களா என்ற கேள்வியும் எழுப்பப்படுகிறது.

இவையனைத்துக்கும் மேலாக இன்னுமொரு விடயம். தமிழ் வேட்பாளர்களுக்கு முஸ்லிம்கள் வாக்களிப்பார்களா? அல்லது முஸ்லிம் வேட்பாளருக்குத்தான் தமிழர்கள் வாக்களிப்பரா? 1960 கால கட்டத்தை இன்றைய காலகட்டத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மை.

வடக்கில் முஸ்லிம் காங்கிரஸுக்குச் செல்வாக்கு இல்லாத நிலையில் கூட்டமைப்புக்கு எந்த அடிப்படையில் முஸ்லிம்களின் வாக்குகளைப் பெற்றுக் கொடுக்கப் போகின்றனர்?

# நம்ம தலைவர்மார் அப்புடி இல்லங்கண்ணே...

மலையக பாரதி

உலகம் முழுவதும் ஏற்பட்டு வருகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து உலகத்தில் சமாதானத்தையும், அமைதியையும் ஏற்படுத்துவதற்காக உலக நாடுகள் ஆங்காங்கே மாநாடுகளை ஏற்பாடு செய்து விவாதங்களில் ஈடுபட்டு வருகின்றன. அதேபோல மலையகத்தில் உள்ளவர்களும் தங்களது பிரச்சினைகள் தொடர்பில் விவாதித்து வருகின்றனர்.

இந்த மாநாடு உலகப் பிரதிநிதிகள் பங்குகொள்வது போல பெரிய அரங்கினுள் அறிஞர்கள் பலர்கூடி வட்ட மேசையில் அமர்ந்து கொண்டு ஒலிவாங்கியைக் கையிலெடுத்து உரையாற்றும் மாநாடு அல்ல. மலையகத்தின் ஓர் ஊரின் ஆலமரத்தடியில் உள்ள பண்டா முதலாளியின் கடைதான் இவர்களின் அரங்கு. கடையின் வெளியே அடித்து வைக்கப்பட்டுள்ள பலகைபெஞ்சுதான்....

**கருப்பையா:-** (பீடி ஒன்ன பத்தவச்சி வாயில வச்சபடியே..) பெண்கள் தினம் இந்த மாசொம் 8ஆம் தேதி ஒலகம் பூராவும் கொண்டாடப்பட்டுச்சி. எல்லாரும் பெண்களுக்காக கொரல் குடுக்கிறாங்க நம்மலும் மலையகப் பெண்களின் உரிமைகளுக்காக கொரல் குடுக்க வேணும் இல்லையா?

**பழனியாண்டி:-** பெண்கள் தினக் கொண்டாட்டம் தான் நம் ஹட்டனலயும் ''எழுச்சியூட்டும் எதிர்காலத்திற்காக இணையும் பெண்கள்''னு அமைச்சர் ஆறுமுகன் தொண்டமான் தலைமையில நடந்திச்சே.

**கந்தசாமி:-** ஆமாப்பா பெண்கள் தினத்த நல்லா தான் நடத்துனாங்க. நம்மமலையக பெண்கள் யாரும் இதுல கலந்துக்கலையேன்றதுதான் மனக்கவலையா இருக்கு .

**பழனியாண்டி:-** என்னா இப்புடி. சொல்லிட்டீங்க..... மலையகத்துல உள்ள பெண்களையும் சேத்துதானே பெண்கள் தினம் நடத்தினாங்க..... சும்மா இல்லாததையும், பொல்லாததையும் சொல்லி எங்க தலைவர அசிங்கப்படுத்தாதிங்க கந்தசாமி. அப்பறொ நா என்னா பண்ணுவேணு எனக்கே தெரியாது. (ஒரு பீடிய எடுத்து பத்துராரு)

**கந்தசாமி :-** தலைவர நா ஒன்னும் அசிங்கப்படுத்தல, அவர் செஞ்சததான் சொல்றேன். எனக்கென்னா அவர அசிங்கப்படுத்த ஆசையா? மலையகத்தில பெண்கள் தினத்த நடத்துறதுக்கு பொலன்னறுவையிலயிருந்து 500 பெண்கள கூட்டி வந்துதானே நடத்துனாங்க.....

**கருப்பையா:-** (வாயில இருந்த வெத்தல எச்ச பொலிச்சினு துப்பிட்டு...) அரசியல்ல இதெல்லாம் சகஜமப்பா!

**பழனியாண்டி:-** அட என்னாப்பா பத்தவச்ச பீடி கூட இன்னும் முடியல அதுக்குள்ள மனுசன சூடாக்குரியே. கந்தசாமிதான் ஏதோ வெளங்காம பேசுறாருனா நீங்க வேற, ஏன் கோவத்த கெலறாதிங்க. தொண்டமானய்யா எத செஞ்சாலும் நம்ம நல்லதுக்காகத்தான் செய்வாரு...



**கந்தசாமி:-** வெளியூர்ல இருந்து ஆளுகள கூட்டிகிட்டு வந்து அவங்கவுட்டு சுயதொழில் சம்பந்தமா கண்காட்சி நடத்துனாங்களாம்.

**கருப்பையா:-** என்னா நீங்க ரெண்டுபேரும் பேசிக்கிட்டு போறத பாத்தா எனக்கு தலைய சுத்திகிட்டு வருது..

நம்ம மலையகத்து பொம்பலங்கதானே 'காடு மலை யேறி கஷ்டப்பட்டு, அட்ட கடிச்சி, கட்ட இடிச்சி கண்ணீர சிந்தி ஒழச்சி நம்ம நாட்ட காப்பாத்தி வாறாங்க. அப்ப நம்ம ஆளுகளுக்கு முதல்ல செய்ய வேண்டியத செஞ்சிட்டுதானே மத்தவங்களப் பாக்கனும்?

**பழனியாண்டி:-** அவங்களும் நம்மலபத்தியும், நம்ம பெண்கள பத்தியும் தெரிஞ்சுக்க வேணாமா. நாட்ல உள்ள ஒவ்வொரு சமூகத்தப் பத்தி ஒவ்வொருவரும் தெரிஞ்சு வச்சிக்கிறது நல்லது தானே. எல்லாத்தையும் நல்லா வச்சிக்கனும்னு ஐயா நெனக்கிறாரு. அதப்போய் தப்பா நெனக்கிறிங்களே!

''பன மரத்துக்கு கீழ இருந்து பாலக் குடிச்சாலும் கள்ளுனு தான் நெனப்பாங்க'' அந்த கதையா......தா இருக்கு ஓங்க கத.

**கந்தசாமி:-** ஆமா..... நீங்க சொல்றது சரிதான் ஒவ்வொரு சமூகத்தப் பத்தி ஒவ்வொருவரும் தெரிஞ்சு வச்சிக்கிறது நல்லதுதான். முதல்ல நம்ம ''முதுகுல உள்ள ஊத்தய தொடச்சிட்டுதான் அடுத்தவெ முதுகப் பாக்கணும்'' நம்ம சமூகத்துல ஒருமைப்பாட்ட உருவாக்கிட்டு தானே மத்த சமூகத்தோட நம்மல ஒன்னு சேக்கணும்.

நம்ம ஆளுகள மத்த சமூகத்துல உள்ளவங்களோட அந்நியோன்யமா பழகி உறவ வளத்துக்கனும் நெனச்சாரா இல்ல... ''எந்த புத்துகுல எந்த பாம்பு இருக்கும்னு யாருக்கு தெரியும்?''

**பழனியாண்டி:-** ''மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்''ன்னற மாதிரி எந்த விஷயத்தையும் தப்பா பாத்தா அது தப்பாத்தா தெரியும். ஐயா, எத செஞ்சாலும் அதுல கொற கண்டுபுடிக்கிறதுலயே குறியா இருக்கீங்க.

ஐயா, மேல சும்மா பொய் கதங்கல கட்டி விடாதிங்க. ஏங்கிட்ட பேசுற மாதிரி வெளீல போய் வேற யாருக்கிட்டயும் இப்புடி பேசிறாதிங்க. அப்பறொ மூக்கு ஒடப்பட்டு தா...ன் வருவீங்க. சும்மா மனசுல நெனச்சத எல்லாம் சொல்லாம கொஞ்ஜொ யோசிச்சி சொல்லுங்க கந்தசாமி ''அரிசிய கொட்டினா அள்ளலாம் வார்த்தைய கொட்டினா அள்ள முடியுமா...?''

**கருப்பையா:-** மொதலாளி மூனுபேரு..ம் ரொம்ப களச்சி பொயிட்டொ மூனு காட்ட கோப்பி ஊத்தித் தாங்க.

**பழனியாண்டி:-** எனக்கு காட்ட வேணா ஒரு பீடி தாங்க.

**கந்தசாமி:-** எனக்கு ஒரு வாய்க்கு வெத்தல தாங்க.

**கருப்பையா:-** அப்ப எனக்கு மட்டு ஒரு காட்ட கோப்பி தாங்க மொதலாளி. (சின்ன ஒரு இடைவேளையில் வாய்கள் ஓய்வெடுத்து விட்டு மறுபடியும் சூடுபிடிக்கிறது விவாத மேடை..)

**கந்தசாமி:-** மொதலாளி.. இருட்ர மாதி இருக்கு அந்த குப்பி லாம்ப கொஞ்ஜொ பத்தவைங்க..

**பண்டா முதலாளி:-** இங்கயே லாமண்ண முடிஞ்சிருச்சி இன்னக்கி பொழுதோட இன்னொ கொஞ்ச நேரத்துல கடைய மூடிட்டு நடைய கட்ட வேண்டியதான். (மொதலாளி ஒரு போத்த லாமண்ண தாங்களேன்னு ஒருதர் வந்து கேக்குறாரு)

**பண்டா முதலாளி:-** கடையில லாமண்ண இல்லப்பா...... (இன்னக்கி பொழுது இருட்லதானு வந்தவர் வாய்க்குள்ள முனு முனுத்தபடியே போறாரு...)

**கருப்பையா:-** என்னத்த சொல்லி என்னத்த செய்ய எல்லாம் விதி விட்ட படி நடக்குது (....னு **அடுத்தகட்ட பேச்சுக்கு அடிக்கல் நாட்டினார்** )

**கந்தசாமி:-** என்ன கருப்பு ஒரே வெறுப்பா பேசுறீங்க. கொஞ்ஜொ புரியிர மாதிரி சொல்லுங்க.

**கருப்பையா:-** என்னா செய்ய? அடி மேல அடி விழுகிற மாதிரி ஒவ்வொன்னும் நமக்கு பேரிடியா விழுகுது......, இந்த லாமண்ண வெல கொரயிர மாதிரியே தெரியலயே இப்புடியே போனா நம்ம காசு சம்பாரிக்கிறத விட கஷ்டத்தத்தான் அதிகமா சம்பாரிக்கணும் போல.....

**பழனியாண்டி:-** என்னா செய்ய கஷ்டமா தான் இருக்கு. அதப்பத்தி ஒன்னும் கவல படாதிங்க இது நமக்கு கலி காலம்னு நெனச்சிகிட்டு கொஞ்சம் பல்ல கடிச்சிக்கிங்க. இந்த லாமண்ண வெல இன்னும் கொஞ்ச காலத்துக்குதான். லாமண்ண வெலக்கி எதிராகவும், அதுக்கு சரியா மானியம் தர வேணும்னு நம்ம ஐயாமார்க போராடி வாறாங்க. அப்புடி எல்லாம் நம்மல கைவிட்ர மாட்டாங்க.

**கந்தசாமி:-** நீங்க சொலறது சரிதான் பழனி. இவங்க நம்மல கைவிட மாட்டாங்க. அவங்களுக்கு யாரையும் கைவிட்டு பழக்கொமில்ல, கால வாரிதா பழக்கொ.....ம். நம்ம இப்பிடியே நம்பிக்கிட்டு கெடக்க வேண்டியதுதான்.

# விநோத ஆராய்ச்சி

அமெரிக்காவின் கலிபோர்னியாப் பல்கலைக்கழகத்தில் 'லாரி செய்டன்' என்று ஒரு விஞ்ஞானி இருந்தார். அவர் சிறந்ததோர் ஆராய்ச்சியாளர். ஒரு நாள் அவர் எதைப்பற்றி ஆய்வு செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருந்தார். கடைசியில் ஒரு முடிவுக்கு வந்தார்.

அந்த முடிவின் படி, உலகத்தில் பரவலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் தற்கொலையைப் பற்றி ஆராய்ச்சி செய்யலாம் என்று தீர்மானித்தார். அந்த ஆராய்ச்சியை மேற்கொள்வதற்காக என்ன செய்தார் தெரியுமா? அமெரிக்காவில் மிகவும் பிரசித்தி பெற்ற சுற்றுலாப் பார்வையாளர்கள் பலரையும் கவர்ந்த இரண்டு பாலங்களைத் தேர்ந்தேடுத்தார். அமெரிக்காவில் உள்ள சன்பிரான்ஸிக்கோ நகரில் அந்த இரண்டு பிரபல்யமான பாலங்களும் அமைந்திருக்கின்றன. அதில் ஒன்று 'கோல்டன்கேற்' என்கின்ற பாலம். மற்றையது 'பாய்' என்கின்ற பாலம்.

இந்த இரண்டு பாலங்களும் 1930 இல் கட்டிமுடிக்கப்பட்டவை. மேற்குறிப்பிட்ட இந்த இரண்டு பாலங்களில் இருந்தும் குதித்து தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கை அந்தக் காலத்தில் அதிகமாக இருந்தது. அவ்வளவுக்கு தற்கொலை சகஜமாகியிருந்தது.

இந்த ஆராய்ச்சியாளர் குறிப்பிட்ட பாலங்களில் இருந்து குதித்து தற்கொலை செய்பவர்களைப் பற்றிக் கணக்கெடுக்க முடிவு எடுத்தார்.

இரண்டு பாலங்களும் 1930 இல் கட்டப்பட்டவை. இவை இரண்டும் ஒரேஅளவான நீளத்தைக் கொண்டிருந்தன. ஒவ்வொன்றும் 200 அடியாகவும் இருந்தன. அப்படி இருந்தும் இந்த இரண்டு பாலத்திலிருந்தும் குதித்து தற்கொலை செய்து கொள்பவர்களின் எண்ணிக்கையைக் கணக்கெடுத்ததில் பெரும் மாற்றம் காணப்பட்டது.

'பாய்' பாலத்தில் எவ்வளவு தற்கொலைகள் நடைபெற்று இருக்கின்றனவோ. அதைப்போன்று ஐந்து மடங்கு அதிகமாக கோல்டன் பாலத்தில் நடந்திருக்கின்றன. இதற்குக் காரணம் என்னவாக இருக்கும் என்று கடுமையாக யோசிக்க ஆரம்பித்தார்.

'கோல்டன் கேற்' பாலத்துக்குப் புகழ் அதிகம். அத்துடன் பேரும் நன்றாக அமைந்திருக்கின்றது. இந்தப் பாலம் கௌரவத்தில் கூடியது. அதனால் சாகப்போகிறவர்கள் இந்தப் பாலத்தைத் தேடி வந்திருப்பார்களோ? எனச் சிந்தித்தார்.

மனோதத்துவ ரீதியாக ஆராய்ச்சி செய்பவர்கள் இது அப்படித்தான் நடக்கின்றது என்று கூறுகிறார்கள். சாகப் போகின்றவர்கள் கூடச் சாகும்போது கௌரவமாகச் சாகவே நினைக்கின்றார்களோ? கௌரவமான, பிரபல்யமான பாலத்தைத் தேடி வந்து அதில் இருந்து குதித்து உயிரை மாய்த்துக் கொள்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால் 'பாய்' பாலத்துக்கு அந்தப் பக்கம் இருப்பவர்கள் கூடத் தற்கொலைக்கு வரும்போது அதைக் கடந்து வந்தே 'கோல்டன் கேற்' பாலத்தில் இருந்து குதித்து இறந்து போகிறார்கள்.

சாகிறவர்கள் கூடக் கௌரவமாகச் சாக வேண்டும் என்று நினைக்கிறார்கள். அதைவிட அவ்வாறு தற்கொலைக்கு முயற்சிப்பவர்கள் ஒவ்வொருவரும் வாழ வேண்டும் என்று நினைத்தால் நன்றாக இருக்கும்.

நல்ல விதமாக ஒரு பாலத்தைக் கட்டி அதற்கு நல்ல விதமாக ஒருபேரை வைத்தால் கூட அதிலும் ஒரு கஷ்டம் இருப்பது இயற்கையான விடயமாகவே உள்ளது.

இந்தக் கணக்குப்படி பார்த்தால் எமது ஊரில் சனங்கள் விருப்பமாகத் தேடிவந்து கௌரவமாகத் தற்கொலை செய்து கொள்கின்ற அளவுக்கு எந்தப் பாலமும் இருப்பதாகத் தெரியவில்லை. அதனால்தான் இங்கேயெல்லாம் பாலத்திலிருந்து குதித்து தற்கொலை செய்வது இல்லை. அதற்குப் பதிலாக பஸ்ஸிலிருந்தும் ஓடும் ரயிலில் இருந்தும் குதித்து அதிகமானோர் தற்கொலை செய்து கொள்கிறார்கள்.

அதுமட்டுமல்ல எமது ஆள்கள் தற்கொலைக்குக் கொடுக்கின்ற விளக்கமே தனி விதமாக இருக்கின்றது.

ஒருத்தர் ''பாலத்திலிருந்து குதித்து தற்கொலை செய்து கொள்பவர்களைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?'' என்று கேட்டார்.

அதற்கு இன்னொருத்தர் "அதைப் பற்றியெல்லாம் நான் ஒன்றும் சொல்வதற்கு இல்லை; ஏனென்றால் நான் தற்கொலை செய்து கொண்டு 15 வருடங்களாகிவிட்டன'' என்றார். " என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டபோது எனக்கு கல்யாணம் நடைபெற்றதைக் கூறுகிறேன் - என்றார்.



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# மீண்டும் வளர்ச்சிப் பாதையில் புங்குடுதீவு ஸ்ரீ சுப்பிரமணிய ம.வி.



லக்ஸ்மன்

இடப்பெயர்வின் பின் படிப்படியான வளர்ச்சியைப் பெற்றுவரும் புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரணிய மகளிர் வித்தியாலயம் கல்வியிலும், விளையாட்டுத் துறையிலும் புதிய சாதனைகளை எட்ட வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயற்பட்டு வருவதாக பாடசாலை அதிபர் கூறுவதை புங்குடுதீவு மக்களும் ஒப்புக் கொள்ளவே செய்கின்றனர்.

க.பொ.த.சாதாரண பரீட்சை தொடக்கம் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சை வரை சிறப்பான பெறுபேறுகளை எட்டி வருவதுடன், இந்த முறை இடம் பெற்ற வேலணை கல்வி வலய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான வலைப் பந்தாட்டத்தில் அனைத்துப் பிரிவுகளிலும் முதலிடத்தைப் பெற்று அந்த ஊர்மக்களை மகிழ்ச்சியில் மிதக்க வைத்திருப்பதுடன் தேசிய மட்டத்திலும் சாதனை படைத்து, தமது ஊர் மக்களைக் களிப்பில் ஆழ்த்த வேண்டும் என்ற இலட்சியத்தையும் வென்றெடுக்க வேண்டும் என்பதும் அதிபர், ஆசிரியர், மாணவர்களது ஆவலாக உள்ளது. இடப் பெயர்வின் பின் மீள் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்ட போது 1997 இல் அதிபராகக் கடமையேற்ற நா.பஞ்சலிங்கம் பாடசாலை வளர்ச்சியிலும் அதன் வளங்களை அதிகரிப்பதிலும் தனது கவனத்தைச் செலுத்துகின்றார்.

தமிழ்த் தினப் போட்டி, நடனம், ஆங்கில தினம் என கல்வித் திணைக்களத்தால் மேற்கொள்ளப்படும் அனைத்துப் போட்டிகளிலும் தேசிய மட்டத்திலான வெற்றிகளைப் பெற முயற்சிகள் தொடர்ந்த வண்ணமாகவே உள்ளன. விளையாட்டு, கல்வி இரண்டுமே அறிவும் ஆரோக்கியமும் மிக்க மனிதர்களை உருவாகத் தேவையானது என்பதே இந்தப் பாடசாலைச் சமூகத்தின் குறிக்கோளாக இருக்கிறது.

இந்த இலட்சியங்களுடன் பாடசாலைக்கான தேவைகளையும் நிறைவேற்ற கல்வித்திணைக் களத்துடன் பழைய மாணவர்களும் ஊரில் உள்ள வசதி படைத்த மக்களும் இணைய வேண்டும் என்பது அதிபரின் கருத்தாக உள்ளது.

இங்கு க.பொ.த. உயர்தரம் வரை மாணவர்கள் தமது கல்வியைத் தொடருகின்றனர். தற்சமயம் ஆசிரியர்வளம் போதாது போல் தெரிகின்றது. இடமாற்றம் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்குப் பதிலாக ஆசிரியர்கள் வருவது உரிய முறையில் இல்லைப் போலும். இருக்கும் ஆசிரியர்களின் உதவியுடன் கல்வி பாதிக்காதவாறு நடவடிக்கைகள் இடம் பெறுவதாக அறியமுடிகின்றது. பெரும்பாலான ஆசிரியர்கள் தினமும் யாழ். நகரில் இருந்து வந்து திரும்புவதால் மேலதிக வகுப்புக்களை வைப்பதில் சில பிரச்சினைகள் ஏற்படுகின்றன. ஆசிரியர்கள் மேலதிக வகுப்புக்களை வைத்து கல்விச் செயற்பாட்டை நல்ல முறையில் ஏற்படுத்த, முடிந்தவரை செயற்பட வேண்டும். வசதிகுறைந்த கஷ்டப்பட்ட மக்களே இப்போது புங்குடுதீவு மக்களாக தொடர்ந்தும் அங்கு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். செல்வந்தர்கள் கொழும்பை குடியிருப்பாகக் கொண்டு விட்டனர்.

1935 ஆம் வருடத்தில் இது துவிபாஷா பாடசாலையாக மாறியது. தமிழும் ஆங்கிலமும் பயிலக் கூடிய சிறந்த பாடசாலையாக அமைந்தது. எனினும் அது நிலைத்து நீடிக்க முடியாமல் போய்விட்டது.

சைவமும் தமிழும் தழைத்தோங்க வேண்டும் என்ற நாவலர் பெருமானின் சிந்தனை யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல, தீவகங்களிலும் சான்றோர்களால் வரவேற்கப்பட்டு, ஆங்காங்கே சைவப் பாடசாலைகள் தோன்றக் காரணமாக இருந்துள்ளது. இதனால் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்த பகுதிகள் எல்லாம் தரமான பாடசாலைகளாக மாற்றம் பெற்று வந்துள்ளன. புங்குடுதீவு சைவகலா மன்றம் 1926 இல் இந்தப் பாடசாலையை ஆரம்பித்ததும், இதன் வளர்ச்சியில் யாழ்ப்பாணம் சைவ வித்தியா விருத்திச் சங்கம் முன்னிலையில் இருந்து உதவியது. பாடசாலையைத் திறந்து வைத்தவர் அப்போது யாழ்.இந்துக் கல்லூரி அதிபராக இருந்த டிரூப் ஆவார். இதன் முதலாவது தலைமை ஆசிரியராக எஸ்.நமசிவாயம் பதவியேற்றிருந்தார். இந்தப் பாடசாலையின் சிறப்பான பணிக்கு அவராற்றிய சேவையே ஆரம்ப காரணமாகும்.

இவரைத் தொடர்ந்து வீ.சின்னையா, பேராசிரியர் இ.சதாசிவம்பிள்ளை, கு.வி.செல்லத்துரை, திருமதி மனோன்மணி தனபாலசிங்கம், செல்வி ம.சுப்பிரமணியம், ஆகியோர் அதிபர்களாக இருந்துள்ளனர். சா.செல்வராசா பதில் அதிபராக 12 வருடங்கள் கடமையில் இருந்துள்ளார். அதிபர், ஆசிரியர்கள் பாடசாலையின் வளர்ச்சிக்காக உன்னத சேவையை மேற்கொண்டிருந்தனரென்பது புங்குடுதீவு மக்களின் கூற்றாகும். இதன் கூடுதல் வளர்ச்சிக்கும் தேவைகளை நிறைவேற்றி வைப்பதிலும் அதிபர் செல்லத்துரையே முன்னணியில் உள்ளார் என்பதையும் அவர்கள் மன நிறைவுடன் தெரிவிக்கிறார்கள். அவரே பாடசாலைக்கான புதிய கட்டடத்தைச் சிறந்த முறையில் அமைக்கக் காரணமானவருமாவார். புலமைப் பரிசில் பரீட்சையில் மாணவர்கள் சிறந்த சித்திகளைப் பெற ஆசிரியர் அ.கனகரத்தினம் பெரிய அளவில் உதவியுள்ளார்.


1935 ஆம் வருடத்தில் இது துவிபாஷா பாடசாலையாக மாறியது. தமிழும் ஆங்கிலமும் பயிலக் கூடிய சிறந்த பாடசாலையாக அமைந்தது. எனினும் அது நிலைத்து நீடிக்க முடியாமல் போய்விட்டது. எனினும் இந்தப் பாடசாலையின் முகாமையாளராக இருந்த பசுபதிப்பிள்ளை அவர்களின் அயராத முயற்சியால் மீண்டும் உயர்நிலை அடைந்தது. 1966 ஆம் ஆண்டுவரை எஸ்.எஸ்.சி. வகுப்புள்ள உயர்தரப் பாடசாலையாக இருந்தது. இந்தக் காலத்தில் கடமையாற்றிய அதிபர், ஆசிரியர்கள் மிகவும் சிறந்தவர்களாக இருந்துள்ளனர்.

பாடசாலைக்கான கட்டடத்தை அமைக்கக் காரணமாக விளங்கிய அதிபர் செல்லத்துரையே இதைப் பெண்கள் பாடசாலையாக மாற்றியமைக்க முயற்சி எடுத்தவருமாவார். 01.05.1960-03.05.1964 வரை கல்வி நிலை மேலும் உன்னத நிலையை அடைந்திருந்தது.

கல்வி விளையாட்டுத்துறைகளுடன் கைத்தறி நெசவு பயிற்சியும் மாணவர்களுக்குக் கிடைத்தது. அந்தக் காலத்தில் நெசவுப் பயிற்சியைப் பெற்றவர்கள் பின்னர் சிறந்த வருமானம் பெறுபவர்களாக வாழ்ந்துள்ளனர். இந்தத் தொழிற் கல்விப் பயிற்சி அந்தக் காலத்தில் அதிகமான பாடசாலைகளில் இருந்து வந்துள்ளதும், இன்று அது இல்லையென்றாகிவிட்டதும் வருத்தத்துக்குரியதே. கல்வித் திணைக்களம் இருந்து இல்லாமல் போன தொழில்சார் பயிற்சிகளை மீண்டும் முன்னெடுப்பது உகந்தது.

1991 இல் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக 95 விதமான மக்கள் இடம் பெயர்ந்ததால், அன்று முதல் 1995 ஒக்ரோபர் வரை யாழ். இந்துமகளிர் கல்லூரி விடுதிக் கட்டடத்திலும், பின்னர் தென்மராட்சி நோக்கிய நகர்வும், பின்னர் 1996இல் வேலணை கிழக்கு மகா வித்தியாலயத்திலும், 1997 இல் மீண்டும் தனது சொந்தக் கட்டடத்திலும் இயங்கியது. இடப்பெயர்வு என்பது ஒரு கஷ்டமான நிலையை பாடசாலைகளுக்கு உண்டு பண்ணிய போதிலும், 1994-1995 காலப்பகுதிகளில் மாணவர்களின் கல்வி அடைவுகள் இங்கே மிகவும் சிறப்பாக இருந்துள்ளன. புங்குடுதீவில் மக்கள் படிப்படியாக மீள்குடியமர ஆரம்பித்ததும் மாணவர்களின் வரவும் அதிகரிக்கத் தொடங்கியது.

மாணவர்களின் கல்வி அறிவுக்கு மட்டுமன்றி ஒழுக்க நெறிகளுக்கும் முக்கியத்துவம் வழங்கப்படுகின்றது. மாணவர் மன்றங்களூடாக இயல், இசை, நாடக வளர்ச்சிக்கான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. கவின் கலைக்கான ஆசிரியர் தேவையும் உண்டு. விளையாட்டு மைதானம், நூலகம் என்பன அவசியம். தற்சமயம் மின்சாரவசதிகள் வழங்கப்பட்டுள்ளதால் கணினிக்கல்வியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பிரான்ஸ் மாணவர் ஒன்றியம் குழாய்நீர் வசதியும் தண்ணீர் தாங்கியும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. சுவிஸ் பழைய மாணவரின் உதவியுடன் கிழக்குப் பக்க மதில் கட்டப்பட்டுள்ளது. ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் வகுப்பறைகளை சீரமைத்துள்ளதுடன் கூரைகள் புனரமைப்பு, மலசல கூட வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் ஆகியவையும் மாணவரின் கல்வி, விளையாட்டுத் துறைகளின் வளர்ச்சியில் தம்மையும் இணைத்துச் செயற்படுகின்றன. ✱



ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் முன்வைக்கும் அமெரிக்காவின் பிரேரணைக்கு எதிராக மதகுருமார்கள் கொழும்பு லிப்டன் சுற்றுவட்டத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

# கொடுத்த உறுதிமொழியை மீறினால் நிதி அமைச்சை முற்றுகையிடுவோம்

### போக்குவரத்துச்சபை ஊழியர் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 21

இலங்கை போக்குவரத் துச் சபை ஊழியர்களின அடிப் படை ஊதியத்தை உயர்த்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தரப்பட்ட எழுத்துமூல உறுதி மொழி நிறைவேற்றப்படா விட்டால் நிதி அமைச்சைச் சுற்றி வளைத்து தொழிற்சங்கப் போராட்டத்தை மேற்கொள் வோம் என்று தெரிவிக்கப்படு கின்றது.

இலங்கைப் போக்கு வரத் துச் சபை ஊழியர்களின் மாதாந்த சம்பளத்தை உயர்த்த நட வடிக்கை எடுக்கப்படும் என்று நிதி அமைச்சின் செயலாளர் கடந்த 16 ஆம் திகதி இலங்கைப் போக்குவரத்துச் சபைத் தலைவருக்கு மனு அனுப்பியுள்ளார்.

இந்தக் மனுவில் நிதிய மைச்சின் செயலாளரின் கையொப்பமோ உத்தியோக பூர்வ இலட்சனையோ காணப் படாததால் அந்த உறுதி மொழியில் தமக்கு சந்தேகம் ஏற் பட்டுள்ளது என்று சங் கத்தின் செயலாளர் சேபால லியனகே தெரிவித்தார்.

இந்த நாட்டின் மிக முக்கிய அங்கமான நிதியமைச்சு பொறுப்புடன் நடந்து கொள்ள வேண் டிய நிலையில் இத்தகைய வேலைகள்நடைபெறுவதுஏற்றுக் கொள்ள முடியாது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-25)

# கடத்தப்பட்ட நபர் தொடர்பில் அறிக்கை கோருகிறது நீதிமன்றம்

கொழும்பு,மார்ச் 21

கொழும்பு மேல் நீதி மன்றத்துக்கு முன்னால் வைத்து அண்மையில் கடத்தப்பட்ட சந்தேகநபர் ஒருவர் பாதுகாப்பு பிரி வினரின் பிடியில் உள்ளாரா, இல்லையா என்று அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பிரதிவாதிகளுக்கு மேன் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கொழும்பு மேல் நீதி மன்ற வளாகத்தில் வைத்து கடத்தப்பட்ட டபிள்யூ. எம்.சந்திரபால என்பவரின் மனைவி தாக்கல் செய் துள்ள மனுவை நேற்று செவ்வாய்க்கிழமை பரி சீலித்த மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தர வைப் பிறப்பித்துள்ளது.

காணாமற் போயுள்ள தனது கணவரை நீதிமன் றில் முன்னிலைப்படுத்து மாறு கோரி மனைவியால் இந்த மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

பொலிஸ் மா அதிபர், இராணுவத்தளபதி, பொலிஸ் விசேட அதிரடிப்படையின் பிரதான கட்டளையிடும் அதிகாரி மற்றும் சிறைச் சாலை ஆணையாளர் நாயகம் ஆகியோர் மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப் பிடப்பட்டுள்ளனர்.

**காணாமல் போனவர் கைது செய்யப்பட் டுள்ளாரா, இல்லையா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர் பிக்குமாறு நீதிமன்றம் உத்தரவு.**

காணாமற் போனவர் கைது செய்யப்பட்டுள்ளாரா, இல்லையா என்பது குறித்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப் பிக்குமாறு நீதிமன்றம் உத் தரவிட்டது.

இது தொடர்பில் எதிர்ப்பு இருக்குமாயின் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 21ஆம் திக திக்கு முன்னர் தெரிவிக்கு மாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

# சர்வதேசத்தின் முன் இராணுவத்தை பலி கொடுக்க முயற்சிக்கிறது அரசு

### ஐ.தே.கவின் ஊடகப் பேச்சாளர் குற்றச்சாட்டு

கொழும்பு,மார்ச் 21

சர்வதேசத்தின் அழுத் தங்களும், அச்சுறுத்தல் களும் அரசின் மீது அதிக மாகப் பிரயோகிக்கப்பட்டு வருகின்ற நிலையில், அரசு தனது கைங்கரியத்தைப் பயன்படுத்தி இவை அனைத் துக்கும் இராணுவத்தினரைப் பலி கொடுத்து தான் தப்பிக் கொள்ள முயற்சித்து வருகின் றது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகப் பேச்சாளர் கயந்த கருணாதிலக்க குற் றம் சாட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவ ரின் உத்தியோக பூர்வ இல் லத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஊடக வியா லாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

எமது நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்த இராணு வத்தினரின் அபிமானத்திற் குக் களங்கம் ஏற்படுமானால் அதற்கு ஐக்கிய தேசியக்கட்சி கடும் எதிர்ப்பை வெளியிடும்.

மதுப் பாவனைக்கு முற் றுப் புள்ளி வைப்பேன் என்று பிரசாரம் செய்து மஹிந்த ஆட்சிக்கு வந்தார். ஆனால், இன்றோ ஊழல், மோசடி, அதிக வட்டிக்கடன் மற்றும் மதுபானம், மதுபோதை முதலான சட்டவிரோதச் செயல்கள் அதிகரித்துள்ள ஆட்சியாக மஹிந்த அரசு உள்ளது.

மஹிந்த அரசு ஆட்சிக்கு வந்து ஏழு வருடங்கள் கடந் துள்ள நிலையிலும், அதன் அபிவிருத்திச் செயற்பாடு களில் சிறந்த ஒரு திட்ட மிடலை இதுவரையில் காண முடியவில்லை. அரசின் செயற் பாடுகள் அனைத்தும் அமைச் சர்களின் அரசியல் இருப்பை ஸ்திரப்படுத்துவதற்காகவே நடைபெறுகின்றன.

அரசின் இதுபோன்ற அநீதியான செயற்பாடுக ளால், இது மக்கள் தலை வனின் ஆட்சிதானா என்ற சந் தேகம் எமக்கு ஏற்பட்டுள்ளது.

**துறைமுகம் உள்ளது கப்பல் தான் இல்லை**

அரசு பொறுப்பற்ற முறை யில் செயலாற்றி வரு வதன் காரணமாக அரசு மீது மக்கள் கொண்டிருந்த நம் பிக்கை இல்லாது போயுள்ளது. அர சின் அபிவிருத்தித் திட்டங் கள் யாவும் மக்களுக்குப் பய னளிக்கக்கூடிய வகையில் அமையவில்லை. துறை முகம் திறந்து வைக்கப்பட்டு ஒரு வருடமாகியும் கப்பல் வந்து போவதைக் காண முடிய வில்லை. இன்றைய அரசோ வரலாறு காணாத வகையில் எரிபொருள்க ளின் விலையை அபரிமித மாக அதிகரித்துள்ளது.

சர்வதேசத்தின் அழுத்தம் எம்மீது பிரயோகிக்கப்பட்ட போது விமல் வீரவன்ச உண்



ணாவிரதமிருந்து மாபெரும் நகைச்சுவை நாடகத்தை அரங்கேற்றினார். இவர் போன்ற அமைச்சர்களின் கேலித்தனமான செயல் களின் காரணமாக இன்று நமது நாடு சர்வதேசத்திடம் நகைப்புக்குள்ளாகியுள்ளது.

எமது நாட்டின் இறை மைக்குக் களங்கம் விளை விக்கும் வகையில் செயற் பட்டு வருகின்ற அரசுக்கும், அந்நிய சக்திகளுக்கும் நாம் எப்போதும் எதிர்ப்பை வெளிக்காட்டிக்கொண்டே இருப்போம் - என்றார்.

# போதைப்பொருள் கடத்தல் வியாபாரத்தில் திகாம்பரம்

### செந்தில் தொண்டமான் பகிரங்கக் குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 21

பாடசாலை பைகளுக் குள் போதைப்பொருள்களை மிகவும் சூட்சுமமான முறை யில் மறைத்து எடுத்துச் சென்று அதனை தனது பங்காளிகளுக்கு திகாம்பரம் விநியோகம் செய்கின்றார் என அவரது கட்சியிலிருந்து பிரிந்துசென்றோரும், மக் களும் எனக்குத் தகவல் வழங்கினர். இதனையடுத்து, நான் சம்பவ இடத்துக்கு விரைந்தேன். அழுகிய முட் டைகள், தக்காளி, அறுந்து போன செருப்புகள் ஆகிய வற்றால் மக்களே திகாம் பரத்தை தாக்கினர். நான் அல்லன். அவர் போதைப் பொருள் கடத்தியிருப்பார் என உறுதியாக நம்புகின்றேன் என்று ஊவா மாகாணசபை உறுப்பினர்செந்தில் தொண்ட மான் பரபரப்பான குற்றச் சாட்டை அதிரடியாக முன் வைத்துள்ளார்.

பதுளையில் கூட்டம் என் றால் ஏன் பண்டாரவளையில் 'ரூம்' போடவேண்டும் எனக் கேள்வி எழுப்பியுள்ள செந் தில் தொண்டமான், தனது மாவட்ட மக்களுக்கு இது வரை திகாம்பரம் என்னதான் செய்திருக்கிறார். அதுபோதா தென்று பதுளையிலும் மூக்கை நுழைக்கின்றார் என்றும் வசை பாடினார்.

செந்தில் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர் திகாம்பரம் ஆகி யோருக் கிடையிலான முறுகல் நிலையால் கடந்த ஞாயிற் றுக்கிழமை மலையக அரசி யல் களம் அதிர்ந்துள்ளது. இருவரும் சரமாரியாகக் குற்றச்சாட்டுகளை அடுக் கிக்கொண்டே செல்வதால், இதுவரை வெளிவராத பல இரகசியத் தகவல்கள் கசியத் தொடங்கியுள்ளன. பண்டார வளை நகரில் தான் இந்தப் பிரச்சினை விஸ்வரூப மெடுப்பதற்குப் பிள்ளையார் சுழி போடப் பட்டுள்ளது.

தனது கோட்டையான நுவரெலியாவை விடுத்து திகாம்பம் ஏன் எனது கோட் டைக்கு வந்தார்? அங்கு திகாம்பரத்தை தாக்கியது யார்? இந்தச் சம்பவத்தின் பின்னணி என்ன? என்பது உட்பட முக்கியமான பல தகவல்களை நேற்றுமுன் தினம் ஊவா மாகாண அமைச் சர் செந்தில் தொண்டமான் உதயனுக்குத் தெரிவித்தார்.

திகாம்பரம் போதைப் பொருள் கடத்தலில் ஈடு பட் டுள்ளார் என எனக்குத் தக வல் கிடைத்தது. அவ ரின் கட்சியிலிருந்து உடை பட்டு வெளியே வந்தவர்களும், பண்டாரவளை பிரதேச மக்களுமே எனக்கு இந் தத் தகவலை வழங்கினர்.

அவர் பாடசாலை பைக ளுக்குள் போதைப்பொருட் களை மறைத்துவைத்து கடத் திச் சென்றுள்ளார் என்று அவர்கள் தெரிவித்தனர்.

இந்த விடயம் எப்படியோ மக்களுக்குச் சென்றடைய அவர்கள் ஹோட்டலை முற்றுகையிட்டுள்ளனர். இதனால் அங்கு அசாதாரண நிலை ஏற்பட்டது என்று அவர் தெரிவித்தார். (ஒ-சி)

# தொண்டமானும் செந்திலுமே கொக்கைன் போதை பாவிப்பு

### ஆதாரம் இருக்கிறது என்கிறார் திகாம்பரம்

கொழும்பு,மார்ச் 21

நான் போதைப்பொருள் கடத்தினேன் என்று கூறப்படுவது அப்பட்டமான பொய். கொக்கைன் போதைப்பொருள் பாவிக்கும் தொண்டமானுக்கும், செந்தில் தொண்ட மானுக்குமே போதைப்பொருள்களைப் பற்றி நன்கு தெரியும். அதற்கான ஆதா ரங்களும் என்னிடம் உள்ளன என்று செந்தில் தொண்டமானின் குற்றச்சாட் டுகளை அடியோடு மறுத்து கருத்து வெளி யிட்டார் நுவரெலியா மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம்.

தான் ஏன் செந்திலின் கோட்டைக்குச் சென்றார்? அங்கு என்ன நடந்தது? என் பவை உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் உதயனுக்குக் கருத்துத் தெரி வித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரி வித்தாவது:

செந்தில் தொண்டமானும், அவரது அடியாள்களுமே என்னைத் தாக்க முற் பட்டனர்.

கார் மீது அழுகிய முட்டைகளை வீசித் தாக்கினர். செந்திலுக்குத் தக்க பாடம் புகட்டுவேன்.

நான் மேற்கொள்ளும் சமூகப் பணிகளை சகித்துக்கொள்ள முடியாமல் பொறாமைத் தனத்திலேயே இ.தொ.கா. செயற்படு கின்றது. அதிலும் நானும் ரங்காவும் நுவரெலியாவில் இணைந்து செயற்படு கின்றமையால் செந்திலால் அதைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அதனால்தான் போலிக்குற்றச்சாட்டு களை முன்வைக்கின்றார்.

இது தொடர்பில் நான் வழக்குத் தாக்கல் செய்வேன். போதைப் பொருள் கடத்தியிருந் தால் பொலிஸார் கைதுசெய்திருக்கலாம் தானே? இவையெல்லாம் ஆதாரமற்ற குற்றச் சாட்டுகள்.

பதுளையில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களை வழங்கும் நோக்கி லேயே நான் அங்கு சென்றேன். அதனைத் தடுத்து நிறுத்துமாறு செந்திலும் அவர்களின் சகாக்களும் நிர்ப்பந்தித்தனர்.

நான் அதிகாலை வேளையில் சென்றதன் காரணமாகவே பண்டாரவளை ஹோட்ட லுக்குச் சென்றேன். அங்கு வெறொன்றும் நடக்கவில்லை. செந்தில் இவ்வாறு அசிங்க மாகப் பேசுவது அபத்தமானது. அவர் ஓர் அரசியல்வாதியே அல்லர்.

தொண்டமானுக்கும், செந்திலுக்கும் கொக்கைன் போதைப்பொருள்களைப் பற்றித் நன்றாகத் தெரியும். - என்றார்.

(ஒ-சி)

# இலங்கையில் வேலை எனக்கூறி தமிழகத்தில் பலரிடம் மோசடி

### ராமநாதபுரத்தில் பொலிஸார் விசாரணை

ராமநாதபுரம், மார்ச் 21

இலங்கைக்கு வேலைக்கு அனுப்புவதாகப், பலரிடம் மோசடி செய்த முகவர்கள் குறித்துப், பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

சிவகங்கை மாவட்டம், திருப்புத்தூரைச் சேர்ந்தவர் சீனிவாசனிடம், ராமநாதபுரம் மாவட்டம், கீழக்கரையைச் சேர்ந்த அலி அக்பர், வெளிநாட்டு வேலை வாங்கித் தருவதாகக் கூறினார்.

இதை நம்பிய சீனிவாசன், இலங்கைக்கு சமையல் வேலைக்கு அனுப்புவதற்காக, தலா 30 ஆயிரம் ரூபா வீதம், மூன்று பேரிடம் 90 ஆயிரம் ரூபாவை வாங்கி, அலி அக்பரிடம் கொடுத்தார். ஓராண்டுக்கு மேலாகியும், மூவரையும் இலங்கைக்கு அனுப்பவில்லை. சீனிவாசன், ராமநாதபுரம் பொலிஸாருக்கு முறைப்பாடு கொடுத்தார்.

இதேபோல் சாயல்குடி பாக்கியம் என்பவரிடம், கீரந்தையைச் சேர்ந்த செல்லபாண்டி, ஆப்கானிஸ்தானில் வேலை வாங்கித் தருவதாகக் கூறி, ஒரு லட்சத்து 10 ஆயிரம் ரூபாவை, இரண்டு ஆண்டுகளுக்கு முன் வாங்கி ஏமாற்றியுள்ளார். இதுகுறித்து பாக்கியம், பொலிஸாரிடம் முறைப் பாடு கொடுத்தார்.

இதுகுறித்து விசாரணை மேற்கொண்டதில் செல்லபாண்டி சாயல்குடி பகுதியில், வெளிநாட்டுக்கு வேலைக்கு அனுப்புவதாகக் கூறி, பலரிடம் பல லட்சம் ரூபா மோசடி செய்தது தெரியவந்தது. இது போன்று ஏமாற்றும் முகவர்களைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார், ஈடுபட்டுள்ளனர். (வ)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

தோற்றம்
23-10-1947

மறைவு
20-02-2012



பொன்னாலையைப் பிறப்பிடமாகவும் சித்தன்கேணியை வசிப்பிடமாகவும் கொண்ட

**திருமதி கந்தசாமி தேவராஜமலர்**
**(மலர் ரீச்சர்)**

எமது குடும்பத்தலைவி அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு எமது இல்லத் துக்கு வருகை தந்தும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்ட அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

சிந்து பவனம்,
சிவன்கோயில் வீதி,
சித்தன்கேணி.

குடும்பத்தினர்.

(15935) (7,9,10)



## கண்ணீர் அஞ்சலி

மன்னார் மாவட்டத்தின் பிரதம சிவாச்சாரியார்

**கலாநிதி சிவஸ்ரீ சா.மனோகரக்குருக்கள்**



(கலாபூஷணம், சிவாச்சாரிய திலகம், கிரியாசிரோன்மணி, ஆகம கிரியா பாவணர், தேசசக்தி, தேசபந்து தேச கீர்த்தி)

எமது சிவாச்சாரியாரின் திடீர் மறைவால் சொல்லொணாத் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இந்து மக்களுக்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஐயா அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஞான வைரவரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி, சாந்தி! சாந்தி!

சிவசாந்தி உணவகம், தாழ்வுப்பாடு வீதி, மன்னார்

(சி/9197) (2-6-7)



## 17ஆம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 10-09-1903
மறைவு 29-03-1995

**திரு. கந்தையா குமரேசு**



தோற்றம் 06-06-1908
மறைவு 05-04-1995

**திருமதி தங்கம்மா குமரேசு**

திதி: 21-03-2012

ஆண்டுகள் பதினேழு சென்றிடினும்
என்றும் உம்மை நாம் மறவோம்.

தும்பளைமேற்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(15774) (7.9.10)


## சமய சந்நிதிகளில்

சுதுமலை ஸ்ரீ விசாலாட்சி சமேத விஸ்வநாத சுவாமி ஆலய வருடாந்தப் பெருந் திருவிழா, எதிர்வரும் 26 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பதினொரு தினங்கள் திருவிழாக்கள் இடம்பெறும்.

அடுத்த மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை வேட்டைத் திருவிழாவும், 4 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத்திருவிழாவும் நடைபெறவுள்ளன.

12 ஆம் நாள் வெள்ளிக்கிழமை திருக் கல்யாணமும் வைரவ சாந்தியும் இடம் பெறும்.

* * *

சுழிபுரம், மார்ச் 21

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய வருடாந்த அலங்காரத் திருவிழா எதிர்வரும் 24ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து பத்துத்தினங்கள் அபிஷேக பூசை ஆராதனைகளைத் தொடர்ந்து அழகிய சாத்துப்படியுடன் அம்பாள் வீதி உலா வருதல் இடம் பெறும். இறுதிநாள் அன்று 108 சங்காபிஷேகம் இடம் பெறும். (வ-28)

* * *

சுழிபுரம், மார்ச் 21

சுழிபுரம்-பறாளாய் சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய இலட்சார்ச்சனை நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து ஆறு தினங்களும் மாலை இலட்சார்ச்சனை நிறைவானதும் கந்தரநுபூதிப் பாடல்கள் ஐம்பத்தொன்றும் அடியார்களால் பாடி நிறைவு செய்யப்படும். (வ-28)

## இளைஞர் சேவை மன்றத்தில் அபிவிருத்தி வேலைத்திட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் யாழ். மாவட்டத்தில் "இளைஞர் மனதுக்கு அறநெறி" எனும் ஆன்மிக அபிவிருத்தி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

ஆர்வமுடைய இளைஞர்கள் எதிர்வரும் 24 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்.பலநோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்துக்கு சமுகமளித்து மேலதிக விவரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று யாழ். மாவட்ட உதவிப் பணிப்பாளர் ஈஸ்வரராஜா அறிவித்துள்ளார். (வ-14)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில் 1982 ★ 04 ★ 01
ஆண்டவன் மடியில் 2008 ★ 03 ★ 21

**அமரர் செல்வராசா வரதராசா (வரதன்)**

(இல-188, உதயநகர் மேற்கு, கிளி)

ஆண்டுகள் நான்கு பறந்தோடினாலும் - உன்
நினைவு எம் உள்ளத்தில் மறையாதடா
நீ விட்டுச் சென்ற நினைவுகள் நிஜங்களாய் - எம்
மனதினை வாட்டுதைய்யா - பாவியரின்
கொடுமையினால் அன்புப்பாலகனே - நீ
மறைந்தாய் - உம் வதனமுகம் தேடி.
அலையும் நாம் உன் ஆத்மா சாந்தியடைய
இந்நாளிலே இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உன் அன்புத்தெய்வம் அம்மா,
அன்புச்செல்வங்கள் (மருமக்களான)
டிலோஜினி, கலைவாணன்,
அக்கா, அத்தான்

(14068)(6-7-8)



## போலிகள் எச்சரிக்கை !!!

**"தய்ரோஸ் வைட்டிங் கிரீம்" பாவனையாளர்களுக்கு...**

யாழ், வன்னி மாவட்டத்திலும் தய்ரோஸ் வைட்டிங் கிரீம் மிகப்பெரிய அளவில் போலிகள் விற்பனை செய்யப் பட்டு வருகின்றன.

ஆதலால் பாவனையாளர்கள் மிகப்பெரிய அளவிலான பக்கவிளைவுகளை எதிர்நோக்க வேண்டிவரும் (தோல் புற்று நோய்). எனவே விலையை பொருட்படுத்தாது தரமானதா? என்பதனை உறுதிப்படுத்தும் வியாபார தாபனங்களில் பெற்றுக் கொள்ளவும்

**இனங்காணும் முறை:**

**பொதி செய்யப்பட்ட பேளையில் கோல்ட் (தங்கநிறம்) நிற தரக்கட்டுப்பாட்டு ஸ்ரிக்கர் மற்றும் கொம்பனியின் பெயர் வெள்ளை நிறத்தில் நீல எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட ஸ்ரிக்கர் ஒட்டப்பட்டிருக்கும்.**

யாழ். மாவட்ட ஏகவிநியோகஸ்தர்:
மயூரா டிஸ்ரிபியூட்டர்ஸ்,
25, நவீன சந்தை, மேல்மாடி, யாழ்ப்பாணம்.

தய்ரோஸ் சந்தைப்படுத்தல் தனியார் நிறுவனம்
பாணந்துறை.

(C9859) (8,9,10)



## VACANCIES
## UNIVERSITY OF JAFFNA, SRI LANKA
### PARA MEDICAL DEGREE PROGRAMME.

University of Jaffna will entertain applications from qualified persons for the Under mentioned posts up to 02.04.2012.

**Visiting Lecturer.**

Applicants should have the following qualifications:

a) A Special Degree in Chemistry and a Postgraduate degree (M.Phil/Ph.D)in Chemistry **OR**

b) First or Second class special degree in Chemistry with at least five years teaching experience

**Visiting Demonstrator**

a) A Special Degree in Chemistry with experience in Laboratory demonstration **OR**

b) B.Sc degree with Chemistry as a subject and experience in laboratory demonstration.

**Visiting Payment**

Visiting Lecturer - Rs 500/= per hour
Visiting Demonstrator - Rs.250/= per hour

Application forms may be obtained from the office of the Senior Assistant Registrar/Academic Establishments, University of Jaffna, Sri Lanka, either in person or by post,on a payment of Rs. 100/= per application. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/Postal Order for Rs.100/= drawn in favour of the Bursar, University of Jaffna together with a self addressed stamped envelope 23 x10 c.m. in size.


Applications from the University System /Government Departments/Corporations and Statutory Board should channel their applications through the Head of respective Institutions. Illegible,incomplete and late applications will be rejected without intimation. Only short listed applicants will be called for an interview.

**REGISTRAR,**
**UNIVERSITY OF JAFFNA,**
**SRI LANKA.**
**19.03.2012**

(C/9842)(2-7-9)

மட்டக்களப்பைக் கலக்கி வந்த

# 'பறக்கும்' கொள்ளையர் கூண்டோடு சிக்கினர்



மட்டக்களப்பு,மார்ச் 21
மட்டக்களப்பு மாவட்டத்தின் களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மோட்டார் சைக்கிளில் சென்று வழிப்பறிகளில் ஈடுபட்டுவந்த குழுவினர் கூண்டோடு சிக்கியுள்ளனர்.

கடந்த சில மாதங்களாக மட்டக்களப்பு பகுதிகளைச் சேர்ந்த மக்களைக் கலக்கி வந்த இந்த நபர்களிடம் இருந்து தங்க நகைகள் உட்பட போலி கைத்துப்பாக்கி, கொள்ளைக்குப் பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள் என்பன மீட்கப்பட்டுள்ளன என்று களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஆரியரத்ன தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.ஆர்.மானவடுவின் வழிகாட்டலின்கீழ்பிரதிப்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ப.ஜி.ஏ.சி.ஆரியரட்ன தலைமையில் ஜ.அசேல, சாஜன் எஸ்.ஜயவீர,சாஜன் தங்கராசா ஆகியோர் அடங்கிய பொலிஸ் குழுவினர் இந்தக் கொள்ளையர்களைக் கைது செய்துள்ளனர்.

களுதாவளை, கனிஷ்ட வித்தியாலய வீதியில் பெண்ணொருவரின் கழுத்தில் இருந்த சங்கிலியை கடந்த ஞாயிற்றுக்கிழமை மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் பறித்துக்கொண்டு சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில், களுவாஞ்சிக்குடி பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து பிரதேசத்தில் இருந்த சோதனைச்சாவடிகள் உஷார்படுத்தப்பட்டன. இந்த நடவடிக்கையின் போது பெரியகல்லாறு சோதனைச் சாவடியில் வைத்து இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது மேலும் மூன்று பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய மோட்டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். பொது மக்களிடம் கொள்ளையிட்ட சுமார் 7.5 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் இவர்களிடம் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட கொள்ளையர்களில் நான்கு பேர் அம்பாறை மாவட்டத்தின் காரைதீவு பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் எனவும் ஒருவர் வளத்தாப்பிட்டி பிரதேசத்தை சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர்கள் கொள்ளையடித்த நகைகளை காரைதீவில் உள்ள வங்கிகளிலும் சாய்ந்தமருதில் உள்ள வங்கியிலும் அடைவு வைத்திருந்த நிலையில் அவை மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த நபர்களை களுவாஞ்சிக்குடி நீதிவான் நீதிமன்றில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை முன்னிலைப் படுத்தியபோது அவர்களை எதிர்வரும் 26ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் கருணாகரன் உத்தரவிட்டார்.

கஹவத்தை இரட்டைக் கொலை;

## ஆளும் கட்சி உறுப்பினருக்கு ஏப்.2 வரை விளக்கமறியல்

கஹவத்த,மார்ச் 21
கஹவத்த இரட்டை கொலைச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட சந்தேக நபரான ஆளும் கட்சியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினரை எதிர்வரும் 2 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பெல்மதுல்ல நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கஹவத்த இரட்டை கொலைச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் கொடகவெல பிரதேச சபையின் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி உறுப்பினர் எல்.எச். தர்மசிறிக்கே விளக்க மறியல் வழங்கப்பட்டுள்ளது.

கொடகவெல
பிரதேச சபையின்
ஐக்கிய மக்கள்
சுதந்திர முன்னணி
உறுப்பினர் எல்.எச்.
தர்ம சிறிக்கே
விளக்கமறியல்.

கஹவத்தை - கொட்டகேதன்ன பகுதியில் தாய் மற்றும் மகள் கொலைச் சம்பவம் தொடர்பிலேயே இந்த வழக்கு இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## புனரமைக்கப்படாத ப.நோ.கூ.ச. கட்டடம்

மட்டக்களப்பு,மார்ச் 21
மட்டக்களப்பு, பாலையடிவட்டை கிராமத்தில் அமைந்துள்ள பலநோக்கு கூட்டுறவுச் சங்க கட்டடம் கடந்த போரால் பாதிக்கப்பட்ட நிலையில் இதுவரை புனரமைப்புச் செய்யப்படாமல் காணப்படுவதாக மக்கள்கவலை தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டடத்தினுள் புற்கள் காடுகளை போன்று வளர்ந்து காணப்படுவதாக பிரதேச மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தப் பகுதிக்குரிய கூட்டுறவுச் சங்க கட்டடமானது தனியார் வீடுகளில் மாறி மாறி இயங்கி வருகின்றது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இது தொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் வேண்டு கோள் விடுக்கின்றனர். (ச)

31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
வீட்டுக் கிருத்திய அழைப்பும்

மலர்வு
02 - 08 - 1925

உதிர்வு
21 - 02 - 2012



அமரர் பண்டிதர் கயிலாயர் தம்பு (S.K. தம்பு)
(ஓய்வுபெற்ற அதிபர்)

கடந்த 21.02.2012 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் கயிலாயர் தம்பு அவர்களின் மறைவுச் செய்தியை அறிந்து நேரில் வந்து உதவி புரிந்தோருக்கும் அனுதாபம் தெரிவித்தோருக்கும் வெளிநாடுகளிலிருந்தும் தொலைபேசி மூலமும் தந்தி மூலமும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள், மலர்வளையங்கள் மூலம் துயர்பகிர்ந்தோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும் இரங்கல் உரை ஆற்றியவர்களுக்கும் நன்றி தெரிவிப்பதுடன் நாளை (22. 03. 2012) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
(நேரில் அழைக்கத் தவறியிருப்பின் தயவுசெய்து இதனை தனிப்பட்ட

மிருசுவில் வடக்கு, மிருசுவில். (சி/2959) (2-6-7) - குடும்பத்தினர்.

### யானைகள் அட்டகாசம்

மண்டூர் கமநல சேவை நிலையத்திற்குட்பட்ட இறக்கத்துவட்டைக்கண்ட விவசாயிகள் யானைகளின் அட்டகாசத்தால் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர் என்று விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் தம்மீது கவனம் செலுத்தி விவசாய நிலங்களுக்குள் யானைகள் உட்பிர வேசிப்பதைத் தடுத்து நிறுத்தவேண்டும் என்றுவிவசாயிகள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

சிவமயம்
கரைச்சி புளியம்பொக்கணை
நாகதம்பிரான் ஆலய ஆண்டு உற்சவ
பொங்கல் (05.04.2012)
விழாவின் போது வாணிபம்
மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான

நிலஏல விற்பனை அறிவித்தல்

நாகதம்பிரான் ஆலய பொங்கல்விழா எதிர்வரும் 05.04.2012 வியாழக்கிழமை நடைபெறவுள்ளது. விழாவின் போது வாணிபம் மேற்கொள்ளும் வாணிபர்களுக்கான நிலஏலவிற்பனை எதிர்வரும் 25.03.2012 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆலயமுன்றிலில் நடைபெறவுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

ஆலய பரிபாலன சபை
(C/9116))(6-7-8)

காலத்தால் மறவாத ஈராண்டு
நினைவலைகள்.....



திருமதி
பிறேமலோஜினி பிரபாகரன்

மலர்ந்த மலராக 30-08-1982
கருகிய பூவாக 13-04-2010
திதி:- 2012.03.21.(சதுர்த்தசி)

பிள்ளை நிலவே பிறேமாக் குட்டியே!
பிரியமுடன் நாம் வளர்த்த வெண்ணிலவே!
ஈராண்டு சென்றதம்மா நீ மறைந்து
ஈரம் இன்னும் காயவில்லை எம் கண்ணீர்
இதயம் நிறைந்த அஞ்சலிகள் உமக்கம்மா
இரு கரம் கூப்பி தொழுகின்றோம் நாமம்மா!

பிள்ளைகள்
ஷஜித், விசால்,
அப்பா, அம்மா,சகோதரர்கள்.

ச.சுப்பிரமணியம்,
18/1, சீனியர்லேன், கலட்டி, யாழ்ப்பாணம்.

## வைத்தியசாலையில் அடிப்படை வசதியில்லை

எருவில்,மார்ச் 21

மட்டக்களப்பு பிரதேசத்தில் 14ஆம் கொலனியில் இயங்கிவரும் ஆயுள்வேத வைத்தியசாலை எந்தவித அடிப்படை வசதியும் அற்ற நிலையில் இயங்கிவருவதாக அந்தப் பிரதேச மக்கள் கவலைதெரிவிக்கின்றனர். இந்த வைத்தியசாலை ஆரம்பத்தில் தனியாருக்குச் சொந்தமான கட்டடத்தில் இயங்கி வந்தது. தற்போது வீட்டு உரிமையாளர்கள் அதில் குடியிருக்க வந்ததனால் இந்த வைத்தியசாலை கிராம அபிவிருத்திச்சங்க கட்டடத்தில் இயங்கிவருகிறது.

இந்தக் கட்டடத்தில் எந்தவிதமான அடிப்படை வசதிகளும் அற்ற நிலையில் உள்ளதாக மக்கள் தெரிவிக்கின்றனர். இந்த வைத்தியசாலையில் 4 பணியாளர்களும் வைத்தியர் ஒருவரும் கடமை புரிகின்றனர். இவர்கள் அடிப்படை வசதிகள் இல்லாத நிலையிலே தமது கடமைகளைச் செய்து வருகின்றனர். இந்த வைத்தியசாலைக்கு நாளாந்தம் 50 இற்கும் மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சைக்காக வருகின்றனர்.

எனவே இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து வைத்தியசாலையின் சேவைகளை முழுமையாகப் பெறுவதற்குரிய அடிப்படை வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

(ச-31)

# எமது அரசியல் நடவடிக்கைகளை தடுக்க எவருக்கும் அதிகாரமில்லை

## தொழிலாளர் தேசிய சங்கம் அறிவிப்பு

நுவரெலியா, மார்ச் 21

தொழிலாளர் தேசிய சங்கம் பதுளை மாவட்டத்தில் முன்னெடுத்து வருகின்ற அரசியல் தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தடுப்பதற்கு எவருக்கும் அதிகாரம் இல்லை என்று தொழிலாளர் தேசிய சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது:

தொழிலாளர் தேசிய சங்கத்தின் பதுளை மாவட்ட முக்கியஸ்தர்களால் பதுளையில் நேற்றுமுன்தினம் நடத்த இருந்த கூட்டத்தைக் குழப்புவதற்கு தமிழகத்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட அரசியல்வாதியும் அவரின் குண்டர் குழுவும் கூட்டம் இடம்பெறவிருந்த மண்டபத்துக்குள் நுழைந்து மக்களிடத்தில் அநாகரிகமாக நடந்துள்ளனர்.

இந்தக் கூட்டத்தின்போது கற்றல் உபகரணங்களைப் பெற்றுக் கொள்ள வந்த தோட்டப்பகுதி மாணவர்களையும் குண்டர் குழு அச்சுறுத்தியுள்ளது.

இந்தக் கூட்டத்துக்கு வருகை தரவிருந்த தொழிலாளர் தேசிய சங்கத் தலைவரின் வாகனங்கள் மீது பண்டாரவளைப் பகுதியில் வைத்து மது போதையில் நடமாடிய நபர்கள் முட்டை வீச்சையும் நடத்தியுள்ள னர்.

இந்த அநாகரிகமான செயலைத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் பதுளை மாவட்ட ஆதரவாளர்களும் ஏனையவர்களும் கண்டிக்கின்றனர். இந்த நாட்டில் எங்கும் - எந்த மூலைக்கும் சென்று அரசியல் செய்வதற்கு உரிமை இருக்கின்றது. இதனைப் புரிந்து கொண்டு செயற்படாதவர்கள் முட்டாள்கள் ஆவர்.

தொழிலாளர் தேசிய சங்கம் மலையகத்திலுள்ள முக்கியமான தொழிற்சங்கமாகும். இந்த சங்கத்துக்கு மலையகத்தில் அனைத்துப் பகுதிகளிலும் அங்கத்தவர்கள் உள்ளனர். கடந்த மாகாண சபைத் தேர்தலில் கூட பதுளை மாவட்டத்தில் தொழிலாளர் தேசிய சங்கத்துக்கு 10ஆயிரம் வாக்குகள் கிடைத்துள்ளன.

தொழிலாளர் தேசிய சங்கத்தைப் பொறுத்தவரையில் பதுளை மாவட்டத்தில் மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு செயற்படுகின்றது.

தொழிலாளர் தேசிய சங்கத்தின்அரசியற் தொழிற் சங்க நடவடிக்கைகள் தொடர்ந்து பதுளை மாவட்டத்தில் முன்னெடுக்கப்படும்.

காடைத் தனம் புரிகின்ற

## கண்டி நகருக்கு விசேட சிறப்புகள்

கண்டி,மார்ச் 21

இந்தியாவில் மதுரை போன்று இலங்கையில் கண்டி நகரம் தமிழையும் தமிழ் கலையையும் வளர்த்துள்ளது என்று நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

கண்டி இந்து இளைஞர் மன்றத்தின் முன்னாள் தலைவர் அமரர் தேசகீர்த்தி வீ.பாலசுப்பிரமணியத்தின் இரண்டாவது நினைவு மலர் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கண்டி நகருக்கு உலகெங்கும் விசேட சிறப்பு உண்டு. மூவின மக்களும் ஒற்றுமையாக வாழும் 'ஒரு' நகரமாக கண்டி நகரம் திகழ்கின்றது என்று அவர் தெரிவித்தார். (ச)

## கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை விரைவில் தரமுயர்த்த ஏற்பாடு

எருவில்,மார்ச் 21

அம்பாறை மாவட்டத்தின் எல்லை நிர்ணயம் தொடர்பான வரைவு கிடைத்ததும் உடனடியாக கல்முனை தமிழ்ப் பிரதேச செயலகத்தை தரமுயர்த்துவதற்கு சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் விநாயகமூர்த்தி முரளிதரன் தெரிவித்தார்.

கல்முனை சிறிமுருகன் கண்ணகையம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை சித்திரத் தேருக்கு பவளக்கால் வைக்கும் நிகழ்வு நடைபெற்றது. இந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அம்பாறை மாவட்டத்தில் பல அபிவிருத்தி வேலைத் திட்டங்களை செய்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-31)

## கரும்பு அறுவடைக்கு நாள் கூலி குறைவு

அம்பாறை, கல்மடுவ பகுதியில் கரும்பு அறுவடையில் ஈடுபடும் தொழிலாளர் களுக்கு குறைந்தளவான கூலி வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தொழிலாளர் ஒருவருக்கு நாள் கூலியாக 475 ரூபாவே வழங்கப்படுவதாக தொழிலாளர்கள் கவலை தெரிவித்தனர். இந்தப் பகுதியில் சுமார் 159 ஹெக்ரயர் நிலப்பரப்பில் கரும்பு உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

வேறு தொழில்களில் ஈடுபடும் தொழிலாளர் ஒருவருக்கு இந்தப் பகுதியில் நாள் கூலியாக 800 ரூபா வழங்கப்படுகின்றது. (ச)


# 28 ஆம் நாள் நினைவலைகள்



## அமரர் ஸ்ரீதரன் சத்தியநேசன் (நேசன்)

(கிருஷ்ணா அப்பளக் கொம்பனி உரிமையாளர்)

தோற்றம் 28.07.1962

மறைவு 23.02.2012

### எங்கள் கண் கண்ட தெய்வமே!

அப்பா என்று அழைக்க,
அன்புடனே எம்மை அரவணைத்தீர்
அன்பு மொழி பேசி ஆதரவாய் எமக்கிருந்தீர்
நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
நாள்கள் இருபத்தெட்டு சென்றதப்பா
ஆனாலும் ஆறவில்லை எம் துயரம்
மீண்டும் இப் பூவுலகில் பிறப்பீர்கள் எம் அப்பாவாய்
கண்ணீரால் உங்கள் திருப் பாதத்தைக் கழுவுகின்றோம்
உள்ளத்தால் உங்களை நினைக்கின்றோம்
விழிகளில் நீர் ததும்ப கைகளால் பூ வெடுத்து
மலர் பாதத்தில் மலர் தூவி உங்கள் நினைவோடு
இந் நாளில் நினைவு கூருகின்றோம்
மீளாத் துயிலில் நீங்களும்,
மீளாத் துயரில் நாங்களும்.

\- குடும்பத்தினர்.

117, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி.

(15849)(2-6-7)

# பொருள்களின் விலைப்பட்டியல் வைக்காதோருக்கு அபராதம்

**விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக 4லட்சத்து 24 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ். மாவட்டத்தில் இந்த வருடம் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த, விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத வர்த்தகர்களுக்கு எதிராக 4லட்சத்து 24 ஆயிரம் ரூபா தண்டப் பணம் அறவிடப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம், மல்லாகம், சாவகச்சேரி ஆகிய இடங்களைச் சேர்ந்த வர்த்தகர்களே இவ்வாறு தண்டப் பணம் செலுத்தியுள்ளனர். வியாபார நிலையங்களில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்த குற்றத்துக்காகவும், கூடிய விலைக்கு பொருள்களை விற்பனை செய்த குற்றத்துக்காகவும் மற்றும் வியாபார நிலையங்களில் விலைப்பட்டியல் காட்சிப்படுத்தாத குற்றத்துக்காகவும் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டதை அடுத்து நீதிமன்றத்தினால் இந்தத் தண்டப்பணம் அறவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-14)

# நான் நன்மையின் பக்கமா? தீமையின் பக்கமா?

தபசு காலம் எமக்கு இறைவன் அளிக்கும் புனித காலம், மனமாற்றத்தின் காலம், மன்னிப்பின் காலம். உலகத்தின் மாயை எது? உண்மை எது? எம்மை இறைவனிடம் கொண்டு போய்ச் சேர்ப்பது எது? எனப் புரியவைக்கும் புண்ணிய காலமாகும். இக்காலத்தில் மூன்றாவது வாரத்தைக் கடந்து நிற்கின்றோம்.

எத்தனை மறையுரைகள், எத்தனை மன்னிப்புச் செபங்கள், எத்தனை சிலுவைப் பாதைகள், எத்தனை யாத்திரைகள், எத்தனை விளக்கங்கள், எத்தனை ஒறுத்தல் முயற்சிகள், இன்னும் எத்தனை எத்தனையோ! பட்டியல் நீளம் தான்! ஆனால் நான் பெற்றுக்கொண்ட தனிப்பட்ட முன்னேற்றம் என்ன? ஆன்மிக நலன் என்ன? எனக்குள்ள நான் கொணர்ந்த குறிப்பிடத்தக்க மாற்றம் தான் என்ன? மறையுரைகளின் போதும், மன்றாட்டுக்களின் போதும், கண்கலங்கினால் போதும் என்றல்ல.............மனமாற்றம் என்பது செயலால் எண்பிக்கப்பட வேண்டும். விவிலியத்தில் அடிக்கடி நாம் வாசிக்கும் வரி வசூலிப்பவராகிய மத்தேயுவைப் போல், நான் உமக்கு எதிரா பாவம் செய்தேன் என அழுது புலம்பும் ஊதாரி மகன் போல், நான் அநியாயமாக தீமை செய்து அயலவரிடம் கவர்ந்த எல்லாவற்றையும் இருமடங்காக திருப்பிக் கொடுத்து விடுகின்றேன் எனக் கூறும் சக்கேயுவைப் போல், தான் உண்மையிலேயே பாவி என உணர்ந்து இயேசுவின் கால்களைக் கண்ணீரால் கழுவி கூந்தலால் துடைத்த பெண்ணைப் போல், தீமைகளை விட்டொழிக்கும் எனது எண்ணங்கள் செயல்வடிவம் பெறும்போது தான் இந்தத் தவக்காலமானது அதனுடைய உண்மையான அர்த்தத்தை எம்மில் அடைந்த தவக்காலமாக அமையும். இல்லையேல் இதுவும் வழமைபோல் வந்து போகும் ஒரு காலமாகவே அமையும்.

தவக்காலச் சிந்தனை

அருட்திரு.ஜோசப் செல்வன் செ.தா
அருள் ஆச்சிரமம், யாழ்ப்பாணம்.

# மாணவரின் கல்வி வளர்ச்சிக்கு மாதாந்தம் உபகரண உதவி

**சாவற்கட்டு ச.ச. நிலையம் முன்மாதிரி**

சண்டிலிப்பாய், மார்ச் 21

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு உதவ முன்வந்துள்ள ஆனைக்கோட்டை சாவற்கட்டு மகாத்மா சனசமூக நிலையம் மாதாந்தம் அவர்களுக்குத் தேவையான கல்வி உபகரணங்களை வழங்கி வருகிறது.

சாவற்கட்டு கிராமத்தில் வசிக்கும் மக்களில் பெரும்பாலான குடும்பங்கள் கடற்றொழிலையே நம்பி வாழ்ந்து வருகின்றன. மேற்படி கிராமத்தின் சனத்தொகையைப் பொறுத்தவரை ஏனைய கிராமங்களையும் விட முன்னணி வகிக்கின்றது. கல்வி அறிவிலும் பின்தங்கிய நிலையிலிருந்த இந்தக் கிராமம் தற்பொழுது படிப்படியாக வளர்ச்சியடைந்து மக்களின் பாராட்டையும் ஆதரவையும் பெற்று வருகிறது.

குடும்பத்தில் ஏற்பட்டுள்ள வறுமை நிலை காரணமாக மாணவர்களின் கல்வி வளர்ச்சியிலும் பாதிப்பு நிலவியது. இந்த நிலை குறித்து ஆராய்ந்துள்ள பொது அமைப்புக்கள் மாணவர்களின் கல்வியை ஊக்குவிப்பதற்கான பல திட்டங்களை வகுத்து செயற்பட ஆரம்பித்துள்ளன.

மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு கைகொடுத்து உதவ முன்வந்துள்ள மகாத்மா சனசமூக நிலையம் தரம் ஒன்றிலிருந்து தரம் பத்து வரையான மாணவர்களுக்கு கல்வித் தேவைக்கான உபகரணங்களை மாதாந்தம் வழங்கி வருகிறது. அது மட்டுமன்றி புலமைப்பரிசில் பரீட்சையில் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு இலவச வகுப்புகளையும் நடத்தி வருகின்றது.

சனசமூக நிலையம் மேற்கொண்டுள்ள சேவையைப் பாராட்டியுள்ள பெற்றோர்கள் இக்கிராமத்திலுள்ள ஏனைய அமைப்புக்களும் மாணவர்களின் கல்விக்கு உதவ முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-115)

# சைக்கிள் பாதுகாப்புக்கு அதிக கட்டணம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றனர் அடியார்கள்

சாவகச்சேரி,மார்ச்21

மட்டுவில் வடக்கு பன்றித்தலைச்சி கண்ணகை அம்பாள் ஆலய பங்குனித் திங்கள் பொங்கல் உற்சவத்தில் சாவகச்சேரி பிரதேச சபையின் விசேட அனுமதியுடன் அமைக்கப்பட்ட சைக்கிள் பாதுகாப்பு நிலையத்தில் கூடுதல் கட்டணம் அறவிடப்படுவது தொடர்பாக அடியார்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர்.

ஆலய பொங்கல் உற்சவம் தொடர்பாக பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் ஆலயத்தை அண்மித்துள்ள இரு சனசமூக நிலையங்களின் அபிவிருத்தி நலன் கருதி அவை மட்டும் பாதுகாப்பு நிலையம் அமைக்க அனுமதிப்பதெனவும் கட்டணம் சைக்கிளுக்கு ஐந்து ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு பத்து ரூபாவும் அறவிடுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

ஆனால் சாவகச்சேரிப் பிரதேச சபையின் விசேட அனுமதியுடன் அப்பகுதியில் உள்ள காணியொன்றில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு நிலையத்தில் சைக்கிளுக்கு 10 ரூபாவும் மோட்டார் சைக்கிளுக்கு இருபது ரூபாவும் கட்டணமாக அறவிடப்படுகிறது.

கூட்டத் தீர்மானத்தை மீறி தனியார் ஒருவருக்கு பிரதேச சபையினரால் பாதுகாப்பு நிலையம் அமைக்க விசேட அனுமதி வழங்கப்பட்டமை குறித்து அடியார்கள் மத்தியில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. (ந-9)


## மரண அறிவித்தல்

### ஆறுமுகம் புவனேந்திரன் (தெய்வேந்திரம்)



யாழ்.மண்கும்பான் 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்ட ஆறுமுகம் புவனேந்திரன் 19.03.2012 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் சிவகாமியின் சிறிய மகனும், காலஞ்சென்றவர்களான கருணாகரன் - பிள்ளைமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும் இன்பமணியின் அன்புக் கணவரும், சுவேந்திரன், செல்வநிதி, கலாநிதி ஆகியோரின் பாசமிகு தந்தையும், சுகந்தினி, ஜேம்ஸ்றூபன் ஆகியோரின் அன்பு மாமனும், சவுந்தரம், ராசம்மா, குமாரசாமி, தர்மலிங்கம், கந்தசாமி, இராசேந்திரம், சின்னத்துரை, பவளம், சின்னம்மா, சற்குணம், மகேந்திரம், பாலசிங்கம், வீரகத்திப்பிள்ளை ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற நாகரத்தினம் மற்றும் வண்டா, நேசமலர், இராசமணி, காலஞ்சென்ற பவளம் மற்றும் இராஜேஸ்வரி, சின்னமணி, செல்வராசா, செல்வரத்தினம், வேவி, விஜயலட்சுமி, ராணி காலஞ்சென்றவர்களான இராமச்சந்திரன், இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2012) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மண்கும்பான் கிழக்கு,
4ஆம் வட்டாரம். (15864) (2-7-6)

தகவல்:
குடும்பத்தினர்.

## காணி தேவை

A-9 வீதியை அண்மித்து, தென்னை பயிரிடக் கூடிய காணி 10 ஏக்கர் தேவை.

தொடர்பு: 0779213881, 0776624569.

(14601) (6,7,10)

## காணி விற்பனைக்கு

அரியாலையில் 97 பரப்பு நெற்காணி விற்பனைக்குண்டு.

விபரங்களுக்கு : 077 9589718

(15858))(6-7-8)

## காணி விற்பனைக்கு

சிறுப்பிட்டி பெரியபுலம் என்னும் இடத்தில் கல்லுடைக்கும் ஆலை (கிறசர்) அமைக்கக்கூடிய 198 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

(15859))(6-7-8) தொடர்பு : 077 9589718

## வீடு வாடகைக்கு

கிளிநொச்சி டிப்போ சந்தியிலிருந்து ¾ km தூரத்தில் இரத்தினபுரத்தில் சகல வசதிகளும் கொண்ட மாடிவீடு வாடகைக்கு உண்டு. நிறுவனங்கள் விரும்பப்படும்.

தொடர்பு:- 0771177683

## தவறிவிட்டது

கரணவாய் வடமேற்கு, வல்வெட்டித்துறையைச் சேர்ந்த சதாசிவம் மயூரவண்ணன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (810195150 V), தற்காலிக சாரதி அனுமதிப்பத்திரம், ATM காட், IOM அடையாள அட்டை என்பன ஆவரங்காலுக்கும் கனகம் புளியடிச் சந்திக்குமிடையில் தொலைந்து விட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். (சன்மானம் கொடுக்கப்படும்)

தொடர்பு: 0782737083,
பங்களா வீதி,வாகையடி, மீசாலை மேற்கு, மீசாலை.

## கண்ணீர் அஞ்சலி



*யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியில் மனைப் பொருளியல் ஆசிரியராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற ஆசிரியரான*

### திருமதி தே.மதியாபரணம்

*அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருடன் நாமும் துயரைப் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

*ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!*

பிரிவால் துயருறும் மனைப்பொருளியல் ஆசிரியர்கள்.

(சி/9190)(2-7-6)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



ஊர்காவற்றுறை மேற்கு வீதியைப் பிறப்பிடமாகக் கொண்ட

அமரர்
ஆசீர்வாதம் நியூஸ்ரன்

மலர்வு
*24★03★1983*

உதிர்வு
*21★03★2011*

ஆண்டு ஒன்று ஆகிவிட்டதப்பா
எங்கள் ஆறாத்துயர் இன்னும் ஆறவில்லை
ஆண்டவன் திருவடியை அடைந்து ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*எமது இல்லத்தில் நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம். இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.*

கரியாலை நாகபடுவான்,
19 ஆம் கட்டை,
அந்தோனியார் கோயில்முன். (15863)(2-6-7)

என்றும் உம் நினைவில்:
குடும்பத்தினர்.

# அரசு அதிக வட்டியுடன் கடன்

கொழும்பு, மார்ச் 21

அரசு அதிகளவிலான வட்டியுடன் கடன்களை பெற்று கொண்டுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடக பேச்சாளர் கயந்த கருணாதிலக்க இந்த குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

அரசு இந்த கடன்களை தங்களை வளப்படுத்தி கொள்ளவே பெற்று கொண்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதனிடையே, அரசு அபிவிருத்தியை இலக்காக கொண்டு கடன்களைப் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மாற்று ஐக்கிய தேசிய கட்சி என அடையாளப்படுத்தி கொண்டு பண்டாரகம பிரதேசத்தில் நடத்தப்பட்ட மக்கள் சந்திப்பின் போது ஏற்பட்ட குழப்ப நிலை தொடர்பான அறிக்கை கையளிக்கப்படவுள்ளது.

**மக்களை மேலும் சுமையில் அமிழ்த்தும் வகையில் அதிக வட்டிக்கு கடன்களை அரசு வாங்கியுள்ளது. இதன் மூலம் மக்களுக்கான அபிவிருத்தியை விடவும் அமைச்சர்கள் தங்களை அபிவிருத்தி செய்யவே அக்கறை காட்டுகிறார்கள்.**

இந்த அறிக்கை ஐக்கிய தேசிய கட்சியின் பொது செயலாளரிடம் கையளிக்கப்படவுள்ளதாக நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரா தெரிவித்துள்ளார்.

கட்சியின் சமத்துவத்திற்கு தீங்கிழைக்கும் வகையில், நடத்தப்பட்ட இந்த மக்கள் சந்திப்பு மற்றும் அதனை ஏற்பாடு செய்தவர்கள் தொடர்பான விவரங்கள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ பெரேரர குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, சிறிகொத்தாவில் தாக்குதல் நடத்திய சம்பவம் தொடர்பில் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் 18 உறுப்பினர்களின் பிணையை ரத்து செய்யுமாறு அதன் நிர்வாக பணிப்பாளர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான ஸ்ரீ கொத்தாவின் நிர்வாக பணிப்பாளராக செயற்படும் புஞ்சி பண்டார மெதகெதரவினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(எ)

## வெட்டிக் கொல்லப்பட்ட 45 ஆயிரம் மாடுகள்

கொழும்பு, மார்ச் 21

இலங்கையின் வடமேல் மாகாணத்தில் மாத்திரம் இறைச்சிக்காகக் கொல்லப்படும் மாடுகளின் எண்ணிக்கை 45 ஆயிரத்தையும் தாண்டிச் செல்வதாகத் தெரிவிக்கப்படுகிறது. நாளொன்றுக்கு 126 மாடுகள் இறைச்சிக்காகக் கொல்லப்படுகின்றன.

வடமேல் மாகாண சபையின் மனித வள அபிவிருத்தி அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டுள்ள ஆய்வில் இந்த விபரம் வெளியாகியுள்ளது.

பிரதேசத்தில் மாட்டிறைச்சிக்கு நிலவும் பற்றாக்குறை காரணமாக நாளொன்றுக்கு 10 லீற்றர் வரையில் பால் கறக்கும் பசுக்கள் கூட இறைச்சிக்காக கொல்லப்படும் நிலை உருவாகியுள்ளதாகவும் ஆய்வு தெரிவிக்கிறது.

மாடுகள் கொல்லப்படுவதை கட்டுப்படுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாது போகுமானால் வெகு விரைவில் பால் பசுக்கள் அருகி அழிந்து போவதைத் தடுத்து நிறுத்த முடியாது போய்விடும் என மேலும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ-22)

## அபிவிருத்திக்கு 213 மில்லியன் டொலர்

கொழும்பு, மார்ச் 21

கொழும்பு மாநகர அபிவிருத்தி திட்டத்துக்கான 213 மில்லியன் அமெரிக்க டொலர் கடன்தொகையை, உலக வங்கி உறுதிப்படுத்தியுள்ளது.

உலக வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இந்த தகவல் வெளியிடப்பட்டுள்ளது. கொழும்பு மாநாகரசபை பிரதேசத்தை அபிவிருத்தி செய்தல், சீரான சுற்றாடலை ஏற்படுத்தல் உள்ளிட்ட வேலைத்திட்டங்களுக்கு இந்த கடன்நிதி பயன்படவுள்ளது. இந்த வேலைத்திட்டம் எதிர்வரும் 2016ம் ஆண்டு நிறைவடைகிறது.

## மருந்து வழங்க இராணுவத்தின் உதவி

கொழும்பு, மார்ச் 21

அரச மருந்தகங்களில் மருந்துப் பொருள்களை விநியோகிப்பதற்கு இராணுவத்தின் ஒத்துழைப்பு கோரப்பட்டுள்ளது.

அரச மருந்தாக்கல் நீதி நிறுவனத்தின் தலைவர் எச்.டி.ஜயரத்ன இதனைத் தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு, இராணுவத்தில் மருந்துப் பொருள் தொடர்பில் பயிற்றப்பட்டவர்களை வழங்குமாறு கோரி இருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

மருத்துவ சேவை உதவியாளர்கள் தொடர்ந்து 6வது நாளாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளதால் நாடு முழுவதிலுமுள்ள வைத்தியசாலைகளில் மருந்துகளைப் பெறமுடியாது மக்கள் அவலப்பட்டு வரும் நிலையிலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை சுகாதார அமைச்சினால், நோயாளர்களுக்கு மருந்து வழங்கும் பொறுப்பை, அரச மருந்தகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ங)

## அகதி அந்தஸ்து வழங்கப்படும்

இந்த ஆண்டு ஆஸ்திரேலியாவில் இலங்கை உள்ளிட்ட நாடுகளில் இருந்து சென்ற அகதிகளுள் அதிக எண்ணிக்கையானவர் அகதி அந்தஸ்து வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

த டெய்லி டெலிகிராப் இணையத்தளம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

கனடாவை விட இரண்டு மடங்கு அதிகமாக, இந்த ஆண்டு அகதி அந்தஸ்து வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 2011ம் ஆண்டுக்கு முன்னர் அங்கு அகதியாக சென்றவர்களுள், 60 சதவீத மானவர்களுக்கு அகதி அந்தஸ்து வழங்கப்படவிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாடாளுமன்ற கேள்விக்கு தெளிவான பதிலே தேவை

**சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரித்தார்**

கொழும்பு, மார்ச் 21

நாடாளுமன்றத்தில் கேள்விகளைக் கேட்கும்போதும் பதிலளிக்கும் போதும் அவற்றை தெளிவாகக் குறிப்பிடும்படி சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா, ஐ.தே.க. பிரதித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஆகியோருக்கு சபாநாயகர் சமல் ராஜபக்ஷ எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

கேட்கப்பட்ட கேள்வியொன்றுக்கு முறையாக பதிலளிப்பதை அமைச்சர் பெரேரா தவிர்க்க முனைந்தபோது அவரை முதலில் சபாநாயகர் எச்சரித்தார். தேவையற்ற விவரங்களை கூற முயற்சிக்காமல் பதில்களை தெளிவாக கூறுங்கள். கேள்விகளைச் சரியாக புரிந்துகொண்டு பொருத்தமான பதிலை அளியுங்கள். இது நாடாளுமன்றத்தின் பெறுமதியான நேரத்தை சேமிக்க உதவும் என சபாநாயகர் கூறினார்.

அதேவேளை, ஒழுங்குபத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பிரதான கேள்விக்கு அளிக்கப்படும் பதில்கள் தொடர்பாக எழும் உப கேள்விகளைக் கேட்கும்போது தெளிவாகக் கேட்குமாறு சஜித் பிரேமதாஸவிடம் சபாநாயகர் கூறினார்.

எனினும் தான் உப கேள்விகளை கேட்கும்போது இந்த கொள்கையை தான் பின்பற்றிவருவதாக சஜித் பிரேமதாஸ தெரிவித்தார். - என்றார்.

(எ)

# எமது எதிர்கால சந்ததிக்கு காசநோயை தடை செய்வோம்

*ஜெயவதனன் காயத்திரி*

**எதிர்வரும் 24 ஆம் திகதி காசநோயாளர்கள் தினம். இதனை முன்னிட்டு காசநோய் சிகிச்சை நிலையத்தால் நடத்தப்பட்ட போட்டியில் பிரிவு இரண்டில் முதலிடம் பெற்ற கட்டுரை.**

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'' என்னும் வாக்கிற்கிணங்க மனிதனானவன் இக்காலத்தில் எதிர்பார்க்கும் அளப்பெரிய செல்வம் "நோயற்ற வாழ்க்கையே''. அறிவென்னும் ஆற்றலினால் பல நோய்கள் குணப்படுத்தப்பட்டு வருகின்றன. அதற்கு தொழில்நுட்ப சாதனங்கள் பெரிதும் பங்காற்றி வருகின்றன. அதைவிட மனிதனானவன் தன்னையும், தன்னைச் சூழ உள்ள சுற்றாடலையும் தூய்மையாகப் பேணுவானாகில் நோய் என்னும் ஆட்கொல்லிக்கு ஆளாகத் தேவையில்லை. நோய்கள் என்பது மனிதனைச் சிறைவைக்கும் கூட்டுக்கம்பிகள் அவற்றை தகர்த்தெறிய வேண்டுமெனின் மனிதனானவன் நல்லதான வாழ்க்கை முறைக்கு பழக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

நோய்கள் இரு வகைப்படும். தொற்றுநோய்கள், தொற்றாத நோய்கள் என்று வகுக்கிறார்கள். தொற்றுநோய்கள் பெரும்பாலானவை நுண்கிருமிகளால் தொற்றுதல் அடைகின்றன. அந்த வகையில் 'காசநோய்' அல்லது ரி.பி (TB) என்பது பக்றீரியா நுண்கிருமிகளால் ஏற்படும் நோய்.

நோய்க்கிருமியானது நோயாளி இருமும்போது வெளிவரும். ஆயிரக்கணக்கான நோய்க் கிருமிகளைக் கொண்ட துணிக்கைகள் வெளியில் பரவும். இது வெளியில் பரவிப் பல மணிநேரம் இருக்கும். காற்றினால் ஐதாக்கப்படும். சூரிய ஒளியால் அழிக்கப் படும். ஒருவரில் நோய்க் கிருமிகள் தொற்றுவது என்பது நோயாளி இருமும் போது உள்ள வளியை ஒருவர் எவ்வளவு நேரம் சுவாசிக்கின்றார் என்பதிலும் வெளியில் உள்ள நோய்க் கிருமிகளின் செறிவிலும் தங்கியுள்ளது. உடலினுள் செல்லும் நோய் கிருமிகள் பொதுவாக சுவாசப்பையைத் தாக்குகின்றது. சுவாசப்பையில் ஏற்படும் காசநோய் 'நுரையீரற் காசநோய்' என்று அழைக்கப்படும். உடலின் எந்தப் பகுதியிலும் காசநோய்கிருமிகள் தங்கியிருக்கக்கூடும்.

சரியான சிகிச்சையின் மூலம் காசநோயைக்குணப்படுத்த முடியும். முறையான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ளாதவர்கள் காசநோயால் இறக்க நேரிடும்.

குறைந்த காற்றோட்டம் உள்ள இடங்களில் நெருக்கமாக வாழ்வோர் சமயலறைகளில் அதிகம் வேலை செய்வோர், தூசுகளில் வேலை செய்வோர், ஆடை தொழிற்சாலைகளில் வேலை செய்வோர், மதுபானம் பாவிப்போர், புகைப்பிடிப்போர், போதைப் பொருள் பாவிப்போர், சலரோக நோயாளிகள், மன நோயாளிகள், எயிட்ஸ் நோயாளி போன்றோரில் காசநோய் அதிகம் பரவலடைகிறது.

பொது மலசலகூடம் பாவிப்போரிலும் காசநோய் பரவும் தன்மை அதிகம். உலகிலே இந்தியாவில் அதிக காசநோயாளர் உள்ளனர். இலங்கையில் இருப்பதைப்போல் 30மடங்கு அதகமாக காசநோய்த்தொற்று நிகழ்தகவு இந்தியாவிலுண்டு.

இந்தியாவுக்குச் சென்று வந்து மீளக்குடியமர்ந்தவர்களில் காசநோய் ஏற்படச் சந்தர்ப்பங்கள் உண்டு. மத்திய கிழக்கில் வேலை செய்யச் சென்றவர்களிலும் காசநோய் அதிகம் ஏற்பட வாய்ப்பு உண்டு. காசநோய் பல்வேறு வழிகளில் பரவலடைந்து ஏற்படினும் அதனை பரவலடையாது தடுப்பதற்குப் பல வழிகள் உண்டு.

தொற்றுக்குள்ளானவர்களில் நோய்க்கிருமிகளின் எண்ணிக்கை மிக அதிகமாகக் காணப்படுமாயின் அல்லது நோய்க்கிருமி தொற்றியவரின் நோய் எதிர்ப்புச் சக்தி மிகக் குறைவாக இருப்பின், தொடர்ந்து கிருமிகள் பெருகி, நுரையீரலின் அதிக பகுதியைப் பாதிக்கும். இதனால் நுரையீரல் சாதாரணமாகச் சுருங்கி விரியும் தன்மையைப் பகுதியாக இழந்து நாரிழை போலாகும். மேலும் கல்சியப் படிவுகளும் உருவாகும்.

நோய்க்கிருமிகளின் எண்ணிக்கை குறைவாகவும், நோய் எதிர்ப்புச்சக்தி அதிகமாகவும் இருப்பின், சிறியகுழி உருவாகும். அதனைச் சுற்றித்தடித்த நாரிழை போலாதலாலும் கல்சியம் படிவதாலும் ஏற்படும்.

ஒருவரின் நோய் எதிர்ப்புச் சக்தி குறையும்போது முதல் நிலைத்தொற்றில் இருந்து நோய் பரவ ஆரம்பிக்கும், நோய்ப் பரவல் நாரிழை போன்ற சிறிய குழி அழிவுறுவதால் சுவாசச் சிறு குழாய்கள் மூலம் பரவலாம். சுவாசச்சுற்று மென்சவ்வுடன் ஆரம்பநிலை மாற்றங்கள் தொடர்புறுவதால் நுரையீரல் குழாய்களுடனும் நிணநீர்களுடனும் தொடர்பு கொள்ளும் நிணநீர் கானுடனும் பரவலாம். இது கழுத்து நிணநீர்க்கணுக்களில் வீக்கத்தை பொதுவாக ஏற்படுத்தும்.

குருதியின் ஊடான பரவல் உடனடியாக உடல் முழுவதும் ஏற்படலாம். இது 'மில்லியறி' காசம் எனப்படும். அல்லது மூளை மென்சவ்வைத் தாக்கும் மூளைக் காசத்தை ஏற்படுத்தும். குருதியின் மூலம் படிப்படியாக என்பு, மூட்டு, சிறுநீரகம் எனப் பரவல் நீண்ட காலங்களுக்கு நிகழலாம்.

காசநோய்க்குரிய அறிகுறிகள் தெளிவாக இருக்காது, பொதுவாக இருமல் காணப்படும். இந்நோயானது தொற்றியபின் நுரையீரலில் ஏற்படும் மாற்றங்களான நாரிழையமாதல், சளி சுரப்பதாலும், நுரையீரல் சுற்று மென்சவ்வு பாதிக்கப்படுவதாலும், சுவாச வீதம் பாதிக்கப்பட்டு இருமல் ஏற்படும். இந்த நோய்க்காரணி ஆரம்பத்தில் குருதிக்கலன்களைப் பாதிப்பதால் குருதி வெளியேறி, இருமலுடன் குருதி வெளியேறும். மேலும் அனுசேப மாற்றங்களால் மாலைநேரக் காய்ச்சல், இரவில் வியர்த்தல், உணவில் நாட்டமின்மை, உடல் மெலிதல் ஏற்படும்.

நோய்க்கிருமிகள் சுவாசப்பை, மூளை, இதயம், முள்ளந்தண்டு, குடல் நிணநீர்க்கணு, என்பு என்பவற்றைத் தாக்கும். சிறுவர்களில் இந்த நோய்த் தொற்றலை அறியப் பல அம்சங்கள் கவனத்தில் எடுக்கப்படுகிறது. குழந்தைகளில் தொடர்ச்சியாகக் காணப்படும் காய்ச்சல், இருமலின் காலம், போசனை நிலை, குடும்பத்தில் காசநோய் உள்ளமை என்பன கருத்தில் எடுக்கப்படும். மேலும் காசநோய்க்கான தோல் சோதனை, நிணநீர்கணு வீக்கம் என்பன கருத்தில் எடுக்கப்படும். வளர்ந்தவர்களில் சளிச் சோதனை செய்வதன் மூலம் நோய்க்கிருமித் தொற்றலினை அடையாளம் காணலாம். மேலும் சளியை வளர்பூ கங்களில் வளர்த்து மகிழமைக்குப் பின் நோய்க் கிருமித் தொற்றலை அடையாளம் காணலாம். மேலும் இவ் நோய்த் தொற்றலை கண்டு பிடிக்க, மாதிரியினை நிறமூர்த்தத் தொழினுட்ப உதவியினையும் பெறலாம்.

நோய்க்கான சிகிச்சையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு நான்கு மருந்துகள் இரண்டு மாதங்களுக்கும், இரண்டு மருந்துகள் நான்கு மாதங்களுக்கும் குறைந்தது கொடுக்கப்படும். வைத்தியசாலையில் தங்க விரும்பாதோர் தனிப்பட்ட முறையில் சிகிச்சை பெறலாம். மருந்துகள் உட்கொள்ளும்போது சுடை போன்ற மீன்களையும், மாசிக் கருவாடு, தகரத்தில் அடைத்த மீன்களையும் உட்கொள்ளக் கூடாது. ஒவ்வாமை சிறிது ஏற்படலாம். இதன் போது கண் மஞ்சள் நிறமாகும். இதன்போது மருந்துகளை உட்கொள்ளாது நிறுத்தி மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்துக்குச் செல்ல வேண்டும். ✱

# ஜெனிவாவில் கலந்துரையாடலை குழப்பிய அரச ஊடகவியலாளர்கள்



நடுநிலைமையோடு செயற்பட வேண்டிய ஊடகவியலாளர்கள் ஊடக தர்மத்தை குழிதோண்டிப் புதைத்துவிட்டு இனவாத வெறியுடன் செயற்பட்டமை பலருக்கும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது

ஜெனிவா, மார்ச் 21

ஜெனிவாவில் நடைபெற்றுவரும் மனித உரிமைகள் சபை அமர்வின் பக்க நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்ட இலங்கை அரச சார்பு ஊடக வியலாளர்கள் இருவர் உட்பட 15 பேர் கொண்ட குழுவினர் அங்கு மோசமான முறையில் நடந்து கொண்டமைக்காக சுவிஸ் பொலிஸாரால் வெளியேற்றப்பட்டனர்.

பக்க நிகழ்வு ஒன்றில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்படவுள்ள தீர்மானம் குறித்து கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றுக்கொண்டிருந்தது. அதில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளையும் கலந்து கொண்டார். சர்வதேச மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள் இதில் பங்கு பற்றினர். இலங்கைக்கு எதிரான தீர்மானம் அவசியம் எனவும் யுத்தக் குற்ற மீறல்கள் தொடர்பில் அது பதில் அளிக்க வேண்டும் எனவும் அங்கிருந்தவர்கள் வலியுறுத்தினார்கள். இதனால் ஆத்திரமடைந்த இரு ஊடகவியலாளர்கள் உள்ளிட்ட சிங்களவர்கள் சிலர் பெரும் குரலில் சத்தமிட்டு அநாகரிகமாக நடந்துகொண்டனர். இது குறித்து ஆணையாளர் நவநீதம்பிள்ளை உடனடியாக சுவிஸ் பொலிஸாருக்கு அறிவித்தார். அங்கு வந்த அவர்கள் குழப்பம் விளைவித்தவர்களை அங்கிருந்து வெளியேற்றினார்கள். (த)

# சுனந்த கைதாகவில்லை



ஜெனிவா, மார்ச் 21

ஜெனிவா மனித உரிமைகள் சபையின் கட்டடத்துக்கு வெளியே நேற்றுமுன்தினம் நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களவர்கள் கூடி மேற்கொண்ட ஆர்ப்பாட்டத்தைப் படமெடுக்க முயன்ற பிரபல ஊடக வியலாளர் சுனந்த தேசப்பிரியவை அங்கிருந்த சிலர் தாக்க முற்பட்டனர். இதனை அடுத்து சுனந்த அங்கிருந்து சுவிஸ் பொலிஸாரால் பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டார்.

பிக்குகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட சிங்களவர்கள் மனித உரிமைகள் கட்டடத்துக்கு வெளியே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ஊடக வியலாளர் சுனந்த தேசப்பிரிய அதனை படம் பிடித்தார். தம்மைப் படம் பிடிக்க வேண்டாம் என அவர்கள் சுனந்தவை எச்சரித்தனர். ஆயினும் சுனந்த படம் பிடிப்பதில் தொடர்ந்து ஈடுபட்டார். இதனால் ஆத்திரமடைந்த அவர்கள் சுனந்தவை தாக்க முற்பட்டனர். இதனையடுத்து அங்கு நின்ற பொலிஸார் சுனந்தவை பாதுகாப்பாக அங்கிருந்து அழைத்துச் சென்றனர்.

இந்தச் சம்பவத்தை இலங்கையில் உள்ள சுயாதீன தொலைக்காட்சி சுனந்த கைது செய்யப்பட்டார் எனத் தெரிவித்து செய்திவெளியிட்டிருந்தது.

நேற்றும் ஜெனிவாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தான் கலந்து கொண்டதாகவும், தான் தைாகவில்லை எனவும் சுனந்த நேற்றுமாலை உதயனுக்குத் தெரிவித்தார். (த)

# 43 பேருக்கு மரணதண்டனை

கொழும்பு, மார்ச் 21

இலங்கை முழுவதும் கடந்த இரண்டரை மாத காலத்துக்குள் 43 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இவர்கள் அனைவரும் வெலிக்கடை மற்றும் போகம்பறை சிறைச்சாலைகளுக்கு அனுப்பப் பட்டுள்ளதாக சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவர்களில் அதிகளவிலானோர் கொலைக் குற்றங்களோடு தொடர்புடையவர்கள். ஏனையோர் போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டவர்கள்.

கடந்த 15 ஆம் திகதி வரையில் மரண தண்டனை தீர்ப்பு வழங்கப்பட்டுள்ள 25 பேர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும் 18 பேர் போகம்பரைச் சிறைச்சாலைக்கும் அனுப்பப்பட்டுள்ளனர். எனினும் இவர்களுக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுமா இல்லையா என்பது குறித்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை. இவ்வாறு மரண தண்டனை விதிக்கப்பட்டோரில் ஒருவர் பெண் என்பதும்குறிப்பிடத்தக்கது.

கடந்த வருடமும் முதல் நான்கு மாத காலத்துக்குள் 43 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. எனினும் கடந்த வருடத்துடன் ஒப்பிடும் போது இந்த வருடத்தில் முதல் இரண்டரை மாத காலத்தினுள் 43 பேருக்கு மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளமையானது நாட்டில் குற்றங்களின் வீதம் அதிகரித்துள்ளமையையே காட்டுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ங-22)

# விபத்தில் ஒருவர் சாவு

வடமராட்சி, மார்ச் 21

வடமராட்சி நெல்லியடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார்.

அல்வாய், மடத்தடிப் பகுதியைச் சேர்ந்த சின்னத்துரை விபுலானந்த அடிகள் (வயது-53) என்பவரே இவ்வாறு மரணமானவர் ஆவார்.

நெல்லியடிப் பகுதியில் நேற்றுப் பிற்பகல் எதிரே வந்த மோட்டார் சைக்கிள் ஒன்று சைக்கிளில் வந்து கொண்டிருந்த குறித்த நபரை மோதித் தள்ளியது. இதனால் படுகாயமடைந்த அவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டு அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சை பயனளிக்காத நிலையில் அவர் உயிரிழந்தார். (ங-15)

# புறக்கணிப்பு இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், மார்ச் 21

தரப்புள்ளிச்சராசரி (ஜி.பி.ஏ.) காரணமாக சிறப்புக் கலைமாணித் தெரிவில் இருந்து வந்த பிரச்சினையைச் சுமுகமாகத் தீர்ப்பதாக முடிவுசெய்யப்பட்டுள்ளதை அடுத்து, யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மேற்கொண்டு வந்த வகுப்புப் புறக்கணிப்பு தற்காலிகமாக இடைநிறுத்தப் பட்டுள்ளது.

எனவே நாளை வியாழக் கிழமை தொடக்கம் அனைத்து வருட மாணவர்களும் விரிவுரைகளுக்குச் சமுகமளிப்பார்கள் என்று மாணவர் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தருக்கும், துறைத் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது. அதன் பின்னரே இந்த முடிவு எட்டப்பட்டது.

சிறப்புக் கலைமாணிப் பாடத்தெரிவுக்குத்தகுதி இருந்தும் பலருக்கு அந்த அனுமதி மறுக்கப்பட்டதனைக் கண்டித்து கடந்த ஒரு வாரகாலமாகவகுப்புப் புறக்கணிப்பில் கலைப் பீட மாணவர்கள் ஈடுபட்டிருந்தனர். (ங-4)

# திருடியவருக்கு 6 மாத கடூழியச்சிறை விதிப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 21

திருட்டு, சிறையில் இருந்து தப்பியோடிய குற்றங்களில் ஈடுபட்டவருக்கு 6 மாத கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றில் நீதிவான் மா. கணேசராஜா முன்னிலையில் நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

அராலி வீதி, ஒட்டுமடத்தில் 2010 ஆம் ஆண்டு மே 18 ஆம் திகதி 10 ஆயிரத்து 500 ரூபா பெறுமதியான சைக்கிளைத் திருடியதனை ஒப்புக் கொண்டதையடுத்து யாழ். பொம்மை வெளியைச் சேர்ந்த சுள்ளான் என்று அழைக்கப் படும் நாகநாதன் பிரசன்னா என்பவருக்கே 6 மாத கால கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர் விளக்கமறியல் இருந்த போது சிறையிலிருந்து தப்பி ஓடியதனால் அவருக்கு ஏற்கனவே 6 மாதகால சாதாரண சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை-

மார்ட்டீன் வீதி, யாழ்ப்பாணத்தில்உள்ளவீடொன்றினுள் அத்துமீறி நுழைந்து ஒரு இலட்சத்து 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளைத் திருடிய அநுராதபுரத்தைச் சேர்ந்த ஹென்றி முகம்மது ரபீக் என்பவருக்கு நேற்று 6 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. (ங-4)

# நாளை அமைதி ஊர்வலம்

## பெண்கள் சிறுவர் மீதான வன்முறையைக் கண்டித்து

யாழ்ப்பாணம், மார்ச் 21

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, தேவை நாடும் மகளிர் அமைப்பும், மனித உரிமைகள் இல்லமும் இணைந்து அமைதி ஊர்வலம் ஒன்றை நடத்தத் திட்டமிட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் பெண்கள், சிறுவர்கள் மீதான வன்முறைகள் அதிகரித்துச் செல்கின்றன. இந்தக் குற்றங்களைப் புரிவோருக்கு தகுந்த தண்டணை வழங்க வேண்டும், சட்டத்தை வலுவான முறையில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும், ஆகிய இரு கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது. ஊர்வலத்தின் இறுதியில் யாழ்.அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்படும்.

நாளை வியாழக்கிழமை காலை 8.30 க்கு நல்லூர் முருகன் ஆலய முன்றிலில் இருந்து யாழ்.செயலகம் நோக்கி நடைபெறவுள்ள இந்த அமைதி ஊர்வலத்தில், சகல நிறுவனங்களின் பணியாளர்கள், சமூக ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து கொண்டு பெண்கள் மீதான வன்முறைக்கு எதிராக்க் குரல் கொடுக்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (த-16)

# மரண அறிவித்தல்

## சமூக ஜோதி

## சரவணமுத்து இலகுப்பிள்ளை



சுதுமலை தெற்கு, ஆராச்சியாளர் வளவினைப்பிறப்பிடமாகவும், 34/1, விவேகானந்த வீதி, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட சரவணமுத்து இலகுப்பிள்ளை 18.03.2012 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் சரவண்முத்து - பூங்காவனம் தம்பதியரின் கனிஷ்ட புத்திரனும், அளவெட்டி சேவையர் தம்பிராஜா - செல்லம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும், லண்டனில் வசிப்பவர்களான இராசமலரின் அன்புக் கணவரும், லம்போதரன் (கணினிப்பொறியியலாளர்), டாக்டர் குமணன் ஆகியோரின் அருமைத் தந்தையும், யாழினியின் பாசமிகு மாமனும், அமரர்களான கனகம்மா, மாணிக்கவாசக முதலியார், அன்னப்பிள்ளை, கனகசபை (தபாலதிபர்), தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும், கமலாம்பிகை, காலஞ்சென்றவர்களான நாகலிங்கம், நமசிவாயம் (விதானையார்), புனிதவதியம்மாள் (ஆசிரியை), சுகிர்தமலர், லண்டனில் வசிப்பவர்களான நேசமலர், சுலோஜனா, சிவபாலன் (பொறியியலாளர்), டாக்டர் உமைபாலன், குகபாலன் ஆகியோரின் மைத்துனரும், கமலாதேவி, சாந்தராஜா, சரஸ்வதி (ராதா), செல்வக்குமார் ஆகியோரின் தாய்மாமனும், சதானந்தா (I.S.A.), நிரந்தரி, பெருமாள்பிள்ளை பிரணவானந்தா ஆகியோரின் சிறிய தகப்பனும், ராகவேந்தன், பாலகஜன், ஶ்ரீரங்கன், திருச்செல்வம் (பொறியியலாளர்), நாகேஸ்வரி, சசிகலா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் அவரது இல்லத்தில் 21.03.2012 புதன்கிழமை தொடக்கம் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 22.03.2012 வியாழக்கிழமை நப.12 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று, பி.ப. 3.30 மணிக்கு பொறளை கனத்தை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்: இ. லம்போதரன் (மகன்)*

# மரண அறிவித்தல்கள்

## மதியாபரணம் தேவநாயகி



*(ஓய்வுபெற்ற ஆசிரியர்)*

இடைக்காட்டைப் பிறப்பிடமாக வும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மதியாபரணம் தேவ நாயகி நேற்றுமுன்தினம் (19.03.2012) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான காசிலிங்கம் - இராசம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் மதியாபரணத் தின் அன்பு மனைவியும், நர்மதா, துசாந், லக்சிகா ஆகியோரின் அன்பு தாயும், சுயிந்தனின் மாமியும், ஹரினியாவின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2012) வியாழக் கிழமை மு.ப. 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி இந்து மயானத்துக்கு எடுத் துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

## முத்துராசா விவேகானந்தன்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்து (Holand) நாட்டை வசிப்பிடமாகவும் கொண்ட முத்துராசா விவேகானந்தன் நேற்று (20.03.2012) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நீர்வேலி மேற்கு.

தகவல்:
ம. தயாகரன்
(மருமகன்)

# இந்தியாவின் நிலைப்பாட்டில் வரவேற்க ஒன்றுமேயில்லை

## பொதுவுடைமைக் கட்சி சாடல்



**அமெரிக்க தீர்மானத்தில் ராஜபக்ஷ குழுவினர் மீது பன்னாட்டுக் குற்றவியல் விசாரணை எதுவும் கோரவில்லை என்றும், தமிழர் இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தொடக்க நிலை முயற்சி எதுவும் இந்த தீர்மானத்தில் இல்லை.**

சென்னை, மார்ச்.21

இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க முன் வந்திருப்பதில் வரவேற்க ஒன்றுமில்லை என்று தமிழ்த் தேசப் பொதுவுடைமைக் கட்சி தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக அந்தக் கட்சியின் தலைவர் மணியரசன், வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்ததாவது:

இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்கள் மீது விசாரணை நடத்த சர்வதேச விசாரணைக் குழுவை ஐ.நா. நியமிக்க வேண்டும் என்ற திருத்தத்தோடு அமெரிக்க தீர்மானத்தை இந்தியா ஆதரிக்கும் என்று பிரதமர் கூறியிருந்தால், அதை வரவேற்றிருக்கலாம்.

அமெரிக்க தீர்மானத்தில் ராஜபக்ஷ குழுவினர் மீது பன்னாட்டுக் குற்றவியல் விசாரணை எதுவும் கோரவில்லை என்றும், தமிழர் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தொடக்க நிலை முயற்சி எதுவும் இந்த தீர்மானத்தில் இல்லை.

மேலும் மனித உரிமை விசாரணை மற்றும் நடவடிக்கைகளில் ஐ.நா. மனித உரிமை ஆணையரின் அறிவுரைகளை இலங்கை பெற்றுக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்ளும் தீர்மான வாசகம் கூட நீக்கப்பட்டு விட்டதாகத் தெரிகிறது. அமெரிக்கா முன்வைத்துள்ள இந்தத் தீர்மானத்தை இன்னும் பலவீனப் படுத்திய பின்னரே ஆதரிக்கப் போவதாக இந்தியா முடிவெடுத் துள்ளது. இதனால் ஈழத்தமிழர்களுக்கு சிறு நியாயமும் கிடைத்து விடப்போவதில்லை - என்று அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

# மஹிந்தவைத் தண்டிக்கக் கோரி வியாபாரிகள் வேலை நிறுத்தம்

இலங்கையில் இடம்பெற்ற இறுதிப் போரில் தமிழர்கள் மீது இனப்படுகொலையை நடத்திய இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை குற்றவாளிக் கூண்டில் ஏற்றி தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தி, சென்னை கோயம்பேட்டில் வியாபாரிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 6 ஆயிரத்துக்கும் மேற்பட்ட காய்கறி, பழம் மற்றும் பூக்கடை ஆகியவை இதில் மூடப்பட்டுள்ளன. 20 ஆயிரத்துக்கும் மேற் பட்ட தொழிலாளர்கள், 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாகனச் சாரதிகள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். மேலும் இவர்கள் அனைவரும் உண்ணாவிரதத்தையும் மேற்கொண்டனர்.

இந்திய அரசு, இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை நேரடியாக மேற்கொள்ள வேண்டும். ராஜபக்ஷவை சர்வதேச குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்று உண்ணாவிரதத்தில்பங்கேற்றவர்கள் வலியுறுத்தினர்.

உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட வியாபாரி ஒருவர் தெரிவித்ததாவது:

முக்கிய தலைவர்கள் யாராவது மறைந்தால் மட்டுமே பூக்கடைகளுக்கு விடுமுறை விடுவோம். பல கோடி ரூபா வியாபாரிகள் மற்றும் விவசாயிகளுக்கு இழப்பு ஏற்பட்டாலும், இலங்கை தமிழர்களுக்காக நாம் வேலை நிறுத்தில் ஈடுபட்டுள்ளோம் - என்றார்.

# அகதிகள் உண்ணாவிரதம்

இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் குறித்து இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் வெளியிட்ட பதில்திருப்தி அளிக்கவில்லை என்று திருச்சிக்கு அருகில் அமைந்துள்ள வாழவந்தான் முகாமிலுள்ள 800 பேர் நேற்று ஒருநாள் உண்ணா விரதப் போராட்டத்தில் ஈடு பட்டனர்.

இலங்கை அரசுக்கு எதிரான தீர்மானம் குறித்து பிரதமர் மன்மோகன் சிங்கின் பதில்திருப்தி அளிக்கவில்லை என்று அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். (வ)

# புத்தாண்டு காலப்பகுதியில் பால்மாவுக்குத் தட்டுப்பாடு?

### உற்பத்தி நிறுவனங்கள் அபாய எச்சரிக்கை

எதிர்வரும் தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் பால்மா வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்படலாம் என்று பால்மா உற்பத்தி நிறுவங்கள் அபாய அறிவிப்புச் செய்துள்ளன.

ரூபாவுக்கு எதிரான டொலரின் பெறுமதி அதிகரிப்பு, பால் மாவுக்கான உற்பத்திச் செலவு அதிகரிப்பு என்பன காரணமாக பெருமளவிலான பால்மா நிறுவனங்கள் தற்போது பால்மா இறக்குமதியை நிறுத்தியுள்ளன. இதனால் இந்த நிறுவனங்கள் தற்போது தமது கையிருப்பிலுள்ள பால்மாவையே சந்தைக்கு அனுப்புகின்றன. எனினும் அவற்றின் கையிருப்பிலுள்ள பால்மாவின் அளவு மார்ச் மாதம் வரையே போதுமானதாக உள்ளது. எனவே ஏப்ரல் மாதத்தில் பால்மாவுக்குப் பெரும் தட்டுப்பாடு ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதாரத் தாக்கங்கள் காரணமாக 400 கிராம் பால்மா பக்கெற் ஒன்றுக்கான விலையை குறைந்தபட்சம் 30 ரூபா வரையில் அதிகரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் பால்மா நிறுவனங்களுக்கு ஏற்பட்டுள்ளது. இந்த விலை அதிகரிப்பு தொடர்பாக நுகர்வோர் அதிகார சபையிடம் அனுமதி கோரப்பட்டுள்ளது. எனினும் விலையை அதிகரிக்க இதுவரை அனுமதி கிடைக்கவில்லை. இதன் காரண மாக ஏற்பட்டுவரும் நஷ்டத்தை தாங்கிக்கொள்ள இயலாதிருப்பதாக பால்மா நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தொடர்ந்தும் ரூபாவின் பெறுமதி அதிகரித்துச் செல்வதால் தமக்கு ஏற்படும் நஷ்டம் இன்னும் அதிகரிக்கலாம் எனவும், எனவே தமது நஷ்டத்தை தடுக்கவும் பால் மாவுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதைத் தவிர்க்கவும் விலை அதிகரிப்புக் கோரிக்கைக்கு நுகர்வோர் அதிகார சபை சாதகமான பதிலை வழங்க வேண்டும் என்றும் அந்த நிறுவனங்கள் கோரியுள்ளன. (ந-22)

# ஆவரங்கால், இடைக்காடுக்கு கேபிள் இணைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 21

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் ஆவரங்கால், இடைக்காடு பகுதிக்கு கேபிள் தொலைபேசி-இணைப்பு வழங்கும் பணியை ஆரம்பித்துள்ளது. இந்த இணைப்பு வசதியை வழங்குவதற்கு முன்னர் ஆவரங்கால் சந்தியில் இம்சா என்ற தொலைத்தொடர்பு பரிவர்த் தனை அமைக்கப்பட்டுள்ளது.இந்த பரிவர்த்தனை மூலம் குறிப்பிட்ட பகுதிக்கான இணைப்புக்கள் வழங்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் இந்தப் பகுதிக்கு முதலில் இருநூறு இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருவது வித்தியா

**நாளை**

பங்குனி 09 வியாழக்கிழமை 22.03.2012
திதி: அமாவாசை முன்னிரவு 08.42 வரை
நட்சத்திரம்: பூரட்டாதி மு.ப 10.49 வரை
சுபநேரம்: 07.46- 09.16 வரை
ராகு காலம்: 01.46 - 03.16 வரை



**மேடம்:** பணவரவு வந்தாலும், அதில் ஒரு பகுதியை யாருக்காவது கடனாகக் கொடுக்கலாம். தெய்வ வழிபாடுகளுக்காக குறிப்பிட்டளவு செலவு செய்வீர்கள். தொழில் ரீதியான உங்களின் செயற்பாடுகளை, சக ஊழியர்கள் பாராட்டுவர். பெற்றோரின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். ஆறுதலான அனுபவம் பெறலாம்.



**இடபம்:** மனதில் புதிய எண்ணங்கள், சிந்தனைகள் தோன்றும். உறவுகளால் தொல்லைகளுக்கு ஆட்படலாம். கணிசமான பணத்தை செலவிட்டும், சில விடயங்களில் திருப்தி இல்லாமல் போகலாம். உடல் உபாதைகளால் உற்சாகம் குறைந்து சோர்வு ஆள்கொள்ளும். நண்பர்களுக்கு தெரிந்த ஒருவர், உங்களுக்கும் அறிமுகமாகலாம். பரபரப்பாகச் செயற்படும் நாள்



**மிதுனம்:** அடுக்கடுக்காக பல வேலைகள் குவிவதால், எரிச்சல், கோபம் அடையலாம். உடல் நலமில்லாமல் இருக்கும் உறவினர் ஒருவரை பார்க்கலாம். வீண் பிடிவாதங்களைத் தவிர்த்து, விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டும். சிலர் உங்களை எங்காவது வரச்சொல்லி விட்டு, அவர்கள் நீண்ட நேரம் கழித்து வரலாம். அலைக்கழிப்பு, தண்டச் செலவு நேரும்.



**கடகம்:** சொல்வாக்கைக் காப்பாற்ற முடியாமல் தவிக்கலாம். நண்பர்கள் சிலரிடம் மனம் விட்டுப் பேசி, உங்களின் ஆதங்கத்தை வெளிப்படுத்துவீர்கள். தொழில் விடயங்களில் நேர்மை, நாணயமாக நடந்து கொள்வீர்கள். உங்களுக்கு வேண்டிய ஒருவர் மீதுள்ள கோபத்தை, சிலர் உங்களின் மீது காட்டலாம். சபலங்களால்சங்கடங்களுக்கு ஆளாகலாம். மறதியால் அவதியுண்டு.



**சிங்கம்:** பணப்பற்றாக்குறையைத் தீர்க்க சிலரிடம் உதவி கேட்கலாமா அல்லது வேண்டாமா என்று யோசிப்பீர்கள். கலகலப்பான அனுபவங்களைப் பெறலாம். உங்களுக்காகவோ, பிள்ளைகளுக்காகவோ ஆடை, அலங்காரப் பொருள்கள் வாங் கலாம். உறவினர்களின் மனக்குறைகளை கேட்டறி வீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். கேளிக்கை, கொண்டாட்டம் உண்டு.



**கன்னி:** புதிய அனுபவங்களைப் பெறலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவு ஒன்று வரலாம். தேக ஆரோக்கியம், தெம்பு, உற்சாகம் தரும். உறவுப் பெண்கள் சிலர் கேட்ட பொருள்களை வாங்கிக் கொடுக்கலாம். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை, குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.



**துலாம்:** வீண் பேச்சுக்கள் பேசி நேரத்தை வீணடிப்பீர்கள். ஒருவர் மூலம் சில வேலைகளை முடிக்க முற்பட்டு, அது முடியாமல் மற்றவர்கள் மூலம் முடிக்கலாம். உறவினர்கள் அல்லது நண்பர்கள் சிலருக்கு நல்ல யோசனை சொல்வீர்கள். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைக்க முற்படுவீர்கள். வயிறு, வாயு உபாதையுண்டு.



**விருச்சிகம்:** நினைத்ததெல்லாம் நினைத்தபடி நடக்கும் நாள். பல நாள்களாக விட்டுப் போன நட்பு ஒன்றை புதுப்பிப்பீர்கள். குடும்பத்தினர் சிலர் மீது கடும் கோபம் கொண்டாலும், அதை வெளிக்காட்டிக் கொள்ளாமல் நடந்து கொள்வீர்கள். சில விடயங்களில் சூழ்நிலைக்கு ஏற்ற வகையில் நடந்து கொள்வீர்கள். சிலருக்கு கடன் உதவி செய்வீர்கள்.



**தனுசு:** வீட்டைச் சீரமைப்பதில் அக்கறை காட்டுவீர்கள். புதியவர்கள் சிலரின் சந்திப்பு நிகழும். தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். மற்றவர்கள் சிக்கலாக நினைக் கும் வேலை ஒன்றை, நீங்கள் எளிதாக முடிப்பீர்கள். ஊக்கம், உற்சாகம் கூடும். கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம்.



**மகரம்:** வாக்குவாதங்களைத் தவிர்க்க வேண்டும். திட்டமிட்ட சில வேலைகளை மாற்றி அமைக்கலாம். சிலர் உங்களிடம் இரக்கத்துடன், பரிவுடன் நடந்து கொள்ளலாம். உறவினர்கள் வருகையால் வீட்டில் கலகலப்பு உண்டாகும். சிக்கனமாக இருக்க நினைத்தாலும், ஏதாவது ஒரு வழியில் செலவுகள் உண்டாகும். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்கலாம்..



**கும்பம்:** செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள். நீங்கள் செய்ய வேண்டிய சில வேலைகளை, சக ஊழியர்களை நம்பி ஒப்படைப்பீர்கள். உறவினர்கள் சிலரின் கோரிக்கைகளை நிறைவேற்றி வைப்பீர்கள். பால்ய நண்பர் ஒருவருடன் எதிர்பாராமல் தொலைபேசியில் பேசலாம். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம்.



**மீனம்:** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை காணப்படும். வெளிவட்டாரத் தொடர்புகளை விரிவுபடுத்திக் கொள்வீர்கள். மாற்று மத நண்பர்களுக்கு வாக்குறுதி எதுவும் கொடுக்க வேண்டாம். நீங்கள் எதிர்பாராத ஒருவர் உங்களைத் தேடி வரலாம். மலைபோல் வந்த பிரச்சினை ஒன்று, பனி போல விலகி விடும் நாள். சில வேலைகளைச் செய்ய மறக்கலாம்.

# சுடோக்கு

## எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 5 | | | | | 4 | | 6 | 1 |
| 6 | 1 | 7 | 2 | | 3 | | | |
| 9 | 8 | | | 5 | | | 7 | |
| 7 | | 8 | | | | 3 | 5 | |
| | | | | 6 | | | | |
| | 5 | 1 | | | | 4 | | 6 |
| | 9 | | | 1 | | | 3 | 4 |
| | | | 3 | | 7 | 6 | 8 | 9 |
| 3 | 7 | | 4 | | | | | 5 |

## சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 9 | 3 | 8 | 2 | 4 | 1 | 6 | 5 |
| 1 | 4 | 8 | 7 | 5 | 6 | 9 | 2 | 3 |
| 2 | 6 | 5 | 3 | 1 | 9 | 4 | 8 | 7 |
| 9 | 8 | 4 | 5 | 6 | 7 | 2 | 3 | 1 |
| 6 | 2 | 1 | 9 | 4 | 3 | 5 | 7 | 8 |
| 5 | 3 | 7 | 1 | 8 | 2 | 6 | 4 | 9 |
| 3 | 5 | 6 | 2 | 9 | 8 | 7 | 1 | 4 |
| 4 | 7 | 9 | 6 | 3 | 1 | 8 | 5 | 2 |
| 8 | 1 | 2 | 4 | 7 | 5 | 3 | 9 | 6 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசது ரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை விபுலானந்த அடிகள்

(ஓய்வு பெற்ற கிளை முகாமையாளர், உடுப்பிட்டி ப.நோ.கூ. சங்கம்)



இமையாணன் கிழக்கு, உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், தெருமூடி மடத்தடி, அல்வாய் கிழக்கு, அல்வாயை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்துரை விபுலானந்த அடிகள் நேற்று (20.03.2012) செவ்வாய்க்கிழமை அகால மரணமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்துரை-சின்னத்தங்கம் தம்பதியரின் அன்பு மகனும், கிருஸ்ணன்-காலஞ்சென்ற சரஸ்வதி தம்பதியரின் அன்பு மருமகனும், தேவகியின் அன்புக் கணவரும், தாரகா, திவாகரன், முரளிகார்த்திக், கார்த்திகா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.03.2012) புதன் கிழமை பி.ப. 3.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கருகம்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தெருமூடி மடத்தடி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.

தகவல்:
மனைவி, பிள்ளைகள்.

## திருமதி பிள்ளையினார் தங்கம்



புங்குடுதீவு, 10 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், சுவிஸ், பேர்ண நகரை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிள்ளையினார் தங்கம் (19.03.2012) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு-வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான தம்பு-குழந்தனாச்சி தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பிள்ளையினாரின் அன்பு மனைவியும், சர்வலோகநாதன் (சுவிஸ்), காலஞ்சென்ற தர்மராணி மற்றும் சிவமலர் (கனடா), செல்வநாதன் (சுவிஸ்), தவநாதன் (சுவிஸ்), செல்வமலர் (லண்டன்), புஸ்பநாதன் (சுவிஸ்), இலங்கநாதன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும் காலஞ்சென்றவர்களான நடராசா, செல்லத்தம்பி மற்றும் சொர்ணம்மா (இலங்கை), தவமணி (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பத்மலீலா (சுவிஸ்), சண்முகானந்தவேல் (கனடா), புஸ்பலதா (சுவிஸ்), சந்திரவதனா (சுவிஸ்), ராதாகிருஸ்ணன் (லண்டன்), துஷ்யந்தி (சுவிஸ்), விஜிதா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமியும், காலஞ்சென்றவர்களான கண்மணி, கனகம், கந்தையா, செல்லத்தம்பி, பொன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெகன், சைலஜா, திலீப், தயாநிதி, சஞ்ஜீவ், சரன்ஜீவ், சைதீகா, நிவேதா, நிதர்சன், தர்மேகா, வினோதா, சித்தாலினி, சகானா, ரதீபன், யசானா, ஸ்ரெவ்யா, இலக்கியா, தீபிகா, லக்ஸன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சஞ்சனா, சதுஷா, ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.03.2012) வியாழக்கிழமை பி.ப. 3.00 மணிக்கு Crematorium Brugg Str. 121, 2503 Biel, Bern, Swiss இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நாதன் - சுவிட்சர்லாந்து +41789132283
புஸ்பன் - சுவிட்சர்லாந்து +41323510335
+41797506580

தகவல்:
குடும்பத்தினர்.

# சமாதான நல்லிணக்க பணியகத்தின் மீது இனந்தெரியாதோர் திடீர் தாக்குதல்

யாழ்ப்பாணம், மார்ச் 21

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வரும் சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகம் மீது கடந்த சனிக்கிழமை இனந்தெரியாதோர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

கொழும்பிலிருந்து வருகை தந்திருந்த சட்டவளவாளர்களால் இங்கு இலவச சட்ட உதவிகள் வழங்கப்படுமென தெரிவிக்கப்பட்டிருந்தது.அத்தகவலை அறிந்து கொண்டிருந்த காணாமல் போனோரது குடும்பங்கள் மற்றும் தடுப்புக்காவலில் குற்றச்சாட்டுக்கள் ஏதுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது குடும்பங்களென பலவும் திரண்டிருந்தன.

அப்போது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த நால்வர் விசாரணையில் ஈடுபட்ட பின்னர் அங்கிருந்து சென்ற அவர்கள் மீண்டும் கொட்டன்கள் மற்றும் பொதிகளில் அடைக்கப்பட்ட கழிவுப் பொருள்களுடன் வந்து கண்டபடி தாக்கினர். மக்கள் சிதறி ஓட ஓட இத்தாக்குதல்கள் நடந்ததாக கூறப்படுகின்றது. இதன்போது அங்கு தரித்து நின்ற சட்டத்தரணிகளின் வாகனங்களது கண்ணாடிகள் உடைத்து நொருக்கப்பட்டது. மக்கள் மீது கழிவுகள் வீசப்பட்டன. சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்ட போதும் அவர்கள் தாக்குதலாளிகள் தப்பிச் சென்ற பின்னரே அங்கு வந்து சேர்ந்தனர் என்றும் கூறப்படுகின்றது. இந்தத் தாக்குதலால் அங்கு கூடிநின்ற மக்கள் பெரும் அதிர்ச்சியடைந்தனர் என்றும் கூறப்படுகிறது. (ங-10-15)


## லொறி விற்பனைக்கு

ஆங்கில இலக்கமுடைய அரைத்தட்டு லொறி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773137556

## வேலையாள்கள் தேவை

ஆவரங்கால் பிரதான வீதியில் புதிதாக ஆரம்பிக்கப்பட உள்ள மருந்தகத்திற்கு முன் அனுபவமுள்ள மருந்தக உதவியாள்கள் தேவை.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:- 0777245546


## தவறிவிட்டது

தேசிய அடையாள அட்டை இல. 805293543V பெயர் துஷ்யந்தி மதிரூபன் கடந்த (20.03.2012) அன்று அரியாலை கனகரத்தினம் வீதிக்கும் றக்கா வீதிக்கும் இடையில் தவறவிடப்பட்டுவிட்டது. கண்டெடுத்தவர்கள் செ. செல்வராஜா, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவுமாறு தயவாகக்கேட்டுக் கொள்கிறேன்.

தொடர்புகளுக்கு - 0778692450


## ஓரேவாரத்தில் அழகிய நிறம்

ஓரே வாரத்திலே நீங்களா! என அதிசயிக்கும் மாற்றம்!! ஒரு முறை விஜயம் செய்து பாருங்கள் மாசுமரு அற்ற சிவப்பழகு!!! மற்றும், அனைத்து தோல் வியாதிகளுக்கும் (தேமல்,கரும்புள்ளி,கருந்துககருமை,கருவளையம்,தழும்பு) போன்றவைக்கு நிரந்தர தீர்வு...!!!
அழையுங்கள்:-0773988276
"சானியா" கேபல் கெயர்
10 நாட்களுக்குள்
இல-262, நாயன்மார்கட்டு, ஆயுர்வேத வைத்தியசாலை நல்லூர் யாழ்ப்பாணம்
இலவச பேசியலுடனான தீர்வு


"ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ"

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும்

| மண்ணுலகில் | | விண்ணுலகில் |
|---|---|---|
| 10 ❋ 08 ❋ 1930 |  | 20 ❋ 02 ❋ 2012 |

### அமரர் கணேஸ் சின்னம்மா

இமை மூடித் திறப்பதற்குள் நீர் மறைந்து
நாள்களோ முப்பத்தொன்றாகினதே
நாம் வாழும் காலம் வரை உங்கள் நினைவு
எம் மனங்களில் நீக்கமற நிறைந்திருக்கும்
உங்கள் ஆத்மா சாந்தி பெற அருளுமாறு
நிகரை சாமுண்டாதேவி ஞானவைரவப் பெருமாள்
பாதம் பணிகின்றோம்.

பிரதான வீதி,
சங்கானை.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

## சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை

(முன்னாள் ஆங்கில ஆசிரியர், வற்றாப்பளை றோ.க.த.க.பா., இடைக்காடு ம.ம.வி., புத்தூர் அ.மி.த.க.பா.)



வற்றாப்பளையைப் பிறப்பிடமாகவும், சென். ஜேம்ஸ் வீதி, பலாலி தெற்கு வசாவிளானை வசிப்பிடமாகவும் தற்போது கனடாவில் வாழ்ந்து வருமான சவரிமுத்து அந்தோனிப்பிள்ளை 18.03.2012 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் சிந்தாத்திரையம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) பாசமிகு கணவரும், காலஞ்சென்ற வேதநாயகம், தங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற பொன்னுத்துரை, செபரெட்ணம் (பொலிஸ் உத்தியோகத்தர்), அருளானந்தம் (ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்) மற்றும் செல்லம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஆஸ்திரேலியாவில் வசிக்கும் ஜசிந்தா, கரோலினா, கனடாவில் வசிப்பவர்களான பிறின்ஸ்லி, ஸ்ரெலா, சைமன், கீதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், கருணாகரன், கங்காதரன், உமா, மரியருள் ராஜன், வசந்தி, ஜேந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமனும், செல்வத்தின் வளர்ப்புத் தந்தையும், காலஞ்சென்ற ஜேம்ஸின் மாமனும், எடிசனின் தொட்டப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிச்சடங்குகள் கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.11, மூளாய் லேன்,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ஜேம்ஸ் செல்வம்


## மலரும் சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு !

### அதிரடி விலைக்கழிவில் Computer வாங்க..

| SDSCOM - I | SDSCOM - II | LAPTOP |
|---|---|---|
| Processor Intel Dual Core 3.0<br>Mother Board-Biostar G41<br>2GB DDR-3 Memory - Kingston<br>300GB Hard Disk Drive<br>Casing Tower 250W ATX<br>DVD / RW Writer<br>Monitor LCD 19" Viewsonic<br>USB Optical Mouse with pad<br>Multi Media Stereo Speaker<br>USB Keyboard<br>UPS 650VA<br>**Price :- Rs. 51,400/=**<br>**Free :**<br>**Panda Antivirus 2012**<br>Original | Processor Intel i3 3.2<br>Mother Board-Biostar i7 Supt.<br>2GB DDR-3 Memory - Kingston<br>1TB Hard Disk Drive<br>Casing Tower 250W ATX<br>DVD / RW Writer HP<br>Monitor LCD 19" Viewsonic<br>USB Optical Mouse with pad<br>Multi Media Stereo Speaker<br>USB Keyboard<br>UPS 650VA<br>**Price :- Rs.65,700/=**<br>**Free :**<br>**Panda Antivirus 2012**<br>Original | HP 430 Core i3/2GB/320GB ...<br>HP 430 Core i5/2GB/320GB ...<br>HP 4530 Pro Book Core i3/2GB/320GB ...<br>HP 4530 Pro Book Core i5/2GB/320GB .....<br>HP - 630 Core i3/2GB/320GB...<br>HP - G6 Core i3/2GB/320GB ....<br>Thoshiba L 640 D/Corei3/2GB /320GB .. |

★ 1-3 வருட வரையறுக்கப்பட்ட உத்தரவாதம்! ★கையிருப்பில் உள்ளவரை மட்டுமே.

**Our Services**

Sales, Repair & Maintenance, Software Developments and all type of Security solution etc..

**Authorized Dealer for..**

Hp, Dell Products
Biostar Mother Boards
T P Link Products
Viewsonic Products
Havit Products , EAST
Panda Antivirus and Etc...

வரவேற்கின்றோம்!
மொத்த / சில்லறை விற்பனையாளர்களுக்கு விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.

அனைத்துவிதமான Computer, Computer சார் பொருட்களுக்கும் சேவைகளுக்கும் தேவைகளுக்கும் நாடுங்கள்....

## SDS Computer Services

No. 42/1, College Road, Jaffna.
J/Hindu College மைதானத்திற்கு அருகாமையில்...
T/P:- 021-2224500,0215-100105 ,0777-874705

# வவுனியாச் சம்பியன்கள்

## பரபரப்பாக நடந்து முடிந்தது வலய உதைபந்தாட்டப் போட்டி

வவுனியா,மார்ச் 21

வவுனியா வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் 19வயது, 17 வயது ஆகிய இரு பிரிவிலும் முஸ்லிம் மகாவித்தியாலயம் வலயச் சம்பியனாகத் தெரிவானது.

இந்தப் போட்டியின் இறுதியாட்டங்கள் கடந்த வெள்ளிக்கிழமை நெளுக்குளம் கலைமகள் வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்றன.

முதலில் இடம்பெற்ற 19 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் வவுனியா முஸ்லிம் மகாவித்தியாலயமும் தமிழ் மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன.

ஆரம்பம் முதல் இறுதி வரை விறு விறுப்பாக இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் போட்டி ஆரம்பமாகி சில நிமிடங்களில் வவுனியா தமிழ் மகாவித்தியாலயம் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை சரியாகப் பயன்படுத்தி முதலாவது கோலைப் பெற்றுக் கொண்டது. இதன் பின் இரு அணி வீரர்களும் கோல்களைப் பெறுவதற்கு முயற்சித்த போதும் அது கைகூடவில்லை.

**வவுனியா வலய மட்ட உதைபந்தாட்ட இறுதிப்போட்டிகள் யாவும் விறுவிறுப்பாக அமைந்து பார்வையாளர்களுக்கு விருந்தளித்தன. இரண்டு பிரிவுகளில் முஸ்லிம் மகா வித்தியாலயம் சம்பியனானது.**

இந்த நிலையில் 1:0 என்ற அடிப்படையில் இடைவேளைக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.

இடைவேளையின் பின் ஆட்டம் மேலும் சூடுபிடித்தது. முஸ்லிம் மகாவித்தியாலய வீரர்கள் அடுத்தடுத்து இரு கோல்களை அடித்து, தமது வெற்றியை உறுதி செய்தனர். இறுதியில் 2:1 என்ற கோல் கணக்கில் முஸ்லிம் மகாவித்தியாலயம், தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தை தோற்கடித்து சம்பியனானது.

இந்தப் பிரிவின் 3 ஆம் இடத்தை நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் பெற்றுக்கொண்டது.

அடுத்து இடம் பெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான இறுதிப் போட்டியில் முஸ்லிம் மகாவித்தியாலய அணியும் மூன்று முறிப்பு அ.த.க பாடசாலை அணியும் மோதிக் கொண்டன. இந்தப் போட்டியும் மிகவும் விறுவிறுப்பாக இடம் பெற்றது. இறுதியில் முஸ்லிம் மகாவித்தியாலயம் 2:1 என்ற கோல் அடிப்படையில் வென்று சம்பியன் ஆனது.

இப் போட்டியின் மூன்றாம் இடத்தை வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது.

அடுத்து இடம்பெற்ற 15 வயதுப் பிரிவினருக்கான இறுதியாட்டத்தில் செட்டிக்குளம் மகாவித்தியாலயமும், பூவரசங்குளம் மகாவித்தியாலயமும் மோதிக் கொண்டன. இதில் செட்டிக்குளம் மகாவித்தியாலயம் 1:0 அடிப்படையில் வென்று சம்பியனானது.

இதில் 3ஆம் இடத்தை நெளுக்குளம் கலைமகள் மகாவித்தியாலயம் பெற்றுக் கொண்டது. இதே வேளை இப் பிரிவின் இறுதியாட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்ட முஸ்லிம் மகாவித்தியாலய அணி வீரர் ஒருவர் ஆள் அடையாளத்தை நிரூபிக்க போதிய ஆவணங்கள் சமர்ப் பிக்காத பட்சத்தில் இறுதி யாட்டதில் இருந்து நீக்கப் பட்மை குறிப்பிடத்தக்கது. (400)

## 'எங்களால் சாதிக்க முடியும்' விளையாட்டு நிகழ்வு இன்று

விசேட தேவையுடையவர்களைச் சமூகத்துடன் இணைப்பதற்கான 'எங்களால் சாதிக்க முடியும்' என்ற தொனிப் பொருளிலான விளையாட்டு நிகழ்வொன்று வவுனியாவில் இன்று இடம்பெறவுள்ளது. சாதாரண மாணவர்களுக்கும் விசேட தேவையுடைய மாணவர்களுக்கும் இடையில் நட்புறவினை ஏற்படுத்தும் நோக்கில் இந்த விளையாட்டு நிகழ்வு இடம்பெறுகிறது.

இதில் மெய்வன்மைப் போட்டி சைவப்பிரகாச வித்தியாலயத்தில் இன்றும், கரம், பூப்பந்தட்டம், சதுரங்கம் ஆகிய போட்டிகள் நாளையும் இடம்பெறவுள்ளன என வவுனியா தெற்கு கல்வி வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் ஜனாப் ஏ.எம்.சுபைர் தெரிவித்தார். (ங-400)

## தியாகலிங்கம் வெற்றிக்கிண்ண கிரிக்கெட்டில் வென்ற அணிகள்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

கனகசபை தியாகலிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக வலிகாமம் வலயப் பாடசாலைகளுக்கு இடையே இடம்பெற்ற ஆண் பெண் இருபாலாருக்குமான கிரிக்கெட் போட்டியில் வெற்றியீட்டிய பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

**பெண்கள் பிரிவு**

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி (முதலாமிடம்)

பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தரப் பாடசாலை (இரண்டாமிடம்)

குளமங்கால் ஆர்.சி வித்தியாலயம் (மூன்றாமிடம்)

**ஆண்கள் பிரிவு**

யூனியன் கல்லூரி (முதலாமிடம்)

இணுவில் மத்திய கல்லூரி (இரண்டாமிடம்)

சுழிபுரம் விக்டோரியாக் கல்லூரி (மூன்றாமிடம்)

(ங-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கிடையே நடாத்தும் 11 பேர் பங்கு பற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெற்று வருகின்றது.

அதில் இன்று புதன் கிழமை நடைபெறும் ஆட்டத்தில் பங்கு கொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

மாலை 4 மணி

கலட்டி ஐக்கிய விளையாட்டுக்கழகம் எதிர் நவிண்டில் கலைமதி விளையாட்டுக்கழகம்.

***

யாழ்ப்பாணம்,மார்ச் 21

**'சிங்கர்' நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ் மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் சிங்கர் வெற்றிக் கிண்ணத்துக்கான வலிகாமம் வலய கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டித் தொடர் இறுதி நிலைக்கு வந்துள்ளது.**

சிங்கர் கிண்ணத்துக்கான கரப்பந்தாட்ட இறுதிப் போட்டி இன்று புதன் கிழமை சங்கானை சைவப் பிரகாச வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

இறுதியாட்டத்தில் காங்கேசன்துறை ஐக்கிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சங்கானை யூத் விளையாட்டுக்கழக அணி மோதுகிறது. இறுதியாட்டம் நடை பெறுவதற்கு முன்னராக கரப்பந்தாட்டக் காட்சிப் போட்டி ஒன்றும் நடைபெறவுள்ளது.

இந்தக் காட்சிப் போட்டியில் சங்கானை பெண்கள் அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் பெண்கள் அணி மோதவுள்ளது.

குறித்த கரப்பந்தாட்டக் காட்சிப்போட்டி மாலை 5 மணிக்கும் இறுதிப் போட்டி மாலை 6 மணிக்கும் இடம் பெறவிருப்பதாக ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ங-23)

## உயர்வுக்கு ஊக்கம்



பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது களம்புகக் காத்திருக்கும் உதைபந்தாட்ட வீரர்களை சந்தித்து கைலாகு கொடுத்து அரச அதிபர் இமெல்டா சுகுமார் உற்சாகப்படுத்தினார். (ங)

## உடுவிலை வீழ்த்தியது இராமநாதன் கல்லூரி

வலி.வடக்கு, மார்ச் 21

உடுவில் கல்விக் கோட்ட பாடசாலைகளுக்கு இடையே நடைபெற்ற 19 வயதுப் பெண்களுக்கன வலைப் பந்தாட்டப் போட்டியில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி பலத்த போராட்டத்தின் பின்னர் சம்பியனாக தெரிவுசெய்யப்பட்டது.

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இடம் பெற்ற இறுதிப் போட்டியில், உடுவில் மகளிர் கல்லூரியும் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தாததால் இராமநாதன் கல்லூரியின் ஆதிக்கமே மேலோங்கியிருந்தது.

முதல் பாதி ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 11:4 புள்ளிகள் என்ற அடிப்படையில் முன்னிலையில் இருந்தது. எனினும் இரண்டாம் பாதி ஆட்டம் யாரும் எதிர்பார்க்க முடியாத அளவுக்கு கடும் போட்டி நிறைந்ததாக காணப்பட்டது.

**முதல் பாதி ஆட்டத்தில் சொதப்பியதால் உடுவிலின் வெற்றி பறிபோனது**

இரு அணி வீராங்கனைகளும் ஒரு அணி மற்றைய அணிக்கு சளைத்து அல்ல என்று மோதிக் கொண்டன. இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெறவும் தவறவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் உடுவில் மகளிர் கல்லூரி 22:17 என்ற புள்ளிகள் பெற்று முன்னிலையை அடைந்த போது ஆட்டம் முடிவடைந்தது.

ஆட்ட நிறைவில் இராமநாதன் கல்லூரி 28:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் உடுவில் மகளிர் கல்லூரியை வெற்றிகொண்டு உடுவில் கோட்ட சம்பியனானது. (86)

## கற்சிலைமடு அ.த.க. முதலிடம்

முல்லைத்தீவு, மார்ச் 21

கோட்ட மட்ட பெரு விளையாட்டுப் போட்டிகளில் கற்சிலைமடு அ.த.க.பாடசாலையின் 19 வயது பெண்கள் அணியும், 15 வயது ஆண்கள் அணியும் எல்லே போட்டியில் முதலிடம் பெற்று சம்பியனாகின.

குறித்த இரு அணிகளும் எதிரணி பாடசாலைகளை இலகுவாக வீழ்த்தி வெற்றி பெற்றதன் மூலம் வலய மட்டப் போட்டியில் பங்குபற்றும் தகுதியையும் அடைந்துள்ளன. (ங-500)

## பெண்களுக்கான உதைபந்தாட்டம் உழவர் ஒன்றியம் சம்பியன்

யாழ்ப்பாணம், மார்ச் 21

கரைச்சி பிரதேச செயலக பிரிவுக்கு உட்டபட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டக் கழகங்களுக்கு இடையிலான பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தொடரின் இறுதி யாட்டத்தில் உருத்திரபுரம் உழவர் ஒன்றியம் விளையாட்டுக்கழக அணி வெற்றி பெற்று சம்பியானது. அண்மையில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்ற பெண்களுக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து உருத்திர புரம் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.

இரண்டு அணிகளும் ஆட்ட நேர முடிவில் கோல்கள் எதனையும் பெற்றுக் கொள்ளாததால் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

வெற்றி, தோல்வியைத் தீர்மானிப்பதற்காக சமநிலை தவிர்ப்பு உதைவழங்கப் பட்டது.

இதில் உருத்திரபுரம் உழவர் ஒன்றிய விளையாட்டுக்கழக அணி 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ங-23)

## போட்டிகள்

### எல்லே

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்காக எல்லேப்போட்டி நாளை புதன் கிழமை வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணியளவில் இடம்பெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குகொள்ளும் அணிகளுக்கான போட்டி நிரல் தயாரித்தல் நிகழ்வு காலை 8 மணியளவில் இடம்பெறுவதால் போட்டியில் பங்கு கொள்ளும் அணிகள் நேர காலத்துடன் மைதானத்துக்கு சமூகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

### வலய மெய்வன்மை

யாழ்ப்பாணம்,மார்ச் 21

**தீவக கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான மெய்வண்மைப் போட்டி எதிர்வரும் 31 ஆம் திகதி மற்றும் ஏப்ரல் 1 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது என போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.**

***

வடமராட்சி வலய மட்ட மெய்வன்மைப் போட்டி ஏப்ரல் 10 ஆம் ,11 ஆம், 16 ஆம் திகதிகளில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி ஆகிய கோட்டங்களில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்கள் இதில் பங்குபெறுகின்றனர்.

### கரப்பந்தாட்டம்

யாழ்ப்பாணம்,மார்ச் 21

வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்குமான கரப்பந்தாட்டப் போட்டியில் பெண்களுக்கான போட்டி 23 ஆம், 25 ஆம் திகதிகளில் மல்லாகம் மகாவித்தியாலயத்திலும், ஆண்களுக்கான போட்டி 24 ஆம் 25 ஆம் திகதி மல்லாகம் மகாவித்தியாலயத்திலும் இடம் பெறும். (ங-23)



# அச்சுறுத்தலே காரணம்!

**என் கைகளில் விலங்குகள் மாட்டப்பட்டது என் வாழ்வில் மிக மோசமான தருணம். நான் அதன்போது அழுதேன். நான் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டியவன்.**

'ஸ்பொட் பிக்சிங்' குற்றத்தில் ஈடுபட்டமைக்காக சிறுவர் நன்னடத்தைப்பாடசாலைக்கு அனுப்பப்பட்டு விடுதலையாகியுள்ள பாகிஸ்தான் அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஆமிர், தான் முறையற்ற பந்துகளை வீச அச்சுறுத்தப்பட்டதாகத் தெரிவித்துள்ளார். இங்கிலாந்திலுள்ள தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியிலேயே மொஹமட் ஆமிர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தனது ஆரம்பகால வாழ்க்கை, தனது ஊர் போன்றன பற்றி ஆரம்பத்தில் கேட்கப்பட்ட வினாக்களுக்குப் பதிலளித்த மொஹமட் ஆமிர், அதன் பின்னர் முக்கிய பகுதியான 'ஸ்பொட் பிக்சிங்' சம்பந்தமாக விளக்கமளித்தார்.

பாகிஸ்தான் அணி சார்பாக விளையாடுவது பற்றிப் பெருமையாக இருந்தது. பாகிஸ்தான் சீருடையில் எனது பெயர் இருப்பதைப் பார்க்க என்னால் பொறுமையுடன் இருக்க முடியவில்லை. முதன்முதலாக சல்மான் பட்டை சந்தித்த போது அவர் மிகுந்த நல்லவராகவும், நன்கு படித்தவராகவும் தென்பட்டார். அவர் என்னுடன் நட்புறவுடன் பழகினார். அதேபோல் மஷார் மஜீத்தை முதலில் சந்தித்த போது அவர் மிகவும் உண்மையானவர் போல் தென்பட்டார். அவர் குடும்பத்தைக் கவனிக்கும் மனிதர் போல் தெரிந்தார். அவரது மனைவி மிகுந்த கடவுள் பக்தி கொண்டவர், என்று மொஹமட் ஆமிர் - 'ஸ்பொட் பிக்சிங்' சம்பந்தமான ஆரம்பக் கட்டங்களை விபரித்தார்.

' ஆரம்பத்தில் சல்மான் பட் - 'ஸ்பொட் பிக்சிங்' பற்றிக் கதைத்த போது அவர் நகைச்சுவைக்காகக் கதைக்கிறார் என்று நினைத்தேன். இரண்டாவது தடவையாகக் கதைக்கும் போது 'ஸ்பொட் பிக்சிங்' தடை செய்யப்பட்ட ஒன்று எனத் தெரிவித்தேன். அலி என்னிடம் என்னுடைய வங்கி விபரங்களைக் கேட்டார். நான் கொடுத்தேன். எனினும் அலி எனக்கு எந்தவிதமான பணத்தையும் அனுப்பியிருக்கவில்லை, என்று மொஹமட் ஆமிர் தொடர்ந்தார். இதில் அலி என்ற பாகிஸ்தானைச் சேர்ந்த சூதாட்டக்காரரின் பெயர் முதன்முதலாக ஊடகங்களுக்கு வெளிப்படுத்தப்பட்டது. இதுவரை காலமும் பாகிஸ்தானைச் சேர்ந்த இனந்தெரியாத சூதாட்டக்காரர் எனவே விளிக்கப்பட்டு வந்தது.

தொடர்ந்த ஆமிர் 'பந்து பரிமாற்றத்தில் முறையற்ற பந்து வீசப்படுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தொடர்பாக எனக்கும் தெரியாது. அந்த ஆட்டத்தில் நான் ஆட்டநாயகனாக தெரிவானேன். நான் என்னால் இயன்றளவு சிறப்பாக விளையாடினேன்' எனத் தெரிவித்தார்.

லோர்ட்ஸில் நடந்தவை பற்றி விபரிக்கும் போது ' லோர்ட்ஸ் ஆட்டத்துக்கு முன்னதாக மஷார் மஜீத் என்னை அழைத்து நான் அகப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார். அலியும் நானும் பரிமாறிக்கொண்ட குறுஞ்செய்திகளும், அழைப்புக்களும் சர்வதேச கிரிக்கெட் சபையால் கைப்பற்றப்பட்டு விட்டதாகத் தெரிவித்தார். இந்தப் பிரச்சினையிலிருந்து என்னை மீட்க வேண்டுமானால் லோர்ட்ஸ் ஆட்டத்தில் என்னை இரண்டு முறையற்ற பந்துகளை வீசச் சொன்னார். அலி விவகாரத்தை வைத்து நான் அச்சுறுத்தப்பட்டேன். எனக்கு மஜீத் உதவி செய்கிறார் என்று நினைத்து நான் முறையற்ற பந்துகளை வீசத் தீர்மானித்தேன். நான் பயந்தேன். நான் பிழை செய்வதாக உணர்ந்தேன். அந்த ஆட்டத்தில் மொஹமட் ஆசிபும் முறையற்ற பந்துகளை வீசுவார் என்பது எனக்குத் தெரியாது எனத் தெரிவித்தார்.

' நான் முறையற்ற பந்துகளை வீசிய பின்னர் மஷார் மஜீத் எனக்கு 1500 ஸ்ரேர்லிங் பவுண்ட்ஸ்களை ஓர் உறையில் வைத்துத் தந்தார். நான் முறையற்ற பந்துகளை வீசியதால் அவர் மகிழ்வாக இருந்தார். நான் அந்தப் பணத்தைப் பார்க்கக் கூட இல்லை. இரண்டாவது முறையற்ற பந்து வீச முன்னர் நான் பயந்தேன். எனினும் அவர்கள் எனக்கு உதவுவதாக நான் எண்ணிக் கொண்டேன், என்று ஆமிர் தெரிவித்தார்.

'எப்போதுமே அலிக்கு நான் அனுப்பிய குறுஞ்செய்திகள் காரணமாக நான் அகப்பட்டுக் கொள்வேன் என்று கருதினேனே தவிர, இந்த முறையற்ற பந்து வீச்சு காரணமாக அகப்படுவேன் என்று எண்ணவில்லை. நான் இரண்டாவது முறையற்ற பந்தை வீசிய பின்னர் வெட்கமாக உணர்ந்தேன். நான் என்ன செய்கிறேன் என்று வக்கார் யூனிஸ் (அப்போதைய பயிற்றுவிப்பாளர்) கேட்டார். அதற்கு, முறையற்ற பந்து வீச்சை வீசச் சொன்னதாக சல்மான் பட் அவரிடம் தெரிவித்தார். நான் அனுப்பிய குறுஞ்செய்திகளை அழிக்குமாறு அலிக்குக் குறுஞ்செய்தியொன்று அனுப்பினேன். இல்லாவிடில் நான் அகப்பட்டுக் கொள்வேன் என்று நான் தெரிவித்தேன்.

'அந்த ஞாயிற்றுக்கிழமை பாகிஸ்தானுக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட்டிற்கும் மோசமான நாளான அமைந்தது. 'நியூஸ் ஒப் த வேர்ள்ட்' அந்த செய்தியைப் பிரசுரித்த பின்னரே நான் வீசிய முறையற்ற பந்து வீச்சுக்காக நான் அகப்பட்டுக் கொண்டேன் என்பதை உணர்ந்தேன். லோர்ட்ஸில் எனக்காக விருதை (தொடர் நாயகன் விருது - பாகிஸ்தான் சார்பாக) வாங்குவதற்கு விரும்பவில்லை. அனைவரும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தனர். நேற்று எவ்வாறு இருந்தேன், இன்று இவ்வாறு மாறிவிட்டதே என்று நினைத்தேன்.

'நான் சூழ்ச்சிக்குள் உள்வாங்கப்பட்டேன். நான் முறையற்ற பந்து வீச்சை பணத்திற்காக வீசியிருக்கவில்லை. அலியுடனான குறுஞ்செய்திகளுக்காக நான் அகப்படுவேன் எனவே எண்ணினேன். சல்மான் பட் மீது நான் கொண்டிருந்த நம்பிக்கையை அவர் பிழையான முறையில் பயன்படுத்திக் கொண்டார். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நான் சர்வதேசக் கிரிக்கெட் சபையிடம் முறையிட்டிருக்க வேண்டும். நான் முட்டாள்தனமாக இருந்து விட்டேன். யாரை நம்புவது, யாரை நம்பாமல் விடுவது என்று முடிவெடுத்துக் கொள்ள முடியவில்லை. எனக்கு தைரியம் இருக்கவில்லை.

நேர்காணலின் இறுதிக்கட்டத்தில் இடம்பெற்ற உண்மைகளைத் தெரிவிக்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை என்னிடம் இரண்டு முறைகள் கேட்டது. நான் பயந்தேன். எனது வீட்டாருக்குக் கூட உண்மைகள் எவையும் தெரியாது. என் கைகளில் விலங்குகள் மாட்டப்பட்டது என் வாழ்வில் மிக மோசமான தருணம். நான் அதன்போது அழுதேன். நான் தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டியவன். எனக்கு நடந்தது இன்னொருவருக்கும் நடக்கலாம். பாகிஸ்தான் அணி பொதுவாக பிழையான அணி கிடையாது. எப்போதும் என் சக வீரர்கள் என்னை சிறப்பாக விளையாடவே ஊக்குவித்தார்கள். அனைத்துக் கிரிக்கெட் ரசிகர்களிடமும், பாகிஸ்தான் ரசிகர்கள் மாத்திரமன்றி அனைவரிடமும், நான் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன். மீண்டும் மீண்டும் மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன், என்று ஆமிர் தெரிவித்து நேர்காணலை நிறைவு செய்தார். (5)



**சல்மான் பட் மீது நான் கொண்டிருந்த நம்பிக்கையை அவர் பிழையான முறையில் பயன்படுத்திக் கொண்டார். இந்தச் சம்பவங்கள் தொடர்பாக நான் சர்வதேசக் கிரிக்கெட் சபையிடம் முறையிட்டிருக்க வேண்டும்.**

# அஜ்மலின் பந்துவீச்சு விதிமுறைக்குட்பட்டதே

பாகிஸ்தான் அணியின் சுழற்பந்து வீச்சாளர் சயிட் அஜ்மலின் பந்துவீச்சில் எந்தவித சந்தேகங்களும் கிடையாது எனவும், அஜ்மலின் பந்துவீச்சு சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிமுறைக்கு ஏற்றவாறே காணப்படுகிறது என்று சர்வதேச கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் - இந்திய அணிகளுக்கிடையில் இடம்பெற்ற ஆட்டத்தில் இந்திய அணி வெற்றி பெற்றிருந்த போதிலும், இந்திய அணியின் சில வீரர்கள் அஜ்மலின் பந்துவீச்சுத் தொடர்பாக சந்தேகம் வெளியிட்டதாக இந்தியத் தொலைக்காட்சியொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் கருத்து வெளியிட்ட சர்வதேச கிரிக்கெட் சபையின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஹரூன் லோகார்ட், ஒரு பந்து வீச்சாளரின் பந்துவீச்சுத் தொடர்பாக முறையிடுவதற்கு சர்வதேச கிரிக்கெட் சபை வழிமுறைகளைக் கொண்டு காணப்படுகிறது எனத் தெரிவித்த அவர், போட்டி மத்தியஸ்தர்கள், நடுவர்கள் ஆகியோர் ஒரு பந்துவீச்சாளரின் பந்துவீச்சை முறையற்றதாகக் கருதின் அதை முறையிட வழிகள் காணப்படுவதாகத் தெரிவித்தார்.

அஜ்மலின் விவகாரத்தில் அஜ்மலை ஏற்கனவே பரிசோதித்துள்ளதாகவும், நேரடியான போட்டியிலும் அவரை கவனித்துள்ளதாகவும், அனுமதிக்கப்பட்ட அளவிற்குள் அவர் பந்துவீசுவதாகவும், அவரின் பந்துவீச்சுத் தொடர்பாக எந்தவித பிரச்சினைகளும் கிடையாது எனத் தெரிவித்தார்.

மேலும் கருத்துத் தெரிவித்த அவர், சாதாரண கண்களுக்குத் தெரியும் காட்சிக்கும், உண்மையான அளவீடுகளுக்கும் வித்தியாசம் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், அஜ்மல் சர்வதேச கிரிக்கெட் சபை விதிகளுக்கு ஏற்றவாறு பந்துவீசுவதாக உறுதிப்படுத்தினார். (5)

- தபால் மூலம் -
ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
22
March 2012 to August 2012
தமிழ் மொழி மூலம்

Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
Dip. in Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Sales & Marketing Management - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி.
Dip. in Health & Hospital Management - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி.
Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
Dip. in Montessori - மொன்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்
• கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம் • வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு • ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844, 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி
Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)
ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848
விண்ணப்ப முடிவுத் திகதி : 28.03.2012

# வங்கத்திடம் வாங்கிக்கட்டியது இலங்கை



ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில் 5 இலக்குகள் வித்தியாசத்தில் இலங்கையை வீழ்த்தி முதன் முறையாக ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது பங்களாதேஷ்.

நேற்றைய போட்டியில் நாணயச் சுழற்சியில் வென்ற பங்களாதேஷ் களத்தடுப்பைத் தேர்ந்தெடுத்தது. இலங்கை சார்பில் மஹேல, டில்ஷான் ஜோடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாகக் களமிறங்கினர். இருப்பினும் பங்களாதேஷின் நஸிமுல் ஹுஸைனின் பந்து வீச்சை சமாளிக்கத் திணறியது இந்த ஜோடி. இலங்கை அடித்தளத்தை அமைப்பதற்கு முன்னரே நஸிமுல் ஹுஸைனின் பந்து வீச்சில் முன்னணி வீரர்கள் வெளியேற்றப்பட்டனர். மஹேல, சங்கா, டில்ஷான் என்று வரிசையாய் பவிலியன் திரும்ப இலங்கை அணி 32 ஓட்டங்களுக்குள் 3 இலக்குகளை இழந்து தடுமாறத் தொடங்கியது.

அதன் பின்னர் இணைந்த கப்புக்கெதர, திரிமன்னே ஜோடி நிலைத்து நின்றாடியது. இவர்களின் இணைப்பில் இலங்கை உயிர் பெற்றது. 168 பந்துகளில் இலங்கை அணி 100 ஓட்டங்களைப் பெற்றது. இணைப்பாட்டம் சதத்தை எட்டும் வேளையில் திரிமன்னே ஆட்டமிழந்தார். இருப்பினும் தொடர்ந்து நுழைந்த தரங்க துடுப்பாட்ட பவர்பிளேயை சாதகமாக்கி அதிரடியாக ஆடினார். மறுமுனையில் நிதானமாகத் துடுப்பெடுத்தாடிய கப்புக்கெதர 85 பந்துகளில் தனது 8 ஆவது அரைச்சதத்தை கடந்தார். அதிரடியாக ஆடமுற்பட்டு கப்புக்கெதரவும் ஆட்டமிழந்தார்.

அதன் பின்னர் களம்புகுந்த மஹரூப், குலசேகர அடுத்தடுத்த பந்துப் பரிமாற்றங்களில் ஆட்டமிழந்தனர். மறுமுனையில் அதிரடியாகத் தரங்க போராடி அணியை 200 ஓட்டங்களைக் கடக்க வைத்த பின்னர் அவரும் ஆட்டமிழந்தார். இலக்குகளை இழந்து இலங்கை தடுமாறிய வேளையில் 9 ஆவது இலக்குக்காக சசித்திர சேனநாயக்க, மலிங்க இருவரும் வேகமாக ஓட்டங்களைக் குவித்து அணியின் ஓட்டஇலக்கை கௌரவமான நிலைக்கு இட்டுச் சென்றனர். இறுதியில் மலிங்க ஆட்டமிழக்க 49.5 பந்து பரிமாற்றங்களில் இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 232 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது.

அதன் பின்னர் தொடர்ச்சியாக பெய்த மழை காரணமாக ஆட்டம் தாமதமாக ஆரம்பமாகியது. பங்களாதேஷ் அணிக்கு 40 பந்து பரிமாற்றங்களில் 212 ஓட்டங்கள் வெற்றியிலக்காக நிர்ணயிக்கப்பட்டது. பதிலுக்கு இலகுவான இலக்கை விரட்டத் தொடங்கிய பங்களாதேஷ் அணிக்கு நஸிமுதீன் ஆரம்பத்திலேயே ஆட்டமிழந்து அதிர்ச்சியை கொடுத்தார். இருப்பினும் மறுமுனையில் தமிம் இக்பால் இலங்கையின் பந்து வீச்சை வெளுத்து வாங்கினார். அரைச் சதம் கடந்த தமிம்இக்பால் 59 ஓட்டங்களுடன் சேனநாயக்காவின் பந்தில் வீழ்ந்தார். சகிப் அல்ஹஸன் 56 ஓட்டங்கள் எடுத்து வெற்றிக்கு வழி சமைத்தார். இறுதியில் 37.1 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்குகளை இழந்து, வெற்றி இலக்கை பங்களாதேஷ் எட்டியது. இந்த வெற்றி மூலம் முதன்முறையாக ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்குள் வங்க அணி நுழைய, இந்தியாவின் இறுதிப் போட்டிக் கனவு தகர்ந்தது.

(ந-5)


BIT Semester 2
ஆரம்பம்
திகதி:-24-03-2012
நேரம்:-09.00am
பதிவுகளுக்கு முந்துங்கள், மட்டுப்படுத்தப்பட்ட அனுமதியே!!!!!
BIT CORNER
Professional ICT Education
# 14, Palaly Rd, Thirunelvely Junction, Jaffna.
0212219282 / 0776621745

O/L தகைமையுடன் பட்டதாரி ஆகும்
அரிய வாய்ப்பினை வழங்குகின்றது
மதுரை காமராசர்
பல்கலைக்கழகம்



தகைமைகள் O/L ஐந்து (5) பாடம் சித்தி அடைந்தவர்களும் விண்ணப்பிக்க முடியும்.
1. முதல் இரண்டு வருடங்களுக்கு அடிப்படை நிலை (Foundation Course) கல்வியை தொடரவேண்டும்
பிரிவு - 1: கணிதம், உளவியல், வணிகவியல், சூழ்நிலைக்கல்வி
பிரிவு - 2: கணிதம் அரசியல் புவியியல்
பிரிவு - 3: வணிகவியல், வங்கியியல், கணக்கியல், பொருளியல்
பிரிவு - 4: வரலாறு, பொருளியல், அரசியல், சூழ்நிலைக்கல்வி
பிரிவு - 5: வரலாறு, புவியியல், உளவியல், சிறப்பு தமிழ்
3. இப்பிரிவுகளுக்குள் ஏதாவது ஒரு பிரிவினை நீங்கள் தெரிவு செய்யலாம்.
4. இவற்றுக்குரிய வகுப்புக்கள் ஆரம்பம் : 02.04.2012 காலை (8மணி)
5. இவ் இரண்டு வருட கற்கை நெறியினை நிறைவு செய்த பின்னர் மூன்று வருட கற்கைநெறியாக B.A, B.com, B.sc ஆகிய பட்ட நெறியினை நிறைவு செய்ய முடியும்.
6. இப்பட்ட நெறிகளானது இலங்கை பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினரால் அங்கீகரிக்கப்பட்டவையாகும்.
முக்கிய குறிப்பு: A/L இல் இரண்டு பாடம் சித்தி அடைந்தவர்கள் மூன்று வருட கற்கை நெறியாக, B.A, B.com, B.sc ஆகிய பட்ட நெறியினை நிறைவு செய்து கொள்ளலாம். இவர்களுக்கு அடிப்படை நிலைக்கல்வி (Foundation Course) தேவை இல்லை.
1. பதிவுகள் யாவும் எமது நிறுவனத்தினூடாக நடைபெறும்.
2. பரீட்சைகள் யாவும் புதிய உயர்கல்லூரி பரீட்சை மண்டபத்தில் நடைபெறும்.
யாழ். இணைப்பாளர்,
காமராசர் பல்கலைக்கழகம் (மதுரை)
தொலைபேசி இல. 222 8148
புதிய உயர் கல்லூரி,
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

BRITISH COLLEGE OF HIGHER STUDIES
BCHS
அனைத்துப் பிரிவுகளுக்குமான
புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன
Batch I: 23.03.2012 09.00 - 12.00
Batch II: 21.03.2012 03.00 - 5.00
Batch III: 27.03.2012 09.00 - 12.00
சர்வதேச பாடத்திட்டத்தின் தராதரத்திற்கு அமைய
நவீன தொழில் நுட்பத்துடன் வழங்கும்
Quick Learning Course
(Spoken English with Grammar)
1 ½ Months
Diploma In English
2 ½ Months
* எமது கற்கை நெறிகள் Writing, Speaking, Reading, Listening என வகைப்படுத்தப்பட்டு ஒவ்வொரு பிரிவும் மிகச்சிறந்த ஆசிரியர்களினால் கற்பிக்கப்படுகின்றது.
* O/L, A/L பரீட்சை எழுதிய மாணவர்கள், தொழில் தேடுவோர், தொழில் புரிவோர் மற்றும் ஆங்கிலம் கற்க விரும்பும் அனைவருக்கும் ஏற்றது.
* Excellent Teachers' Panel & Individual Attention
எமது கல்லூரியினால் நடாத்தப்படும் சர்வதேசப் பரீட்சைகள்
A1 Exam - Sponsor /Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை
◊ U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
◊ எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும்
◊ சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
◊ நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
◊ ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது
BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது
City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.
IELTS (Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது)
We guarantee minimum band 5.0 Upwards 2 ½ Months
மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.
Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207
Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550
Vavuniya Branch: No. 3, 6th Lane, Vairavarkovil Veethy, Vairavarpulliyamkulam, Vavuniya. Tel: 024 324 5287
Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074

A/L- ICT & GIT
O/L- ICT
A/L - ICT ஐ தெரிவு செய்து உயர்ந்த Z புள்ளிகளை பெறுங்கள்
MCS
Supported By UNDP/JRRP
SMS your name & course to 772 395 895 & Get Scholarship
324, Palaly road, Parameswara junction, Jaffna

சூரியஒளியிலிருந்து இலவசமாக வீட்டிற்குsolar மூலம் மின்சாரத்தினை பெற்று இதிலிருந்து
Radio, Computer, Dish antenna, CFL bulb, T.V பயன்படுத்தலாம்.
விலை 30,000/= --75,000/= வரை
(வங்கி முலம் மாதாந்தம் செலுத்தலாம்)
எரிபொருள்(டீசல் மண்ணெண்ணை)செலவில்லாமல் நீரைப் பெற்றுக்கொள்ள வேண்டுமா?
முந்திரிகை தென்னை மரக்கறி பயிர்ச் செய்கையாளர்கள்.
விலை 215,000/= முதல்.......
(வங்கிமூலம் மாதாந்தம் செலுத்தலாம்)
விபரங்களிற்கு
NEW ASIAN CENTER
56/15 ஸ்ரான்லி வீதி சம்பத் வங்கி அருகாமை யாழ்ப்பாணம்
T.P:-0778 249 949
0718 561 654

அனைத்து கற்கை நெறிகளுக்குமான
புதிய பிரிவுகள் ஆரம்பம்
24.03.2012 26.03.2012 காலை 10.00 மணி
IIS
INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2831

மணல்
விற்பனைக்குண்டு
நாற்பது வருடங்களாக கட்டிட வேலைகளுக்கும், பூச்சு வேலைகளுக்கும் சிறந்ததெனும் நாமத்தைப் பெற்ற உப்புத் தன்மையற்ற மணல் 26 வருடங்களின் பின் இப்போது யாழ்ப்பாணத்தில்.
4 டிரக்டர் - 24000/-
அரிந்த கல்லும் விற்பனைக்குண்டு.
(கல்லு 1 -38/-)
தொடர்புகளுக்கு
கண்ணா
0776766499

ஷாம்சன் இங்கிலீஷ் - 3 மாத பயிற்சிநெறி
எந்தவொரு குழந்தையும் 2 தொடக்கம் 4 வயதுக்குள் தன் தாய் மொழியைப் பேசப் பழகிக்கொள்கிறது. தமிழ்க் குழந்தைகள் தமிழைப் பேசப்பழகுகின்றன. ஆங்கிலக் குழந்தைகள் ஆங்கிலத்தைப் பேசப்பழகுகின்றன. 2 வருடத்தில் ஒரு குழந்தை செய்யும் காரியத்தை ஏன் இன்று வரை உங்களால் செய்ய முடியாமல் இருக்கிறது.
தவறான வழியில் ஆங்கிலத்தைக் கற்றுக்கொண்டதனாலேயே அது உங்களுக்கு கடினமாக இருக்கின்றது. எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சி நெறியில் இலக்கணமோ, எழுத்துப் பயிற்சியையோ நாம் வழங்குவதில்லை மாறாக எவையவர்களுடன் உடையாடற் பயிற்சியில் ஈடுபடுத்துவதன் மூலமே ஆங்கிலம் பழக்கப்படுத்தப்படுகின்றது. இது குழந்தைகள் தம் தாய்மொழியைப் பழகுவதை அடிப்படையாகக் கொண்டது.
எமது பழக்கப்படுத்தல் மூலமான பயிற்சியில் இணைந்த அனைத்து மாணவர்களும் தற்போது ஆங்கிலத்தில் சரளமாக பேசுகின்றனர். நீங்களும் இப்பயிற்சி நெறியில் இணைய விரும்பினால் (25.03.2012) இற்கு முன் பதிவுகளை மேற்கொள்ளுங்கள்.
சனி, ஞாயிறு பிரிவுகள்
பிரிவு I 08 - 10 am பிரிவு III 01 - 03 pm
பிரிவு II 10 - 12 am பிரிவு IV 03 - 05 pm
03 மாத பயிற்சிநெறிக் கட்டணம்
ரூபா 3000.00
பயிற்சி நெறி முடிவில் பெறுமதியான சான்றிதழ் வழங்கப்படுவதோடு, மூன்று மாத பயிற்சி நிறைவில் உங்களால் ஆங்கிலத்தில் சரளமாக பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பித் தருவதற்கான உத்தரவாதம்.
SAAMSON ENGLISH 279, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், (ஆஸ்பத்திரி பின்புறம்)
தொ.பே. 077 621 4567


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 21.03.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

சிறுசிறு செயல்களில்
அமைதி தேடுகிறாயா?
பெரிய செயலைச்
செய்யமாட்டாய்.
பேரறிஞர்

# புதன் பொய்கை A

உதயன் 21 மார்ச் 2012 புதன்கிழமை பக்கங்கள்: நான்கு

# மகிழ்ச்சிக்கு வேண்டும் நல்ல மனித உறவுகள்



■ மனோசக்தி மாசிலாமணி

மற்றவர்களைக் குறை கூறுவதற்கு முன்னால் அந்நிலையில் நம்மை நிறுத்திப் பார்த்து நாம் எப்படி நடந்திருப்போம், செயல்பட்டிருப்போம் என்பதை எண்ணிப் பார்த்தால் குறைகூறமாட்டோம்.

**வா**ழ்க்கையின் நோக்கமே அமைதியும், ஆனந்தமுமே! வெற்றி வாழ்க்கை மட்டுமே இதனை நல்கும். வெற்றி வாழ்க்கைக்குப் பல காரணிகளைச் சொன்னாலும் மிக முக்கியமான காரணி நல்ல மனித உறவுகள்.

நமக்குக் கிடைக்கும் நாள் பொழுதில் கிட்டத்தட்ட 85 விழுக்காடுகள் நேரத்தை நாம் மற்றவர்களோடு பேசுவதிலும் ஏதோ ஒரு தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளுவதிலுமே செலவழிக்கின்றோம் என்றால் அது மிகையாகாது.

இப்படித் தொடர்பு கொள்ளும் உறவுகளின் மூலமே, அது எந்த வகையான உறவாக இருந்தாலும், முதலாளி - தொழிலாளி, கணவன் - மனைவி, பெற்றோர் - பிள்ளைகள், தலைவன் - தொண்டன், நண்பர்கள், உடன்பிறந்தோர், விற்பவர் - வாங்குபவர் இப்படி எந்தநிலையிலும் நல்ல இணக்கமான உறவுகள் தான் மகிழ்ச்சியையும், ஆனந்தத்தையும், அமைதியையும், வெற்றியையும் தரும். மனிதர்கள் மன இறுக்கம் பெறுவதற்கு முதற்காரணம் உறவுகளில் உள்ள உரசல்களே.

குடும்ப வாழ்க்கை, சமுதாய வாழ்க்கை இப்படி நாம் வாழ்கிற எல்லா நிலையிலும் நமக்கு அமைதி ஆனந்தம் தேவை. வாழ்க்கையில் வெற்றியை இழந்து, தோல்வியைத் தழுவி, நட்டம் அடைந்த அனைத்து மனிதர்களின் வாழ்க்கையையும் சற்று நெருங்கி கூர்ந்து பார்த்தால் அது அவர்கள் மற்றவர்களிடம் பழகிக், கொள்ளும் உறவுகளில் இனிமை இல்லாதது தான் என்பது ஒரு நுட்பமான உண்மை. தனித்து நின்று வெற்றி பெறலாம் என்பது தவறான கருத்து.

சில நேரங்களில் சிலர் தம் பெருமைகளைப் பற்றிப் பறைசாற்றிக் கொள்ளுகிற போது நான் என் உறவுகளையும், உற்றார்களையும் சார்ந்து நில்லாமல் அவர்களையெல்லாம் விட்டுவிலகி, தனியனாய் வாழ்க்கையில் முன்னேறினேன், சாதனை புரிந்தேன், வெற்றி பெற்றேன் என்றெல்லாம் கூறுவார்கள். ஒரு வேளை அவர்கள் வென்றது சொந்தங்களையும் பந்தங்களையும் விலக்கி தனித்து வேறு இடத்தில் அதற்கு நிகரான உறவுகளை உருவாக்கி அந்தத் தொடர்புகளின் மூலம் முன்னேறியிருக்கலாம், வளர்ந்திருக்கலாம். ஆனால் அடிப்படையில் இந்த உலகத்தின் எந்த இடத்திலும் மற்றவர்களின் துணையில்லாமல் வெற்றி என்பது சாத்தியமில்லாத ஒன்று.

மனித உறவுகளின் உயர்வுக்குச் சில இயல்புகளை நாம் விதிமுறைகளாக விதித்துக் கொண்டால், வெற்றி பெறலாம்.

எந்த நிலையிலும் மற்றவர்களைக் குறை கூறாதீர்கள். எதிர்மறை விமர்சனம் செய்யாதீர்கள். குறைவில்லா மனிதர்கள் யார் தான் இந்த உலகத்தில் இருக்கிறார்கள். பல நேரங்களில் அறியாமை, அனுபவமின்மை காரணமாக பலர் தவறு செய்யலாம், சுய நலம் கூட முதன்மைக் காரணமாக இருக்கலாம். மற்றவர்களைக் குறை கூறுவதற்கு முன்னால் அந்நிலையில் நம்மை நிறுத்திப் பார்த்து நாம் எப்படி நடந்திருப்போம், செயல்பட்டிருப்போம் என்பதை எண்ணிப் பார்த்தால் குறைகூறமாட்டோம்.

பொறாமை இல்லை, மனிதரிடம் நம்பிக்கை இழப்பதில்லை,
எப்போதும் சிறப்பாக செயல்படுவான், தன்னை விடக் கீழானவர்களைக் கண்டு
அவன் புலம்புவதில்லை, புன்னகையுடன் நம்பிக்கையான வார்த்தைகளுடன்
போராடும் ஒவ்வொருவனுக்கும் உற்சாகமூட்டுவான், அவன்தான்
உன்னதமானவன். உன்னதமான வாழ்வினால் விதியை வென்றவன்.
- சாரா கே.போல்டன்

குறிப்பாக மற்றவர்கள் இல்லாத போது அவர்களின் புகழைக்கெடுக்கும் விதமாக பெயருக்குக் களங்கம் ஏற்படும் விதமாக குறைகளைச் சொல்வது "Character Assassination" என்று ஆங்கிலத்தில் சொல்லுகிறார்கள். இதுவும் ஒரு மறைமுகமான கொலைதானே.

**புறங்கூறிப் பொய்த்து உயிர் வாழ்தலின் சாதல்**
**அறங்கூறும் ஆக்கம் தரும் - குறள் 183**

மற்றவர்களிடம் நன்மைகளைப் பெற வேண்டுமென்பதற்காக நமக்கு உதவுபவர்களைப் பற்றி கூட சில நேரங்களில் அறியாமையினால் குறைசொல்லும் செயல், ஆணந்தத்தினால் குறைகூறும் குறுகிய மனம் பல மனிதர்களிடம் காணப்படுகின்றன. அதனை அறுத்தெறிய வேண்டுவது முதல் வேலையாக இருக்க வேண்டும். விமர்சனம் எனும் பொழுது ஒரு ஆங்கில வாசகம் நினைவுக்கு வருகிறது. Fault Finders can find fault even in paradise என்று, உண்மை தானே. குறைகாண் கொள்கையுடைய மனிதர்கள் எதையும் எப்படியும் விமர்சனம் செய்வார்கள்.

எதிர்மறை விமர்சனம் மற்றவர்களை உற்சாகப்படுத்துவதற்குப் பதிலாக மனமிழக்கச் செய்யும். சோர்வினை உண்டாக்கும் வெறுப்பை வளர்க்கும். உறவுகளை மேம்படுத்த இந்த உளவியல் உத்திகளைப் பின்பற்ற வேண்டுமல்லவா?

ஒரு சிறிய செயலாக இருந்தாலும் பாராட்டுவோம். உற்சாகப் படுத்துவோம். நாம் அவர்களின் வளர்ச்சியில், முன்னேற்றத்தில் அக்கறையுடையவர்கள் என்பதை வெளிப்படுத்துவோம். உறவுகள் மேம்படும்.

உலகத்தில் ஒவ்வொரு மனிதர்களுக்கும் ஒவ்வொரு துறையில் நாட்டம். ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒரு திறமை இருக்கும். நாம் பல நேரங்களில் அவர்களுக்கு நமது துறையில் நாட்டமும், திறமையும் இல்லாததைப் பார்த்து அவர்கள் உதவாக்கரைகள் என்று தீர்மானித்து ஒதுக்கி வைத்து விடுவோம்.

**மனிதர்கள் உதவாக்கரைகள், உபயோகமற்றவர்கள் என்று உதாசீனப்படுத்துவதால் உறவுகள் சேதமடையும்**

ஒரு நல்ல வேலைக்காரன் கருவிகளைக் குறைசொல்ல மாட்டான் என்பதற்கிணங்க மனிதர்களின் திறமைகள் என்ன? அவர்களின் விருப்பங்கள் என்ன? என்பதைத் தெரிந்து அந்தத் துறையில் அவர்களைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

குறைகூறுதலும், எதிர்மறை விமர்சனங்களும், உதவாக்கரைகள் என்று ஒதுக்குவதும், நமக்கு இன்பம் தரத்தக்கதாக எப்பொழுது மாறுகிறதோ அப்பொழுது நமது செயற்பாடுகளில் உண்மையில்லை. நாம் தவறு செய்கின்றோம் என்பதுதான் உண்மை.

இந்தக் குறை சொல்லுதல் அபிப்பிராயங்களை அள்ளி வீசுதல் உபயோகமற்றவர்கள் என்று தூக்கி எறிதல் முதலிய செயல்பாடுகளுக்கு முன்னதாக, சம்பந்தப்பட்டவர்களிடம் இதுகுறித்துப் பேசுவதற்கு நாம் முயன்றோமா? மற்றவர்களிடம் காரணங்களைக் கேட்டுப் பேச வேண்டும். அவர்கள் பேசுவதை முழுமையாகக் கேட்கவேண்டும். அவர்கள் நலனில் எல்லா நேரங்களிலும் எப்பொழுதும் அக்கறையுடையவர்களாக, பொறுமையாகக் கேட்டாலே அவர்கள் நம்மீது நன்மதிப்பு கொள்ளுவார்கள், உறவுகள் பலப்படும் மற்றவர்களின் நலனில் நாம் அக்கறை கொண்டுள்ளோம் என்பதை நாம் நமது நல்ல ஆலோசனைகளின் மூலம் வெளிப்படுத்தலாம், அவர்களின் மனதில் ஒரு குறிக்கோளை உருவாக்கலாம். அதற்காக எப்படிச் செயல்பட வேண்டும், என்று எடுத்துச் சொல்லலாம். அவர்களைப் பொறுத்தமட்டில் நமக்கு அவர்கள் முக்கியமானவர்கள் என்கிற உணர்வு தோன்ற நாம் பேசவும் செய்யவும் வேண்டும்.

ஏதோ ஒரு சூழலில், எப்பொழுதோ செய்த ஒரு தவறினையோ நம்மனதுள் மறக்காமல் எப்பொழுதும் அவர்களைக் குறை சொல்லிச் சுட்டிக் காட்டி, சினந்து நடந்து கொண்டால் நம்மைப் பற்றி அவர்கள் மகிழ மாட்டார்கள்.

ஒரு நல்ல ஆரோக்கியமான உறவுகள் மலர வேண்டுமானால் முதலில் நாம் மற்றவர்களைப் பாராட்டக் கற்றுக் கொள்ளவேண்டும். குழந்தைகள் மாத்திரமல்ல, பெரியவர்கள் கூட, ஏன் மனிதர்கள் அனைவருமே, ஒரு ஏக்க உணர்வு மனதில் மறைந்து கிடக்கத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். பாராட்டுரைக்காக ஏங்கிக் கிடக்கிற இந்தக் குணம் உளவியல் அடிப்படையில் உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டிய பகுதி. பாராட்டுவோம். உண்மையாக உளமாரப் பாராட்டுவோம்.

பாராட்டுதல்கள் உண்மையானதாக இருக்கும் போது அது உறவுகளை வலுப்படுத்தும். அது பொய்மையானதாக இருக்கும் போது முகஸ்துதி என்று எதிர்மறை விளைவைத் தந்துவிடும். வெறுப்பையும் கூட கொண்டு சேர்க்கும்.

மனிதர்களை நேசிப்போம், நேசிக்கத் தொடங்கிவிட்டால் அன்பு உண்டாகிவிட்டால், ஆயிரம் அம்சங்களை மற்றவர்களிடம் பாராட்டலாம். பாராட்டும் பண்பு மிக உயர்ந்த பண்பு. பரஸ்பரம் மகிழ்ச்சியை உண்டாக்கும் உறவுகள் வலுப்பெறும்.

ஒரு மலைச்சரிவில் கிராமம் ஒன்று அமைந்திருந்தது. அந்த ஊரில் பணக்கார வீட்டில் ஒரு வேலைக்காரன் இருந்தான். அவனுடைய வேலை தினமும் காலையில் மலைச்சரிவின் கீழே அருகில் இருக்கும் ஒரு நீரூற்றிலிருந்து வீட்டில் உள்ளவர்கள் குடிக்கவும் சமைக்கவும், பாத்திரங்கள் கழுவவும் தேவையான தண்ணீரைக் கொண்டு வந்து வைப்பதாகும்.

சரிவான மலைப்பாதையின் வழியே தண்ணீரைச் சுமந்து வருவதற்கு, அவன் ஒரு நீண்ட மூங்கில் கழியின் இரண்டு பக்கங்களிலும் உறிகளை உருவாக்கி அதில் மண் குடங்களை வைத்து தோளில் சுமந்து வருவது வழக்கம். இப்படி பலகாலமாக அவன் வேலை செய்து வந்தான். அவனிடமிருந்த இரண்டு மண்குடங்களில் ஒன்று கீறல் விழுந்த ஓட்டைப் பானை. அவன் தண்ணீர் முகந்து வரும் போது வரும் வழியிலேயே அந்த ஓட்டை கீறல் விழுந்த பானையில் பாதி தண்ணீர் ஒழுகி வீணாகிவிடும்.

ஒருநாள் அந்த வேலைக்காரன் காவடி போன்ற தண்ணீர் சுமக்கப் பயன்படும் அந்தக் கருவியைப் பக்கத்தில் வைத்துவிட்டு ஒரு மரநிழலில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தான். அப்பொழுது அந்தக் கீறல் விழுந்த ஓட்டைப் பானை, அந்த வேலைக்காரனை அழைத்து இப்படிப் பேசியது.

"ஐயா! நீங்களோ உங்கள் எஜமான் வீட்டிற்கு மிகுந்த சிரமத்துடன் நீரூற்றிலிருந்து மலைச்சரிவில் இறங்கியும், சுமையோடு ஏறியும் தண்ணீர் சுமந்து சென்று தருகிறீர்கள். உங்கள் வேலைக்கு நான் உதவியாக இல்லாவிட்டாலும் பரவாயில்லை உபத்திரவமாக இருக்கக் கூடாது பாருங்கள். நானோ கீறல் விழுந்த ஓட்டைப் பானையை. என்னை முழுமையாக நீர் நிரப்பி தூக்கி வந்தாலும் வரும் வழியிலேயே கால்பகுதிக்கும் மேலாக நான் நீரைக் கசிய விட்டு விடுகிறேன்.

(D பக்கம் பார்க்க..)



# வினோத காலணிகள்



ஆரம்ப காலங்களில் வெறுமையான கால்களுடன் பயணங்களை மேற்கொண்ட மனிதன் காலப்போக்கில் பாதங்களின் பாதுகாப்பைக் கருத்தில்கொண்டு பாதணிகளை உருவாக்கி பயன்படுத்த ஆரம்பித்தான். இவ்வாறு உருவாக்கப்பட்ட காலணிகள் பொதுவாக ரப்பர் போன்ற பொருள்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டன. தற்போது நாகரிக மாற்றம் காரணமாக பல்வேறு வடிவங்களிலும், வண்ணங்களிலும் உருவாக்கப்பட்டு வருகின்றன.


அதன் அடிப்படையில் தற்போது இறந்த விலங்குகளின் தோல்களைக் கொண்டு வினோதமான காலணிகள் உருவாக்கப்பட்டுள்ளன.

# நீச்சலடிக்கும் பூனை



பொதுவாக வளர்ப்புப் பிராணிகளை வளர்ப்பவர்கள் அவற்றுக்கு விசேடமான பயிற்சிகளைக் கொடுத்து வளர்ப்பதுண்டு.

அதற்கிணங்க ரஷ்யாவில் உள்ள ஒருவர் தான் செல்லப் பிராணியாக வளர்க்கும் பூனைக்கு சிறப்பான நீச்சல் பயிற்சியை வழங்கியுள்ளார். இதனால் கடற்கரையில் நீச்சலுக்கு செல்லும் போது தன்னுடனேயே பூனையையும் அழைத்துச் செல்கின்றார். பூனையும் மிகுந்த ஆர்வத்துடனும், மகிழ்ச்சியாகவும் நீச்சலில் ஈடுபடுகின்றது.




# பறக்கும் கார்

அதிகரிக்கும் சனத்தொகைப் பெருக்கத்துக்கு ஈடாக வீதிகளின் அகலிப்புக்களும் இல்லாத படியினால் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுகின்றது. கார் வீதியில் போய்க் கொண்டிருக்கும்போது போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டால் மேலே பறக்கும் வகையில் கார் உருவாக்கப்பட்டுள்ளது.

இரண்டு சீட்டுக்களுடன் உருவாக்கப்பட்ட கார் 12000 அடி உயரம் வரை பறக்கும் தன்மை கொண்டது.

# உயரமான கேக்



சீனாவில் சுமார் 8 மீற்றர் உயரமான கேக் ஒன்றை செய்து உலக சாதனை படைக்கப்பட்டுள்ளது. 24 மணிநேரத்தில் தயாரித்த இந்தக் கேக் ஆனது 2010 ஆம் ஆண்டு பிரான்ஸில் உருவாக்கப்பட்ட உலகின் மிக உயரமான 7.8 மீற்றர் கேக்கின் சாதனையை முறியடித்துள்ளது.

# இசையும் நடிப்பும் உச்சமாய் நின்ற "கண்டனன் சீதையை" இசைநாடகம்



யாழிசை வல்ல பாணன் ஒருவன் பரிசாய்ப் பெற்ற யாழ்ப்பாணத் திருநாட்டில் கலாசார விழாக்களும் இசைவிழாக்களும் வெறும் மண்டபங்களில் அல்லது இருபதிற்கும் குறைவான இரசிகர்கள் முன்னிலையில் நடத்தப்படுவதே அண்மைக்கால மரபாக இருந்து வருகின்றது. எனினும் நல்லதோர் நிகழ்வானது சிறந்த கலைஞர்களால் நடத்தப்படுமாயின் மண்டபத்தினுள் மேலதிகமான நாற்காலிகள் தேவைப்படும் என்பதையும் உண்மையான கலையுணர்வானது யாழ்ப்பாணத்தில் மடிந்து போகவில்லை என்பதையும் கடந்த 11.03.2012 அன்று கைலாசபதி கலையரங்கில் மேடையேறிய கண்டனன் சீதையை இசைநாடகம் இடித்துரைத்து நின்றது.

தமிழிசை மூவருள் ஒருவரான அருணாசலக் கவிராயரின் இராமநாடகத்திலிருந்து தொகுக்கப்பட்ட இந்த இசைநாடகம் வியந்து, நயந்து போற்றத்தகும் வகையில் மண்டபம் கொள்ளாத இரசிகர்கள் முன் சிறப்புடன் அரங்கேறியது. மாலைப் பொழுது மூன்று மணியைத் தொட, மெல்லத் திரை விலக மஞ்சள் ஒளியில் ஓர் நடிகர் குழு நிரலாக வந்து நிற்கிறது. கைகள் குவிகிறது. ஆனைமுகனே அரனார் திருமகனே என்று இனிமையான குரலிசை குழைய மெல்ல மயிர் கூச்செறிந்து பக்தி மயக்கத்தில் பலரது கைகள் குவிய நாடகம் தொடங்குகிறது. இசையும் நடிப்பும் இரண்டறக் கலந்து இரண்டரை மணித்துளிகள் இன்புற வைத்த இவ்விசை நாடகம் ஓர் அற்புதமான, அரிய தெய்வீகப் படைப்பாகும்.

வரலாறு போற்றும்படி இந்த நாடகத்துக்கான பெரும் பணியை தவநாதன் றொபேட் ஆற்றியுள்ளார். அவரது இசை ஆளுமை இந்நாடகத்தினூடே பொங்கிப் பிரவகித்தது. காட்சிகளின் தன்மை, பாடலின் உணர்வு, சொற்களின் வலிமை, பாத்திரங்களின் வெளிப்பாடு போன்ற அனைத்தையும் கச்சிதமாக எடுத்துக்காட்டும் வகையில் நாடகத்தின் பாடல்கள் அனைத்தும் அமைந்திருந்தன. ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு நடிகரும் பாடிய முறையிலும் இவரது இசைப் பாணியானது ஒளிந்திருந்ததைக் கண்டுணர முடிந்தது.

ஈழத்தின் நாடகத் துறையில் பெரும் தாயாகத் திகழும் குழந்தை.ம.சண்முகலிங்கத்தின் பேராற்றலுக்கும் முதிர்ச்சி கண்ட பட்டறிவிற்கும் இது ஒரு மணிமகுடம். இந்த இசைநாடகத்தை ஆற்றுகை செய்வதில் அவர் காட்டியிருக்கும் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் கலைகளில் அவர் கொண்ட காதலுக்கு சிறந்த எடுத்துக்காட்டு. நாடகம் நகர்கின்ற போது பல பாத்திரங்களினுள்ளே குழந்தை நிழலாயும் ஒளியாயும் தெரிந்து மறைகிறார், மறைந்து தெரிகிறார். ஒவ்வொரு நடிகரையும் அந்தந்தப் பாத்திரமாய் உயிரோட்டத்துடன் படைத்தளித்ததில் பெரும் வெற்றி கண்டுள்ளார். அரங்க நுட்பங்கள் அனைத்தையும் இசைநாடகத்துறைக்கு இவர் நிறைவாக அள்ளி வழங்கியுள்ளார் என்பதை அரங்கில் காண முடிந்தது.

இராமசீதா திருமணத்தில் மங்கலாமாய்த் தொடங்கி, தசரதன் ஆசையும் குடிகளின் மகிழ்ச்சியும் கூனியின் சூழ்ச்சியும் கைகேகியின் மாற்றமும் தசரதன் ஏக்கமும் இராமனின் களிப்பும் இலட்சுமணனின் கோபமும் இராமனின் தேற்றலும் குகனின் எழுச்சியும் இலட்சுமணன் வீரமும் இராமனின் ஆற்றலும் பரதனின் வருகையும் பாதுகை பெறுகையும் இராவணன் மாட்சியும் சூர்பனகை வரவும் சீதையைக் கவர்தலும் அனுமனின் பக்தியும் இராவணன் ஏக்கமும் சீதையின் இருத்தலும் இராமனின் ஏக்கமும் கண்டனன் சீதையைக் கற்புக்கனியினை எனும் அனுமனின் கூற்றுமாய் மங்கலமாய் நிறைவுற்ற இவ்விசைநாடகப் பிரதியானது மிக மிக அற்புதம்.

வளமிக்க கலைஞர்கள் தேர்வு இந்நாடக வெற்றிக்குரிய காரணங்களில் ஒன்றென்பது தெளிவு. இசைஞானமும் நடிப்புத் திறனும் கொண்டமைந்த நடிகர் குழு இரசிகர்களைக் கட்டிப் போட்டது. காட்சிகளிற்கு ஏற்ப வழங்கப்பட்ட ஒளி கண்களைக் கட்டித் தழுவிக் களிப்பூட்டியது, நாடகத்தினூடே பயணிப்பதற்கு ஓர் வழிகாட்டியாகவும் திகழ்ந்தது.

வேட உடைகளில் ஓர் ஒழுங்கு தெரிந்தது. வழமையான இசைநாடக ஆடை அணிகலன்களைத் தவிர்த்தமை மிகவும் சிறப்பானதாகத் தெரிந்தது. அரங்கப் பெருள்கள் மிகவும் அர்த்தமுள்ளதாக அமைந்திருந்தன. கதாயுதம், வில், அம்பு, கைத்தடி போன்ற கைப்பொருள்கள் பாத்திர முழுமைக்குப் பக்கபலமாய் அமைந்திருந்தன. இவ்வாறு இவ்வரிய படைப்பு எனக்குள் பெரும் பிரமிப்பையும் இன்னும் ஒரு தடவையாவது பார்க்க வேண்டும் என்னும் ஆர்வத்தையும் ஏற்படுத்தியதோடு ஈழத்தின் இசைநாடகக் கலை பற்றிய சில கருத்துக்களையும் எனக்குள் சிந்திக்கச் செய்தது.

இசைத் தரம் இன்மை, சரியான எழுத்துரு இன்மை, தேவையான ஒத்திகை இன்மை, சுயமான மொழி நடைப் பாவனையின்மை, பொருத்தமற்ற வேடப்புனைவு, அரங்க நுட்பமின்மை, ஒலி, ஒளி பற்றிக் கருத்திற் கொள்ளாமை போன்ற பல குறைபாடுகளால் ஈழத்தின் இசைநாடகத் துறையானது சில ஆண்டு களாக நலிவடைந்து, சிதைந்து கிடக்கின்றது. இக்குறைபாடுகள் அனைத்தையும் அடியோடு தகர்த்தெறிந்த ''கண்டனன் சீதையை'' எமது இசைநாடகத் துறையை மீளெழுச்சி கொள்ளச் செய்துள்ளது என்பது உண்மையே.

அயோத்தியில் நின்றது போன்ற உணர்வை ஏற்படுத்திய இவ்விசை நாடகத்தைத் தயாரித்து வழங்கிய நாடக அரங்கக் கல்லூரியும் இப்படைப்புருவாக்கத்தில் பொறுமையுடனும் நேர்மையுடனும் அர்ப்பணிப்புடனும் ஓர் ஆண்டிற்கும் மேலாக இணைந்து செயலாற்றிய அனைத்துக் கலைஞர்களும் போற்றி மதிப்பளிக்கப்பட வேண்டியவர்களே. காலத்தின் தேவையறிந்து உருவாக்கப்பட்டிருக்கும் இவ்வரிய படைப்பானது நாட்டின் அனைத்துப் பாகங்களிலும் மேடையேற்றப்படுமாயின் ஈழத்தின் இசைநாடகக் கலையானது உயிர் பெற்றுப் பேரெழுச்சி கொள்ளும் என்பதில் எதுவித ஐயமுமில்லை.

■ மாவியூர் அருளானன்

# அதிர்ஷ்டத்தை கணிப்பிடுங்கள் (37)

**எண் (9) செவ்வாய் ஆதிக்கத்தில் பிறந்தவர்களின் பலன்கள் குறித்த விபரங்கள் இவ்வாரமும் தொடர்கின்றன.**

**பிறப்பு எண் 9 விதி எண் 3**

செவ்வாய் குரு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்குவார்கள். உடல் பலமும், மனபலமும் உடையவர்கள். நல்ல கற்பனை வளமிக்கவர்கள். நாணயமானவர்கள். எந்நேரமும் ஆழ்ந்த சிந்தனையிருக்கும்.

பொது வாழ்க்கையில் தனக்கென்று தனியிடம் பிடிப்பார்கள். குடும்பப்பாங்கான மனைவியை விரும்புவார்கள். சூழ்நிலையை நன்கு புரிந்து கொண்டு நடப்பார்கள்.அமைதியை விரும்பக் கூடியவர்கள்.

இயல், இசை, இலக்கியம், நாடகம் போன்றவற்றில் ஆர்வம் உடையவர்கள். நண்பர்கள் இவர்களுக்கு எல்லா வகையிலும் உதவிகள் செய்வார்கள். வில்லங்கமான மனிதர்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

03,12,21,30,01,10,19,28,09,18,28,05,14,23

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,மஞ்சள்,ரோஸ்,ஆரஞ்சு,கத்திரிப்பூ நிறம், சிவப்பு

**அதிஷ்ட ரத்தினங்கள்**

கனகபுஷ்பராகம், மஞ்சள்புஷ்பராகம், தங்கபுஷ்பராகம், எமிதிஸ்ட், பவளம், ஓபல், கார்னட், ப்ளட்ஸ்டோன்.

**பிறப்பு எண் 9 விதி எண் 4**


செவ்வாய் இராகு ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் பேச்சில் இணையற்றவர்கள். பேசியே காரியம் சாதிக்கும் சாமர்த்தியசாலிகள். குருபக்தியும், இறைபக்தியும் மிக்கவர்கள். பிறர் செய்ய முடியாத காரியத்தைச் செய்து முடித்து விடுவார்கள். பேச்சில் கண்டிப்பும், கடுமையும் இருக்கும்.

பலருக்கு உதவிகள் செய்வதன் மூலம் பல்வேறு மனிதர்களின் ஆதரவுகள் கிடைக்கும். இவர்களின் சிந்தனை மின்னல் வேகத்தில் செல்லும். ஒரு மனிதனைப் பார்த்தவுடன் எதற்காகத் தம்மிடம் வந்துள்ளான் என்பதை எடைபோட்டு விடுவார்கள். 9 ஆம் எண்காரர்களில் பிறருக்கு உதவும் எண்ணம் இவர்களுக்கு அதிகமாக இருக்கும்.

இவ்வெண் ஆதிக்கம் நன்கு அமையப் பெற்றவர்கள் பிறருடைய துயரத்தைப் போக்குவார்கள். வாழ்க்கையில் மாறி மாறிப் போராட்டங்கள் வரும். எதிர்பாராத ஆபத்துக்கள் பக்கத்தில் வந்து நீங்கும். மயிரிழையில் தம்பியவர்கள் என்றால் இவர்கள்தான்.

இவர்களுக்குக் காரியத் தடைகள் இருந்து கொண்டேயிருக்கும். பொறுமை காத்தால் வெற்றிகள் உண்டாகும். எப்பேர்ப்பட்ட சோதனைகள் வந்தாலும் எதிர்கொள்ளும் திறமையும், மன வலிமையும் இருக்கும்.

பேச்சும் எழுத்தும் உலகையே உலுக்கக் கூடியதாக இருக்கும். தன்னம்பிக்கையும், துணிச்சலும் மிக்கவர்கள். பொதுவாழ்க்கையில் பிரகாசிப்பார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.



**அதிர்ஷ்ட திகதிகள்**

01,10,19,28,05,14,23,06,15,24,09,18,27

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,மஞ்சள்,பொன்னிறம், சிவப்பு நிறம், நீலம், சந்தனம்

**அதிஷ்ட ரத்தினங்கள்**

கோமேதகம், நீலக்கல், பவளம், அக்கோமரின், கார்னட், ப்ளட்ஸ்டோன், ஓபல்

**பிறப்பு எண் 9 விதி எண் 5**

செவ்வாய், புதன் ஆதிக்கத்தில் பிறந்த இவர்கள் தொழிலில் மிகுந்த அக்கறையுடையவர்கள். தன்னை நம்பியவருக்கு உண்மையாக நடந்து கொள்வார்கள்.முன்னேற வேண்டுமென்று ஓடோடி உழைப்பார்கள். தன் தகுதிக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையைத் தேடுவார்கள். இளமையில் போராடி பருவ வயதிற்குப் பின்னர் அனைத்து வசதிகளையும் பெற்று வளமுடன் வாழ்வார்கள். யாரிடமும் வளைந்து கொடுத்துப் போகக்கூடியவர்கள்.

பணபலம், படைபலம், இரண்டும் தக்க நேரத்தில் வந்து சேரும். பெரியோர்களை மதிப்பார்கள். நம்பிக்கை வைத்துவிட்டால் மிகவும் உதவுவார்கள். கடவுள் பக்தி அதிகமிருக்கும். ஆண், பெண் இருபாலர்களுக்கிடையே குழப்பங்கள் ஏற்பட்டு அகலும். பண விசயத்தில் கண்டிப்பு மிக்கவர்கள். நல்ல வாழ்க்கைத் துணைஅமையும். அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

06,15,24,05,14,23,09,18,27

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்;மஞ்சள்,நீலம், பொன்னிறம், சிவப்பு, சாம்பல் நிறம். சிமெண்ட் நிறம்.

**அதிஷ்ட ரத்தினங்கள்**

வைரம், சிர்க்கான், பவளம், ப்ளட்ஸ்டோன், கார்னட், ஓபல்

**பிறப்பு எண் 9 விதி எண்6**

செவ்வாய் சுக்கிரன் ஆதிக்கத்தில் பிறந்த் இவர்கள் மிடுக்காகவும், கம்பீரமாகவும் நடப்பார்கள். தைரியசாலிகள் எதையும் சிறப்பாகச் செய்து முடிப்பார்கள். பேச்சும், எழுத்தும் வசியமுடையதாக இருக்கும். அன்புடன் பழகுவார்கள். பல சாதனைகள் செய்யும் யோகமுடையவர்கள்.

தான தர்மங்கள் செய்வார்கள். தனது சுய மரியாதையை, கொள்கைகளை ஒரு போதும் விட்டுக் கொடுக்க மாட்டார்கள், நல்ல வாழ்க்கைத் துணையை அடைவார்கள். செல்வம் சேர்ப்பார்கள்.

நல்ல பண்புகள்,பொதுவாழ்வில் போராட்டம், தான தர்மங்கள் செய்தல் போன்ற குணங்கள் இருக்கும். சில நேரங்களில் தீய எண்ணங்கள், சிற்றின்ப ஆசைகள் மேலோங்கும். வாழ்க்கைத் துணை வந்த பிறகு வாழ்க்கையில் வசந்தங்கள் மலரும். ஆண், பெண் நண்பர்களால் நன்மையடைவார்கள்.தொடர்ந்த வெற்றிகளைப் பெறுவார்கள். அதிர்ஷ்டக் குறிப்புகளை முறையாகக் கையாண்டு வந்தால் அதிர்ஷ்டமான வாழ்க்கை நிச்சயம் சித்திக்கும்.

**அதிர்ஷ்ட திகதிகள்**

06,15,24,05,14,23,09,18,27

**அதிர்ஷ்ட நிறங்கள்**

வெளிர் நீலம்,பச்சை, சிவப்பு,பொன்னிறம்

**அதிஷ்ட ரத்தினங்கள்**

மரகதம், பவளம், பெரில், அக்கோமரின், டார்க்குவாஷ்,ஜேட், ஓபல்

*(தொடரும்)*

---

## யானையின் சுயரூபம்

அம்மை அப்பனைச் சுற்றி பிள்ளையார் பழம் வாங்கியதும், முருகன் தனது மயிலில் உலகத்தைச் சுற்றிப் பார்க்கப் புறப்பட்டு தோல்வியடைந்ததும் இந்து சமய இதிகாசம். ஒரு நொடியில் உலகைச் சுற்றி வருவது எப்படி என்ற யுக்தியை பிள்ளையாரிடம்தான் கேட்டுப் படிக்க வேண்டும். யாழ்ப்பாணத்தை ஒரே நாளில் சுற்றி வருவது எப்படி என்ற யுக்தியை நாங்கள் யானைக் கட்சிக்காரரிடம்தான் கேட்டுப் படிக்க வேண்டும்.

மக்களில் பலருக்கு ஆச்சரியம். என்னவெனில், தமக்குத் தெரியாமல் தேர்தல் அறிவித்து விட்டார்களோ என்பது தான். அந்த அளவுக்கு பச்சைக் கட்சிக்காரர் சூறாவளிப் பிரசாரம் மேற்கொண்டனர். மக்கள் இவர்கள் செல்லும் இடங்களிலெல்லாம் கொஞ்சமாகக் கூடினார்கள். இவர்களைப் பார்ப்பதற்கா அல்லது இவர்கள் கொண்டு வந்த யானையைப் பார்ப்பதற்கா என்று எல்லாம் கேட்கக் கூடாது, மக்கள் கூட்டம் கூடியது அவ்வளவுதான்.

**ஏன்... எதற்கு... எப்படி?**

மக்களிடம் எல்லா இடங்களிலும் வெள்ளை வான் கடத்தல் பற்றியே விடாமல் கேட்டுக் கொண்டனர். முன்பு இரவினில் ஊடரடங்கு போட்டு வெள்ளை வானில் எங்களைக் கடத்துகையில் அதன் வலியை உணராதவர்கள் இப்போது தமக்கு எதிராகவும் வெள்ளை வான் கிளம்பியதைத் தொடர்ந்து கொக்கரிக்கின்றனர்.

பச்சைக் கட்சிக்காரர்கள், ஆற்றங்கரையினில் குடிகொண்டுள்ள, அம்மை - அப்பனிடம் பழத்துக்காக கோவித்துக் கொண்டு ஓடிய எம்மவனையும் சென்று தரிசனம் செய்தனர். அங்கே இவர்களுக்கு ஏகப்பட்ட மரியாதை. எம்மவர்களை மறத்தமிழர்கள் என்று சும்மாவா சொன்னார்கள். அந்தக் கோயிலின் தேரினை எரித்த வர்கள் அங்கு வந்து கும்பிடு போடுகின்றார்கள். அதற்கு எம்மவர்கள் ஆலவட்டம் வீசுகின்றார்கள். இவை போதாதென்று புதுமணத் தம்ப திகள் பச்சைக் கட்சிக்காரரின் காலில் வீழ்ந்து ஆசிர்வாதம் வாங்குகின்றனர். இந்தக் கொடுமையெல்லாம் நாங்கள் மறத் தமிழராய் இருக்கும் வரையில் ஈடேறத்தான் போகின்றது.

இவையெல்லாவற்றையும் விட, பச்சைக் கட்சித் தலைவர் கோயிலை விட்டு வெளியேறும் போது வாசலில் தள்ளு வண்டிலில் இருந்து பிச்சை எடுத்துக் கொண்டிருந்தவன் பிச்சை கேட்க் ஒரு ஏளனப் பார்வையுடன் தனது சொகுசு வண்டியினுள் ஏறினார். இப்போதாவது விளங்கிக் கொள்ளுங்கள் அவர்களின் சுயரூபத்தை.

-நக்கல் நரசிம்மன்.

---

## மகிழ்ச்சிக்கு வேண்டும்...

(A பக்க தொடர்ச்சி..)

என்னால் உங்களுக்கு உழைப்பு நட்டம் தானே. என்னைத் தூக்கி எறிந்துவிட்டு வேறு ஒரு நல்ல பானையாக வைத்துக் கொள்ளுங்களேன்'' என்றது.

அந்த வேலைக்காரன் பானையைப் பார்த்துச் சொன்னான் உன்னால் எனக்கு உபத்திரவம், நீ உபயோகமில்லை, என் உழைப்பு நட்டம் என்று எப்பொழுதாவது நான் உள்ளத்தில் வருத்தப்பட்டேனா? அல்லது யாரிடமாவது நான் குறை சொன்னேனா? வா! வந்து பார். நாம் தினமும் நீருற்றிலிருந்து எஜமானர் வீட்டிற்குச் செல்லும் வழியைப் பார். நீ கீறல் விழுந்த ஓட்டைப் பானை என்பதால் உன்னை ஒரு பக்கமாகவே தூக்கிச் செல்லுகிற பழக்கத்தை வைத்திருக்கிறேன். உன்னிடமிருந்து கசியும் நீர் வீணாகக் கூடாது என்று அந்தப் பக்கங்களில் பூச்செடிகளை நட்டு வைத்தேன்.

அந்தப் பூச்செடிகளுக்கு நான் தனியாக தண்ணீர் ஊற்ற வேண்டிய அவசியம் இல்லை. எஜமானர் பூஜைக்கு பூ வேண்டும் என்று என்னை எப்பொழுது பணித்தாலும் ஓடிவந்து இந்தப்பூச்செடிகளில் தானே பூக்களைப் பறித்துச் சென்று தருகின்றேன். என் எஜமானரின் பாராட்டுகளுக்கு உன்னைப் பாத்திரமாக்கிறேன். அது உன்னால் தானே! குறையுடைய உன்னையும் நான் உபயோகித்துக் கொண்டுதானே இருக்கிறேன். உலகில் குறையில்லாத மனிதர்கள் யார் இருக்கிறார்கள்?'' என்றான்.

உண்மைதான் நமது உள்ளத்தில் அன்பும் பாசமும் நேசமும், அக்கறையும் இருக்குமேயானால் நாம் யாரையும் குறைசொல்லவும் மாட்டோம். உதவாதவர்கள் என்று ஒதுக்கவும் மாட்டோம்.

---

## உதயனை விமர்சியுங்கள்

உதயனை தினந்தோறும் பார்த்து வரும் வாசகன் நான். உதயனில் வெளிவரும் செய்திகளில் இந்திய அரசியல் தொடர்பான செய்தியில் ஈழத்தமிழர்களின் பக்கம் சார்பாக இருப்பதாகவும் சார்பில்லாமல் இருப்பதாகவுமே எண்ணத் தோன்றுகிறது.

இந்திய அரசியலில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் தொடர்பில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகவே செயல்படுவதாக சமீபத்தில் வந்த செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த செய்தியால் இந்தியாவை எம்மால் நம்ப முடியுமா? நம்ப முடியாதா? என்ற மனநிலையில் இருக்கின்றோம். ஆகவே இந்தச் செய்தி தொடர்பாக ஈழத்தமிழர்கள் விடயத்தில் ஆழமாக எம் போன்றவர்கள் அறிந்து கொள்ள ஆவண செய்ய வேண்டும்.

எதிர்வரும் உதயனில் இந்திய அரசியலில் இலங்கைக்கு எதிரான ஜெனிவா தீர்மானம் தொடர்பில் வெளிவரும் ஆதரவு செய்தியை பார்க்கும் படி செய்வீர்களா?

இந்திய அரசியலில் குழப்ப நிலையில் ஈழத்தமிழர் விடயத்தில் இருப்பதால் உதயன் பத்திரிகை ஊடாக நாளுக்கு நாள் அறிந்து கொள்ள உதவுவீர்களா?

புண்ணியமூர்த்தி
வட்டுக்கோட்டை

# வீதியை புனரமைப்பவர்கள் மக்களின் சிரமங்களை எதிர் கொள்வார்களா?

''நடடா ராசா சிவலைக்காளை, காலை விடியப் போகுது'' என்று சொல்லி மாட்டு வண்டியில் பாடிக்கொண்டு போகேக்க அந்தக் காலத்து வீதியில தார் வீதி இல்லாதுவிட்டாலும், புழுதி கூடக் கிளம்பாது பாருங்கோ. ஏனென்றால் அப்பத்த காலத்தில கனரக வாகனங்கள் ஓடவில்லை. நிம்மதியாக சனம்மாட்டு வண்டியில போய் வந்ததுகள். இப்ப கனரக வாகனங்கள் ஓட்டத்தால் வீதிக்கு அருகில் இருக்கும் வீடு, மரங்கள் எல்லாவற்றையும் தூசிபடிய வைத்துள்ளது. எப்பதான் இந்த வீதிகள் எல்லாம் தூசு கிளம்பாமல் இருக்கப்போகுதோ என்றுதான் தெரியவில்லை.

வீதிகளை புனரமைக்க முதல் பலதைப் பற்றியும் சிந்திக்க வேணும். அப்படி சிந்திப்பதால் பல பிரச்சினைகளை இல்லாமல் செய்யலாம். அதாவது குறிப்பிட்ட அளவு தூரம் வீதியைப் புனரமைக்க முதல் அந்த வீதி எத்தனை நாள்களில் புனரமைக்க முடியும் என்று முதலில் முடிவு எடுக்கவேண்டும். அப்பதான் எங்கட சனம் அந்த வீதியைத் தொடர்ந்து பயன்படுத்த முடியும். வீதி புனரமைப்பு என்று இறங்கி பல நாள்களாகியும் அந்த வீதியை புனரமைக்காமல் கிளறியபடி இருந்தால், மாற்று வீதியை பயன்படுத்தும் மக்கள் பல சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர். கிளறின வீதியை பயன்படுத்தினால் அந்த வீதியில் எழும்புகின்ற புழுதியில் குளிக்க வேண்டியதுதான். புழுதியில் குளிச்சால் பிரச்சினை இல்லை. ஆனால் அந்த புழுதிக் குளியலில் சனத்துக்கு பல நோய்கள் வரக்கூடிய சாத்தியம் இருக்குது பாருங்கோ- அதாவது சளி ஏற்பட்டு அதை மாற்ற முடியாமல் பலர் அவஸ்தைப்படுகின்றனர். மேலும் பலர் சுவாச நோய்களால் அந்தரப்படுகின்றனர். இதை அறிவார்களா வீதி புனரமைப்பில் ஈடுபடுபவர்கள்?.

கோப்பாய் சந்தியில் இருந்து இருபாலைச் சந்திவரையும், கோப்பாய் சந்தியில் இருந்து மானிப்பாய் வீதி மருதனார்மடச்சந்தி வரையும், உள்ள வீதி பல மாதங்களாக புனரமைக்கப்பட்டு வருகிறது. இப்ப கோப்பாய் இராச பாதை வீதி கிளறப்படுகிறது. புனரமைப்பில் ஈடுபட்டு புல மாதங்களாக புனரமைக்காமல் இருக்கும் வீதியில் பயணம் செய்யும் மக்கள் புழுதியலால் நாளாந்தம் குளித்து விடுகின்றனர். அதுவும் கிரவல்மண் குவியல் என்றால் சும்மாவா காது மூக்கு எல்லாம் அடைத்தது மாதிரி இருக்கிறது.

சும்மா இருந்த சங்கினை ஊதிக் கெடுத்தானாம் என்று சொல்வார்கள். அதேபோல நல்லாய் இருந்த வீதிகளை புனரமைப்பு என்று கிளறிவிட்டினம். வீதிப் புனரமைப்பில் ஈடுபடுபவர்கள், தூசி கிளம்பாமல் தண்ணீரைப் பாய்ச்சவேண்டும். அப்படி தண்ணீரை வீதிக்கு பாய்ச்சுவதில்லை. குறிப்பிட்ட நாள்களில் வீதி புனரமைப்பு வேலைகள் நடந்தால் தண்ணீரினை பாய்ச்சமுடியும். பல மாதங்களாக இழுபட்டால் எப்படித்தான் தண்ணீரினை பாய்ச்ச முடியும்?. இப்படியாக வீதிப் புனரமைப்பில் ஈடுபடுபவர்கள் வீதிக்கு அருகில் வெட்டப்படுகின்ற மண்ணினை விற்கின்றனர். இதற்காகத்தான் கிளறின வீதிகளை புனரமைக்காமல் புதுபுது வீதிப் புனரமைப்பு என்று சொல்லி மண்ணினை வெட்டி வருகின்றனரோ!

வீதி புனரமைப்பு என்று சொல்லி அருகில் இருந்த மரங்களையும் தறித்துக்கொண்டு போகின்றனர். இப்படியாக வீதிப் புனரமைப்பு வேலைகள் இருக்கேக்க, யாழ்.நகர்ப் பகுதியில் காப்பெற் வீதி போடுகிறம் என்று சொல்லி வேலிக் கண்டாயம் அடைத்த மாதிரி இடைக்கிடை 100 மீற்றருக்கோ 200 மீற்றருக்கோ காப்பெற் வீதி போட்ட பெருமை மாநகர சபையைச் சேரும். ஒழுங்கா அடிச்சுப் படிப்பிச்சு இருந்தா இப்படியாக நடந்திருக்காது பாருங்கோ. சனம் பாவம் எல்லாத்தையும் பார்த்துக்கொண்டு இருக்க வேண்டியதுதான். வேற என்ன செய்யமுடியும். நடு வீதியில் கட்டி வைத்து மாட்டுச் சாணி அடித்தா தண்டனை கொடுக்க முடியும்?. காப்பெற் வீதி போடுறதை எடுத்துக்கொண்டால் காப்பெற் வீதியின் இரு மருங்கிலும் பெரிய பள்ளம் காணப்படுகிறது. எதிரே வாகனம் வருது என்று இடம்கொடுக்கும்போது கவனமாக இருக்கவேண்டும். தட்டுத்தடுமாறி பள்ளத்துக்குள் வாகனம் விழுந்தால் விபத்துக்கள் ஏற்படும். இதை இந்த காப்பெற் வீதி போட்டவர்கள் கவனிப்பார்களா?

போர் முடிவடைந்து 3 வருடங்கள் நெருங்கும் நிலையில் மக்கள் தேவைகள் நிறைய இருப்பது தெரிந்தும், வீதிகளைத் தான் பெரிதாகப்போடுகிறார்கள். புனரமைப்புக்கென கிளறின வீதிகளில் பவனி வரும் அரச வாகனங்கள் புழுதியை கிளப்பிக் கொண்டு போகும்போது கூட அந்த வீதியில் நடந்து சைக்கிளில் போகும் சனத்தினை பார்ப்பதில்லையா? அந்த வீதிப் புழுதிக் குளியலில் அவர்கள் திக்குமுக்காடுவது வாகன கண்ணாடியை மூடிவிட்டு அரச வாகனங்களில் வரும் இவர்களுக்கு எப்படித் தெரியும். ஒரு தரம் இருந்து இறங்கி அந்த

**யாழ். நகர்ப் பகுதியில் காப்பெற் வீதி போடுகிறம் என்று சொல்லி வேலிக் கண்டாயம் அடைத்த மாதிரி இடைக்கிடை 100 மீற்றருக்கோ 200 மீற்றருக்கோ காப்பெற் வீதி போட்ட பெருமை மாநகர சபையைச் சேரும்.**

வீதியூடாக நடந்தோ, அல்லது சைக்கிளிலோ வீதியூடாக வந்து பாருங்கோ. புழுதியில் குளிப்பது எப்படி என்று தெரியும். அதன் சிரமமும் தெரியும். இந்த வீதியில ஒவ்வொரு நாளும் விபத்துக் கள்தான் கூடுதலாக நடக்கிறது. முன்னைய காலம் இருந்ததைவிட இப்பொழுது கூடுதலான வீதி விபத்துக்களில் உயிர்களை மாய்த்துக் கொள்கிறார்கள். அபிவிருத்தி என்று சொல்லி வீதிப் புனரமைப்பில் இறங்கி அதையே முழுமையாகச் செய்யமுடியாமல் இருக்கும் போது எப்படி இந்த மக்களின் தேவைகளை நிறைவேற்றப் போகிறார்கள்.

ஒரு திரைப்படத்தில் வடிவேல் பலருக்கு கதை சொல்லப்போய் கதை கேட்டவர்களின் வாயினாலும் மூக்கினாலும் புகைவருவதுபோல இந்த வீதியூடாக சென்று வருபவர்களின் வாயினாலும், மூக்கினாலும் புகை வருகிறது.

யாழ்ப்பாணத்தில் இப்பொழுது சம்பந்தமில்லாமல் எதுவெல்லாம் நடக்குது. இதற்குக் காரணம் நிதிமோசடி செய்யத்தான் என்பது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. யாழ். போதனா வைத்தியசாலையைப் பெரியதாகக் கட்டுகிறார்கள். ஆனால் என்ன பயன் அங்கு மருந்து இல்லை. அதே போலத்தான் வீதியையும் பெரிதாகப் போடுகிறார்கள். அதில் சனம் போய் வரமுடியவில்லை. இந்த வீதிகளில் சென்று வரும் மக்கள் ஒவ்வொருநாளும் மூன்று வேளை குளிப்பதாகத் தெரிவிக்கின்றனர். வடக்கின் வசந்தம் வீசும் என்று வாய்ச் சொல்லில் மட்டும் பேசிக்கொண்டு இருக்கும் அரசுக்கு ''ஓமோம் வசந்தம் வீசுது'' என்று தலையாட்டும் அரச அதிகாரிகள் இருக்கும் நிலை 'சிறீதேவி' வில்லுப்பாட்டினை மிஞ்சிவிடும்.வீதிகளை இருவழிப் பாதையாக புனரமைக்கின்றோம் என்று சொல்லி வீதி புனரமைப்பில் ஈடுபடுபவர்கள் வீதியை முழுமையாக புனரமைக்காமல் அந்த வீதியையும் தொட்டுக்கொண்டு ஏனைய வீதி புனரமைப்பில் இறங்கி விட்டு இரண்டுங்கெட்ட நிலையில் உள்ளனர். இதனால் பாதிக்கப்படுவது மக்கள் தான்.

■ பித்தன்

# மறந்தார்; பறந்தார்

''மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில்தான் அதிக அக்கறை கொண்டிருக்கிறேன். அடிப்படைப் பிரச்சினைகள் தீர்ந்தால் மட்டுமே அவர்களின் வாழ்வு முன்னேறும். சோறா? சுதந்திரமா? என்ற கேள்வி எழுந்தால் மக்கள் இப்போது சோறு தான் வேண்டும் என்பார்கள். மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்க்காமல் அவர்களின் அரசியல் பிரச்சினை பற்றியும், அதற்கான தீர்வு பற்றியும் பேசுவதால் எந்த அர்த்தமும் கிடையாது''

இப்படி எந்த இடத்துக்குப் போனாலும், ஒரு சொல்லைக்கூட தவற விடாமல் கீறல் விழுந்த 'றெக்கோட்' தட்டுப் போல திரும்பத் திரும்ப சொல்பவர் அமைச்சர் டக்ளஸ். அந்த வார்த்தைகளை அவர் இத்தனை நாளும் இதயசுத்தியோடு சொல்லவில்லை என்பதை அவரே காட்டிக் கொடுத்து விட்டார்.

கடந்த ஒரு வாரமாக குடா நாட்டின் இயல்புநிலை பெரிதும் பாதிப்புற்று உள்ளது. சரியான பொருளாதார நடைமுறைகளை நிறைவேற்றுவதற்கு அரசால் முடியாது இருக்கிறது. இதனால் அரச ஊழியர்கள் பலருக்கு சம்பள உயர்வுகளோ, மானியங்களோ வழங்கப்படுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. புதிய நியமனங்களும் வழங்கப்படுவதில்லை. இதனால் மிகக் குறைந்த சம்பளத்துடன் குறைவான ஆளணியுடன் முன்னரைக் காட்டிலும் அதிக வேலையை அரச ஊழியர்கள் செய்ய வேண்டியுள்ளது. ஏற்கனவே அரசு அறிவித்திருந்த சம்பள உயர்வு பற்றிய தீர்மானங்களையாவது நிறைவேற்றுமாறு கோரி, வேலை நிறுத்தங்களில் திணைக்கள ஊழியர்கள் ஈடுபடுவது ''அடிவளவு அலுவல் போல'' வாடிக்கையான விடயமாகி விட்டது.

கடந்த வார இறுதியில் திடீரென வட பிராந்திய போக்குவரத்துச்சபை ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் குதித்தனர். காலையில் ஓடிய பஸ்கள் அதற்குப் பின்னர், 'ஹாயாக' 'டிப்போ'களில் மணித்தியாலக்கணக்கில் சூரியக் குளியல் செய்து கொண்டு இருந்தன. பஸ் நிலையங்களில் மக்கள் காத்திருந்து காத்திருந்து ஏமாந்ததுதான் மிச்சம். கடைசி வரைக்கும் அன்றைக்கு பொழுது இருட்டும் வரை வடபிராந்திய போக்குவரத்துச் சபை பஸ்களின் தூக்கம் கலையவில்லை. அதுவரையும் கைகளில் 'சீஸன்' ரிக்கெற்களை வைத்திருந்த பலரும், இனியும் காத்திருந்தால் அடுத்த நாள் தான் வீடு போக வேண்டியிருக்கும் என்ற முடிவுக்கு வந்தவர்களாக மினிபஸ்ஸில் நசுங்கியபடி பயணிக்கத் தொடங்கினர்.

## கோணல் கோலங்கள்

அதற்குப் பின்னர் 3 நாள்கள் கழித்து மருத்துவ உதவியாளர்கள் நாடளாவிய ரீதியில் வேலை நிறுத்தப் போராட்டத்தில் இறங்கினர். இதுவும் சொல்லாமல் கொள்ளாமல் நிகழ்ந்ததால் வைத்தியசாலைக்குச் சென்ற பலரும் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள நேர்ந்தது. குறிப்பாக விபத்துக்களில் சிக்கியோர் உரிய சிகிச்சையைப் பெறமுடியாது தவித்தனர். வைத்தியர்கள் முழுநேரமும் கடமையில் இருந்தபோதும் ஆய்வு கூடத்திலோ அல்லது மருந்து வழங்கும் இடத்திலோ அல்லது 'எக்ஸ்ரே' படம் எடுக்கும் இடத்திலோ பணியாளர்கள் எவரும் இருக்கவில்லை. விபத்தில் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலைக்கு சென்றுள்ளார். காலிலே சிறு எலும்பு முறிவு ஏற்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் ஒரு குறித்த இடத்தில் பெரிய வீக்கம். கூடவே விண் என்று வலி வேறு. ஒரு அடி கூட ஒழுங்காகத் தூக்கி வைக்க முடியவில்லை.

**ஓடுகாலி**

எனினும் அவரைப்பரிசோதித்த வைத்தியர் 'எக்ஸ்ரேப்' படம் எடுத்து வந்தால் தான் எலும்பு எங்கே உடைந்துள்ளதா என்பதை சரியாக இனங்கண்டு உரிய சிகிச்சையை வழங்கமுடியும் என்று கூறிவிட்டார். நோயாளியும் மருத்துவர் எழுதிக் கொடுத்த துண்டுடன் 'எக்ஸ்ரேப்' படம் எடுக்கும் பகுதிக்கு இன்னொருவரின் துணையுடன் வலியையும் தாங்கிக் கொண்டு சென்றார். ஆனால் அங்கு ஈ, காக்கா கூட இருக்கவில்லை. நடந்த வலியை விடவும் 'எக்ஸ்ரேப்' படம் எடுக்க முடியவில்லையே என்ற ஆதங்கம் அதிகமாக ஏற்பட்டது. வேறு வழியின்றி போதனா வைத்தியசாலைக்கு வெளியே உள்ள தனியார் வைத்தியசாலை ஒன்றில் பெருந்தொகைப் பணத்தைக் கரியாக்கி 'எக்ஸ்ரேப்' படம் எடுத்துவந்த பின்னர் தான் அவருக்குரிய சிகிச்சையை வைத்தியரால் வழங்கமுடிந்தது. அதன்பின்னரும் வைத்தியர் எழுதிக்கொடுத்த மருந்துச் சிட்டையை கையில் வைத்தபடி மருந்து வாங்க அவர் 'கியூவில்' நின்றதில் கால் வீக்கம் இன்னமும் பெரிதாகுவதுபோல் அவருக்குத் தோன்றியது. பேசாமல் மருந்தையும் ''பார்மசி'' ஒன்றில் காசைக் கொடுத்து வாங்கிவந்து விட்டார். இது போல நிறையப் பேர் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தால் பட்ட அவஸ்தைகள் ஏராளம்.

இவ்வாறு மக்களின் இயல்பு வாழ்வைப் பாதிப்புறச் செய்கின்ற விடயங்கள் நடந்தேறிக் கொண்டிருக்கும்போது யாழ்ப்பாண மக்களின் அபிவிருத்திக்காக பாடுபடுவதாக வாய் கிழியச் சொல்லும் அமைச்சரின் குரலைக் காணவே இல்லை.

அவர் இந்த அவலங்கள் நடந்துகொண்டிருந்தபோது இரண்டாவது தடவையாக ஜெனிவாவுக்குப் பறந்துவிட்டார். அவருக்கு மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை விடவும் தனக்கு அமைச்சுப் பதவியைத் தூக்கித் தருகின்ற அரசின் மானத்தைக் காக்கவேண்டும் என்கிற அரசியல் பிரச்சினைதான் பெரிதாகத் தெரிந்திருக்கின்றது. அதுவும் (அமைச்சரின்) தமிழினத்தைச் சேர்ந்த பெண்களையும் குழந்தைகளையும் இரக்கமின்றிக் கொன்றவர்களைக் காப்பாற்றுவதற்காக தனக்கு வாக்களித்தவர்களைக்கூட மறந்துவிட்டு பறந்தோடிப் போயிருக்கிறார். உண்மையில் இப்போது அவர் ஜெனிவாவுக்குச் செல்லவேண்டிய அவசியம் மக்களுக்குப் புரியவே இல்லை. மேர்வின் சில்வா , விமல்வீரவன்ஸ, சம்பிக்க ரணவக்க போன்ற பேரினவாதிகள்கூட ஜெனிவாவுக்குச் செல்லாத நிலையில் தான் சார்ந்த இனத்துக்கு நிகழ்ந்த வரலாற்றுக் கொடுமையை மறைப்பதற்காக கொடுக்கைக் கட்டிக்கொண்டு அமைச்சர் ஜெனிவாவுக்கு சென்றதன் மூலம் ''தனக்கு பதவி தான் முக்கியமே தவிர, மக்கள் அல்ல''. என்பதை அவர் சொல்லாமல் சொல்லியிருக்கிறார். சில வேளைகளில் ''அரசு உயர அமைச்சு உயரும்

அமைச்சு உயர அதிகாரம் உயரும்,

அதிகாரம் உயர ஆசை உயரும்,

ஆசை உயர மக்கள் உயர்வர்'' என்று அவர் தன்னுடைய செயலுக்கு பின் நாள்களில் பிலாக்கணம் பாடக்கூடும். தமிழர் தலைகளில் யார் வேண்டுமானாலும் எப்போதும் சம்பல் அரைக்கலாம்தானே!